
St. Mary's Church, Puliyantivu, Batticaloa
1808
2008
உதய தாரகை
Bi Centenary Celebration
15.08.2009
Trincomalee - Batticaloa Diocese

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



The Holy Father Benedict XVI
cordially imparts the
Apostolic Blessing to
St. Mary's Church
as they celebrate the 200th Anniversary of the Foundation
and through the intercession of the Virgin Mary
invokes an abundance of divine graces

August 15, 2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதய தாரகை

( MORNING STAR)




இருநூறாண்டு நிறைவு வரலாற்று ஆவணம்

புனித மரியாள் ஆலயம் புளியந்தீவு மட்டக்களப்பு
திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உதய தாரகை" - ஜூபிலி ஆவண நூல்

| | | | |
|---|---|---|---|
| 1. | பிரதிகள் | – | 500 |
| 2. | அளவு | – | 1/5 |
| 3. | வெளியீடு | – | பங்கு மேய்ப்புப்பணிச்சபை – புளியந்தீவு |
| 4. | பதிப்புரிமை | – | மலர் வெளியீட்டுக்குழு<br>புனித மரியாள் இணைப்பேராலயம்<br>புளியந்தீவு, மட்டக்களப்பு. |
| 5 | அச்சகம் | – | சென். ஜோசப் கத்தோலிக்க அச்சகம்<br>மட்டக்களப்பு. |
| 6. | பக்கங்கள் | – | 150 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க மரியே!

வாழ்க வாழ்க வாழ்க மரியே
வாழ்க வாழ்க வாழ்க மரியே

மாசில்லாக் கன்னியே
மாதாவே உம்மேல்
நேசமில்லாதவர்
நீசரேயாவார்

வாழ்க வாழ்க .....

மூதாதை தாயார்செய்
முற்பாவமற்றாய்
ஆதியில்லாதோனை
மாதே நீ பெற்றாய்

வாழ்க வாழ்க .....

தாயே நீ ஆனதால்
தாபரித்தெம்மேல்
நேசம் வைத்தாள்வது
நின் கடனாமே

வாழ்க வாழ்க .....

உம்மகன் தாமே
உயிர்விடும் வேளை
எம்மை உம் மைந்தராய்
ஈந்தனரன்றோ

வாழ்க வாழ்க .....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AVE MARIA....!

01. Immaculate Mary
Your praises we sing
In Heaven the blessed
Your glory proclaim

Ave, Ave, Ave Maria
Ave, Ave, Ave Maria

02. Your name is our power
Your virtues our light
We pray for the Church
Our true Mother on earth

Ave, Ave, Ave Maria
Ave, Ave, Ave Maria

03 You reign now in splendor
With Jesus our King
On earth we, Your children
Invoke Your sweet name.

Ave, Ave, Ave Maria
Ave, Ave, Ave Maria



200 years
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | |
|---|---|
| ஆசிச் செய்திகள்....... | 04 |
| முன்னுரை... | 24 |
| மட்டக்களப்பு புனித மரியாள், புனித அந்தோனியார்.... | 26 |
| புளியந்தீவு... | 44 |
| கடந்து வந்த பாதையில்... | 46 |
| அன்னையின் ஆலயத்திற்கு... | 51 |
| நமது ஆயர்கள்... | 53 |
| இறைவனின் தோட்டத்தில்... | 57 |
| பக்திச் சபைகளும் ஏனைய.... | 69 |
| புளியந்தீவில் கல்விக் கூடங்கள்... | 90 |
| எமது பங்கில் திருநாட்கள்... | 95 |
| அந்த நாள் ஞாபகம்.... | 105 |
| மூன்றாம் நூற்றாண்டு..... | 115 |
| இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம்... | 126 |
| பங்கில் பணியாற்றிய குருக்கள்... | 131 |
| தகவல் துளிகள்... | 134 |
| புகைப்படங்கள்... | 137 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Contents


| | |
|---|---|
| Messages | 04 |
| Preface | 24 |
| History of the Church | 26 |
| Puliyanthivu | 44 |
| An Overview | 46 |
| The Founder | 51 |
| Our Bishops | 53 |
| Religious of the Parish | 57 |
| Pious Associations | 69 |
| Schools in Puliyanthivu | 90 |
| Festivals in the Parish | 95 |
| Down the Memory Lane | 105 |
| Third Century - A Forecast | 115 |
| Vatican Council - II | 126 |
| Priests in the Parish | 131 |
| Some Memorable Events | 134 |
| Photographs | 137 |


200 Years



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MESSAGE OF BLESSING BY HIS HOLINESS POPE BENEDICT XVI, ROME.




My Lord Bishop,

The Holy Father was pleased to be informed of the Two-hundredth Anniversary of Saint Mary's Church, Puliyantivu, and he wishes the community to know that he is spiritually united with them.

His Holiness is confident that this celebration will be for the parish family an occasion for a renewed consciousness of their Christian dignity and mission. As baptized and confirmed members of the Church, all are called to spread the Kingdom of God. The laity, in particular, have been entrusted with the important task of permeating and perfecting the whole of society with the spirit of the Gospel.

The Holy Father prays that all the faithful will find fresh joy and strength through their participation in the Holy Eucharist, in which the Lord Jesus "gives us the totality of His life" ( Sacramentum Caritatis, 7 ). In the love of the Saviour he imparts the requested Apostolic Blessing.

With my own prayerful good wishes, I am

Yours sincerely in Christ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## MESSAGE FROM THE APOSTOLIC NUNCIO IN SRI LANKA

APOSTOLIC NUNCIATURE
IN SRI LANKA



My Lord Bishop,

On this joyful occasion of the Two-hundredth Anniversary of Saint Mary's Church, Puliyantivu, Co-Cathedral of the Diocese of Trincomalee- Batticaloa, I am happy to join You, His Lordship the Auxiliary Bishop, the Reverend Clergy and the entire parish Community of the Co-Cathedral in praising the Lord for all the benefits He has graciously granted during these past two hundred years.

The small chapel which was built two hundred years ago has now become a magnificent Co-Cathedral. Generations of Catholics received their Christian formation and the Holy Sacraments in this sacred place, which also served as a centre of evangelization in Batticaloa and the surrounding villages.

The humble origin of St. Mary's Church should remind its parishioners that God always chooses the lowly to accomplish His marvelous work of salvation. May the members of the parish, of all ages, languages and social condition, gather round the Word of God and the Eucharist as one family, become living temples of the Holy Spirit and courageously bear witness to God's love by serving everyone without distinction, especially those most in need.

While praying that the Holy Mother of God continue to watch over this vibrant parish community with Her motherly care and protection, I gladly bestow on all the members of St. Mary's Co-Cathedral Church, as a pledge of joy and peace in our Lord Jesus Christ, my Apostolic Blessing.

+Joseph Spiteri

Joseph Spiteri
Apostolic Nuncio



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## MESSAGE FROM THE BISHOP OF TRINCOMALEE- BATTICALOA

On the occasion of the 200th anniversary of the inception of St. Mary's Church at Puliyanthivu, Batticaloa, I join the Parish Priests and the Parishioners, young and old, in thanking the Lord for continued blessings in their growth in faith and wisdom.

St. Mary's Church appeared at a time when the need was realized by the then missionaries who were from the Oblate Congregation of Mary Immaculate.

Wish them blessings ever more and may Mary be their Mother and Protector.

**Rt. Rev. Dr. J. Kingsley Swampillai**
**Trincomalee - Batticaloa**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருகோணமலை – மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர்
# பேரருட்திரு. ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகையின்
### ஆசிச் செய்தி



கிழக்கு மாகாணக் கத்தோலிக்க விசுவாசப் பாரம்பரியத்தில், மட்டக்களப்பு புளியந்தீவுத் திருச்சபைக்குத் தனியிடம் உண்டென்றால் அது மிகையில்லை. போர்த்துக்கேயரின் வருகையுடன் இம்மண்ணில் வேரூன்றிய விசுவாசம், ஒல்லாந்தர் காலத்தில் வேதகலாபனைகள் மத்தியில் இந்தியாவிலிருந்து வருகை தந்த முத்திப்பேறுபெற்ற ஜோசப் வாஸ் அடிகளாலும், அவர் வழியொற்றிய ஒரத்தோரியன் குருக்களாலும் பேணிப் பாதுகாக்கப்பட்டு வந்தது. இவ்வரலாற்றுக் காலத்திலேயே
காணப்படும் புளியந்தீவுத் திருச்சபை பற்றிய ஆவணக் குறிப்புக்கள் இத்திருச்சபையின் தொன்மைத் தன்மையினை பறைசாற்றி நிற்கின்றது.

இன்று புளியந்தீவு தூய மரியாள் இணைப்பேராலயத்தின், ஆலயம் நிர்மாணிக்கப்பட்டு இருநூறு ஆண்டுகள் நிறைவுறும் இம் மகிழ்வின் யூபிலி நாளில், இதனது வரலாற்றுத் தன்மையினை நோக்குவது சாலச் சிறப்பாகும். புளியந்தீவுப் பகுதியில் ஆரம்பத்தில் தூய அந்தோனியார் பெயரில் ஆலயம் ஒன்று நிறுவப்பட்டது. ஆயினும் அக்காலத்தில் மக்கள் மத்தியில் நிலவிய குலம்-கோத்திரம் வேறுபாடுகள் காரணமாக எல்லா மக்களின் தேவைகளையும் பூர்த்தி செய்யும் வண்ணம் ஓர் ஆலயத்தின் தேவை பெரிதும் உணரப்பட்டது. இதனடிப்படையில் 1808ம் ஆண்டு, அன்பளிப்பாக வழங்கப்பட்ட நிலத்தில் ஒரு சிறு குடிசையிலான ஆலயம், தூய மரியாளின் நாமத்தில் ஆரம்பிக்கப்பட்டது. 1893ம் ஆண்டு திருகோணமலை என்கின்ற புதிய மறைமாவட்டம் உதயமாகிய பிற்பாடு, தற்போதைய ஆலயப்பணிகள் முழுவேகமாக செயற்படுத்தப் பட்டு, 1901ம் ஆன்டு நிறைவும் கண்டு கொண்டது.

பேரருட்திரு இக்னேஷஸ் கிளெனி ஆண்டகை காலத்தில் திருகோணமலை மறைமாவட்டம், "திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்டம்" என புதிதாக பெயர் வழங்கப்பட்டபோது, புளியந்தீவு தூய மரியாள் ஆலயம் "இணைப்பேராலயம்" எனும் உயர் தகுதியினையும் பெற்றதென்றால் அதன் அமைவிடம்தான் அதன் சிறப்பாகும். கிழக்குக் கத்தோலிக்கத் திருச்சபையின் மையமாகவும், நகரின் பிரதான கல்வி மையங்களின் உறைவிடமாகவும், அரச, சிவில் திணைக்களங்களின் உயர்பீடமாகவும் விளங்குவது இதன் தனிச் சிறப்பாகும்.

இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க புளியந்தீவு தூய மரியாள் இணைப்பேராலய நிர்மாணத்தின் 200 ஆண்டு யூபிலி விழாவில் இறையாசீர் தொடர்ந்தும் விசுவாச வாழ்வினை வளர்த்து வளமாக்கிட வாழ்த்துகின்றோம்.

+Kingsly Swampillai

**பேரருட்திரு. யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை**
திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருகோணமலை – மட்டக்களப்பு மறை மாவட்டத் துணை ஆயர் பேரருட்திரு. பொன்னையா ஜோசப் ஆண்டகையின்

### ஆசிச் செய்தி



"என் ஆன்மா ஆண்டவரின் கோயில் முற்றங்களுக்காக ஏங்கித் தவிக்கின்றது.......... வேற்றிடங்களில் வாழும் ஆயிரம் நாள்களிலும் உம் கோயில் முற்றங்களில் தங்கும் ஒரு நாளே மேலானது ..."(தி.பா.84:1,10). எனத் தன் அனுபவப் பகிர்வைச் செய்யும் திருப்பாடல் ஆசிரியர் போன்று, எம் ஆன்றோரும் கோயிலின் அவசியத்தை உணர்ந்து, கோயில் இல்லா இடங்களில் குடியிருக்கவில்லை, அல்லது எங்கெல்லாம் குடியேறினார்களோ அங்கெல்லாம் கோயில்களை அமைத்துக் கொண்டனர். இதற்கு உறுதியான வரலாற்றுச் சான்றாக அமைவது மட்டுநகர் புளியந்தீவில் அமைக்கப் பெற்றுள்ள புனித மரியாள் இணைப் பேராலயமாகும்.

நீர்வளமும், நிலவளமும் ஒருங்கே அமையப்பெற்ற கிழக்கிலங்கையின் மீன்பாடும் தேனாடாம் மட்டுமாநகரை அலங்கரிக்கும் அணிகலன்களில் ஒன்றாகவும், மணிமகுடமாகவும் திகழ்வது புனித மரியன்னை இணைப்பேராலயமாகும். இயேசு சபைத் துறவிகளின் நற்செய்தி அறிவிப்பினாலும், அவர்களின் அயராத உழைப்பினாலும் தொடக்க காலத்தில் கிறிஸ்தவ மறையைத் தழுவிய ஒரு சிலரால் தங்கள் பொது வழிபாட்டுக்கென ஆரம்பிக்கப்பட்ட சிறிய கொட்டில்தான், படிப்படியாக மரியாள் ஆலயம் எனவும், இன்று மரியாள் இணைப்பேராலயம் எனவும் அழைக்கப்படும் அளவுக்கு வளர்ச்சியடைந்து இன்று இருநூறு ஆண்டுகளைப் பூர்த்தி செய்கின்றது.

இணைப்பேராலயத்தின் அபரிமிதமான வளர்ச்சிக்கு அடிப்படைக்காரணம் அது மரியன்னைக்கு அர்ப்பணிக்கபட்டதனாலாகும் எனக் கூறினால் மிகையாகாது. உலகில் எங்கெல்லாம் மரியன்னையின் பெயரால் ஆலயங்கள் எழுப்பப்பட்டுள்ளதோ, அங்கெல்லாம் மரியன்னையின் அருள்பாலிப்பினாலும், அரவணைப்பினாலும் ஆலயங்கள் உயர் நிலையடைந்து சிறப்புற்று விளங்குவதை அவதானிக்க முடிகின்றது.

அடுத்து, மரியாள் கோயில் இணைப்பேராலயம் என்ற நிலைக்கு உயர்த்தப்படக் காரணமாக அமைவது, இறைமக்களின் நம்பிக்கை வளர்ச்சியும், அதன் கனியான எண்ணிக்கை வளர்ச்சியுமாகும். இவ்வாலயத்தின் மூதாதையர்கள் கட்டிக்காத்த மரபுகளும், ஊட்டி வளர்த்த கிறிஸ்தவ நம்பிக்கையும் ஆழ ஊடுருவி, வேரூன்றி, முதிர்ச்சியடைந்து எப்புயலும், எச் சுனாமியும் அசைக்க முடியாத பெரிய விருட்சமாக ஓங்கி வளர்ந்து நிற்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருநூறு ஆண்டுகளை நிறைவு செய்து விட்ட பூரிப்பில், வெற்றிக்களிப்பில் நிறைந்திருக்கும் இணைப்பேராலய பங்கு மக்களின் மகிழ்ச்சியில் நாமும் இணைவதில் பெருமிதம் அடைகின்றோம். எமது குருத்துவ திருலைப்படுத்தலும், ஆயர் திருநிலைப்படுத்தலும் இவ்வாலயத்திலேயே இடம் பெற்றது யாம் செய்த பாக்கியமே. இவ்வாலயத்தின் சிறப்பினை மேலோங்கச் செய்த ஆயர்கள், பங்குத்தந்தையர், அருட் சகோதர சகோதரிகள், இறைமக்கள் அனைவரையும் அன்புடன் நினைவு கூருகின்றோம். இப்பங்கிலிருந்து உருவெடுத்த கனிகளான குருக்கள், துறவியர், இப்பங்கிற்கு பல வழிகளிலும் பெருமை சேர்த்துத் தருகின்ற இறைமக்கள் அனைவரையும் பாராட்டுகின்றோம்.

வெற்றிக்களிப்பில் தலைக்கனம் கொள்ளாமல், பாதுகாவலியாம் புனித மரியாளைப் பின்பற்றி வல்லவராம் கடவுள் இப்பங்கிற்கு செய்த அரும்பெரும் செயல்களை நினைத்து இறைவனைப் போற்றிப் புகழ்வோம், பேருவகை கொள்வோம், என்றென்றும் நன்றி நவில்வோம்.

பேரருட்திரு.கலாநிதி பொன்னையா ஜோசப்.
திருமலை - மட்டக்களப்பு மறை மாவட்ட துணை ஆயர்,

200 years



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## யாழ் ஆயரின் வாழ்த்துச் செய்தி

புளியந்தீவு புனித மரியாள் ஆலய 200 ஆவது ஆண்டு நிறைவை அறிந்து பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம். இம் மகிழ்ச்சியில் மூழ்கி இருக்கும் பங்கு மக்களையும், வழிகாட்டிகளையும், மறைப் பணியாளர்களையும் வாழ்த்திநிற்கின்றோம்.

200 வருட பூர்த்தி என்பது வெறுமனே ஆலய கட்டிட வரலாற்றின் ஒரு பூர்த்தியில் அத்துடன் அவ் ஆலயத்தில் வாழ்ந்து மரித்து இன்றும் வாழ்ந்து இறை விசுவாசத்தை பெறுபவர்களின் ஆன்மீக வாழ்விலும் 200 வருடங்கள் கடந்துள்ளன என்பது ஓர் பெருமையான விடயம். பங்கு வாழ்வில் இவ் ஆலயத்தின் துணையுடன் எம் முன்னோர்கள் தொடக்கம் இன்று வரை பல இன்னல்கள் இடையூறுகள் மத்தியிலும் எம் விசுவாசத்தை கட்டிக் காத்து விருட்சமாக வளர்ந்து மணம் பரப்பி நிழல் கொடுத்து எம் திருச்சபைத் தாய்க்கு பெருமையூட்ட இறைவன் எமக்கு இவ் ஆலயத்தை தந்தமைக்காக நன்றி கூறுவோம்.

இதே வேளையில் இவ்விழாவை கொண்டாடும் போது சிறப்பான விதமாக இவ் ஆலயத்தின் தோற்றத்திற்கு முன்னின்று உழைத்த நம் முன்னோரையும் நன்றிப் பெருக்கோடு நினைவு கூர்ந்து கொள்ள வேண்டும். அவர்கள் தந்த ஆழ்ந்த விசுவாசமும் கட்டிவைத்த இந்த ஆலயமும் தான் எமது விசுவாசத்திற்கும் சாட்சியமாய் உள்ளது என்றால் அது மிகையாகாது.

எனவே மகிழ்ச்சியான இந்த 200 ஆவது ஆண்டு விழாவில் இவ் ஆலயத்திற்கு பொறுப்பான பங்குத்தந்தை J.A.G. இரட்ணகுமார் அடிகளாரையும் ஆலய பங்கு மக்கள் அனைவரையும் சிறப்பான விதமாக வாழ்த்தி முன்னோரிடமிருந்து பெற்றுக்கொண்ட இந்த விசுவாச வாழ்வு அனுபவத்தை இனி வரும் தலைமுறையினரிடம் பக்தியாக பாதுகாத்து வழங்கும் படி அன்புடன் வேண்டி நிற்கின்றோம்.

மேதகு. இ. தோமஸ் சவுந்தரநாயகம்
யாழ் ஆயர்
ஆயர் இல்லம்
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## MESSAGE FROM THE EPISCOPAL VICAR



200 years anniversary celebration of Co Cathedral Batticaloa of the Diocese of Trincomalee - Batticaloa is a great event in the history of the Diocese.

We know how the Church of Sri Lanka, especially the East, under went varieties of challenges and obstacles by foreign anti catholic invasions.

Thanks and congratulation to the foreign missionaries who faced these challenges and oppositions and worked fearlessly for the building up the church in the East.

We have to remember our pioneers' missionaries of different congregations; Bishops and local clergy who did a dedicated service to build the church in the East.

A big thanks to the Jesuit Missionaries, Bishops, Religious and diocesan priests who rendered a big hand in the building and maintaining the Co Cathedral and the Parishioners in Batticaloa.

I wish and pray that this Church will render more service to the people of Puliyanthivu, Batticaloa in the near future.

I wish warmly the Bishops Rt. Rev. Dr. Kingsley Swampillai, and Rt. Rev. Dr. Ponniah Joseph, the Parish Priest Rev. Fr. Retnakumar, and the Parishioners of Puliyanthivu, as they are celebrating the 200 years Anniversary.

Rev. Fr. Antony Leo
Episcopal Vicar

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## MESSAGE FROM THE VICAR FORANE



It is with great joy that I send this message of congratulation to Parish Priests and Parishioners of St. Mary's Church, Puliyanthivu, Batticaloa on its bicentenary celebration of the erection of the Church, dedicated to our Blessed Mother Mary. Two hundred years is quite a long and significant time in the history of Sri Lankan Church.

Last year 2008 was marked with many significant events in the history of the Diocese of Trincomalee – Batticaloa, namely, the Bishop of the Diocese celebrated the silver jubilee of his Episcopal ordination. And also the first Bishop from the Diocese was consecrated Auxiliary Bishop of Trincomalee-Batticaloa and bicentenary celebrations were had at St. Joseph's Church, Thannamunai, Church of Our Lady of Good Voyage, Amirthakali and Holy Cross Church, Sorikkalmunai, besides St. Mary's Church, Puliyanthivu, Batticaloa. In a way year 2008 was a grace filled year for the Diocese of Trincomalee-Batticaloa. Of special mention is the Church of Our Lady of Sorrows (now Church of Our Lady of Presentation) Thandavanvely, which was originally constructed as a cadjan shed in the year 1624 and was visited by Blessed Joseph Vaz who came as a Missionary to Sri Lanka (then known as Ceylon) in the year 1886. This is the first and oldest Church built in the Diocese of Trincomalee Batticaloa.

At this juncture we, the Bishops, religious and the faithful of the Diocese of Trincomalee-Batticaloa are very much grateful to Paschal Muthaliyar who was the instrumental in building these churches in the Eastern Province when religious freedom was granted to the Catholic Community under British Administration by Governor Maitland on 27$^{th}$ of May 1806.

We must not forget Orotorian Fathers who laid the foundation towards the growth of the Catholic Church in Sri Lanka and also to the Oblate and Jesuit Fathers who continued their valuable service in building up of the faith of the catholic Community in the Diocese of Trincomalee-Batticaloa.

While praising and thanking God for all that has been achieved in the past two hundred years with His grace I am sure that the Almighty God will continue to shower His blessings upon priests, religious and Catholics to be faithful to their Christian Calling and live up their commitments.

May God bless and guide the priests and parishioners of St. Mary's Church, Puliyanthivu, Batticaloa.

**Rev. Fr. J.S. Moraes**
**Vicar Forane**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புளியந்தீவு பங்குத் தந்தையின்
## ஆசிச் செய்தி



**உதய தாரகை** இருநூறாவது வருட ஆலய வரலாற்று ஆவண நூலுக்கு ஆசிச்செய்தி வழங்குவதை பெருமையாகக் கருதுகிறேன்.

ஆலயத்தின் ஜுபிலிக் காலத்தில் பணியாற்றும் வாய்ப்புத்தந்த இறைவனுக்கு நன்றி கூறி, பெருமை மிகு புளியந்தீவுப் பங்கின் புனித மரியாள் இணைப் பேராலய வரலாறு ஆவணப்படுத்தப்படுவது மிகத் தேவையான பணியெனக் கருதுகின்றேன்.

ஜுபிலி ஆண்டுக்கான செயற்பாடுகள் என்ன என்பது பற்றி பக்திச்சபைகளிலும் மேய்ப்புப்பணிச் சபையிலும் ஆலோசிக்கப்பட்டு, எடுக்கப்பட்ட செயற்திட்டங்களில், ஆவண நூல் முதன்மையான செயற்பாடு எனக் கருதுகின்றேன்.

இறந்த கால தரிசனங்கள் தான் நிகழ்கால உறுதிப்பாட்டுக்கும், எதிர்கால முன்னேற்றங்களுக்கும் அடித்தளம் இடும் கற்களாகும்.

தகவல்களாக உள்ளவைகள் காலப்போக்கில் அடுத்த சந்ததிக்கு எவ்வாறு உண்மைத்தன்மையுடன் கடத்தப்படும் என்பது கேள்வியே. எனவே தகவல்கள் சரிபார்க்கப்பட்டு, பதிவுகளாக வெளிவருகின்றன. இப் பதிவுகள் அடுத்தடுத்த ஜுபிலி விழாக்களுக்கு உரமிடப் போகின்றன.

ஆவண நூலுக்காக தெரிவு செய்யப்பட்ட ஆக்கக் குழுவினர், ஒவ்வொரு செயற்பாட்டிலும் மிகுந்த சிரமங்களுடன், ஆயினும் சரியான தகவல்களைப் பதிப்பிப்பதில் மிகுந்த பொறுப்புணர்வுடன் செயற்பட்டதை நான் அறிவேன். அவர்களை மனதாரப் பாராட்டுகிறேன்.

நூல் வெளிவர ஆலோசனைகளும், ஒத்துழைப்புக்களும் வழங்கிய மேதகு மறை மாவட்ட ஆயர்கள் தொடக்கம் **EHED - CARITAS** வரை அனைவரையம் நன்றியுடன் நினைவு கூருகின்றேன்.

பல்லாண்டு காலமாக இப்பங்கின் பாதுகாவலியும் பரிந்துரையாளருமாக இருந்து வரும் புனித மரியாள் தொடர்ந்தும் இப்பங்கினை வழிநடாத்துவார் என்ற நம்பிக்கையுடன் எனது ஆசிகளையும் வழங்குகின்றேன்.

அருட் தந்தை.**J.A.G.**இரட்ணகுமார்
பங்குத் தந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SRI LANKA PROVINCE OF THE SOCIETY OF JESUS
## PROVINCIAL SUPERIOR MESSAGE



The celebration of the bicentenary of St . Mary's Co-Cathedral is a joyful event capable of driving away the battle-gloom that has prevailed in this region for the past several years. The faithful of Sri Lanka, and most particularly those of St. Mary's Parish, Batticaloa are keenly aware the protection given to us by the Blessed Virgin Mary. It is therefore a most appropriate to proclaim our faith in the Lord, and the unfailing intercession of our beloved Mother.

The Catholic Church in Sri Lanka, and in a most special way the faithful of the Trinco- Batticaloa diocese thank the Lord for the countless blessings we have received, specially the gifted and devoted leaders who were given to us at every stage of our development. The Oblates of Mary Immaculate were succeeded by the Missionaries from the Champagne Province of the Society of Jesus, who in 1933 entrusted the diocese to the Jesuits of the New Orleans Province in the United States of America.

The far-sighted dedication of those Missionaries made it possible for us today to enjoy the leadership of the Sons of the Soil. Led by His Excellency Bishop Joseph Kingsley Swampillai and the Parish Priest, Rev. Fr. J.A.G. Retnakumar, the faithful of St. Mary's Church, Puliyantivu, Batticaloa, give thanks to our loving Father and our gracious Mother Mary for the blessings we continue to receive for our families and for our Christian community.

Fr. S. Maria Anthony S.J.
Provincial Superior
Society of Jesus in Sri Lanka

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## PROVINCIAL SUPERIOR, BROTHERS OF CHARITY.



On the joyful occasion of the Bi-centennial celebration of St. Mary's Church, Puliyanthivu, Batticaloa, I am happy to join you and the entire faithful community in praising the Lord for all the benefits He has graciously granted all of you during the past two hundred years.

It is a great privilege to convey this message to the faithful of St. Mary's Co-cathedral, Batticaloa that her Shrine is one of the oldest in Batticaloa and remains the main Parish in this area.

This church was built in 1808 with a small hut donated by a faithful donor. Since then the church was slowly and steadily modified and time to time improved. Now the present appearance of this church is beautifully modified with more space.

The Trincomalee Diocese was separated from the Diocese of Jaffna in 1893 and declared a separate Diocese by Pope Leo XIII. This was under the administration of the Bishop of Galle. Rt. Rev. Charles Lavigne who was consecrated as Bishop of Trincomalee in 1895. In 1933, the Diocese was handed over to the Society of Jesus of New Orleans, America. During the Pastorship of Rt. Rev. Dr. Ignatius Glennie this Diocese was re-named as Trincomalee-Batticaloa. After the Trincomalee Diocese was re-named as Trincomalee-Batticaloa, the Church became Co-cathedral and the St. Mary's Church at Trincomalee remains the Cathedral of this Diocese.

I take this opportunity to wish the Community of St. Mary's Co-cathedral, Batticaloa a very happy Jubilee filled with abundant grace and Blessings of the Blessed Mother Mary through the guidance of the Bishops, Priests, religious and faithful. May the Good Lord bless you and keep you . May He let His face shine upon you and bring you peace.

Rev Bro. P.M. Lenus F.C.
Regional Superior
Brothers of Charity Sri Lanka.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# EHED இயக்குனர் அவர்கள் வழங்கிய ஆசிச் செய்தி



புளியந்தீவு புனித மரியாள் ஆலயம் இருநூறாவது ஜுபிலி நிறைவைக் கொண்டாடும் இவ்வேளையில் நானும் எனது நிறுவனமும் மிகுந்த மகிழ்ச்சியடைகிறோம்.

இந்த மகிழ்ச்சியை இரட்டிப்பாக்குவதாக, வெளியிடப்படும் ஜுபிலிமலர் விளங்குகிறது. அங்குமிங்குமாக கிடந்த தகவல்கள் சேகரிக்கப்பட்டு சரிசெய்து வரலாற்று ஆவணமாக வெளிவருவது தேவையான செயற்பாடு என்பதில் கருத்து வேறுபாடில்லை.

நிகழ்காலத்தில் வாழ்வோரும், எதிர்காலத்தில் வாழப்போவோரும் ஆலய வரலாற்றைவிட, ஆதிக்கிறிஸ்தவர்களின் அர்ப்பணமுள்ளதும்,விசுவாசம் மிக்கதுமான வாழ்க்கை முறையை .அறிந்து கொள்ள, இந்நூல் சந்தர்ப்பம் வழங்கியுள்ளது.

இதிலிருந்து மூன்றாவது நூற்றாண்டுக்கான விசுவாசப்பரம்பரை உறுதியாக கட்டி எழுப்பப்படுமென நம்புகிறேன்.

இவ்வரிய முயற்சியில் தம்மை அர்ப்பணித்த புளியந்தீவுப் பங்குத்தந்தையர்கள், மேய்ப்புப் பணிச்சபையினர், மலர் வெளியீட்டுக் குழுவினர் அனைவரையும் பாராட்டி வாழ்த்துகிறேன்.

இறைவனின் ஆசீர், அன்னையின் வழியாக நம் அனைவரையும் வழி நடத்துவதாக.

அருட்பணி.T.சிறிதரன் சில்வெஸ்டர்.
இயக்குனர் EHED



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MESSAGE FROM SWAMIJI
# RAMAKRISHNA MISSION, BATTICALOA



A bi-centenary is a landmark of distinction for any institution. For a House of prayer, to achieve this record certainly His Grace.

St. Mary's Co-cathedral had its humble beginnings but, had the singular honour of being the mother parish that looked after several parishes during its formative years. What is more, even the Diocese of Jaffna and Trinco had close connections with this church. One must not fail to mention how this House of prayer offered shelter and solace to thousands during times of natural and man-made disasters.

We, of the Ramakrishna Mission congratulate the Society of Jesus and the Oblates of Mary Immaculate for nurturing this institution that has catered to the spiritual and moral uplift of its parishioners.

Swami Ajaratmananda

Swami Ajaratmananda



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**මඩකලපුව ශ්‍රී මංගලාරාම විහාරාධිපති සපරගමුව අමරපුර සිරි සද්ධම්මවංස මහා නිකායේ එක්තැළිගොඩ විහාරපාරශවයේ මඩකලපුව -අම්පාර දෙදිසාවේ උප ප්‍රධාන සංඝ නායක හිමිපාණන්ගේ පණිවුඩය.**

ශාන්තමේරි දෙවස්ථානයේ 200 වෙනි සංවත්සරය සැමරීම වෙනුවෙන් ප්‍රථමයෙන් මාගේ සුභ පැතුම්. මෙවැනි දීගුකාලයක් තුළ තම ආගමික භක්තිකයන්ට ආගම දහම් ආරක්ෂා කරගැනීමටත් යහපත් විනීත සමාජයක් ඇති කරලීමටත් කැපවී ක්‍රියා කළ පූජක වරුන්ගේ මෙන්ම බැතිමතුන්ගේ ද සැබෑ සත්භාවය හා ධර්මාවබෝධය මෙවැනි උත්සව වලින් පිළිබිඹුවනු ඇත.

මිනිසා මෙලොව ඉපිද සිටිනුයේ හුදකලාව ජීවත් වීමට නොවන අතර තමාගේම සියලු අවශ්‍යතා පමණක් සම්පූර්ණ කරගෙන ආත්මාර්ථකාමීව ජීවත් වීමට ද නොවන බව ප්‍රකට කරුණකි. සමාජගත සත්වයෙකු වන මිනිසා හුදකලා නොවී සමූහයක් සමග ජීවත් විය යුතු අතර තමා මෙන්ම තම සමාජීය පුද්ගලයන්ද සමග අන්‍යෝන්‍ය සම්බන්ධතාවයකින් යුක්තව පරෝපකාරීව ද කටයුතු කළයුතු වේ. පරාර්ථකාමී හැගීම් සිත තුළ වර්ධනය වනුයේද එ අයුරින් කටයුතු කිරීමෙනි.

රටක ජාතින් ගේ අධ්‍යාත්මික ගුණ වගාව සඳහා සියලු ආගමික ශාස්තෘවරයන්ගේ (බෞද්ධ -හින්දු - ක්‍රිස්තියානි ) දහම් ආරක්ෂා කිරීම ජාතියක් ලෙස අප කළ යුතුය. මතු අනාගතයේ බිහිවන මුළුමහත් සමාජයටම දැහැමි මිනිසුන් ලෙස සාමයෙන්,සෞභාග්‍යයෙන් හා සහජීවනයෙන් දිවි ගෙවීමට හැකිවනු ඇතැයි මා විශ්වාස කරන අතර මගේ පෞද්ගලික සුභාශිංසනය ද මේ සමග පළ කරනු කැමැත්තෙමිහ. තෙරුවන් සරණයි.!

..........................................................................

ශ්‍රී වාදිභසිංහ සිරි සුජාත, ගෞරව ධර්ම කීර්ති ශ්‍රී, සමාජ සේවා විභූෂණ, සාමශ්‍රී,

පූජ්‍ය අම්පිටියේ සුමනරතන නාහිමි



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மௌலவி எம்.ஏ.எம். சறூக் (பலாஹி)
## பேஷ் இமாம் பெரிய பள்ளிவாயல் மட்டக்களப்பு
## அவர்களின் ஆசியுரை

மட்டக்களப்பு புளியந்தீவு புனித மரியாள் தேவாலயத்தின் இருநூறாண்டு பூர்த்தி விழாவுக்கும், அதன் ஞாபகார்த்தமாக வெளியிடப்படும் நூலுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இன, மத நல்லிணக்கத்திற்கு உதாரணமாகத் திகழும் புளியந்தீவு மிக நீண்டகால பெருமையுடன் நவீனத்துவத்தையும் தன்னகத்தே கொண்டு மிளிர்கின்றது. ஆலயங்களும், கோவிலகளும், வழிபாட்டுத்தலங்களும், உயர்வான கல்விக கூடங்களும் அழகு செய்யும் இந்நகரில் இறையுணர்வைப் பேணவும், வளர்க்கவும் எல்லா மதங்களும் வெற்றி கண்டுள்ளன.

இவ்வகையில் எமது சகோதரர்களான கத்தோலிக்க மக்கள் மகிழ்ச்சியடையும் இந்நல் வேளையிலே நாமும் இணைந்து அகமகிழ்ச்சியில் கலந்துகொண்டு எமது நல்லாசிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம். இருநூறு வருடங்களைக் கடந்துள்ள ஆலயம் இறைநம்பிக்கையின் தூய இடமாய் இன்னும் பல நூறு வருடங்கள் இறைபணிபுரிய ஆசித்து வாழ்த்துகின்றேன்.

நன்றி.

மௌலவி எம்.ஏ.எம். சறூக் (பலாஹி)
பேஷ் இமாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MESSAGE FROM THE HON. CHIEF MINISTER OF EASTERN PROVINCE



I have great pleasure to pen this message of felicitation to the bulletin to be published on the occasion of the bicentenary year celebration of St. Mary's Church, Puliyanthivu, Batticaloa.

St. Mary's Church is one of the oldest parishes in Batticaloa. In the early period Pulitanthivu was the main parish in Batticaloa and the priests administered the other Churches from Puliyantrhhivu.

The St. Mary's Co-cathedral and the St. Anthony's Church of Batticaloa are very famous Churches which bestow blessings and fulfillment of ecclesiastical and other aspirations of the devotees. St. Mary's Church of Puliyanthivu was said to be built during the year 1808 as a small hut and it was gradually modified improved and achieved the present glorious situation.

One special feature that one could note with admiration is that Saint Anthony embraces even non Christians who visit this Church with the strong belief of seeking panacea for their ills.

I am very much pleased to appreciate the dedicated service of the Parish Priests attached to these Churches and it would also be appropriate to place on record the spiritual and the public-oriented humanitarian service of His Lordship the Bishop Rev. Swampillai , to the people in need during the most critical times braving all the challenges and constraints with courage surpassing all the barriers of cast, creed and racial differences with his quest for peace, racial amity and better livelihood to the affected people.

I wish this Bicentenary year celebration a resounding success.

Sivanesathurai Santhirakanthan
Chief Minister



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MESSAGE FROM THE MUNICIPAL COMMISSIONER:



I am pleased to send this message on the occasion of the bicentennial celebrations of the St. Mary's Church which stands majestically in the centre of the Puliyantivu town respected by all sectors of the society irrespective of any difference of religion, language or race.

I t has served the people of Puliyantivu and the neighborhoods consisting of a society of Hindus, Catholics, Christians, Muslims and Buddhists without any religious, linquistic or racial discrimination. It has not confined its activities only to spiritual enlightenment but also deeply involved in cultural, educational and social fields.

It has strived for unity, brotherhood and peace of mankind especially during the recent past which experienced social unrest and natural calamities.

I pray the Almighty for the success of the bicentennial celebrations and wish the yeoman services of the church to continue for ever.

**M. Uthayakumar**
Municipal Commissioner
Batticaloa



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MESSAGE FROM THE PRINCIPAL OF ST. MICHAEL'S COLLEGE:



## வாழ்த்துச் செய்தி

மட்டக்களப்பின் நகர மையத்தில், புளியந்தீவை அமைவிடமாகக் கொண்டுள்ள, புனித மரியாள் இணைப்பேராலயம், நீண்ட காலமாக மக்களுக்கு இறைவழிகாட்டி நன்நெறி மார்க்கத்தில் மக்களை வழிப்படுத்தி வந்துள்ளமையை நாமறிவோம்.

அன்னை புனித மரியாளின் அருட்பார்வை மக்களுக்குக் கிடைத்தமையால், அவர்களின் இன்னல்கள், இடர்கள், கலைந்தன. இத்தகைய அருமை – பெருமை படைத்த இவ்வாலயம் 2009.08.15 ஆம் திகதியில் இருநூறாம் ஆண்டில் தடம்பதிப்பதையிட்டுப் பெருமிதம் அடைகின்றேன். மேலும் அப் பொன்னான தினத்தில் வெளியிடப்படவுள்ள சஞ்சிகைக்குச் செய்தியொன்றினை வழங்கக் கிடைத்தமையையிட்டு மன நெகிழ்ச்சியடைகின்றேன்.

இந்த வேளையில், இவ்வாலயம் நீண்ட காலம் நிலைத்து நிற்பதற்கும் அன்னை புனித மரியாளின் அருட்பார்வை மக்களுக்குக் கிடைப்பதற்கும் இறைபணியாற்றிய, ஆற்றுகின்ற அருள் நெறியாளர்கள் இறைபணியாளர்கள் அனைவரையும் சிரம் தாழ்த்தி வாழ்த்துகின்றேன். நீண்ட பாரம்பரியத்தினையும் ஆன்மீக பலத்தினையும் வழங்குகின்ற இவ்வாலயம் என்றென்றும் இறையடியார்களுக்கு இருளகற்றி அருள் மழைபொழிய அன்னையை வேண்டி செய்தியை நிறைவு செய்கின்றேன்.

நன்றி

திரு.செ.மகேந்திரகுமார்
அதிபர்,
புனித மிக்கேல் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## MESSAGE FROM THE PRINCIPAL OF ST. CECILIA'S GIRLS NATIONAL SCHOOL:



On this happy occasion of the 200th Anniversary of our Co-cathedral, dedicated to Our Blessed Mother of the Assumption, I join the entire faithful community in glorifying and praising the Lord for the 200 years of manifold graces and blessings.

This Co-cathedral was the seat of Bishops for many years as it had a special Throne for them. Therefore it is a place of sacredness and sublimity. All important events are organized and celebrated in the Co-cathedral. Ordinations of priests are significant events. In May 2008 we witnessed the Episcopal Consecration of our Auxiliary Bishop Rt. Rev. Dr. Ponniah Joseph by Rt. Rev. Dr. Joseph Kingsley Swampillai in this Co-cathedral. It is holier because it's the resting place of the late Rt. Rev. Dr. Gaston Robishe S.J. the 2nd Bishop of the Diocese.

Situated in the heart of the Batticaloa town, Our Lady's powerful protection is evinced in many situations. Our Blessed Mother protected Her Home from the traumatic experiences of the cyclone, the terrible effects of the ongoing war and the calamities of the natural disasters such as Tsunami and floods.
Standing out with open arms, inviting all into Her loving embrace is a veritable sign of Her Motherly sway over Her Cathedral. To all who turn to Her, She is the Queen of the East. We are indeed privileged to enjoy Her protection. How can we ever forget Her compassionate care over us? Her merciful eyes are cast always on the little ones, the needy youth and the aging ones who pass by.
I bow down in gratitude to God for Her unceasing intercession and pray, that She continues to watch over us from the evils that threaten us and that the power of God may be felt strongly by Her abiding presence.

**Sr. M. Elizabeth A.C.**
Principal Bt/ St. Cecilia's Girls College



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

"உங்களுக்கு முற்பட்ட பண்டைக்காலத்தைப்பற்றி கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்...........".
(இணைச்சட்ட நூல் - 4:32)

இருநூறு வருடங்களைக் கடந்து செல்லும் ஆலய வரலாற்றின் ஆவண நூலாகிய **"உதய தாரகை"** வெளிவருவது காலத்தின் தேவையெனக் கருதுகின்றோம்.

இருநூறு வருடங்களுக்கு முன்னர் (1808-2008) இவ்வாலயம் இவ்வளவு தீர்க்கதரிசனத்துடன் அமைக்கப்பட்டதென்றால், இதன் நிர்மாணச் சிற்பிகளான புளியந்தீவுக் கத்தோலிக்க மக்களின் வரலாறு ஆலயத்தின் அடியில் மறைந்து கிடக்கிறது. இனிவருங்காலத்தில் அந்த வரலாறு வெளிப்பட வேண்டும்.

வரலாறு ஆவணப்படுத்தப்படாவிட்டால் வரலாற்றுக்குரிய சமூகம் சத்து இழந்துவிடும். சொந்தம் என்று உரிமை கொண்டாட எதுவும் இல்லாதிருக்கும்.

இந்த நோக்கில்தான் **"உதய தாரகை"** வெளியிடப்படுகிறது.
வரலாற்றுப் பதிவுகளை வெறுமனே எழுந்தமானத்தில் பதிக்க முடியாது. தகவல்களை ஆதாரங்கள் சாட்சிப்படுத்த வேண்டும். கடந்த இருநூறு ஆண்டுகளின் வரலாற்றுக்கு ஆதாரங்கள் தேடியபோது தான், இதை இன்னமும் விட்டு வைத்தால், எல்லாமே புதையுண்டு போய்விடும், உள்ள ஆதாரங்களைக் கொண்டாவது பதிவுகளை வைத்துக் கொள்ள வேண்டுமென்ற கட்டாயம் ஏற்பட்டது.

அண்மைய இருநூறு வருடங்களுக்கே இந்நிலை என்றால், இன்னும் பின்னோக்கிப் போகப் போக........?

முடிந்தளவு ஆதாரங்கள் கொண்ட செய்திகள் இந்நூலில் பதிவாகியுள்ளன. ஏதிர்கால நூற்றாண்டுகளின் வரலாறுகளுக்கு இந்நூல் அடித்தளமாகக் கொள்ளப்படப் போகிறது. காய்தல், உவத்தலின்றிய பதிவுகள் தான் சேர்க்கப்பட்டுள்ளன.

பங்கில் பணியாற்றிய பங்குத் தந்தையர்களின் விபரங்கள் போதியளவு கிடைக்கவில்லையாதலால் பங்கிலுள்ள திருமணப் பதிவேட்டிலிருந்து பெறப்பட்ட தகவல்கள் மட்டுமே தரப்பட்டுள்ளன. பங்கிற் செயற்படும் பக்திச் சபைகளின் விபரங்களுடன் இப்பங்கில் தலைமையகங்களைக் கொண்டுள்ள நமது சில நிறுவனங்களது விபரங்களும் நூலில் தரப்பட்டுள்ளன. பல்வேறு மூலங்களிலிருந்தும் திரட்டப்பட்ட தகவல்களாகையால், சிறு முரண்பாடுகள் காணப்படுமாயின் நன் நோக்குடன் சுட்டிக் காட்டுமாறு வேண்டுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது பங்கைப் பிறப்பிடமாகக் கொண்ட அருட் தந்தையர்கள், அருட்சகோதரிகள் ஆகியோரின் விபரங்கள் சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. இவ்விபரங்கள் யாவும் அவர்களது பெற்றார், உறவினர்களாற் தரப்பட்டனவேயாகும்.

இனிமேலாவது, சம்பவங்கள் சரித்திரமாவதற்கு எழுத்து மூலமான பக்கச் சார்பின்றிய தகவல்கள் பேணப்பட வேண்டிய அவசியத்தை இந்நூல் நமக்கு உணர்த்துமென நம்புகிறோம்.

ஒரு சம்பவம், அல்லது நிகழ்வு நடந்து பலராலும் பேசப்பட்டு, விமர்சிக்கப் படுவதுடன் மறைந்து போய் விடுகிறது. சற்றுக் காலம் கடந்த பின்னர்தான் குறிப்பிட்ட சம்பவம் வரலாற்று அழுத்தம் பெறுகிறது. ஆயினும் அந் நேரத்தில் அதற்கான ஆதாரங்கள் எங்குமே கிடைக்காத துர்ப்பாக்கிய நிலை காணப்படுகிறது. இந்நிலை எதிர்காலத்தில் நீடிக்க இடமளிக்கக் கூடாது.

இந்நூலிலுள்ள நிகழ்வுகட்கான சான்றுகளின் விபரங்கள் நூலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ளன. மிகப் பெரும்பான்மையான தகவல்கள் முழுமையாக அருட்தந்தை J.W.லாங் (யே.ச) ( REV.FR. J.W. LANG S.J ) அடிகளார் எழுதிய "PALM FRINGED COAST" எனும் நூலிலிருந்து எடுத்தாளப்பட்டுள்ளன. இவ்வாறு தகவல்களை எடுத்தாள ஒப்புதல் தந்த மட்டக்களப்பு இயேசு சபையினருக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

பலர் சிரமம் பாராது இந்நூல் உருவாக்கத்திற்கு உழைத்துள்ளனர். இன்றைய சந்ததியினரின் பெறுமதிக்க உழைப்பு என கருதுகிறோம்.

ஆக்கங்கள் தந்துதவியோர், நூல் உருவாக்கத்திற்கு நிதிவசதிகள் அளித்த எகெட் கரிட்டாஸ் நிறுவன இயக்குனர், கணினி அச்சு உதவியாளர்கள், சென் ஜோசப் கத்தோலிக்க அச்சகத்தினர், வாழ்த்துரைகளை அளித்தோர் அனைவருக்கும் நன்றி தெரிவிக்கும் இவ்வேளையில், ஆக்கமும், ஊக்கமும் அளித்து எம்மை வழிநடாத்திய எமது மறைமாவட்ட ஆயர்கள் இருவருக்கும் மனப்பூர்வமான நன்றியறிதலை பணிவுடன் சமர்ப்பிக்கின்றோம்.

பண்டைய வரலாற்றுடன் சில சமகால நிகழ்வுகளையும் தொட்டுச் செல்லும் இந்நூலை நமது எதிர்காலச் சந்ததியினர் சிறப்புடன் பயன்படுத்த வேண்டும் எனும் நன்நோக்குடன் இம்மலர் வெளிவருகின்றது.

எல்லாம் வல்ல இறைவனின் ஆசியும், வழி நடத்தலும், எமது புனித அன்னையின் அருளும், துணையும், வேண்டி நம் எதிர்காலச் சந்ததியினருக்கு இந்நூலைச் சமர்ப்பிக்கின்றோம். இறைவனின் கருணைக்கு நன்றி கூறுகின்றோம்.

*வெளியீட்டுக் குழு,*
*15 ஆகஸ்ட் 2009.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு புனித மரியாள், புனித அந்தோனியார் ஆலயங்கள்

மட்டக்களப்பிலே, புளியந்தீவுப் பங்கிலே இரு ஆலயங்கள் உள்ளன. ஒன்று புனித மரியாள் இணைப்பேராலயம், மற்றது புனித அந்தோனியார் ஆலயம். இவை இரண்டும் ஒன்றுக்கொன்று வெகு நெருக்கமாக அமைந்துள்ளன. இந்த இரு ஆலயங்களுக்குமிடையே ஆயரில்லக் கட்டடங்கள் அமைந்துள்ளன. புனித மரியாள் பேராலயம் வெள்ளாளர், சிகையலங்கரிப்போர், பறங்கியர் என மூவின மக்களைச் சாதி அடிப்படையில் கொண்டதாயும், அந்தோனியார் ஆலயம் மீனவரின் ஆலயமாகவும் ஆரம்பகாலத்தில் உருவாகின.

வரலாற்று ஏடுகளைப் புரட்டினால், போர்த்துக்கேயரே மட்டக்களப்பில் கிறிஸ்தவ மதத்தை முதன் முதலாக அறிமுகம் செய்தனர் என்றும், 16ம் நூற்றாண்டிலே திருகோணமலையும் மட்டக்களப்புமே கத்தோலிக்க குருமார் தங்கியிருந்து சமயப்பணிபுரிந்த இடங்களாயும் இருந்ததை நாம் காணலாம். இவ்வாறு திருமலையும் மட்டக்களப்பும், கிழக்கு மாகாணத்திலே உள்ள எல்லாப் பங்குகளுக்கும் தாய்ப் பங்குகளாக அமைந்திருந்தனவென்றால் மிகையாகாது.

மட்டக்களப்புப் புளியந்தீவுப் பங்கின் மேற்குறிப்பிட்ட இரு ஆலயங்களும் அவற்றின் வளர்ச்சிப் பாதையிலே பல்வேறு வரலாற்றுப் பின்னணிகளைக் கொண்டுள்ளன. அன்று மக்கள் மத்தியிலே இருந்த சாதிப் பிளவுகளையும், அவற்றின் விளைவுகளையும் பிரதிபலிப்பனவாய் இவ்விரு ஆலயங்களும் இருந்தன. ஆரம்பகாலக் கத்தோலிக்க குருமார் அதிகமான மக்கள் கிறிஸ்தவ மதத்தைத் தழுவவேண்டும் என்ற ஆர்வத்தினால் சாதிக்கொரு கோவில் எழுப்புவதைத் தடுக்க விரும்பாதிருந்தனர். ஆயினும், எல்லாக் கிறிஸ்தவ ஆலயங்களிலும் எல்லாச் சாதி மக்களும் வந்து இறைவனை வணங்கவும் இறைவழிபாட்டில் பங்கெடுக்கவும் உரிமையுண்டு என்பதை மட்டுமே வலியுறுத்தியும், அமுல்நடத்தியும் வந்தனர்.

இவ்வாறு புளியந்தீவிலே புனித அந்தோனியார் ஆலயமே முதன்முதலாகக் கட்டப்பட்ட கத்தோலிக்க தேவாலயமாகும். கோவாவில் இருந்து இங்கு வந்து பணிபுரிந்த தியான சம்பிரதாய துறவிகளின் காலத்தில் இவ்வாலயம் மீனவக் கிறிஸ்தவர்களால் 1800ஆம் ஆண்டளவில் கட்டப்பட்டது. முதன்முறையாக இவ்வாலயம் கட்டப்பட்டபோது, அதற்கு இன்று நாம் காணும் விறாந்தைகளோ, முகப்புக் கோபுரங்களோ, ஏன் பின்புறமுள்ள சக்கிறிஸ்தியோ இருக்கவில்லை. மாறாக அந்தோனியார் ஆலயம் டச்சுக்காரர்களின் முறைப்படி, ஒரு சிறு மண்டபமாக, மூன்றடி அகல சுவர்களுடன் குட்டைக் கற்களினால் கட்டப்பட்டது. 1846ஆம் ஆண்டிலேதான் கோபுரங்களில்லாத முன் முகப்புக் கட்டப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீனவர் கட்டிய ஆலயத்தைப் பார்த்ததும், தாங்களும் ஒரு ஆலயம் கட்டவேண்டுமென வெள்ளாளர்களும் ஆசித்தனர். எனவே பாஸ்கல் முதலியார் எனும் தனவந்தர் இதற்குத் தேவையான காணியையும் நன்கொடையாக அளித்து அதிலே ஒரு ஆலயத்தையும் அமைத்துக் கொடுத்தார். 1867ஆம் ஆண்டிலே அருட்தந்தை றூபியாக் (FR.RUFFIAC) அவர்கள் இவ்வாலயத்தின் நீளம், அகலம் என்பவற்றைக் கூட்டிப் பெரியதோர் ஆலயமாகக் கட்டினார். அத்துடன் ஆலயத்தின் பின்புறமாக ஒரு குருமனையையும் அமைத்தார்.

இவ்வாறு புனித மரியாள் ஆலயம் மெருகூட்டப்பட்டுத் தங்களுடைய ஆலயத்தையும் விடச் சிறப்பு வாய்ந்ததாய் மாற்றியமைக்கப்பட்டதை மீனவக் கிறிஸ்தவர்களால் ஜீரணிக்க முடியாமற் போய்விட்டது. எனவே அவர்களும் தங்களுடைய ஆலயத்தைப் புதுப்பிக்க முயன்றனர். அதற்கேற்ப அமல மரித்தியாகிகளின் காலத்திலே அந்தோனியார் ஆலயத்திற்கு இருபுறமும் விறாந்தைகள் அமைத்தனர். ஆலயத்துடன் இணைந்ததாக இரு அறைகளும் கட்டி, ஒன்றை சக்கிறிஸ்தியாகவும் மற்றதைத் தங்குமிடமாகவும் பாவித்தனர்.

1880ம் ஆண்டிலே வெள்ளாள குலத்தைச் சேர்ந்த அருட்தந்தை பிரான்சிஸ் சேவியர் (FR.FRANCIS XAVIER) மட்டக்களப்பிற்குப் பங்குத் தந்தையாக வந்தார். இலங்கையின் முதலாவது சுதேச குருவும் அவரே. அவர் பழைய மரியாள் ஆலயத்தை இன்னும் சற்றுப் பழுது பார்த்து அதற்கு ஒரு பலிப்பீடத்தையும் அமைத்தார்.
மீனவக் கிறிஸ்தவர்களுக்கு இச்செயலும் பெரிய தாக்கமாய் இருந்தது. எனவே அவர்கள் அந்தோனியார் ஆலயத்தின் பின்புறமாக புதியதொரு குருமனையை கட்டினர். ஒரு காலத்தில் தங்களுக்கென ஒரு குருவானவரை தாங்களும் அடைந்து தங்களுடைய ஆலயமும் முக்கியமானதாய்த் திகழ வேண்டும் என்றே இவ்வாறு செய்தனர். இவ்வேளையில் புனித அந்தோனியார் ஆலயம் இரண்டிலும் பெரியதாக இருந்தது. எனவே மரியாள் ஆலயத்தைச் சேர்ந்தவர்கள் அனைவரும் இணைந்து தங்களது ஆலயத்தை அந்தோனியார் ஆலயத்தைவிட பெரிய ஆலயமாக அமைக்க தீர்மானித்தனர். அன்றைய பங்குத் தந்தை பிரான்சிஸ் சேவியர் அடிகளாரும் இதற்கு ஆதரவாயிருந்தார். ஆயரின் அனுமதி பெற்று, பிராந்தியப் பொறியியலாளர் ஆர்ணல் லயனல் (MR. ARNOLD LYONEL) அவர்களின் உதவியுடன் புதிய ஆலயத்திற்குத் திட்டம் தீட்டினர். இது நடந்தது 1872ஆம் ஆண்டிலாகும். கொழும்பு புனித லூசியா பேராலயத்தைப் போன்று, அதைவிடச் சற்று சிறிய அளவிலே திட்டம் தயாரிக்கப்பபட்டது. ஈற்றில், 1874ஆம் ஆண்டு ஜுலை மாதம் 19ஆம் நாளில் புதிய ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் அருட்தந்தை பிரான்சிஸ் சேவியர் அவர்களால் இறை வேண்டுதலுடன் இனிதே நடந்தது. பழைய ஆலயத்தின் ஒரு பகுதியும் இடிக்கப்பட்டு, புதிய ஆலயக் கட்டட வேலைகள் துரிதப் படுத்தப்பட்டன. புதிய ஆலயத்தின் மணிக் கோபுரங்களும் கட்டப்பட்டு, மணிகளும் அங்கு பொருத்தப்பட்டன. ஆயினும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்தின் இரு பக்கச் சுவர்களும் அரைகுறை பூர்த்தியான நிலையில் பிரான்சிஸ் சேவியர் அடிகளார் வேறிடத்திற்கு மாற்றலாகிச் சென்றார். இதனால் கட்டட வேலையும் ஸ்தம்பிதம் அடைந்தது. 1886இல் அருட்தந்தை லவ்றாக் (FR. LAFFRAGE) அடிகளார் கட்டட வேலைகளை மறுபடியும் ஆரம்பித்தார். விரைவாக ஆலய முகப்பு கட்டி முடிக்கப்பபட்டது. ஆனால் 1889இல், அவரும் மாறுதலாகி வேறிடம் சென்றார். கட்டட வேலையும் நிறுத்தப்பட்டது. 1892இல் அருட்தந்தை. மியறி (FR. MIYARY) ஆலயக்கட்டட வேலையை மறுபடியும் ஆரம்பித்தார். ஏற்கனவே கட்டப்பட்ட சில பகுதிகள் கால ஓட்டத்தில் பாதிப்படைந்திருந்தன. அவற்றையெல்லாம் இடித்துவிட்டு மறுபடியும் புதிதாகக் கட்டினார். ஆனால் 1893ஆம் ஆண்டிலே திருகோணமலை எனும் புதிய மறைமாவட்டம் பரிசுத்த தந்தை 13ஆம் சிங்கராயர் அவர்களால் உருவாக்கப் பட்டு, பிரான்ஸ் நாட்டின் சம்பேன் மாகாண (CAHMPAIGNE) இயேசு சபைத் துறவிகளின் பொறுப்பில் விடப்பட்டது. இதனால் ஆலயக்கட்டட வேலை மறுபடியும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

இயேசு சபைத் துறவிகள் தங்களிடம் கையளிக்கப்பட்ட இப்புதிய திருகோணமலை மறைமாவட்டத்தைப் பொறுப்பேற்க 1895ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இங்கு வந்தனர். அவ்வேளை மட்டக்களப்பு புனித மரியாள் ஆலயம் கட்டத் தொடங்கி 21 ஆண்டுகள் ஆகிவிட்டன. அது முற்றுப் பெறாத காரணத்தினாலும், மழை, வெயிலில் அடிபட்டுக் கிடந்ததினாலும், சுவரின் பல பகுதிகள் பாதிப்படைந் திருந்தன. இதனால் இவ்வாலயத்தை தொடர்ந்து கட்டுவதற்கு புதிய குருமார் தயங்கினர். மேலும் அன்றிருந்த இயேசு சபைத் துறவிகள் மட்டக்களப்பு புனித மரியாள் ஆலயமே திருகோணமலை மறைமாவட்டத்தின் பேராலயமாக இருத்தல் வேண்டும் என்றும் எண்ணியிருந்தனர். எனவே கட்டட வேலையை மறுபடியும் தொடரும் முன், அதன் அத்திவாரத்தின் ஸ்திரத்தையும், உறுதியையும் பரிசோதித்துப் பார்த்தல் அவசியம் என முடிவு கட்டினர். எனவே, அவ்வேளை திருகோணமலை மறைமாவட்டத்தின் பராமரிப்பாளராய் கடமையாற்றிய காலி மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு. வன் றீத் (BISHOP OF GALLE RT.REV.DR. VAN REETH S.J) அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க கண்டி குருமடத்திலிருந்து அருட்தந்தை. கொச் (FR. KOTCH S.J) அடிகளார், 1897ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 5ஆம் நாள் மட்டக்களப்பிற்கு வருகை தந்தார். அவருடைய பணி ஆலயத்தின் அத்திவாரத்தைத் தோண்டிப் பரிசோதித்து ஆலோசனை வழங்குதல் ஆகும். ஆனால் புனித மரியாள் ஆலயத்தைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள் இப்பரிசீலனையைச் செய்ய யாரையும் விட மறுத்துவிட்டனர். ஏனென்றால், அவ்வேளை மக்கள் மத்தியிலே, இயேசு சபைத்துறவிகள் இவ்வாலயத்தை இடித்து ஆண்களுக்கும், பெண்களுக்கும் இரு பாடசாலைகளையும் ஒரு கன்னியர் மடத்தையும் கட்டப்போகின்றனர் என்னும் வதந்தி பரவியிருந்தது. இதனால் மக்களுக்கும் இயேசு சபைத்துறவிகளுக்கும் இடையே பல வருடங்களாய் ஒரு பெரிய போராட்டமே நடந்தது. அடிபிடி சண்டைகளும், பொலிசாரின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபாடுகளும், அரச அதிகாரிகளின் தலையீடுகளும் குறுக்கிட வேண்டிய நிலையும் உருவாகின. சில கத்தோலிக்கர்கள் திருச்சபையிலிருந்து நீக்கப்படும் (EXCOMMUNICATION) அளவிற்குப் பிரச்சினை வளர்ந்து கொண்டே சென்றது. இவ்வாறு பல வருடங்களாய் நடந்த கலகங்கள் ஈற்றில் நீதிமன்றம் வரை சென்ற பின்னரே சமரசமும் சமாதானமும் ஏற்பட்டது. திருச்சபையினின்று வெளியேற்றப்பட்டோர் சரணடைந்து மன்னிப்புப் பெற்று மறுபடியும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். ஆலயத்தின் மீதும் அது அமைந்துள்ள காணியின் மீதும் ஆயரின் உரிமையும் அதிகாரமும் உறுதிப்படுத்தப்பட்டபின், 1898ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் அருட்தந்தை. கொச் அடிகளாரும் பிராந்திய பொறியியலாளர் திரு. ரொமலின் (MR. TOMALINE – DIVISIONAL ENGINEER) அவர்களும் எதிர்ப்புக்களின்றி அத்திவாரத்தைப் பரிசோதித்தனர். இறுதியிலே ஆலயம் ஓட்டுக்கூரை போடக்கூடிய உறுதி கொண்டதென அறிவித்தார்.

இச்சந்தர்ப்பத்திலே இலங்கையின் ஆளுநரான சேர். ஜோசப் வெஸ்ட் றிஜ்வே (GOVERNOR SIR JOSEPH WEST RIDGEWAY) அவர்கள் மட்டக்களப்பை பார்வையிட வந்திருந்தார். அவர் கூரையிடப் படாதிருந்த மரியாள் ஆலயத்தைக் கண்டதும் 100 நல்ல காட்டு மரங்களை நன்கொடையாக அளித்து, ஆலயத்தை விரைவாக பூர்த்தி செய்யுமாறு பணித்துச் சென்றார். அதன் பின் இலங்கை வந்த திருகோணமலை மறைமாவட்ட முதலாம் ஆயர் சார்ள்ஸ் லவிங் (FIRST BISHOP OF TRINCOMALEE DIOCESE, RT.REV.DR. CHARLES LAVIGGNE S.J) அவர்களின் பணிப்புரைக்கேற்ப ஆலய வேலைகள் யாவும் துரிதப்படுத்தப்பட்டன. இறுதியில் 1901ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திலே புதிய ஆலயம் ஆசீர்வதிக்கப்பட்டு, வழிபாட்டுக்காக திறந்து விடப்பட்டது.

இவ்வாறு புனித மரியாள் ஆலயம் கட்டிமுடிக்கப்பட்டு வழிபாட்டுக்கும் திறந்து விடப்பட்ட பின்பு, அதனுடன் அந்தோனியார் ஆலயத்தை ஒப்பிட முடியாமற் போய்விட்டது. இது மீனவர்களுக்கு உள்மனதிலே வேதனையாகவே இருந்தது. பூனைக்கு அருகிலே ஒரு யானை நிற்பதைப் போன்ற ஒரு நிலைப்பாடு. ஆனால், இயேசு சபைத்துறவிகள் சாதிப்பாகுபாட்டை மேலும் மேலும் வளர்க்க விரும்பவேயில்லை. மாறாக, அதை உடைத்தெறியவும், சமூகத்திலேற்படும் தீய விளைவுகளை களைந்தெறியவுமே விரும்பினர். எனவே அன்னை மரியாளை அமல உற்பவி எனப் பிரகடனம் செய்த 50ஆம் ஆண்டு ஜுபிலியை இரு பகுதியாரும் பகைமை ஒழித்து, சகோதர பாசத்துடன் ஒன்றிணையும் ஒரு காலமாயும், சந்தர்ப்பமாயும் பாவிக்க வேண்டுமென வலியுறுத்தினர். இவ்வேண்டு தலை இரு பகுதியாரும் ஏற்றுக் கொண்டு தங்கள் பழைய பகைமை களைக் கைவிட்டவர்களாய் புதியதொரு அத்தியாயத்தை புளியந்தீவுப் பங்கிலே 1904ஆம் ஆண்டு ஆரம்பித்தனர். இவ்வாறு எல்லாரும் ஒன்றிணைந்து, 1904ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 8ஆம் திகதி, அன்னை மரியாளின் திருநாளன்று அந்தோனியார் ஆலயத்திற்கு மணிக்கோபுரத்தோடு இணைந்த புதிய முகப்பு ஒன்றைக் கட்டிட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்திவாரக் கல் வைக்கும் வைபவத்தை கோலாகலமாகக் கொண்டாடினர். மீனவர், வெள்ளாளர், சிகை அலங்கரிப்போர், பறங்கியர் எல்லாரும் ஒன்றிணைந்தே இச்செயலைச் செய்தனர். தங்களுடைய புதிய கிறிஸ்தவ சகோதர உறவின் சின்னமாயும், சமாதானத்தின் அடையாளமாயும் 1300 ஏழைகளுக்கு மதிய உணவும் அளித்தனர். அடுத்த ஆண்டிலே, 1905இல் முகப்பு வேலையினையும் நன்கு முடித்து, மரியாள் ஆலயத்தைப் போன்று அந்தோனியார் ஆலயத்திற்கும் புதிய மணிக்கோபுரங்களிலே மணிகளை ஏற்றி மகிழ்ந்தனர். இயேசு சபைத் துறவிகளும் யாழ் ஆயர் மேதகு. ஜுலியன் காலத்திலே செய்யப்பட்ட உடன்படிக்கைக்கு பிரமாணிக்கமாயிருந்து, இரு ஆலயங்களையும் வருடத்தில் 6 மாதங்களுக்குப் பங்கு கோவிலாகக் கணித்து வழிபாட்டு முக்கியத்துவம் அளித்து வந்தனர்.

1895ஆம் ஆண்டு தொடக்கம், இயேசு சபைத் துறவிகள் இரு ஆலயங்களோடும் இணைந்திருந்த இரு குருமனைக் கட்டடங்களையும் பாவித்தே வந்தனர். இச்செயல் இரு பகுதி மக்களுக்கும் மிகமிகத் திருப்தியாய் இருந்தது. ஆனால் 1931ஆம் ஆண்டிலே, புனித வளனார் துறவற சகோதரர்கள் மட்டக்களப்பிற்கு வந்தனர். அவர்கள் தங்குவதற்கு இட வசதி தேவைப்பட்டது. எனவே புனித மரியாள் ஆலயத்துடன் இணைந்திருந்த குருமனையை அவர்களுக்குக் கொடுத்து விட்டு பங்குத் தந்தையும் துணைப் பங்குத் தந்தையும் அந்தோனியார் ஆலய குருமனையை தமது இல்லமாகப் பாவித்தனர்.

விரைவிலே புனித வளனார் துறவிகள், புனித அகுஸ்தீனார் ஆசிரிய கலாசாலையையும், கத்தோலிக்க அனாதை ஆண்கள் இல்லத்தையும், புனித மரியாள் ஆண்கள் பாடசாலையையும் பொறுப்பேற்று திறமையுடன் நடத்தலாயினர். அகுஸ்தீனார் கலாசாலை அன்றிருந்த இடத்திலேதான் இன்று சார்ள்ஸ் மண்டபக் கட்டடத் தொகுதியுள்ளது. அக்கலாசாலைக் கட்டடத் தொகுதியின் ஒரு சிறுபகுதி அழியாமல் உள்ளது. அதனைப் புளியந்தீவு புனித வின்சன்ட் டீ போல் சபையினர் தங்கள் செயலகமாகப் பாவிக்கின்றனர். மற்றைய மண்டபம் எகெட் (EHED) நிறுவனத்தின் களஞ்சியமாப் பாவிக்கப்பட்டு வருகின்றது. அண்மைக்காலத்தில் அத்தொகுதியும் இடிக்கப்பட்டு புதிய 3 மாடிக் கட்டடத் தொகுதி உருவாக்கப்பட்டுள்ளது.

பிற்காலத்திலே ஆசிரியக் கலாசாலை மூடப்பட்ட பின், புனித வளனார் துறவிகள், அருகிலிருந்த கத்தோலிக்க அச்சகத்திலே பணிபுரிந்தனர். ஈற்றில் ஆயர் கிளெனி ஆண்டகை அவர்கள் அச்சகத்தையும் அவர்களுக்கே சொந்தமாக அளித்தார். அதுதான் இன்று சென். ஜோசப் கத்தோலிக்க அச்சகமாக இடமாற்றம் பெற்றுள்ளது. ஆயர் கிளெனி அவர்கள் 1948ஆம் ஆண்டில், பழைய அகுஸ்தீனார் கட்டடத் தொகுதியில், புனித் வளனார் சிறிய குருமடத்தை அமைத்துக் குருத்துவ மாணவர்களுக்குக் கல்வி புகட்டும் இல்லிடமாக மாற்றியமைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்குருமடம்தான் 1959இல் திருமலைக்கு மாற்றப்பட்டு, பிற்பாடு 1983இல் ஏற்பட்ட இனக்கலவரத்தினால் மட்டக்களப்பு திருப்பெருந்துறைக்கு மாற்றப்பட்டது.

1967இல் புதிய குருமனைக் கட்டடத்தொகுதி ஆரம்பமானது. அவ்வேளையில் புளியந்தீவுப் பங்குத் தந்தை தனது வசிப்பிடத்தை மரியாள் ஆலயத்துடன் இருந்த குருமனைக்கு மாற்றினார். புனித வளனார் துறவிகள் வேறிடத்திற்கு, கோவிங்டன் வீதியில் இருந்த தங்களது இல்லத்திற்குச் சென்றனர். அந்தோனியார் ஆலயத்துடன் இணைந்திருந்த குருமனை இடிக்கப்பட்டு புதிய கட்டடத் தொகுதிக்கு இடம் அளிக்கப்பட்டது.

1978 நவம்பர் 23ஆம் நாள் மட்டக்களப்பைத் தாக்கிய சூறாவளியிலே புனித மரியாள் இணைப் பேராலயம், குருமனை என்பனவும் தாக்குண்டன. குருமனைக் கட்டடத்தின் பகுதிகள் பலவும் இடிந்தும் விட்டன. புனித மரியாள் பேராலய முகப்புத் தொகுதி முன்பக்கமாக ஒருசில அடிகள் சாய்ந்து விட்டது. இதனால் இது எந்த நேரத்திலும் விழுந்துவிடக் கூடிய நிலையில் இருந்தது. சூறாவளி அனர்த்தங்களைப் பார்வையிட, உரோமையிலிருந்து மறைபரப்பு ஆணையத்தின் செயலதிபர் ஆயர் லூர்து சுவாமி அவ்வமயம் மட்டக்களப்பிற்கு வருகை தந்திருந்தார். புளியந்தீவு பங்கு மக்களே அவரை மறைமாவட்டத்தின் பெயரால் மாலையணிவித்து வரவேற்றனர். ஆயர் லூர்து சுவாமி அவர்கள் அந்தோனியார் ஆலயத்திலேயே திருப்பலியும் நிறைவேற்றினார். பிற்பாடு ஆயர் எல்.ஆர். அன்ரனி அவர்களுடனும் தேசிய செடெக் (NATIONAL SEDEC) இயக்குனர் அருட்தந்தை. ஜுட் பெர்னாண்டோ அவர்களுடனும் சென்று புனித மரியாள் ஆலயத்தையும் இடிந்த குருமனையையும் பார்வையிட்டார். அவ்வமயம் லூர்து சுவாமி ஆண்டகை அவர்கள் எங்களிடம் புனித மரியாள் ஆலயத்தை முற்றாக இடித்துவிட்டு அதேபோன்று புதியதொரு ஆலயத்தைக் கட்டுமாறும், அதற்குத் தேவையான நிதியை தான் வழங்குவதாயும் கூறினார். ஆனால் அப்போது பங்குத் தந்தையாயிருந்த அருட்தந்தை. ஜேக்கப் அலெக்சாண்டர் அவர்கள் இதற்கு சம்மதிக்கவேயில்லை. இக்கலைக் கோயிலைப் போன்று திரும்பவும் கட்டியெழுப்பலாம் என்று கூறியும் அவர் அதற்கு உடன்படவில்லை. இக் கோயிலின் பாரம்பரிய முக்கியத்துவம் இல்லாமல் போய்விடும் என அவர் அஞ்சியிருக்கலாம். எனவே அவர் விருப்பப்படியே பொறியியலாளர் இராஜேந்திரம் அவர்களின் ஆலோசனையுடனும் அவரது கண்காணிப்பிலும், முன்முகப்பை சாய்ந்த நிலையிலேயே வைத்து, இரு புறமும் கொங்கிறீற் தூண்களை எழுப்பி, அப்படியே பிணைத்துத் திருத்தியமைக்கப்பட்டது. இன்றும் புனித மிக்கேல் கல்லூரி மேல்மாடியிலிருந்து பார்த்தால் பீசா நகர சாய்ந்த கோபுரம் போன்று மரியாள் ஆலயமும் சாய்ந்திருப்பதைக் காணலாம். இடிந்துபோன பழைய குருமனைக்குப் பதிலாக, அதே இடத்தில் புதிய மாடிக்கட்டடமும் அமைக்கப்பட்டு சூறாவளியால் உடைந்திருந்த ஆலய சுற்றுமதிலும் கட்டப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1974-1975ஆம் ஆண்டுகளில் அருட்தந்தை பீலிக்ஸ் வீரசிங்க பங்குத்தந்தையாக இருந்த வேளை புனித அந்தோனியார் ஆலயம் புனரமைக்கப்பட்டது. நாட்டோடுகள் யாவும் மாற்றப்பட்டு புதிய கள்ளிக்கோட்டை பெரிய ஓடு போடப்பட்டது. 1985இல் அருட்தந்தை. சந்திரா பெர்னாண்டோவின் காலத்தில் அந்தோனியார் ஆலயத்திற்கென ஒரு புதிய மணிக்கோபுரமும் கட்டப்பட்டது.

1986-1987 இல் புனித மரியாள் ஆலயம் மீண்டும் புனரமைக்கப்பட்டது. புதிய மின்விசிறிகள் பொருத்தப்பட்டன. 1994இல் அருட்தந்தை. கிங்சிலி றொபட் காலத்தில், புனித மரியாள் ஆலய முன்றலில் 100 ஆண்டுகளுக்கு முன்னமே அத்திவாரத்துடன் இடப்பட்ட திறந்த வெளி மண்டபம் அமைக்கும் திட்டம் ஆரம்பமானது. அவர் மேற்படிப்பிற்காக உரோமை சென்ற பின் அவரைத் தொடர்ந்து வந்த பயஸ் பத்மராஜா அடிகளார் காலத்தில் இவ்வேலை முற்றுப்பெற்று, 1995இல் இயேசு சபைத்துறவிகளின் 100 வருட ஞாபகமாக, ஆயரவர்களால் ஆசீர்வதிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. பொதுவாக மட்டக்களப்பில் நடைபெறும் முக்கிய கத்தோலிக்க கொண்டாட்டங்களும், குருப்பட்டங்களும் புனித மரியாள் ஆலயத்திலேயே நடைபெறுவது வழக்கமாகும். அண்மையில் ஒரு கொங்கிறீற் கொடிமரத்தூணும் கட்டப்பட்டது.

இவ்விரு ஆலயங்களையும் சார்ந்ததாக இரு கத்தோலிக்க சேவா சங்கங்களும் உள்ளன. இச்சங்கங்கள் இரண்டும் இவ்வாலயங்களை புது மெருகூட்டுவதை தங்கள் பணியாகக் கொண்டுள்ளன.

அருட்கலாநிதி டொமினிக் சாமிநாதன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# St. Mary's St. Antony's

**BATTICALOA.**

*In that part of Batticaloa called Puliyanthivu, we have two churches, St. Mary's and St. Anthony's, in very close proximity to each other. St. Mary's was patronised by the Vellarlers, and Burghers, and the Barbers, and St. Anthony's by the fisher folks in by-gone times. Christianity was introduced into Batticaloa by the Portuguese, and all available records indicate that Trincomalee and Batticaloa were the two main Christian centres where Catholic priests resided and ministered unto the people.*

*But these two churches speak volumes, about the caste struggles that plagued the missionaries in those days. The early missionaries, in their anxiety to claim more peoples to the Christian Faith, permitted each caste to build churches for themselves. But they always ruled that people of all castes should be permitted to enter, worship God and participate without hindrance. St. Anthony's church was the first Catholic Church constructed on the soil of Puliyanthivu. It was the enterprise of the fisher-folks, during the time of the Goanese Fathers. It must have been built before 1800. When first constructed it did not have varandhas, the front façade, or the sacristy. It was a simple structure, done in Dutch model of construction with thick walls of random rubble and clay. The Goanese Fathers constructed the front façade without bell frey in 1846, for St.Anthony's.*

*Seeing this, the Vellarlers wanted to build a church for themselves, and a bigger one than St. Anthony's. And so one Paschal Mudaliyar donated the land, and also put up the first church, a very simple structure in 1867. Fr. Ruffiac enlarged it and made it longer and also built a Presbytery behind the Church, on the very spot where now we have the present modern parish house.*

*Seeing St. Mary's church look better than theirs, the fisher-folks of St. Anthony's decided to embelish their church too. During the time of the Oblate Fathers, the two varandhas were built for St.Anthony's and a sacristy and a room for the sacristan was also added.*

*In 1880, we have Fr. Francis Xavier, himself a Vellarler from Jaffna as parish priest in Batticaloa. He was the first Ceylonese secular priest. He made some repairs on the old St. Mary's church and provided it with a new altar*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*The fisher-folks of St. Anthony's could not stomack this. And so they too built a Presbytery behind St. Anthony's Church, in the hope of having their own priest one day, and thus to make it look prominent and important.*

*Still for all, St.Anthony's church was the biggest. St. Mary's being smaller than St. Anthony's, the Vellarlers, the Burghers and the Barbers of St. Mary's decided to build a bigger church for them. The Priest in-charge then was Fr.Francis Xavier. Being in sympathy with them, after consulting the provincial Engineers Messers Arnhil and Lyonell, he planned anew Church in 1872.*

*He made a model of the proposed church in wood, so that every one could have an idea of what it would look like when completed. It was a scaled down copy of St. Lucia's Cathedral, Kotahena. Delegated by Bishop Bonjean, Fr. Francis Xavier blessed the corner stone of the new St. Mary's church on 19th. July 1874, and began the construction work. Fr. Xavier demolished a portion of the old St. Mary's and brought up the bells to the tower near the apse of the new church. He even fixed a clock on it. He then built the super structure to the first cornice and raised part of the upper story on the left side. But in 1881 he was transferred out of Batticaloa and the construction work was suspended till 1886. In 1886 Fr. Lafrage who succeeded him, resumed the work on the church and completed the front façade. He too was transferred before the completion of the church in 1889 and the work was suspended once again till 1892. In 1892, Fr. Meary who came to Batticaloa resumed work on the church. He tore down certain parts already built as they were weakened by exposure to the elements and were about to collapse. In 1893 the new diocese of Trincomalee was created and handed over to the Jesuits of Champaigne Province in France, and so, work on the church was suspended once more.*

*When the first Jesuit missionaries came to Batticaloa in 1893, the half built edifice had been exposed to the elements for many years. Hence doubt had been cast over the advisability of continuing the construction. Further, the Jesuit Fathers wanted St. Mary's Batticaloa to be the future Cathedral of the Trincomalee diocese. And so it was decided that the foundations should be examined in order to ascertain its solidity and firmness, before continuing any further. Hence on a request made by Bishop Van Reeth, the then Administrator, Fr. Kotch arrived from Kandy, on5th. September 1897 to inspect the foundation. But the people of St. Mary's had refused to permit any digging and uncovering of the foundation for inspection. For it had been rumoured that the Fathers wanted to demolish the church and use it for a school and a convent. Thus*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*began the long drawn tug-o-war between the people and the priests that led to many a riot, excommunications and final intervention of the police, and other civil authorities. After many months of struggle, riots and court cases, reconciliation was brought about between the people and the Fathers, and the ringleaders made their submission to their pastors and peace restored.*

*Finally after the restoration of episcopal jurisdiction over the building, in February 1896, the foundation was inspected unhindered this time by Fr. Kotch and the acting Provincial Engineer Mr. Tomalin, and was declared that the foundation was strong enough to support a wooden roof with calicut tiles. At the same time, Sir Joseph West Ridgeway, the Governor of Ceylon visited Batticaloa in February 1898. When he saw the church standing unfinished, he ordered that 100 trees from the forest reserve be granted free for the completion of the church. Then on the order of Bishop Lavigne, work on the church resumed once again and completed at the turn of the century, and blessed and officially opened for services in December 1901.*

*Now that the new St. Mary's has been completed and opened to the public for worship, St. Anthony's became a dwarf in comparison to the new church. The fisher-folks of St.Anthony's were not very happy about it. But the Jesuit missionaries did not want to fan the flames of caste rivalries.*

*On the contrary they wanted to make a breakthrough in the caste distinctions and their evil impacts on the Christian communities. Hence they persuaded all the communities, both of St. Mary's and St. Anthony's to come together in friendship and brotherhood during the jubilee celebrations of the Promulgation of the dogma of the Immculate Conception. And on the feast day of the Immaculate Conception, i.e. 8th. December 1904, the fisher-folks of St. Anthony's and the Vellarlers, Burghers and Barbers of St. Mary's amicably participated in the ceremony of laying the foundation stone for the new façade of St.Anthony's Church. As a mark of reconciliation rice was distributed to about 1300 poor persons with harmony and goodwill among all castes and parties. The facade was completed in 1905, and the bells were fixed on the towers of the façade, like St. Mary's*

*It must also be mentioned here that the early Jesuit Fathers very scrupulously maintained the agreement made by Bishop Julian of Jaffna, some years back, according to which, each church, St. Mary's and St. Anthony's became the official*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*parish church for six months every year, and during that period all the important services are held in one and in the other respectively.*

*Way back in 1895, the first Jesuit Fathers occupied both mission houses according to their conveniences, to the satisfaction of all the Christian communities. But when the SSJ Brothers came to Batticaloa in 1931, the mission house behind old St. Mary's church was given to them for occupation and the mission house behind St.Anthony's was used as the Rectory by the Fathers.*

*In 1962, when Fr. Henry Ponniah was the parish priest, a new marble altar was provided with, to St. Mary's Church, and the Bishop's Cathedra - the episcopal seat - was shifted from the side to the back of the sanctuary right behind the altar*

*When the Clergy House was being constructed in 1967, the SSJ Brothers were asked to pull out, and the Parish Priest shifted his residence to St. Mary's Rectory. St. Anthony's Rectory was demolished completely to make room for the new Clergy House.*

*For the cyclone that hit Batticaloa on 23rd. November 1978, St. Mary's Rectory was gutted down, and serious damage was sustained by St. Mary's Church. The front façade of St. Mary's had slightly tilted about a foot forward and there was fear that it might collapse at any moment. His Excellency Cardinal Archbishop Lourdusamy, who was then secretary of the Propagation of Faith, Rome, visited Batticaloa soon after the cyclone, to assess the damages sustained by the diocese. After inspecting the condition of St. Mary's Church, he suggested that we knock down the whole church and build a new one instead. He was prepared to fund the project. But the then parish priest Fr. Jacob Alexander was not willing to tear down this architectural monument. So with the help of Engineer Rajendram, he encased the entire façade with concrete pillars on both sides from top to bottom, replastered the entire façade, replaced all the broken tiles and fixed ceilings as well. If a person today stands at the 1st floor veranda of St. Michael's College and takes a look at the Church, the façade would appear like the Leaning Tower of Pisa.*

*And in place of the old Rectory a completely new two storey building was constructed.*

*In 1974-1975, when Fr. Felix Weerasinghe was parish priest, extensive repairs were undertaken on the roof of St. Anthony's Church. The country tiles were*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

removed and calicut tiles were placed. And in 1985, when Fr.Chandra Fernando was parish priest, a new bell frey was constructed by the side of St. Anthony's church.

In 1986 -1987, St. Mary's church, now called Co-Cathedral, under -went further restoration. The floor was renovated and freshly cemented, and fans fitted inside the church. and in 1994, when Fr. Kingsley Robert was parish priest, he mooted the people to construct the front portico for St. Mary's for which a foundation had been laid about 100 years ago. The parishioners collected the money and began the work. Even when Fr. Kingsley left to Rome for higher studies, Fr. B.A. Joseph came in as care-taker parish priest, the work on the portico continued unhindered. It was completed during the time of Fr. Pius Pathmarjah in 1995, and officially blessed and declared open by His Lordship Rt. Rev. Dr. Joseph Kingsley Swampillai, on the occasion of the one hundredth anniversary of the coming of the Jesuit Fathers to the diocese.

**Fr. Dominic Saminathan**
*14th. July 1996*

பிரான்சிஸ்கன் சபையின் அருட்சகோதரிகள் 1921ஆம் ஆண்டு தொடக்கம் 1954ஆம் ஆண்டு வரை மாந்தீவு தொழுநோய் வைத்திய சாலையிற் புரிந்த தன்னலமற்ற தியாகச் சேவையின் நன்றியறிதலாகபுளியந்தீவு பங்கு மக்களாலும், நலன் விரும்பிகளாலும் ஓர் அருட் சகோதரியின் சிலை புனித மரியன்னை ஆலய வளவினுள் 1964 பங்குனி7ஆம் நாள் நிறுவப்பட்டது.

---

பிரித்தானியாவின் ஐந்தாம் ஜோர்ஜ் மன்னர், அரசி மேரி ஆகியோரின் முடிசூட்டுவிழா ஞாபகார்த்தமாக 1911 ஆனி 22ஆம் திகதி பிறீமன் தண்ணீர்ப்பந்தல் அமைக்கப்பட்டது. இது மட்டக்களப்பு பொதுநூலகத்தின் முன்னாலுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# මඩකළපුවේ ශාන්ත මරියා දෙව්මැදුර හා ශාන්ත අන්තෝනි දෙව්මැදුරී

මඩකළපුව පදවියේ පුලියන්තිව් මීසමට අයත් දේවස්ථාන දෙකක් ඇති එනම් ශාන්ත මරියා දේවස්ථානය හා හා ශාන්ත අන්තෝනි දේවස්ථානයයි ඉතා ලංව පිහිටුවා ඇති මෙම දේවස්ථාන දෙක අතර රදගුරු නිවසද පිහිටා ඇති ශාන්ත මරියා දේවස්ථානය වෙල්ලාලර්□ බාබර් කුලයන්ට ද බර්ගර් ජාතිකයන්ට අයත්වන ලෙස ද ශාන්ත අන්තෝනි දේවස්ථානය ධීවර ජනතාවට අයත්වන ලෙස ද මුල් කාලයේ දී මෙම දේවස්ථාන දෙක පිහිටුවා ඇති

ලාංකික කතෝලික ඉතිහාසය ගැන සොයාබලන විට මඩකළපුව ප්‍රදේශයට ක්‍රිස්තියානි ආගම මුලින්ම හිඳුන්වා දී ඇත්තේ පෘතුගීසි වරුන් බවත්□ 16 එන සියවස වන විට කතෝලික පියවරුන් සේවය කළේ ත්‍රිකුණාමලය හා මඩකළපුව ප්‍රදේශයන් හී වාසය කරමින් බවත් දැකගත හැකියි මේ අනුව බලන කල ත්‍රිකුණාමලය හා මඩකළපුව යනු නැගෙන හිර පළාතෙහි ඇති සියලුම මීසම් හී ප්‍රධාන මීසම යැයි සිතීමෙහි වරදක් නොමැති

ඉහත සඳහන් දේවස්ථාන දෙකම එදා සිට අද දක්වා පැමිණ ඇති සංවර්ධන මාවතෙහි ඓතිහාසික පසුබිමෙ හි විවිධාකාර වූ කඩඉම් දැකගන්නට ඇති එදා ජනතාව අතර තිබූ ජාතිවාදී බෙදීම හා ඒවායෙහි ප්‍රතිඵල මෙම දේවස්ථාන දෙක මගින් පැහැදිලි ලෙසම දැක ගන්නට හැකියි එකල සිටි පියවරුන්ට අවැසිව තිබුයේ විශාල ජනතාවක් ක්‍රිස්තියානි ආගමට ගැනීමට වන බැවින් ජාතියකට දේවස්ථානයක් පිහිටුවීම යන සංකල්පය වලක්වන්නට නොහැකි වියි නමුදු ඕනෑම පුද්ගලයෙකුට ඕනෑම දේවස්ථානයක සිට දෙවිපියාණන් වහන්සේට යාච්ඤා කිරීමටත් ආගමික කටයුතු වලට සහභාගී වීමටත් අයිතිය තිබේ යන මතයේ සිට තම ධර්මදූත සේවාවන් ඉටු කරන ලදි

මෙසේ පුලියන්තිව් මීසමේ පළමුව ඉදි කළ දේවස්ථානය වන්නේ ශාන්ත අන්තෝනි දේවස්ථානයයි ඉංදියාවේ ගෝවේ ප්‍රදේශයේ සිට ලංකාවට පැමිණි පූජක වරුන්ගේ කාලයේ දී එනම් වර්ෂ 1800 දී□ ධීවර ක්‍රිස්තියානි ජනතාව විසින් මෙම දේවස්ථානය ඉදිකොට ඇති මුල්කාලයේ දී මෙම දේවස්ථානයේ වර්ථමානයේ දක්නට ඇති ආලින්දය□ කුළුණු හෝ සන්ක්‍රිස්තියන් කාමරය ඉදි වී නොතිබුණි ධීවර සම්ප්‍රදායට අනුව අඩි තුනක් පළල කුඩා බිත්තිය කුඩා ගල් වලින් ඉදිකොට ඇති වර්ෂ 1846 යේ දී කුළුණු සහිත ඉදිරිපස කොටස තනා ඇති

ධීවර ක්‍රිස්තියානි ජනතාව ඉදි කළ මෙම දේවස්ථානය දුටු වෙල්ලාල ජාතිකයන්ද තමන්ටත් දේවස්ථානයක් ඉදිකර ගැනීමට උනන්දු වියි එහි ප්‍රතිඵලයක් ලෙස පාස්කල් මුදලියාර් නම් වූ පුද්ගලයෙක් මේ සඳහා අවශ්‍යය ඉඩම පරිත්‍යාග කොට□ එහි දේවස්ථානයක් ද ඉදිකොට දුනි එය ශාන්ත මරියා දේවස්ථානයයි 1867 දී රැෆියාක්



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

පියතුමන් විසින් මෙම දේවස්ථානයේ දිග හා පළල වැඩිකොට එහි ප්‍රමාණය විශාල කළ අතර දේවස්ථානය පිටුපසින් පියතුමන්ලාට විවේකය සඳහා මීසම් ගෘහයක් ද ඉදි කළේයි

මෙසේ ශාන්ත මරියා දේවස්ථානය තම දේවස්ථානයට වඩා අලංකාර ලෙස සංවර්ධනය වීම ධීවර ජනතාවට නුරුස්සනා කරුණක් වියි එබැවින් තම දේවස්ථානයද අලුත් වැඩියා කිරීමට ඔවුන් උත්සුක වියි මේ අනුව නිර්මල මරිය නිකායට අයත් වු කැපකරුවන්ගේ කාලයේ දී ශාන්ත අන්තෝනි දේවස්ථානයේ දෙපසම ආලින්දය ඉදි කරන ලදි දේවස්ථානයටම අනුබද්ධව කාමර දෙකක් ඉදි කොට ඉන් එකක් සක්‍රිස්තියන් කාමරය ලෙසත් අනෙක නේවාසිකාගාරයක් ලෙසත් භාවිතයට ගැනුණි

1880 දී වෙල්ලාල ජාතික ප්‍රැන්සිස් සේවියර් පියතුමන් යාපනයේ සිට මඩකළපුව භාර පියතුමා ලෙස පැමිණුනේයි මඩකළපුවේ පළමු දේශීය පියතුමා වනුයේ එතුමාණෝයි මෙතුමා පැරණි ශාන්ත මරියා දේවස්ථානය තවදුරටත් අලුත්වැඩියා කොට එහි අල්තාරයක්ද ඉදි කළේයි

මෙය ධීවර ක්‍රිස්තියානි ජනතාවට නව බලපෑමක් එල්ල කරන්නක් වියි මේ නිසා ඔවුන් තම දේවස්ථානය පිටුපස නව මිසම් ගෘහයක් ඉදි කළ අතර අනාගතයේ දී තම මීසම භාරව ද පියතුමෙකු පැමිණ තම දේවස්ථානයේ අභිවෘද්ධිය උදෙසාද කටයුතු කරණු ඇතැයි ඔවුන් බලාපොරොත්තු වියි

එකල මෙම දේවස්ථාන දෙක අතරින් විශාලතම දේවස්ථානය වූයේ ශාන්ත අන්තෝනි දේවස්ථානයයි නමුත් ශාන්ත මරියා දේවස්ථානයේ ජනතාවට අවැසි වූයේ තම දේවස්ථානය ශාන්ත අන්තෝනි දේවස්ථානයට වඩා ප්‍රමාණයෙන් විශාල කිරීමටයි ඔවුන්ගේ මෙම තිරණයට එවකට එම දේවස්ථානය භාරව කටයුතු කළ ප්‍රැන්සිස් සේවියර් පියතුමාද සහය දැක්වියි රදගුරුතුමාගේ අවසරය ලබා ගෙන ප්‍රාදේශීය කාර්මික ශිල්පියෙකු වන ආනෝල්ඩ් ලයනල් නමැත්තාගේ පූර්ණ සහයෝගය ද ඇතිව 1872 දී නව දේවස්ථානය සඳහා සැළසුම සකස් කළේයි ඔවුන්ගේ සැළසුම වූයේ කොළඹ ශාන්ත ලුසියා දේවස්ථානයේ ආකාරයටම එයට වඩා කුඩාවට මෙම දේවස්ථානය ඉදි කිරීමටයි කෙසේ වෙතත් අවසානයේ දී ප්‍රැන්සිස් සේවියර් පියතුමාගේ මූලිකත්වයෙන් 1874 /ජුලි මස /19 වන දින නව දේවස්ථානය සඳහා මුල්ගල තැබීමේ උත්සවය යාච්ඥාවන් සහිතව පැවැත්වියි පැරණි දේවස්ථානයේ එක් කොටසක් කඩා නව දේවස්ථානය ඉදිකිරීමේ කටයුතු කඩිනම් කළ අතර නව දේවස්ථානයේ ඝන්ඨාර කුළුණුද සකස් කොට ඒවාට ඝන්ඨාර සවි කළේයි එහෙත් නව දේවස්ථානයේ දෙපස බිත්ති සකස් කිරීමට පෙර සේවියර් පියතුමාට වෙනත් ස්ථානයක් සඳහා මාරුවීමක් ලැබුණු බැවින් ඉදිකිරීම් කටයුතු මගදී නතර කොට දැමීමට සිදුවියි 1886 වසරේ දී දේවස්ථානය භාරව පැමිණි ලව්රාග් පියතුමා විසින් දේවස්ථාන ඉදිකිරීම් කටයුතු නැවත ආරම්භ කරන ලදි දේවස්ථානයේ ඉදිරිපස ඉතා කඩිනමින් ඉදිකෙරුනි 1889 දී මෙම පියතුමාට ද ලැබුන ස්ථානමාරුවීම හේතුවෙන් නැවත වතාවක් ඉදිකිරීමේ කටයුතු නතර වුනි 1892 වන විට පැමිණි මියරි පියතුමන් විසින් දේවස්ථාන ඉදිකිරීමේ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

කටයුතු නැවතත් ආරම්භ කරන ලදි පැරණි ගොඩනැගිල්ලේ සමහර කොටස් දුර්වල තත්ත්වයක තිබූ බැවින් ඒවා කඩා දමා නැවත වතාවක් ඉදිකිරීමේ කටයුතු ආරම්භ කෙරුණි 1893 දී ත්‍රිකුණාමලය නව පදවියක් ලෙසට ශුද්ධවූ 13 වන ලියෝ පාප් වහන්සේ විසින් නම් කොට එය ප්‍රංශයේ ශම්පේන් පළාතෙහි ජේසු නිකායික පැවිදිවරුන්ගේ භාරයට දුන් බැවින් නැවත වතාවක් මෙම දෙවස්ථානයේ ඉදි කිරීමේ කටයුතු තාවකාලිකව නවතා දැමීමට සිදුවියි

ජේසු නිකායික පියවරුන් තමුන්ට භාර දුන් මෙම නව පදවිය වන ත්‍රිකුණාමලය භාර ගැනීම සඳහා 1895 දී ලංකාවට පැමිණියහි ඒ වන විට ශාන්ත මරියා දේවස්ථානය ගොඩනැගීම ආරම්භකොට වසර 21 ගතවී තිබුණි මේ වන විටත් සම්පූර්ණ කළ නොහැකිවූ මෙම දේවස්ථානයේ බිත්ති වර්ෂාව හා හිරු රැස් හේතු කොටගෙන දුර්වලවී තිබුණි එම හේතුව නිසා මෙම දේවස්ථානය නැවත ගොඩනැගීමට නව පියවරුන් පසුහට වියි එවකට සිටි ජේසු නිකායික පියවරුන් ගේ මතය වූයේ ත්‍රිකුණාමලය පදවියේ ආසන දෙව් මැදුර විය යුත්තේ මඩකළපුවේ ශාන්ත මරියා දෙව් මැදුර බවයි එබැවින් දේවස්ථාන ගොඩනැගිලි ප්‍රතිසංස්කරණය කිරීමේ කටයුතු නැවත ආරම්භ කිරීමට පෙර අත්තිවාරමේ ස්ථිරත්වය ගැන සොයාබැලිය යුතු බව තීරණය කළේයි මේ වන විට ත්‍රිකුණාමලය පදවියේ පරිපාලක ලෙස සේවය කළ ගාල්ල පදවියේ රදගුරු තුමන් වන වන් රීත් තුමන්ගේ ඉල්ලීමට අනුව නුවර සිට කොට්ච් පියතුමා 1897 සැප්තැම්බර් මස 5 වන දින මඩකළපුවට පැමිණියේයි එතුමාගේ කාර්යය වූයේ දේවස්ථාන අත්තිවාරමේ ශක්තිය හා ස්ථිරත්වය පරීක්ෂා කරමින් ප්‍රතිසංස්කරණ කටයුතු සඳහා අවශ්‍යය උපදෙස් ලබා දීමයි නමුත් ශාන්ත මරියා දේවස්ථානයේ මීසම් ජනතාව මෙම පරීක්ෂණය සඳහා ඉඩ නොදුන්නෝයි එයට හේතුව වූයේ මෙම ජේසු නිකායික පියවරුන් විසින් මෙම දේවස්ථානය කඩා දමා එම ස්ථානයේ කාන්තා හා පිරිමි පාසල් දෙකක් ද නේවාසිකාගාර දෙකක් ද ඉදිකිරීමට තීරණය කොට ඇතැයි ජනතාව අතර රාවයක් පැතිර යාමයි මෙම කාරණාව හේතුවෙන් ජේසු නිකායික පියවරුන් හා මීසම් ජනතාව අතර ඇතිවූ ආරවුල දිගින් දිගටම වසර කීපයක් පුරාවට පැවතුනු අතර පසුව පොලීසිය හා රාජ්‍යය නිලධාරීන්ගේ මැදිහත් වීම දක්වාම උග්‍ර වියි මෙම ආරවුල හේතුවෙන් ඇතැම් කතෝලික ජනතාවට සභාවෙන් ඉවත් වීමට පවා සිදු වියි අවසානයේ මෙම ආරවුල අධිකරණය වෙත යොමු කිරීමට සිදු වියි මෙම දේවස්ථානය පිහිටුවා ඇති ඉඩම අයත් වන්නේ රදගුරුතුමාට බව ඔප්පුවීමත් සමග සභාවෙන් ඉවත්වූ පිරිස් සමාව ගෙන නැවත සභාවට එකතු වියි ජනතාවගේ විරෝධයක් නොමැතිවම 1898 පෙබරවාරි මස කොට්ච් පියතුමා හා එම ප්‍රදේශයේ ඉංජිනේරුවරයා වන රොමලින් මහතා එක්ව උළු සෙවිලි කළ වහලක් තැනීමට දේවස්ථාන අත්තිවාරම සුදුසු බව තීරණය කොට සහතික කරන ලදි

මෙම කාලයේදී එවකට ශ්‍රී ලංකාවේ ආණ්ඩුකාරවරයා ලෙස සේවය කළ සර් ජෝසප් වෙස්ට් රිජ්වේ මහතා මඩකළපුව ප්‍රදේශයට පැමිණයේයි එම අවස්ථාව වන විට වහල නොමැතිව තිබූ ශාන්ත මරියා දේවස්ථානය දුටු එතුමා කොටන් 100 පමණ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

පරිත්‍යාග කර දේවස්ථානය ඉදි කිරීමේ කටයුතු කඩිනමින් අවසන් කරන ලෙස අවධාරණය කළේයි මෙම කාලයේ දී ලංකාවට පැමිණි ත්‍රිකුණාමලයේ ප්‍රථම රදගුරු තුමන් වන සාර්ලිස් ලවිංකෙද් රදගුරු තුමාගේ අධීක්ෂණය යටතේ දේවස්ථාන වැඩ කටයුතු සියල්ල කඩිනම් වියි අවසානයේ දී 1901 දෙසැම්බර් මාසයේ දෙව් අසිරි මැද ශාන්ත මරියා දේවස්ථානය වන්දනාව සඳහා විවෘත්ත වියි

මෙලෙස නිමා වූ ශාන්ත මරියා දේවස්ථානය හා ශාන්ත අන්තෝනි දේවස්ථානය එකිනෙකට  සන්දනය කිරීමට නොහැකි වියි සද්ධන්ත ඇතෙකු අසල කුඩා බළල් පැටවකු සේවූ ශාන්ත අන්තෝනි දේවස්ථානයේ ස්වරූපය ධීවර ක්‍රිස්තියානි ජනතාවට මහත් සිත් වේදනා දනවන්නක් වියි මෙම තත්ත්වය තේරුම්ගත් ජේසුනිකායික පියවරුන් මොවුන් අතර පැවති ජාතවාදී□කුල බෙදීම තව දුරටත් උත්සන්න වනවාට අකමැති වියි මොවුන් අතර පැවති ජාතිවාදීත්වය බිඳ දමා එමගින් සමාජයේ ඇතිව තිබූ අයහත් ප්‍රතිඵල විනාශ කොට දැමීමට තීරණය කළේයි දෙව් මවුන් උපන් මංගල්‍යය ප්‍රකාෂකළ 50 වන ජුබිලි සංවත්සරය සමරමින් ශාන්ත මරියා දේවස්ථානයේ පැවැත්වෙන මංගල උත්සවයට ජාතිවාදීත්වය අත්හැර දෙපාර්ෂවයේම ජනතාව සහභාගී විය යුතු යැයි ඉල්ලීමක් කළේයි මෙම අදහස පිළිගත් දේවස්ථාන දෙකෙහිම ජනතාව ජාතිවාදී අදහස් අත්හැර 1904 දෙසැම්බර් මස 08 වන දිනදී ශාන්ත මරියා දේවස්ථානයේ මංගල්‍යය ඉතා සතුටින් සැමරූ අතර□ එදින ශාන්ත අන්තොනි දේවස්ථානයේ ඝන්ඨාර කුළුණු සහිතව ඉදිරිපස සකස් කිරීම සඳහා මුල්ගල තැබීමේ උත්සවයද ප්‍රීතිප්‍රමෝදයෙන් යුතුව සැමරීයි මෙදිනම ධීවර□ වෙල්ලාල□ බාබර්□ බර්ගර් යන සියලුම ජාතිකයන් එක් වී ඔවුන් ඇරඹූ ක්‍රිස්තියානි සහෝදරත්වයේ සළකුණක් ලෙස 1300 වූ දුප්පත් ජනතාවකට දහවල් ආහාරය ලබා දුන්නේයි ඉන්පසු එළඹි වසරේදී එනම් 1905 දී□ ශාන්ත අන්තෝනි දේවස්ථානයේ ඉදිරිපස කටයුතු අවසන් කළ අතර ශාන්ත මරියා දේවස්ථානයේ මෙන්ම ඝන්ඨාර කුළුණුද සවි කරණු ලැබීයි ජේසු නිකායික පියවරුන් හා යාපනය රදගුරුතුමන් වන අතිගරු පූනියන් රදගුරුතුමාගේ කාලයේ දී ඇතිකර ගත් ගිවිසුමකට අනුව□ දේවස්ථාන දෙකම වසරේ මාස 6 කට මීසම් දේවස්ථානය ලෙස සලකා කටයුතු කිරීමට අවසර ලබා දුන්නේයි 1895 සිට ජේසු නිකායික පියවරුන් දේවස්ථාන දෙකෙහිම තනා තිබූ මීසම් ගෘහයන් දෙකම භාවිතා කළහි මෙම ක්‍රියාවෙන් දෙපාර්ෂයෙහිම ජනතාව සෑහීමකට පත් වියි 1931 වන විට ශුද්ධවූ ජුසේ නිකායික පැවිදි සොහොයුරන් මඩකළපුව ප්‍රදේශයට පැමිණියේයි නවාතැන් අවැසිව සිටි මෙම සහෝදර වරුන්ට ශාන්ත මරියා දේවස්ථානයට අනුහද්ධව තනා තිබූ මීසම් ගෘහය ලබා දුන් අතර එම මීසමේ මීසම් සේවක පියතුමා හා සහයක පියතුමා ශාන්ත අන්තෝනි දේවස්ථානයේ මීසම් ගෘහය තමන්ගේ වාසස්ථානය කර ගත්හි

ශුද්ධවූ ජුසේ නිකායික පැවිදි සහෝදර වරුන් ඉතා ඉක්මනින්ම ශුද්ධවූ අගස්තීනු ගුරු විදුහල□  කතෝලික පිරිමි අනාථ නිවාසය හා ශාන්ත මරියා පාසල භාරගෙන ඉතා දක්ෂ ලෙස ඒවා පවත්වාගෙන යන ලදී මෙම අගස්තීනු ගුරුවිදුහල තිබූ ස්ථානයේ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

වර්ථමානයේ පවතින්නේ සාර්ලිස් ශාලාවේ ගොඩනැගිලියි එම ගුරු විදුහලේ එදා පැවති ඇතැම් කොටස් අදටද විනාශ නොවී පවතී මෙම ගොඩනැගිල්ල පුලියන්තිව් ශාන්ත වින්සන්දිපාවුලා සමිතියේ සාමාජිකයින් තමන්ගේ කාර්යාලය ලෙස අදටත් බාවිතා කරන අතර තවත් කොටසක් "එහෙඩ්" ආයතනයේ ගබඩාව ලෙස භාවිතයට ගැනේ ඉතාමත් ඉක්මනින්ම මෙම පැරණි ගොඩනැගිලිද කඩා දමා නව තුන්මහල් ගොඩනැගිල්ලක් ඉදි කිරීමට දැනටමත් සූදානම් කොට පවතී

පසු කලකදී ගුරුවිදුහල වසා දැමූ අතර ශුද්ධවූ ජුසේ නිකායික පැවිදි සහෝදර වරුන් එහි තිබූ කතෝලික මුද්‍රනාලයේ සේවය කළහී මෙහි ප්‍රතිඵලයක් ලෙස අති ගරු ග්ලෙනි රදගුරුතුමා විසින් මෙම මුද්‍රනාලයේ අයිතිය ඔවුන්ටම පවරා දෙන ලදී වර්තමානයේ ශාන්ත ජෝසප් කතෝලික මුද්‍රනාලය ලෙස හිදුන් වන්නේ මෙම මුද්‍රනාලයයි අති ගරු ග්ලෙනි රදගුරු තුමා 1948 දී පැරණි අගස්තීනු ගොඩනැගිල්ලෙහි ශුද්ධවූ ජුසේ තුමාගේ නමින් ඉතා සුළු වශයෙන් ගොඩනැගිල්ලක් තනා දී පැවදි දිවි ගෙවීමට බලාපොරෙත්තුවෙන් අධ්‍යාපනය ලබනා සිසුන් වෙනුවෙන් එය ලබා දුනී මෙම දෙව්සත්හල් සිසුන් 1959 දී ත්‍රිකුණාමලය ප්‍රදේශයට මාරුවී ගිය අතර රටේ ඇතිවූ යුධමය තත්ත්වයක් හේතුවෙන් මඩකළපුවේ තිරුපෙරේන්තුරෙයි ප්‍රදේශයට මාරු කරණු ලැබුණි

1967 දී තැනූ රදගුරු නිවස හේතුවෙන් ශුද්ධවූ ජුසේ නිකායික පැවිදි සහෝදර වරුන් ගෝවින්දන් වීදියේ තිබූ තමුන්ගේ නිවසට ගිහයි ශාන්ත අන්තෝනි දේවස්ථානයට අනුයුක්තව තනා තිබූ මීසම් ගෘහය කඩා දමා නව ගොඩනැගිල්ලක් සඳහා ඉඩ කඩ ලබා දුනී 1978 වසරේ නොවැම්බර් මස 23 වන දින මඩකළපු ප්‍රදේශයට ඇතිවූ සුළි සුළං තත්ත්වය හේතුවෙන් ශාන්ත මරියා දේවස්ථානය හා මීසම් ගෘහය විනාශයට ලක් වියී මීසම් ගෘහයේ කොටස් කීපයක් කඩා වැටුණි ශාන්ත මරියා දේවස්ථානයේ ඉදිරිපස අඩි කීපයක් පසෙකට ඇලවී ගියේයී මේ හේතුවෙන් එය කුමන අවස්ථාවක කඩා වැටේ දැයි අවිනිශ්චිත තත්ත්වයක පැවතුණි සුළි සළිග මගින් ඇතිවූ හානිය සොයාබැලීම සඳහා රෝමයේ සිට පැමිණි අගරදගුරු කාර්දිනාල් ලූර්දු ස්වාමි පුලියන්තිව් ජනතාව විසින් ඉතා ආදරයෙන් පිළිගන්නා ලදී එතුමන් ශාන්ත අන්තොනි දේවස්ථානයේ දිව්‍යපූජාවද පවත්වා ඉන් අනතුරුව ගරු L.R ඇන්ටනි රදගුරුතුමන් හා ජාතික සෙඩෙක් ආයතනයේ අධ්‍යක්ෂ ගරු ජූඩ් ප්‍රනාන්දු පියතුමාද සමග පැමිණ ශාන්ත මරියා දේවස්ථානය හා මීසම් ගෘහය නිරීක්ෂනය කළහී එම අවස්ථාවේ දී ශාන්ත මරියා දේවස්ථානය සම්පූර්ණයෙන්ම කඩා ඉවත් කර අලුත් දේවස්ථානයක් ඉදි කරන ලෙසත් ඒ සඳහා අවශ්‍යය මුදල් සපයන බවත් ලූර්දු ස්වාමි අගරදගුරුතුමා පැවසීයි නමුදු එවකට මිසම් සේවක පියතුමන් ලෙස සේවය කළ ජෝසප් ඇලෙක්සැන්ඩර් පියතුමා දේවස්ථානය කඩා දැමීමේ තීරණයට එකිග නොවුණි මෙම දේවස්ථානය සතුව ඉතා අගනා ඓතිහාසික වටිනාකමක් පැවතීම ඊට ප්‍රධානම හේතුව වියී ඒ අනුව එතුමාගේ ඉල්ලීම පරිදි ඉංජිනේරු රාජේන්ද්‍රම් මහතාගේ උපදෙස් හා අධීක්ෂණය යටතේ ඇලවී තිබූ ඉදිරිපස එසේම තිබියදී කොන්ක්‍රීට් කණු මගින්


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

එය නැවත සම්භන්ධ කරණු ලැබුණි අදටත් ශාන්ත මයිකල් විදුහලේ උඩු මහලේ සිට බලන විට ඇලවුන පීසා කුළුණ මෙන් ශාන්ත මරියා දෙව් මැදුරද ඇලවී ඇති ආකාරය දැක ගත හැකියි කඩා වැටුන මීසම් ගෘහය වෙනුවෙන් නව ගොඩනැගිල්ලක්ද□ කැඩී බිඳී ගිය තාප්පයද නැවත සකස්කරන ලදී

ෆීලික්ස් වීරසිංහ පියතුමා මීසම් සේවක පියතුමා ලෙස සේවය කළ 1974-1975 දක්වා කාලයේ දී ශාන්ත අන්තෝනි දේවස්ථානයෙහිද රට උළු මාරු කොට අලුතින් උළු සෙවිලි කරන ලදී 1985 වසරේ චන්ද්‍රා ප්‍රනාන්දු පියතුමාගේ කාළයේ දි දේවස්ථානයට නව ඝන්ඨාර කුළුණක්ද ඉදිකරන ලදී

1986 - 1987 වසර වලදී ශාන්ත මරියා දේවස්ථානයට නව විදුලි පංකාද සවි කරන ලදී 1994 කිංස්ලි රොබට් පියතුමාගේ කාලයේ දී ශාන්ත මරියා දේවස්ථානය ඉදිරිපිට සිය වසරකට පෙර දමා තිබූ අත්තිවාරම මත නව විවෘත්ත ශාලාවක් තැනීම ඇරඹුණි එතුමා උසස් අධ්‍යාපනය සඳහා රෝමයට යාමත් සමග දේවස්ථානය භාරව පැමිණි පයස් පත්මරාජා පියතුමා මෙම කාර්ය අවසන් කළ අතර 1995 ජේසුනිකායික පියවරුන්ගේ සියවසර පිරීම සිහි කිරීම සඳහා රදගුරු තුමාගේ ආශිර්වාදය මැද එම ශාලාව විවෘත්ත කරන ලදී වර්ථමානයේ මඩකළපුව ප්‍රදේශයේ පැවැත්වෙන උත්සවයන් හා නව පියවරුන් පූජාත්වරය ලැබීමේ උත්සවයන් ශාන්ත මරියා දේවස්ථානයේ පැවැත්වීම සාමාන්‍යය සිරිතයි ඉතා මෑතකදී කොන්ක්‍රීට් වලින් නව කොඩි කණුවක් ද මෙහි ඉදි කරණු ලැබුණි

මෙම දේවස්ථාන දෙකෙහිම අපක්ෂපාතී සේවා සංගම් දෙකක් ක්‍රියාත්මක වේ මෙම සංගම් දෙකම දේවස්ථානයන් හී නව සංවර්ධන කටයුතු තමුන්ගේ මූලික අරමුණු ලෙස ගෙන කටයුතු කරණු අපට දැකගත හැකියි

ඩොමිනික් සාමිනාදන් පියතුමා



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புளியந்தீவு ஓர் அறிமுகம்

இலங்கையின் கிழக்குப் பகுதி நாட்டின் தானியக் களஞ்சியம் எனக் கூறக் கூடிய அளவிற்கு வளம் வாய்ந்ததாக இருந்தது. இதில் மட்டக்களப்பு அதன் பல்வகை வளங்களால் புகழ் வாய்ந்திருந்தது. திருகோணமலை அதன்பாலுள்ள இயற்கைத் துறைமுகத்தால் புகழ் பெற்றது. மட்டக்களப்பின் கடனீரேரி இவ்வூருக்கு மெருகூட்டும் இயற்கையின் கொடை. வடக்கே பன்குடாவெளி தொடக்கம் தெற்கே கல்முனை வரை நீண்டுள்ள கடனீரேரி மீன்வளத்திற்குக் குறைவிலாது திகழ்ந்தது. எனவே, அநேக குடும்பங்களின் வாழ்வாதாரமுமாக இருந்தது. தற்போதைய புளியந்தீவும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளும் மட்டக்களப்பு என அறியப்பட்டாலும் உண்மையில் பழங்காலத்தில் மட்டக்களப்பு என்பது தற்போது சம்மாந்துறை என அழைக்கப்படும் சம்பாந்துறைப் பகுதியே என்பர். பிற்காலத்தில் போர்த்துக்கேயர் 1628 இல் புளியந்தீவில் தமது கோட்டையைக் கட்டியபோது இப்பிரதேசம் மட்டக்களப்பு என வழங்கப்படலாயிற்று.

புலியன் என்பார் அரசாண்டதால் புலியன்தீவு என அழைக்கப்பட்டு இப் பெயர் மருவிப் புளியந்தீவாயிற்றென்பர். வாவியாற் சூழப்பட்ட நிலப்பரப்பாக இது உள்ளது. கோட்டை அமையப் பெற்றதால் இப்பகுதிகளிலேயே பொருட்களை இறக்கும் இறங்குதுறையும் (Jetty), களஞ்சியங்களும், அரச அலுவலகங்களும், ஆலயங்களும், கல்வி நிலையங்களும் அமையப் பெற்றிருந்தன. தற்போது மட்டக்களப்புப் பொது நூலகம் உள்ள பகுதிக்கருகில் இறங்குதுறையும், அதற்குச் சேர்ந்தாற் போல் அரச களஞ்சியசாலையும் அமைந்திருந்தன. களஞ்சியசாலை இருந்த இடம் தற்போது வெட்டவெளியாகவிருக்கிறது. வீதிகள், பாலங்கள் இல்லாமையால் கடல்வழிப் போக்குவரத்து நிகழ்ந்தது. முகத்துவாரம் வரைக்கும் கப்பலில் வந்த பொருட்கள் வாவி மூலம் புளியந்தீவிற்குக் கொண்டு வந்து இறக்கப்பட்டன. வாவி மூலம் புளியந்தீவிலிருந்து கல்முனையின் கிட்டங்கித்துறை வரை படகுப் போக்குவரத்து இடம் பெற்றது. இப் பயணம் நாட் கணக்கில் நீடித்தது.

இவ்வாறு போக்குவரத்து, வர்த்தகம், அரச நிருவாகம் என்பவற்றுக்கு அக்காலத்தில் புளியந்தீவே மத்திய நிலையமாக இருந்தது. இவ்வாறே, திருகோணமலை மறைமாவட்டம் எனக் கிழக்குப் பகுதிக்குப் பெயரிடப்பட்டிருந்தும் ஆயரின் வசிப்பிடமும், குருக்களின் இல்லமும் புளியந்தீவிலே அமையப் பெற்றிருந்ததால் திருகோணமலை மறைமாவட்டம் எனும் பெயரை மட்டக்களப்பு மறைமாவட்டம் என மாற்றம்செய்ய ஆயர் கஸ்ரன் றொபிஷே அவர்கள் 1917 இல் அனுமதி கோரினார். எனினும், உரோமிலுள்ள பேராயர் சாலெஸ்கி அவர்கள் இதற்குச் சம்மதிக்காததுடன் இந்த எண்ணத்தைக் கைவிடும்படி அறிவுறுத்தினார்.

வீதிப்போக்குவரத்துக்கள் இலகுவாக்கப்பட்டு 1928இல் புகையிரதசேவை ஆரம்பிக்கப்பட்டதும் மட்டக்களப்பின் பொருளாதாரம், வாழ்க்கைநிலை என்பவற்றில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரிய மாற்றங்கள் ஏற்பட்டன. நாட்டின் பிற பகுதிகளுடனான தொடர்புகள் அதிகரித்தமையினாலேயே இம்மாற்றங்கள் நிகழ்ந்தன.

புளியந்தீவுப் பங்கிலிருந்து 1917ஆம் ஆண்டில் தாண்டவன்வெளியும், புளியடிக் குடாவும் பிரிக்கப்பட்டுத் தனிப்பங்குகளாக இயங்கத் தொடங்கின. நீண்ட காலமாக வீச்சுக்கல்முனை, மாந்தீவு ஆகிய பகுதிகளும் புளியந்தீவுப் பங்கின் பராமரிப்பி லிருந்தன.

புளியந்தீவுப்பங்கு நான்கு பக்கமும் வாவியாற் சூழப்பட்ட அழகியதோர் அமைப்பைக் கொண்டதாகும். வாவியே எல்லைகளாக அமைகின்றது. பங்கின் நிருவாகம் கருதி, மாநகர சபையாற் பிரிக்கப்பட்ட ஐந்து வட்டாரங்களே பங்கின் ஐந்து பகுதிகளாகவும் உள்ளன.

இப்பங்கில் தற்போது ஏறத்தாழ 2400 கத்தோலிக்கர்கள் வாழ்கின்றனர். ஆரம்ப காலத்திற் செறிவான தொகையினராக இருந்த கத்தோலிக்கர்கள் காலப்போக்கில் இடம் பெயர்ந்து தாண்டவன்வெளி, இருதயபுரம், பெரியஉப்போடை, சின்ன உப்போடை போன்ற இடங்களுக்குச் சென்று விட்டனர். அதிகளவினரான பறங்கியர் சமூக மக்களும் புளியந்தீவிலிருந்து இடம் பெயர்ந்து விட்டனர்.

இந்து சமயத்தவர் பெரும்பான்மையாக வாழ்கின்றனர். இவர்களுக்கு அடுத்ததாக கத்தோலிக்கரும், இஸ்லாமியரும், அடுத்து ஏனைய கிறிஸ்தவர்களுமாவர். பௌத்தர்கள் ஆரம்பத்தில் புளியந்தீவில் இருந்தனராயினும் இனக்கலவரத்தை யடுத்து 1990ஆம் ஆண்டின் பின்னர் வெளியேறிவிட்டனர்.

புளியந்தீவில் இந்து மக்களின் மிகப் பழமை வாய்ந்ததும், பிரசித்தி பெற்றதுமான ஆனைப்பந்தி அருள்மிகு சித்திவிக்னேஸ்வரர் கோயில் அமைந்துள்ளது. இதனைவிட வேறு மூன்று இந்துக் கோயில்களும் உள்ளன. முஸ்லிம் மக்களுக்கான பெரியதொரு பள்ளிவாசலும் இங்குள்ளது. இங்குள்ள மெதடிஸ்த ஆலயம் மிகப் பழமை வாய்ந்ததாகும். இது 1838 ஆம் ஆண்டில் கட்டப்பட்டது. அத்துடன் அங்கிலிக்கன் மத ஆலயமான புனித அந்திரேயா ஆலயமும் (St.Andrew's Church - 1891) புளியந்தீவில் அமைந்துள்ளது. மத வழிபாட்டுத் தலங்கள் போன்றே புளியந் தீவிலுள்ள கல்விக்கூடங்களும் பழமை வாய்ந்தனவாகும். இவை பற்றிய வரலாறு இந்நூலினுள்ளே தரப்படுகின்றது.

கச்சேரி (மாவட்டச் செயலகம்), பிரதேச செயலகம், மாநகரசபை, கல்வித் திணைக்களம், நீர்ப்பாசனத்திணைக்களம், அரசினர் பொது வைத்தியசாலை, பேருந்து நிலையம், வங்கிகள் ஆகிய பிரதான பொது மக்கள் தொடர்பு நிறுவனங்கள் புளியந்தீவில் அமைந்துள்ளமையால் புளியந்தீவு தற்போதும் மிகவும் சனநெருக் கடிமிகுந்த சுறுசுறுப்பான நகராகக் காட்சியளிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்து வந்த பாதையில்...

அன்னையின் ஆலயத்திற்கு அடித்தளமிடப்பட்ட இருநூறு வருட நிறைவை மகிழ்வுடன் கொண்டாடும் நாம் எமது நாட்டில், எமது மறைமாவட்டத்தில், எமது பங்கில் திருச்சபையின் நிகழ்வுகள் குறித்து திரும்பிப் பார்த்தல் நலமென நினைக்கின்றோம். நினைவுகூரத்தக்க நிகழ்வுகளைப் பட்டியல் படுத்தினால் மிகப்பெரும் நூலொன்று விரியும். எனவே, தேர்ந்தெடுக்கப்பட்ட சுருக்க வரைவொன்றைப் பார்க்கலாம். ஆலயத்தின் பௌதீகத் தோற்றமும் வளர்ச்சியும் குறித்துப் பேசும்போது அதற்கு அடித்தளமாக விளங்கும் எமது கத்தோலிக்க விசுவாசத்தையும் ஆன்மீக, சமூகப் போக்குகளையும் பின்னணியில் நினைவுகூர்தல்தான் மிகப்பொருத்தமானதும் அவசியமானதுமாகும்.
ஆரம்ப காலத்தில் ஒரற்ரோறியன் (Oratorian) என அழைக்கப்படும் புனித பிலிப் நேரியார் தியான சம்பிரதாயக் குருக்களே இலங்கையிற் கத்தோலிக்கத்தை வளர்த்தனர். இந்தியாவிலிருந்த ஐரோப்பியக் குருக்கள் தமது சபைகளில் சுதேசக் குருக்கள் இணைவதை விரும்பவில்லை. இதனால் வருத்தமுற்ற சுதேசக் குருக்கள் தமக்கெனத் தனியான சபைகளை நிறுவ முயற்சித்தனர். இவ்வாறு நிறுவப்பட்ட ஒரு சபையே தியான சம்பிரதாயச் சபையாகும். சில காலத்தின் பின் இதன் குரு முதல்வராக யோசேப் வாஸ் அடிகளார் தேர்ந்தெடுக்கப்பட்டார். இன்னும் சிறிது காலத்தின் பின் அவர் இலங்கைக்கு வந்தார். அவரைத் தொடர்ந்து பல குருக்கள் இலங்கைக்கு வந்து பணிபுரிந்தனர்.

இவர்களில் குறிப்பிடத்தக்கவர் யாக்கோமே கொன்சால்வெஸ் அடிகளார். இவரே நமக்கு 'பசான்' எனும் 'வியாகுல பிரசங்கத்தை' தந்தவர். தமிழ்க் கத்தோலிக்க உலகம் என்றுமே இவரது பணியை மறக்காது. நமது மொழியறியாத ஒருவர் நம் மொழியைக் கற்று அதில் பாண்டித்தியம் பெற்று இவ்வளவு உருக்கமான ஒரு காவியத்தை நமக்குத் தந்தாரெனின் அவரது தியாகத்தையும் இறைவனின் திருச்சித்தத்தையும் என்னென்பது!

இத் தியாகிகளின் பணிகள் குறித்த விரிவான விபரங்கள் துரதிர்ஷ்டவசமாக எமக்குக் கிடைக்கவில்லை. கிடைத்த தகவல்களின் படி, கிழக்கில் பணிபுரிந்த தியான சம்பிரதாய சபைக்குருக்களின் பெயர்களும் அவர்கள் பணிபுரிந்த ஆண்டுகளும் ஓர் அட்டவணையாக இந்நூலில் இணைக்கப்பட்டுள்ளன.

தியான சம்பிரதாயக் குருக்களின் பின்னர் பணிபுரிந்த அமலமரித் தியாகிகள் மட்டக்களப்பில் ஆற்றிய அரும்பணிகள் பல. இவர்களது முக்கிய நோக்கம் கல்வியை அபிவிருத்தி செய்தலேயாகும். இவர்களுடைய பணிக்காலம் 1848 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பமாகின்றது. எனினும் இவர்களுடன் சில இயேசுசபைக் குருக்களும் பணியாற்றினர். அமல மரித் தியாகிகளின் கல்விப் பணியைத் தவிர வாந்திபேதி, அம்மைநோய் எனும் அக் காலப் பயங்கர தொற்றுநோய்க் காலங்களில் அவர்கள் ஆற்றிய அரும்பணிகள் கிழக்குத் திருச்சபை வரலாற்றில் மறக்க முடியாதவை எனப் பதிவு செய்துள்ளனர்.

இவர்களைத் தொடர்ந்து வந்த பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த இயேசு சபைக் குருக்களுடன் கிழக்கு திருச்சபை வரலாற்றில் புதியதொரு சகாப்தம் ஆரம்பமாகின்றது. 1893 நவம்பர் மாதம் 23ஆம் நாள் வண.கபிரியேல் மொறில் (Fr.Gabriel Moreel), வண. அல்போன்ஸ் மேரி எவ்றாட்( Fr.Alphonse Mary Evrard), வண. J.லாமி (Fr.Jules Larmey) ஆகிய மூன்று குருக்கள் மட்டக்களப்பிற்கும், வண.F.X. ஹெம்பேகர் (Fr.F.X.Heimberger) திருகோணமலைக்கும் வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பேற்றனர். பிரான்ஸ் நாட்டின் சம்பேன் மாகாண இயேசு சபையினருக்கு, திருகோணமலை மேற்றிராசனத்தைப் பராமரிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது.

இக் குருக்கள் பணியாற்றத் தொடங்கும் போது இருந்த சூழ்நிலையைப் பற்றி அறிவோமானால் இக்குருக்களின் தியாகங்கள் எவற்றோடும் ஒப்பிட முடியாதவை என உணர்வோம். இவர்களது தமிழ் மொழியையே அறியாத தன்மை, மிகக் குறைந்த ஆங்கில அறிவு, தமது தாய் நாட்டினதும், மட்டக்களப்பினதும் கால நிலைகளுக்கிடையிலுள்ள பாரிய ஏற்றத்தாழ்வு, உணவுமுறை, இரு ஆலயத்தைச் சார்ந்தவர்களுக்குமிடையே நிலவிய சாதிப்பிளவுகள், மக்களது கல்வியறிவற்ற தன்மை, பில்லி சூனிய நம்பிக்கை, குருக்களுடன் ஒத்துழையாமை, கத்தோலிக்கக் கடமைகளில் அசிரத்தை எனும் மலை போன்ற பிரச்சினைகளை அவர்கள் எதிர்நோக்கினர். இவை யாவற்றையும் அவர்கள் இறைவனின் மிகப் பெரும் பலத்துடனும் பராமரிப்புடனும், தமது நுண்ணிய அறிவாற்றலுடனும் சகிப்புத் தன்மையுடனும் எதிர் கொண்டு சேவையாற்றியதால் நாம் இன்று கிழக்குத் திருச்சபையின் கத்தோலிக்கர்கள் எனத் தலை நிமிர்ந்து சொல்கின்றோம். அவர்களது உரமாகிப்போன எலும்புகளின் மீது நாம் காலூன்றி நிற்கிறோம்.

கிழக்குத் திருச்சபை வரலாற்றில் பிரெஞ்சுக் குருக்களது சேவை எவ்வளவுக்கு வேரூன்றியிருந்ததென்றால் கத்தோலிக்கம் ஒரு வெளி நாட்டு மதம் என்னும் உணர்ச்சி மக்களுக்கு இல்லாதிருந்தது என்கிறார் வண.லாங் அடிகளார்.

வீதிப்போக்குவரத்துகளில் ஆதி காலக் குருக்கள் எதிர் நோக்கிய சிக்கல்கள் மிகவும் கடினமானவை. மாட்டு வண்டி இவர்களுக்கு உயர்தர வசதியான போக்குவரத்துச் சாதனமாக இருந்தது. ஒருமுறை ஆசிரியர்கள் தமக்கு போக்குவரத்து வசதி தேவை எனத் தகராறு செய்ததால் Fr. Roux மாட்டு வண்டியை இவர்களுக்கு இருபது ரூபாவுக்கு விற்றார். இவ்வண்டி ஒரு மணித்தியாலயத்தில் செல்லக் கூடிய ஆகக் கூடிய வேகம் இரண்டு மைல்கள் தானாம்.

1945ஆம் ஆண்டில் அதாவது சம்பேன் மாகாண குருக்கள் பொறுப்பேற்று 50 வருடங்களின் பின் திருகோணமலை மறைமாவட்டப் பொறுப்பு அமெரிக்காவின் நியூஓர்லியன்ஸ் மாகாணத்திற்கு மாற்றப்பட்டது.

இவ்வாறு நியூஓர்லியன்ஸ் மாகாணத்திற்கு திருகோணமலை மறைமாவட்டத்தைப் பொறுப்புக் கொடுக்கும் முயற்சி 1933ம் ஆண்டிலேயே மேற்கொள்ளப்பட்டது. மட்டக்களப்பில் இருந்த பிரெஞ்சுக் குருக்கள் முதிர் வயததடைந்திருந்தனர். இங்கு அவர்கள் மேற்கொண்டிருந்த கடினமான பணிகள் அவர்களை மேலும் தளர்வடையச் செய்திருந்தன. எனவே இயேசுசபையின் மேலாளர் (General) கேட்டுக் கொண்டதற்கிணங்க நியூஓர்லியன்ஸிலிருந்து முதன்முதலாக இயேசுசபைத் துறவி ஜோன் ரி லினகன் என்பவர் 1933 செப்டெம்பர் 17ம் திகதி மட்டக்களப்பிற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகை தந்தார். இவரைத் தொடர்ந்து பல குருக்கள் தொடர்ச்சியாக அமெரிக்காவிலிருந்து வந்து சேவையாற்றினர். ஒவ்வொருவரும் ஏதோவொரு வகையில் மட்டக்களப்பில் சரித்திரம் படைத்தவர்களாய் பணிபுரிந்தனர். நமது சமகாலத்தில் பணிபுரிந்த அருட்தந்தையர்கள் லோறியோ, வெபர், ஹேபயர், மில்லர் போன்றவர்களின் சேவைகள் மட்டக்களப்பில் என்றும் மறக்கமுடியாதவை. இவ்வாறு வெளிநாட்டுக் குருக்களின் தியாகப்பணிகள் தொடர்ந்துகொண்டிருக்கும்போதே அவர்கள் சுதேசக் குருக்களையும் உருவாக்கிக்கொண்டிருந்தனர். இப்பணிபற்றி இந்நூலில் பிற இடங்களில் கூறப்படுகின்றது. நமது சுதேச குருக்களில் பலர் நமது பங்கில் பணியாற்றியே பல நற்காரியங்களைப் புரிந்துள்ளனர். வெளிநாட்டுக் குருக்கள் நமது பகுதிக்கு வந்து மறைபரப்புப் பணிகளில் ஈடுபடும்போது இப்பகுதியில் நிகழ்ந்த வெள்ளம், புயல், தொற்றுநோய்கள் போன்ற இயற்கையனர்த்தங்களில் நமது மக்களுக்கு உதவியாகவும் ஆறுதலாகவும் இருந்துள்ளனர். பலர் தாங்களே மலேரியா போன்ற நோய்களுக்குட்பட்டு இம்மண்ணிலேயே மடிந்தனர். ஆயினும் எமது சுதேச குருக்கள் இயற்கையனர்த்தங்களோடு செயற்கையனர்த்தங்களுக்கும் முகம்கொடுத்து பணிபுரிந்தனர்.

1978ம் ஆண்டு நவம்பர் 23ம் நாள் வீசிய சூறாவளி பாரிய அனர்த்தங்களை விளைவித்தது. நீண்டநேரம் பெய்த சிறியளவிலான மழையும், சாதாரண காற்றும் பின்னிரவில் பலத்து சூறாவளியாக மாறிச் சுழன்றடித்தது. அரைமணிநேரம் ஒருதிசையில் வீசிய காற்று பல வீடுகளின் கூரைகளைப் பறித்தது. பல நூற்றுக்கணக்கான மரங்கள் வீழ்ந்தன. வீடுஎது வீதிஎது என்று தெரியாதநிலை. அடுத்த அரைமணிநேரம் எதிர்த்திசையில் வீசியது. முதல்காற்றில் விழாது சரிந்து நின்ற மரங்களை அடுத்த திசைக்குச் சரித்து வீழ்த்தியது. புளியந்தீவு மக்கள் இடிந்து வீழ்ந்த வீடுகளை விட்டு வெளியேறி புனித மரியாள் ஆலயத்திலும் புனித மிக்கேல் கல்லூரியிலும் புனித அந்தோனியார் ஆலயத்திலும், குருக்கள் இல்லங்களிலும் புகலிடம் தேடினர். பலநாட்களின் பின்பே சொந்த இடங்களுக்குத் திரும்பினர். இச்சமயத்தில் குருக்களும் பொதுநிலையினரும் மக்களுக்கு தம்மால் இயன்ற உதவிகளைச் செய்தனர்.

அவ்வப்போது சிறுசிறு கலகங்களாக வெளிப்பட்டுக் கொண்டிருந்த சிங்கள-தமிழ் இன முரண்பாடு 1972ம் ஆண்டிலிருந்து புதிய பரிணாமத்தையெடுத்தது. இது ஆயுதப் போராட்டமாக உருவெடுத்து தமிழரின் ஆயுதப் போராட்டமாகப் பெயர் பெற்றது.

2004ம் ஆண்டு டிசெம்பர் 26ம் திகதி சுமாத்ரா தீவில் கடலுக்கடியில் ஏற்பட்ட பூகம்பம் ஆழிப்பேரலையாக உருப்பெற்று (Tsunami) தெற்காசியாவில் பல்லாயிரம் உயிர்களைப் பலிகொண்டது. முதல் நாள் கிறிஸ்மஸ் கொண்டாடி மகிழ்ந்த மட்டக்களப்பு மக்களில் கடற்கரைப் பகுதியில் வாழ்ந்த பலர் பிணங்களாக மிதந்தனர். இதில் இறந்த பெரும்பாலானோர் பெண்களும் குழந்தைகளுமாவர். மட்டக்களப்பு நகரமெங்கும் மரண ஓலம் கேட்டது. லொறிகளிலும் உழவுஇயந்திரங்களிலும் விறகுக்கட்டைகள் அடுக்குவது போல் சடலங்கள் அடுக்கப்பட்டு கொண்டு செல்லப்பட்டன. அன்று காலை 9.00மணியளவில் ஆரம்பித்த இந்த அவலம் இரவாகியும் ஓயவில்லை. பேரலை தரையைத் தாக்கி கட்டிடங்களைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகர்த்து உயிர்களைக் காவுகொண்டு கடலுக்கு திரும்பிச்செல்ல எடுத்தநேரம் 15நிமிடங்களுக்கும் குறைவானதே. ஆயினும் இப் பயங்கரத்தின் உணர்வுகள் தற்போதும் மறையவில்லை. பாதிக்கப்பட்ட பகுதியிலிருந்து ஓடிவந்த மக்களிற் பெரும்பான்மையானோர் புளியந்தீவில் அடைக்கலம் தேடினர். புளியந்தீவு கடலிலிருந்து உயரமான பாதுகாப்பான பகுதியென்னும் நம்பிக்கையும் ஒரு காரணம். இவர்களிற் பலர் புனித மரியன்னை ஆலயத்திலருகிலிருக்கும் சாள்ஸ் மண்டபத்திலும், புனித மிக்கேல் கல்லூரியிலும், புனித சிசிலியா பாடசாலையிலும் தங்க வைக்கப்பட்டனர். மெதடிஸ்த மத்திய கல்லூரியிலும், ஆனைப்பந்தி பெண்கள் பாடசாலையிலும் நூற்றுக்கணக்கானோர் தங்கினர். இவர்களுக்கான உணவு, உடைகளை பங்குமக்களே வழங்கினர். 'எகெட்' நிறுவனம் மற்றும் பிற அரசசார்பற்ற நிறுவனங்களும் இவ்வாறான உதவிகளை வழங்கின. இதற்கமைவாக பல உள்நாட்டு, வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்கள் உருவாகின. குறுகிய கால உதவிகளுடன் வீடமைப்பு, கல்விக்கூடங்கள் அமைத்தல், உளவள ஆலோசனை, தொழில்வாய்ப்பு போன்ற நீண்டகால உதவிகளையும் இவை வழங்கின. ஆழிப்பேரலை ஏற்பட்ட காலப்பகுதில் யுத்த நிறுத்தமும் முறிவடையக்கூடிய நிலையில் இருந்தபோதும் பல சிங்கள மக்கள் குடும்பம் குடும்பமாகச் சேர்ந்து வாகனங்களில் குடிநீரும், உணவு, உடைகளும் ஏற்றிவந்து தமிழ் மக்களுக்கு உதவி செய்தமை பலரது உள்ளங்களையும் உருக்கிய நிகழ்வாகும். நமது பங்கிலுள்ள பக்திச் சபைகளும் இளைஞர் குழுக்களும் இப்பாதிக்கப்பட்ட மக்களுக்கு பலவழிகளிலும் உதவிக்கரம் நீட்டினர்.

இவ்வாறு உலகின், நாட்டின், பிரதேசத்தின் இயற்கை, செயற்கைப் பாதிப்புக்களுக்கு புளியந்தீவு மக்களும் முகம் கொடுத்ததுடன், இறையருளாலும் புனித அன்னையின் பரிந்துரையாலும் பாதுகாப்புடன் வாழ்ந்து வருகின்றனர். அத்துடன் ஆலய வரலாற்றின் இருநூறாண்டுகளூடாக தமது கத்தோலிக்க விசுவாசத்தையும் ஆழப்படுத்தி வருகின்றனர்.

கடந்த நூறாண்டு காலப்பகுதிக்குள் புனித அன்னை தம்மைப் பாத்திமாவிலும் லூர்துநகரிலும் வெளிப்படுத்திய அரும்பெரும் புதுமை வரலாற்றிற் பதியப்பட்டுள்ளது. இக்காலப்பகுதிக்குள் திருச்சபையில் நடந்த மற்றுமொரு புரட்சிதான் 1962-1965 இல் நடைபெற்ற இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கமும், அதிலெடுக்கப்பட்ட தீர்மானங்களும், அவற்றை நடைமுறைப்படுத்தி வருவதன் மூலம் திருச்சபையில் தொடர்ச்சியாக ஏற்படும் மறுமலர்ச்சியுமாகும்.

திருமலை மட்டக்களப்பு மறைமாவட்ட நூற்றாண்டு விழா நிகழ்வுகள் 1993 ஆவணி 28ஆம் 29ஆம் திகதிகளில் நடைபெற்றன. 28ஆம் திகதி மாலை வெபர் அரங்கில் கலைநிகழ்ச்சிகள் இடம்பெற்றன. 29ஆம் திகதி பி.ப 2.45 மணிக்கு எழுச்சி ஊர்வலம் ஆரம்பமானது. இது இருதயபுரம் பங்கிலிருந்து ஆரம்பித்து தாண்டவன்வெளி, புனித மரியாள் இணைப்பேராலயம் ஊடாக வெபர் அரங்கில் முடிவுற்றது. கொட்டும் மழையிலும் மக்கள் ஊர்வலத்தில் கலந்துகொண்டமை பரவசத்திற்குரியதாயிருந்தது.

எமது சமகால நிகழ்வுகளில் புளியந்தீவில் தடம்பதித்த இரு சிறப்பு நிகழ்வுகள் 2008 வைகாசி 23ஆம் திகதி நடைபெற்ற எமது அதிவந்தனைக்குரிய ஆயர் யோசப் கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகையின் ஆயர்த்துவ வெள்ளி விழாவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2008 வைகாசி மாதம் 24ஆம் திகதி நடைபெற்ற மட்டக்களப்பின் மைந்தர் அதிவந்தனைக்குரிய துணை ஆயர் பொன்னையா யோசப் ஆண்டகையின் ஆயராகத் திருநிலைப்படுத்தும் சடங்குமாகும். இம்மாபெரும் கொண்டாட்டங்களுக்கு திருத்தந்தையின் இலங்கைக்கான பிரதிநிதி மேன்மை மிகு மரியோ செனாரி ஆண்டகை அவர்களும், இலங்கையின் பல மறைமாவட்ட ஆயர்களும், குருக்களும், துறவிகளும், பலமொழி பேசும் மக்களும், பிற சமயப்பெரியாரும் கலந்து சிறப்பித்து மகிழ்ந்தனர். புளியந்தீவு திருவிழாக்கோலம் பூண்டிருந்தது.

இருபத்தைந்தாண்டுகள் ஆயர்பணி மிக அபுர்வமாகக் கிடைக்கத்தக்கது. ஆசீர்வரங்களால் நிறையப் பொழிவு பெற்ற எமது ஆயர் வந். கலாநிதி ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்கள் 07.05.2008ல் ஆயர்த்துவ வெள்ளி விழா நாயகனானார். இந்த மகிழ்ச்சியுள் திளைத்துக் கொண்டிருந்த கிழக்கு வாழ் மக்களுக்கு மேலும் ஒரு வரப்பிரசாதம் தரும் செய்தி வத்திக்கானில் வெளியாகியது. நமது மண்ணின் மைந்தர் அருட்பணி. பொன்னையா ஜோசப் ஆயராக நியமனம் பெற்ற மகிழ்ச்சி மிக்க செய்தி எம் காதுகளுக்கு எட்டியது. அளவில்லா ஆசீர்வாதம் கிடைத்த பெருமையுடன் 23.05.2008இல் வெள்ளிவிழா நாயகருக்கு வாழ்த்தும், பாராட்டும் இறைவனுக்கு நன்றியும் 24.05.2008இல் புதிய ஆயர் திருப்பொழிவும் நடந்தேறிய வரலாற்றுப் பெருமை மிக்க கொண்டாட்டத்தை மறக்கமுடியாது.
புனித மரியாள் இணைப்பேராலய முன்றலில் இதற்காக அமைக்கப்பட்ட மாபெரும் பந்தலில் இலங்கை மறைமாவட்டங்களைச் சேர்ந்த அனைத்து ஆயர்களும் பங்குபற்றி ஆசீரளித்தனர். இவர்களுக்கெல்லாம் தலைமையாக திருத்தந்தையின் இலங்கைக்கான பிரதிநிதி அதி.வந்.மரிய செனாரியோ ஆயரவர்களும் தமது பிரசன்னத்தைக் கொடுத்தது மிகுந்த ஆசீர்வாதமாக அமைந்தது. 23.05.2008 அன்று மாலை நிகழ்வுக்கள் வெள்ளிவிழா நாயகருக்கான சிறப்பு நிகழ்வுகளாகவும், 24.05.2008 காலை நிகழ்வுகள் புதிய ஆயரின் திருப்பொழிவு நிகழ்வுமாகி அமைந்தன. வெள்ளிவிழா நாயகர் கிழக்குவாழ் மக்களுக்கு அளித்த மாபெரும் நன்கொடையாக இம்மண்ணைச் சார்ந்த முதல் ஆயர் பொன்னையா ஜோசப் அவர்களை எமக்குப் பெற்றுக்கொடுத்த கொடையாகக் கொள்ளலாம்.
முடிவாக, ஏற்கனவே குறிப்பிட்டவாறு, தேர்ந்தெடுக்கப்பட்ட நிகழ்வுகளிற் சிலவே நினைவுகூரப்பட்டுள்ளன. ஆயினும், விடுபட்ட நிகழ்வுகள் முக்கியத்துவம் அற்றவை எனத் தவறாக எண்ணிவிடலாகாது.

இவ்வாறு பூச்சியத்திலிருந்து ஆரம்பமாகிய எமது கத்தோலிக்க ஆன்மீக, சமூக விழுமியங்கள் ஓர் இயக்கமற்ற (Static) வரலாற்றுப் பதிவுகளாக நின்றுவிடாமல் தொடர்ந்து இயங்கும் (Dynamic) ஆரோக்கியமிக்க வளர்ச்சிப் போக்காகத் திகழ இறைவனின் கருணையையும் புனித அன்னையின் பராமரிப்பையும் வேண்டுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னையின் ஆலயத்திற்கு அடித்தளமிட்ட
# அருட்தந்தை. பிரான்ஸிஸ் சேவியர்

அமலமரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த, அதி வந். பொஞ்சீன் ஆண்டகை யவர்கள் யாழ்ப்பாணத்திலும் அதனைத் தொடர்ந்து கொழும்பிலும் ஆயராகப் பணியாற்றிய போது அவர்கள் இலங்கையின் கல்வித்துறைக்கு ஆற்றிய பணி இன்றும் வியப்புடன் தேசிய கல்வித்துறையில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவர் கிறிஸ்தவர் மட்டுமல்லாது ஏனைய சமயத்தினரும் அரச உதவியுடன் கல்விக் கூடங்களைத் திறக்க வேண்டும், அதற்கு அரசு நன்கொடை வழங்கவேண்டும் என்பதை அரசுக்கு அழுத்தியுரைத்து அதில் வெற்றியும் கண்டவர். சுதேசக் குருக்களை உருவாக்குவதற்காக குருத்துவ கல்லூரிகளை ஆரம்பித்தவர். ஆண்டகையவர்களின் இத்தகைய முயற்சிகளில் மட்டக்களப்பில் கல்விக் கூடங்களை நிறுவும் பணிக்காக ஓர் ஆற்றல்மிக்க சுதேச குருவானவரை அவர் மட்டக்களப்பிற்கு அனுப்பிவைத்தார். அவரே அருட்தந்தை பிரான்சிஸ் சேவியர் அடிகளாவார்.

துரதிர்ஷ்டவசமாக இவ்வாறான ஓர் ஆற்றல் மிக்க குருவானவரின் பிறப்பு வளர்ப்பு பற்றிய விபரங்களோ அவரது புகைப்படமோ எமக்கு கிடைக்கவில்லை. இவர் யாழ்ப்பாணத்தில் பிறந்தவர். இலங்கையின் முதலாவது தமிழ் சுதேச குருவும் இவரே. கொழும்பு மறைமாவட்டத்தைச் சேர்ந்த போலவத்த (BOLAWATTE) எனும் பங்கில் 1857 ஆம் ஆண்டு தவக்காலத்தின்போது குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். சில மாதங்கள் அங்கு சேவையாற்றியபின் அதே ஆண்டில் குருநாகலுக்கு சென்று 1869ஆம் ஆண்டு வரை பணிபுரிந்தார்.

பின்னர் ஓர் ஆண்கள் ஆங்கிலப்பாடசாலையை மட்டக்களப்பில் ஆரம்பிக்குமாறு ஆயர் பொஞ்சீன் ஆண்டகையவர்களால் பணிக்கப்பட்டு மட்டக்களப்பிற்கு அனுப்பப்பட்டார். இதற்காக ஐநூறு ரூபா பணமும் அவருக்கு கொடுக்கப்பட்டது. அக் காலப்பகுதியில் இப்பணம் ஒரு பெரிய தொகையாகும். சக்தியும், ஆற்றலும், ஆர்வமுமுள்ள ஒரு குருவாகத் திகழ்ந்த அடிகளார் தமது இடையறா முயற்சியால் ஒரு பாடசாலைக்குப் பதிலாக மூன்று பாடசாலைகளை ஆரம்பித்தார். அவையே புனித மிக்கேல் ஆங்கிலப்பாடசாலை, புனித மரியநாயகி ஆண்கள் தமிழ்ப்பாடசாலை, புனித சிசிலியா பெண்கள் பாடசாலை என்பனவாகும். இது 1873 ஆம் ஆண்டில் நிகழ்ந்தது. இதற்காக மொத்தமாக இரண்டாயிரம் ரூபாவை அவர் செலவிட்டிருந்தார். **தற்போதுள்ள எமது புனித மரியாள் ஆலயத்திற்கு அடிகளார் 1874 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 19 ஆம் நாள் அடிக்கல் நாட்டினார்.**

இவரது காலத்தில் ஒழுங்கான வீதிகளோ, பாலங்களோ மட்டக்களப்பில் இருக்கவில்லை. எனவே அவர் தமது பராமரிப்புக்குட்பட்ட இடங்களைத் தரிசித்து மக்களைச் சந்திப்பதற்கு மட்டக்களப்பு வாவியைப் பயன்படுத்தினார். இதற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு படகில் துவிச்சக்கர வண்டி போன்று மிதிக்கக்கூடிய சக்கரங்களைப் பொருத்தி இதனை மிதிப்பதன் மூலம் படகிற் பயணம் செய்தாரென அறிகின்றோம்.. ஒரு பாரிய மணிக்கூண்டொன்றை பகுதி பகுதியாக நிர்மாணித்து ஆலயத்தின் அருகே நிறுவியிருந்தார். இச்சம்பவங்கள் அவரது பொறியியற் திறமையை வெளிப் படுத்துகின்றன.

ஒருமுறை அடிகளார் தமது வழமையான பங்கு அலுவல்களின்போது தமது குடையைத் தொலைத்துவிட்டார். எங்கு தேடியும் குடை அகப்படவில்லை. அடுத்த ஞாயிறு திருப்பலியின் போது இவ்வாறு முழங்கினாராம். ''சீசருடையதை சீசருக்கு கொடுங்கள். பிரான்ஸிஸ் சேவியருடையதை அவருக்கு கொடுத்துவிடுங்கள்''. மறுநாள் காலையில் குடை பங்குமனை வாசலில் காணப்பட்டதாம்.

மட்டக்களப்பிற் பணிபுரிந்த சில காலத்தின்பின் அடிகளார் சிலாபத்திற்குச் சென்றார். அங்கு குறுகிய காலம் சேவையாற்றியபின் அடிகளார் போலவத்தைக்குச் சென்றார். 1886 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 15ம் திகதி இறையடி சேர்ந்தார். அடிகளார் நல்லடக்கம் செய்யப்பட்ட கல்லறையின் புகைப்படம் இந்நூலில் இணைக்கப் பட்டுள்ளது. நாம் நேசிக்கும் அன்னையின் ஆலயத்தை உருவாக்க அடித்தளமிட்ட உத்தமனை இந்த நல்ல தருணத்தில் நேசமுடன் நினைவு கூருவோம்.

நன்றி:- புனித மிக்கேல் கல்லூரி நூற்றாண்டு மலர்-1973

1933 ஜுலை மாத இறுதியில் மட்டக்களப்பில் என்றுமில்லாதவாறான ஒரு தீவிபத்து இடம் பெற்றது. மின்சார நிலையத்திற்கு (தற்போது உடல் வலுவூட்டல் நிலையம்) முன்னாலிருந்த ஒரு நகைத் தொழிலாளர் / கொல்லர் கடை யில் பி.ப.12.15க்கு ஆரம்பித்த தீ கடுமையான கச்சான் காற்று காரணமாக மிக வேகமாக பரவி 15 நிமிடங்களுக்குள் அப்பகுதியிலிருந்த 50 வீடுகளை அழித்தது. 300 கத்தோலிக்கர்கள் நிர்க்கதியாகினர். புனித அந்தோனியார் ஆலய வளவினுள் மக்கள் அன்று தங்க வைக்கப்பட்டனர். அக் காலத்தில் மொத்த இழப்பின் பெறுமதி ரூபா.17,000 ஆக மதிப்பிடப்பட்டது. சில மாதங்கள் சென்ற பின்னரே இம் மக்களுக்கு நிரந்தர நிவாரணம் கிடைக்கக் கூடியதாகவிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது ஆயர்கள்

இலங்கைத் திருச்சபையானது 1836 வரை கோவா, கொச்சின் ஆயர்களின் பரிபாலிப்பின் கீழே தான் இருந்து வந்துள்ளது. திருத்தந்தை 16வது கிறகரி (GREGORY - XVI) அவர்களால் 1836ல் கொழும்பை மையமாக வைத்து இலங்கை தனிமறை மாவட்டமாகப் பிரகடனப்படுத்தப் பட்டது. ஆயினும் கோவா ஆயரின் கீழ் பாப்பரசரின் பிரதிநிதியான அருட்பணி ஜோசப் வாஸ் அடிகளாரே (இவர் முத்திப்பேறு பெற்றுள்ள ஜோசப் வாஸ் அடிகள் அல்ல) இலங்கை மறைமாவட்டத்தின் பொறுப்பாளராக இருந்தார்.

1838ல் தான் இலங்கையின் முதல் ஆயராக வந். ஆயர் வின்சன் றொசைறோ டயஸ் அடிகளார் நியமனம் பெற்றார். 1849ல் வந். ஆயர் பெத்தாச்சினி அடிகளார் யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயராக நியமனம் பெற்றார். இவருடைய பரிபாலிப்பி லேயே திருகோணமலை மறை மாவட்டம் இருந்தது.

1893ம் ஆண்டில் யாழ்ப்பாண மறை மாவட்டத்திலிருந்து திருகோணமலை தனிமறை மாவட்டமாக திருத்தந்தை 13ம் சிங்கராயரால் பிரகடனப்படுத்தப்பட்டது. ஆயினும் 1898 வரை காலி ஆயராக இருந்த வந். ஆயர் ஜோசப் வான் றீத் அவர்களின் பரிபாலிப்பிலேயே இருந்துள்ளது.

1895ல் வந். ஆயர் சாள்ஸ் லவிங்னே இம்மறை மாவட்டத்தின் முதல் ஆயராக நியமனம் பெற்றார். இவர் 1913 வரை ஆயராக இருந்து அமரத்துவம் பெற்றார். இவருக்குப்பின் அருட்பணி கஸ்ரன் றொபிசே அடிகளார் இம்மறை மாவட்டத்தின்



நிருவாகியாக பரிபாலித்து 1918ல் வந். ஆயராக நியமனம் பெற்றார். இவரது கல்லறை புளியந்தீவு புனித மரியாள் இணைப்பேராலாய பீடத்துள் உள்ளது. (1946 பெப்ரவரி 17).



1947ல் வந்.ஆயர் இக்னேஷியஸ் கிளெனி திருகோணமலை மறை மாவட்டத்தின் மூன்றாவது ஆயராக நியமனம் பெற்றார். 1973 வரையான இவரது மேய்ப்புப் பணி காலப்பகுதியானது பின்வரும் காரணங்களால் முக்கியத்துவம் பெறுகிறது.



பிரித்தானியரிடமிருந்து 1948ல் இலங்கை சுதந்திரம் பெற்றுக் கொண்டமை, தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் போராட் டங்கள் ஆரம்பிக்கப்பட்டு நடாத்தப்பட்டமை, தேசிய மயக் கொள்கைகள் சட்ட மூலமாக்கப்பட்டதால், வெளி நாட்டுத் துறவிகள் நாட்டைவிட்டு வெளியேற நேர்ந்தமை, சுயபாஷைக் கல்வி அமுல்படுத்தப்பட்டு, மிஷனரிப் பாடசாலைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கம் பொறுப்பேற்றதும், சமயக்கல்வி புறக்கணிக்கப்பட்டமையும் 2ம் வத்திக்கான் திருச்சங்க தீர்மானங்கள் அமுலுக்கு வந்தமை, சோல்பரி யாப்பு நீக்கப்பட்டு, சனநாயக சோஷலிச குடியரசு அரசியல் யாப்பு ஏற்றுக் கொள்ளப் பட்டமை,(1972) இயற்கை அனர்த்தங்களான பெருவெள்ளம் 1957ல் மட்டக்களப்பிலும் சூறாவளி 1964ல் திருகோணமலையிலும் பாரிய அழிவுகளை ஏற்படுத்தியமை, 1971ல் தென்னிலங்கையில் இளைஞர்களால் நடாத்தப்பட்ட சேகுவேரா புரட்சி என்பன அழுத்தம் கொடுத்த நிகழ்வுகளாகும்.

தலத்திருச்சபையை தீர்க்கதரிசனத்துடன் சிந்தித்த ஆயர் அவர்கள் 1948இலேயே மட்டக்களப்பில் புனித அகுஸ்தீனார் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை இருந்த இடத்திலேயே இளங் குருமடமொன்றைத் தொடக்கினார். 1957ல் உப்புவெளியில் சகல வசதிகளுமாய் அமைத்த இளங்குருமடம் இடமாற்றம் பெற்றது. (இக் குருமடம் 1984ல் மட்டக்களப்பு – திருப் பெருந்துறைக்கு மாற்றப்பட்டுள்ளது).

சமூகப்பணிகளில் 1954ல் மட்டக்களப்பில் வயோதிபர் இல்லமும், 1970ல் திருகோணமலையில் இளைஞர் சேவை நிலையமும், 1972ல் சத்துருக்கொண்டானில் (கும்பிளாமடு) இளைஞர் தொழிற் பயிற்சிப்பேட்டையும் தோற்றுவிக்கப்பட்டமை மறக்க முடியாதவை.

1960களில் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றவுடன், புனித மிக்கேல் கல்லூரியையும் (மட்டக்களப்பு) புனித சூசையப்பர் கல்லூரியையும் (திருகோணமலை) அரசாங்கத்திற்குக் கையளிக்காமல் இயேசு சபையின் அனுசரணையுடன் பத்து வருட காலம் நடாத்திய பெருமைக்குரிய ஆயரும் இவரே.

பொது நிலையினரை இல்லறத் தூதுவர்களாக இந்தியாவுக்கு அனுப்பி பயிற்சி கொடுத்து குருக்கள் பற்றாக்குறையுள்ள பங்குகளில் பணியாற்ற அனுப்பி வைத்தார். மறைக்கல்வியை தொலை நோக்குடன் கருதிய இவர், அருட்பணி ஹென்றி பொன்னையா அடிகளாரை முதல் இயக்குனராகக் கொண்டு மறைக்கல்வி நடு நிலையத்தை மட்டக்களப்பில் ஆரம்பித்து வைத்தார்.

1960களில் இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கத்தின் தீர்மானங்களை, பல எதிர்ப்புக்கள் மத்தியிலும் ஆயர் அவர்கள் நடைமுறைப்படுத்த அயராது முன்னின்றார். சுயபாஷையும், கலாசாரமும் வழிபாட்டில் அமுல் படுத்தப்பட வேண்டுமென்பதால், இவற்றில் தனது இயலாமை காரணமாக வந்.ஆயர் பஸ்தியான் தியோகுப் பிள்ளை



அவர்களை துணை ஆயராகக் கொண்டு இவற்றை நடைமுறைப் படுத்தினார். (துணை ஆயர் 1967 முதல் 1972 வரை இம்மறை மாவட்ட துணை ஆயராகப் பணியாற்றி யுள்ளார்)

இறை தூதுப்பணியில் மாதாந்த ஏடு ஒன்றின் அவசியம் இவர் காலத்தில் உணரப்பட்டதால் 1969ல் **தொண்டன**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏடு ஆரம்பிக்கப்பட்டது. (குறிப்பு: 1925 தொடக்கம் இம்மறை மாவட்டத்தில் 'THE PILGRIM' 'யாத்திரிகன்' என்ற ஏடு திருச்சபைச் செய்திகளைத் தாங்கி வெளி வந்தது. இதன் ஆசிரியராக அருட்பணி றிச்சர்ட் யே.ச. அடிகளார் இருந்துள்ளார். இப்பத்திரிகை எப்போது நின்று விட்டது என்பது தெரியவில்லை)

தற்போது ஆயர் இல்லத்தின் அருகே உள்ள குருமனையும் இவ் ஆயர் காலத்திலேயே நிர்மாணிக்கப்பட்டது. மட்டக்களப்பு பொது வைத்திய சாலையில் குருக்கள், துறவிகளுக்கென ஒரு தனி விடுதி (WARD) கட்டினார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வளர்ச்சியும், கத்தோலிக்கர்களின் அதிகரிப்பும் ஆயர் அவர்களை தீர்க்கதரிசனத்துடன் சிந்திக்க வைத்ததால் 1964ல் மறை மாவட்டத்தின் பெயரை திருகோணமலை – மட்டக்களப்பு மறை மாவட்டம் என மாற்றம் செய்தார். புளியந்தீவு புனித மரியாள் தேவாலயம், இணைப்பேராலயமாக பிரகடனப்படுத்தப்பட்டது. 1970ல் 'செடெக்' எனப்படும் பொருளாதார நிலையமும் உருவாக்கப் பட்டிருந்தது. தனது பணிகளை நிறைவு செய்து கொண்டு 1973ல் அமெரிக்காவிற்குச் சென்றார். 1974ல் வந்.ஆயர் லீயோ இராஜேந்திரம் அன்ரனி இம்மறை மாவட்டத்தின் ஆயராக நியமனம் பெற்றார். 1978ல் மட்டக்களப்பைத் தாக்கிய சூறாவளி (நவம்பர்23) இவர் காலத்தில் அழுத்தம் கொடுத்த முக்கிய நிகழ்வாகும். 'செடெக்' எனப்பட்ட பொருளாதார நடுநிலையத்தினூடாக ஆயர் அவர்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பெரும் தொண்டாற்றினார். இயக்குனராக அருட் தந்தை.A.நோபட் ஒக்கர்ஸ் அடிகளார் பணியாற்றினார்.



இவர் மறைமாவட்ட மேய்ப்புப் பணிச்சபையை ஆரம்பித்ததுடன், இரண்டு குருமுதல்வர்கள் நிருவாகப் பொறுப்பில் செயற்படச் செய்தார். இம் மறை மாவட்டத்தில் எந்த ஆயரும் செய்திருக்காத ஒரு பெரும் பணியை இவர் செய்ததை ஒரு போதும் மறக்க முடியாது. கால்நடையாக தன் மேய்ப்பிலுள்ள ஒவ்வொரு இல்லத்தையும் தரிசித்து ஆசீரளித்தவர் இவர். 1983 தொடக்கம் இவர் ஓய்விலுள்ளார். பெண்களின் பணியின் முக்கியத்துவம் உணர்ந்து 'குழுவாழ்வுச் சகோதரிகள் எனும் பணித்துறை இவருடைய ஆசீருடனேயே ஆரம்பமானது.

1983 இலங்கை வரலாற்றில் மறக்கப்பட முடியாத துயரம் நிறைந்த ஆண்டு. தமிழ் மக்கள் வன்செயல்களுக்கு ஆளாக்கப்பட்ட கறுப்பு ஜுலை காலகட்டத்தில் இம்மறை மாவட்டத்தின் ஐந்தாவது ஆயராக வந். ஆயர் ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை நியமனம் பெற்றார். அன்று முதல் இருபத்தியாறு ஆண்டுகளாக அமைதி யிழந்து, துயர் நிறைந்துள்ள தன் மந்தைக்கு, ஊட்டமும், தைரியமும், உற்சாகமும் கொடுத்து விடியலை எதிர் பார்த்து நிற்கும் ஆயர் இவர்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



துயர் நிறைந்த இக்காலத்தில், திருகோணமலை தொடக்கம் அம்பாரை வரை யிலுள்ள மூன்று மாவட்டங்களிலும் இன,மத,பேதம் பார்க்காது EHED என்ற அமைப்பினூடாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு கோடிக்கணக்கில் செலவிட்டு பராமரித்து வந்ததும் போதாமல், CARITAS – EHED மூலம் பணியின் அளவை மேலும் விரிவாக்கியுள்ளார். இந்நிறுவனப பணிகள் வரிசைப்படுத்தப்பட முடியாதவை.

பொது நிலையினரையும் பங்கேற்பாளாராக மாற்றி வரும் முதன்மை நிலை ஆயராக உள்ளார். பொது நிலையினருக்கு 'தியாக்கோன்' அந்தஸ்து அளித்துள்ளதுடன், நற்கருணைப் பணியாளர்களாகவும். உருவாக்கியுள்ளார்.

மறை மாவட்டம் மூன்று மறைக்கோட்டங்களாக வகுக்கப்பட்டு மறைக்கல்வி நடு நிலைய விஸ்தரிப்புகளும் இடம் பெற்றுள்ளன. இவர் காலத்தில் அல்லற்படும் மக்களின் தேவை கருதி புதிய சபைகளும் சேவைக்காக இம் மறை மாவட்டத்தில் கால் பதித்துள்ளதைக் குறிப்பிட்டேயாக வேண்டும்.

வடக்கு கிழக்கில் தொடர்ந்து கொண்டிருக்கும் யுத்தமும், சுனாமிப் பேரழிவும் (2004 டிசம்பர்) இவர்கால முக்கிய அழுத்தங்களாக உள்ளன. மூன்று மாவட்டங் களிலும், பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்தும் இவர்கள் செயலற்றுப்போயுள்ள இக்கால கட்டத்தில் மக்களின் குறை நிறைகளைக் கேட்டறிந்து குரல் கொடுக்கும் ஆயராக உள்ளார்.



ஆயர் பணியில் 25 ஆண்டுகள் நிறைவுற்று, வெள்ளி விழாக்கண்ட (1983 – 2008) வரப்பிரசாத நாயகர் எமது ஆயர். இவரின் மேய்ப்புப் பணிக்காலத்தில் இம்மறை மாவட்டத்திற்கு இவர் அளித்த பெருங் கொடை எமது மண்ணின் மைந்தனை ஆயராக உருவாக்கியமை. 2008 வைகாசி 24இல் ஆயராக திருப்பொழிவு பெற்ற வந். துணை ஆயர் பொன்னையா யோசப் அவர்கள் இம்மறை மாவட்டத்தின் சொந்த ஆயராவார்.

**திரு. லூக்காஸ் அலெக்ஸாண்டர்.**

- இலங்கையின் முதல் தமிழ் இயேசு சபைக் குரு. கே.முத்தையா என முதலில் பெயருடைய வண.அலோசியஸ் மேரி ஆவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவனின் தோட்டத்தில் நமது பங்கின் கனிகள்

புளியந்தீவுப் பங்கு இறைவனின் தோட்டத்திற்குப் பல சிறப்புமிக்க விசேட பணியாளர்களை அளித்துள்ளது. அவர்கள் சுடர்விடும் நட்சத்திரங்களாகவும் பிரகாசித்துள்ளனர். இந்த நற்கனிகளின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

**1. அருட்தந்தை ஹென்றி பொன்னையா அடிகளார்**

அடிகளார் பிறப்பினால் ஓர் இந்துமதத்தவராவர். இவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பொன்னையாவுக்கும், மட்டக்களப்பு சிங்களவாடியைச் சேர்ந்த செல்லம்மாவுக்கும் மகனாக 1907ஆம் ஆண்டு பங்குனி 27ம் திகதி பிறந்தார். இவருக்கு 6 வயதாகும் போது இவரது தாயாரின் மரண வேளையில் இவரும் இவரது சகோதரரும் அச்சமயம் புளியந்தீவிற் பங்குத் தந்தையாகவிருந்த வண.ஹென்றி வூரி(யே.ச) (REV. HENRY VURY) அடிகளாரின் பராமரிப்பிலிருந்தனர். புனித மரியாள் ஆலயத்தில் வண.கவ்றே (யே.ச) அடிகளாரின் கையினால் திருமுழுக்குப் பெற்றார்.

தமது ஆரம்பக் கல்வியைப் புனித மரியாள் பாடசாலையிற் பெற்றார். கல்முனை புனித மரியாள் பாடசாலையிற் கற்கும் போது அதி.வந்.கஸ்ரன் றொபிசே ஆண்டகையிடம் முதல் நற்கருணை, உறுதிப்பூசுதல் என்பவற்றைப் பெற்றுக் கொண்டார். தமது கல்வியை முடித்துக் கொண்டு சிறிது காலம் ஆசிரியராகப் பணியாற்றினார். அவ்வேளையிற் குருவாக வேண்டுமெனும் தேவ அழைத்தலை உணர்ந்தவராய் அச்சமயம் ஆயராக இருந்த கஸ்ரன் றொபிசே ஆண்டகையை அணுகித் தமது ஆவலை வெளியிட்டார். ஆயரவர்கள் 1928 தை மாதத்திலிருந்து குருமடக் கல்வியைத் தொடங்குமாறு தமது 1927ம் ஆண்டு 11ம் மாதக் கடிதம் மூலம் அனுமதியளித்தார்.

அக்காலப் பகுதியிற் சிறிய குருமடம் இல்லாமையால் அதற்குரிய கல்வியைத் தாமாகவே மேற் கொண்டார். பின்னர் பெரிய குருமடக் கல்வியை கண்டி தேசிய குருமடத்தில் தொடர்ந்தார்.

26.08.1934இல் அதி.வந்.ஆயர் பீற் விக்டோ (O.S.B) ஆண்டகையினால் குருவாகத் திருநிலைப் படுத்தப்பட்டார். அவருடன் மேலும் 10 பேர் குருத்துவப் பட்டம் பெற்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருப்பட்டத்தின் பின்னர் முதன் முதலில் கல்முனை திரு இருதய ஆலயப் பங்கின் பங்குத் தந்தையாவிருந்த அருட்.தந்தை லாசரஸ் அடிகளாருக்கு உதவிப் பங்குத் தந்தையாகக் கடமையாற்றினார். இதனைத் தொடர்ந்து பொத்துவில், அம்பாறை, இங்கினியாகலை, சொறிக்கல்முனை, திருமலை பெரிய கடைப்பங்கு, மூதூர், மட்டக்களப்பு ஆகிய இடங்களில் சேவை புரிந்தார்.

மறைமாவட்டத்தில் அவர் மறைமாவட்ட ஆலோசகராகவும், 1967ஆம் ஆண்டில் முதலாவது மறைக்கல்வி இயக்குநராகவும் பணியாற்றினார்.

இந்தியாவில் தமிழ்ப்பண்டிதர் கல்வியையும், அமெரிக்காவில் மறைக்கல்விப் பயிற்சியையும் பெற்றார். அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற நற்கருணை மாநாட்டில் பங்குபற்றினார். ஜெருசலேம், ஜோர்தான், ஜெத்சமெனி, பாத்திமாபதி, லூர்துபதி, போர்த்துக்கல் , பிரான்ஸ் போன்ற இடங்களுக்கும் பிரயாணம் செய்துள்ளார்.

தமது ஐம்பது ஆண்டு குருத்துவ வாழ்வில் 10 பேரைக் குருக்களாக்கிய பெருமைக்குரியவர். நமது மறைமாவட்டத்தில் 50 வருடக் குருத்துவப்பணியை நிறைவு செய்த முதலாவது குருவும் இவரேயாவர்.

கேம்பிரிஜ் சீனியர் பட்டம், குருமடத்தில் PH.D (HONS), கண்டியில் வேதாகம விற்பன்னர் (P.D) பட்டங்கள், புனித மிக்கேல் கல்லூரியில் ஆங்கில மொழியில் கதிர்காமர் பதக்கம் என்பவற்றையும் அடிகளார் பெற்றிருந்தார். நமது மறைமாவட்டத்தில் PH.D பட்டம் பெற்ற முதலாவது மறைமாவட்ட குருவானவர் இவரேயாவர். ஒரு தலை சிறந்த மாதா பக்தரான அடிகளார் 1987ஆம் ஆண்டு மார்கழி 23ஆம் திகதி இறைபதம் எய்தினார்.

**2. அருட்தந்தை நோபட் ஒக்கர்ஸ் அடிகளார்.**

அருட் தந்தையவர்கள் புளியந்தீவிலுள்ள பறங்கியர் சமூகத்தைச் சேர்ந்த பிரபல குடும்பமொன்றில் 1925ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5ம் திகதி பிறந்தார். இக்குடும்பம் இரு அருட் தந்தையார்களை திருச்சபைக்களித்த குடும்பமாகும். அடிகளாரின் தந்தையார் சிசில் ஒக்கர்ஸ், தாயார் டொறதியா ஒக்கர்ஸ் (DOROTHIA OCKERSZ)

அடிகளார் தமது கல்வியை புனித மரியநாயகி பாடசாலையிலும், தொடர்ந்து புனித மிக்கேல் கல்லூரியிலும் பெற்றுக் கொண்டார்.

1946ஆம் ஆண்டு தமிழ் நாட்டின் திருச்சி புனித பவுல் குருமடத்தில் இணைந்தார். 1953 ஆம் ஆண்டு மார்ச் 25ம் திகதி குருவாகத் திரு நிலைப்படுத்தப்பட்டு அவ்வருடம் ஏப்ரல் 12ம் திகதி தாண்டவன்வெளிப் பங்கின் உதவிப் பங்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையாக நியமிக்கப்பட்டார். தொடர்ந்து புளியந்தீவு, தன்னாமுனை, கல்லாறு, புல்லுமலை, இருதயபுரம், திருமலை ஆகிய இடங்களில் பங்குத் தந்தையாகவிருந்தார். ஆயித்தியமலைப் பங்கின் பரிபாலகராகவும் பணிபுரிந்தார்.

இவரது கணீரென்ற குரல்வளமும், சிறந்த தமிழ்வளமும் இவரை ஒரு தலைசிறந்த பிரசங்கியாக, பாடகராக, கலைஞராக விளங்க வைத்தன. தமிழ்மொழியில் வழிபாடுகள் செய்யும் வழக்கம் வந்ததும் பல பங்குகளில் பாடகர் குழுக்களை அமைத்தார். பாடுவோருக்கு 'ஓர்கன்' வாத்தியத்தை இசைக்கவும் கற்பித்தார்.

அச் சமயங்களில் சுரூபங்களைக் கொண்டு நடாத்திய பாஸ்கா நிகழ்ச்சிகளை விடுத்து மேடை நாடகங்களைத் தயாரித்து திருமலை பெரிய கடைப் பங்கிலும், தன்னாமுனையிலும் மேடையேற்றி வெற்றி கண்டார்.

மட்டக்களப்பின் கலைப் பொக்கிஷமான நாட்டுக்கூத்தை கிறிஸ்தவ கதைகளூடே பிரபல்யப்படுத்திய கலைவாணர் இவர்.

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் தீர்மானங்களையடுத்து மறைமாவட்டங்களிற் சமூகத் தொடர்பு நிலையங்கள் அமைக்கப்பட்டன. நமது மறைவாட்டத்தில் 1967இல் சமூகத் தொடர்பு நிலையத்தின் முதலாவது இயக்குநராக நியமிக்கப்பட்டார். பல இளைஞர்களைக் கொண்டு வானொலி நாடகங்களைக் தயாரித்து இலங்கை வானொலியில் ஒலிபரப்பச் செய்தார்.

பங்குகளிற் பணியாற்றும் காலத்தில் பங்கு மக்களை ஹினிதுமை, வகக்கோட்டை போன்ற புனிதத் தலங்களுக்கு யாத்திரையாக அழைத்துச் சென்றார். பெரிய புல்லுமலை பங்கிலிருந்த போது இளைஞர்களை சமூகப்பணிகளில் ஈடுபடுத்தியது மல்லாமல் பட்டுப் பூச்சி வளர்ப்புத் தொழிலில் ஈடுபடுத்தி வருமானத்தைப் பெற்றுக் கொடுத்தார்.
ஆயரவர்களின் ஆலோசகராக மறைமாவட்ட பங்குமேய்ப்புப் பணிச்சபை செயலாளர், மறைமாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர், திருமலை, கல்முனை மறைக் கோட்டங்களின் முதல்வர், மறைமாவட்ட குருமுதல்வர் எனப் பல பணிகளை சிறப்புற மேற்கொண்டு வெற்றியும் கண்டார்.

தமது இறுதிக்காலத்தில் மட்டுநகர் வயோதிபர் இல்லத்தில் இளைப்பாறி 13.11.1999 இல் இறைபதமடைந்தார்.

**3. அருட்தந்தை M.C. பெர்னாண்டோ (சந்திரா) அடிகளார்.**

"சந்திரா பாதர்" என அன்போடு அழைக்கப்பட்ட மாஷல் கிறிஸ்ரி பெர்னாண்டோ அடிகளார் புளியந்தீவில் கிறிஸ்ரி பிலிப் பெர்னாண்டோவுக்கும் இக்னேசியா பெர்னாண்டோவுக்கும் மகனாக 1941 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 09ம் திகதி பிறந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டுக் குழந்தைகளைக் கொண்ட குடும்பத்தில் இவர் இரண்டாமவராவர். தமது ஆரம்பக் கல்வியை அவர் புனித மரியநாயகி பாடசாலையிற் பெற்றார்.

தேவ அழைத்தலைப் பின் தொடர்ந்து 1963 ஆம் ஆண்டில் இந்தியாவின் பெங்களூரில் புனிதவளனார் குருத்துவக் கல்லூரியில் தத்துவசாத்திரத்தையும் 1968 ஆம் ஆண்டில் சென்னையிலுள்ள திரு இருதய குருத்துவக் கல்லூரியில் இறையியற் கல்வியையும் மேற் கொண்டார். 21.09.1972இல் அதிவந்தனைக்குரிய ஆயர். இக்னேசியஸ் கிளெனி ஆண்டகையவர்களால் குருவாகத் திருநிலைப் படுத்தப்பட்டு அன்றிலிருந்து திருமலை புனித மரியாள் பேராலய உதவிப் பங்குத் தந்தையாகக் கடமையாற்றினார்.

01.09.1976 தொடக்கம் சின்னக்கடை புனித குவாடலூப்பே மாதா ஆலயப் பங்குக் குருவாகவும், 01.01.1978 தொடக்கம் மறைமாவட்ட நிதிப் பொறுப்பாளராகவும் பணியாற்றினார். 1979 ஆம் ஆண்டில் சிறிது காலம் கல்லாறு புனித அருளானந்தர் ஆலயப் பங்கில் பங்கு தந்தையாகவுமிருந்தார்.

1984 ஆம் ஆண்டு தொடக்கம் 06.06.1988 இல் அகாலமரணமடையும் வரை புனித மரியாள் இணைப்பேராலயப் பங்குத் தந்தையாகக் கடமையாற்றினார்.

1978 ஆம் ஆண்டு நிகழ்ந்த புயலின் காரணமாகச் சிதைந்த பல ஆலயங்களையும் குருமனைகளையும் செப்பனிட்டார்.

புளியந்தீவிற் பங்குத் தந்தையாவிருந்த போது புனித மரியன்னை சேவாசங் கத்தைப் புனரமைத்து அதற்கென ஒரு புதிய யாப்பையும் உருவாக்கினார். இனப்பிரச்சினை காரணமாக பயங்கர சூழ்நிலை நிலவிய அக் கால கட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டப் பிரசைகள் குழுத் தலைவராகவும் செயற்பட்டு மக்களுக்கு மிகுந்த ஆறுதலாகவும் இக்கட்டான தருணங்களில் உதவியாகவு மிருந்தார். இச் செயற்பாட்டினால் பாதிக்கப்பட்ட சில நாசகாரரால் அவர் தமது குருமனை யில் வைத்து 1988 ஆம் ஆண்டு யூன் 6ம் நாள் சுட்டுக் கொல்லப்பட்டார். மக்களுக்காகவே தன் இன்னுயிரை ஈந்த இந்த மகானின் பூதவுடல் மக்களது பெருவிருப்பின் பேரில் இணைப்பேராலய வளவினுள் நல்லடக்கம் செய்யப்பட்டுக் கௌரவிக்கப் பட்டது.

**4. அருட் தந்தை ஜோசப் றெக்ஸ் ஒக்கர்ஸ் (இ.ச)**

அருட்தந்தை நோபட் ஒக்கர்ஸ் அடிகளாரின் சகோதரரான இவர் 1933 ஆகஸ்ட் 12ம் திகதி பிறந்தார். 1955 ஜுன் 20 ஆம் திகதி இயேசு சபையில் இணைந்து கொண்டு 1969 ஜுலை 31 ஆம் நாள் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். 1975 பெப்ரவரி 02 ஆம் நாள் தமது இறுதி வாக்குத்தத்தத்தைக் கொடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் அமெரிக்காவில் அணு பௌதீகவியல் (NUCLEAR PHYSICS) துறையில் பட்டம் பெற்றவராவார். தற்போது புனித மிக்கேல் கல்லூரியில் வசித்து வருகின்றார்.

**5. அருட் தந்தை. J.F.இராஜேந்திரம் (இ.ச)**

புளியந்தீவைச் சேர்ந்த K.L.இராஜேந்திரம் ஆசிரியரின் புதல்வரான அடிகளார் 1934 நவம்பர் 11 ஆம் திகதி பிறந்தார். 1950 ஆம் ஆண்டு வரை புனித மிக்கேல் கல்லூரியில் கற்றார். இந்தியாவிலும், அமெரிக்காவிலும் தமது பட்டப் படிப்புகளைப் பூர்த்தி செய்தார். 1963 ஜுன் 12ம் திகதி இயேசு சபைக் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். 1975 ஆம் ஆண்டு தொடக்கம் பேராதனை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகங்களில் சிரேஷ்ட விரிவுரையாளராகவும் பேராசிரியராகவும் பதவி வகித்தார். 1995 தொடக்கம் 1998 வரை கிழக்குப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக விளங்கினார். தற்போது பல்கலைக் கழகத்துடன் தொடர்புபட்ட பல பதவிகளை வகித்து வருகின்றார். மட்டக்களப்பு கிழக்குப் பல்கலைக்கழகத்தில் வைத்திய பீடத்தை உருவாக்குவதில் ஆரம்பம் முதல் முன் நின்று உழைத்தவர். இன்றும் அதன் வளர்ச்சியில் அயராது உழைத்துக்கொண்டும், பல்கலைக்கழக பேரவை (COUNCIL) உறுப்பினராகவும் விளங்குகின்றார்.

**6. அருட்தந்தை. ஜோசப்மேரி (இ.ச)**

புளியந்தீவில் ஜோண் அருணாசலம், பாக்கியம் தம்பதிகளுக்கு மக்களாக இவரும், இவரது சகோதரர் திரு. அல்போன்ஸ் மேரி அவர்களும் 1936 ஜனவரி 04 இல் பிறந்தனர். அடிகளார் தமது ஆரம்பக் கல்வியைப் புனித மரியநாயகி பாடசாலையிலும்,புனித மிக்கேல் கல்லூரியிலும் நிறைவு செய்தார். 1954 ஜுன் 20 இல் இயேசு சபையில் இணைந்து இந்தியாவில் குருத்துவக் கல்வியைப் பயின்றார். தமிழ், ஆங்கிலம்,சமஸ்கிருதம், இலத்தீன் ஆகிய மொழிகளை நன்கறிந்தார். 1956 ஜுன் 21 இல் துறவற வாழ்வின் முதல் உறுதிமொழியைக் கொடுத்தார்.

1968 மார்ச் 27 இல் ஆயர் இக்னேசியஸ் கிளெனி ஆண்டகையவர்களால் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். பின்னர் சில மாதங்கள் திருமலை புனித வளனார் கல்லூரியிலும், சீனக்குடாவிலும் பணியாற்றினார். தாழங்குடா, புளியடிக்குடா ஆகிய பங்குகளிலும் பணிபுரிந்துள்ளார்.

கல்லடியில் புனித வேளாங்கண்ணி அன்னை ஆலயம், பாலமீன்மடுவில் குழந்தை இயேசு ஆலயம் என்பன இவரால் தோற்றுவிக்கப்பட்ட ஆலயங்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிகளார் பங்கின் பணிகளுடன் சமூக, கலைத்துறைகளிலும் சிறப்பான சேவைகளை ஆற்றுகின்றார். ''நீ எதிர் கொண்டதேன்'' எனும் நமதாண்டவரின் வரலாறு கூறும் நாட்டிய நாடகத்தை முதன் முதலில் மட்டக்களப்பில் மேடையேற்றி பின்னர் வடக்கு, கிழக்கு, மலையகப் பிரதேசங்களிலும் மேடையேற்றினார்.

திருமலை-மட்டக்களப்பு மறை மாவட்ட நூற்றாண்டு நினைவாக வெளியிடப்பட்ட ஒரு கத்தோலிக்க பத்திரிகைக்கு ''வெட்டாப்பு' எனும் மண்வாசனை நிரம்பிய பெயரைச் சூட்டியவரும் இவரே.

'நீ எதிர் கொண்டதேன்' நாடகத்துடன் நின்றுவிடாமல் 'அந்த 36 மணி நேரங்கள் 'முத்தமிட்டோ காட்டிக் கொடுத்தாய்' ஆகிய நாடகங்களையும் அரங்கேற்றினார். 2004 ஜூன் 20 ஆம் திகதி தமது குருத்துவத்தின் பொன்விழாவைக் கொண்டாடினார். அடிகளார் தறபோது டச்பார் புனித இன்னாசியார் ஆலயப் பங்குத் தந்தையாக பணிபுரிகின்றார்.

**7. அருட்தந்தை அல்போன்ஸ் தியாகராஜா அடிகளார்**

புளியந்தீவில் வேலுப்பிள்ளை தியாகராஜா, இராசம்மா தியாகராஜா ஆகியோரின் அன்புப் புதல்வராகிய இவர் 1937 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆம் நாள் பிறந்தார். தமது கல்வியைப் புனித மரியநாயகி பாடசாலையிலும் பின்னர் புனித மிக்கேல் கல்லூரியிலும் பெற்றுக் கொண்டார். புனித மிக்கேல் கல்லூரியில் கற்கும் போது கல்லூரியின் சிரேஷ்ட கிறிக்கற் அணியின் தலைவராகவுமிருந்தார். தமது கல்வியை முடித்துக் கொண்ட பின் இலங்கை புகையிரதத் திணைக்களத்தில் இயந்திரவியல் முகாரியாக (MECHANICAL FOREMAN) கடமையாற்றினார். இரண்டு வருடகாலமாக அரசாங்க அலுவலராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கும் போது தேவ அழைத்தலை உணர்ந்தவராய் கண்டி குருமடத்தில் இணைந்தார். பின்னர் இந்தியாவின் புனேயிலும் கல்வி மேற் கொண்டார். 1969 ஏப்ரல் 08ம் நாள் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். தமது குருப்பட்டத்தின் பின்னர் புல்லுமலை, ஆயித்தியமலை, தன்னாமுனை ஆகிய பங்குகளில் கடமையாற்றினார். தன்னாமுனையில் பணியாற்றும் போது நோய்வாய்ப்பட்டு 1983 மார்ச் 09ஆம் நாள் இறைபதமடைந்தார். 1983 மார்ச் 11ம் நாள் மட்டக்களப்பு ஆலையடிச்சோலை சேமக்காலையில் அவரது பூதவுடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

**8. அருட்தந்தை. கிறிஸ்ற்லின் P. இராஜேந்திரம் (இ.ச)**

அருட்தந்தை G.F.இராஜேந்திரம் அடிகளாரின் இளைய சகோதரராகிய இவர் 1943 ஜனவரி 03 ஆம் திகதி பிறந்தார். புனித மிக்கேல் கல்லூரியில் கல்விகற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தாலி, இந்தியா, அமெரிக்கா ஆகிய நாடுகளில் தமது பட்டப்படிப்புகளை மேற் கொண்டார். தொடர்பாடல் துறையில் தமது கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக் கொண்ட அடிகளார் 1998 ஆம் ஆண்டிலிருந்து தொடர்பாடற் துறையில் சிரேஷ்ட விரிவுரையாளராக கிழக்குப் பல்கலைக் கழக திருகோணமலை வளாகத்தில் பணிபுரிந்ததுடன் அவ்வளாகத்தின் இயக்குநராகவும் பதவி வகித்தார்.

1960 ஜுன் மாதம் இயேசு சபையில் இணைந்து 1973 ஜுன் 30ஆம் நாள் ஆயர் இக்னேசியஸ் கிளெனி ஆண்டகையவர்களால் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

**9. அருட்தந்தை இக்னேசியஸ் சந்திரா அடிகளார்**

இவர் புளியந்தீவில் இன்னாசி ஜோசப், செபமாலை தம்பதிகளின் புதல்வராக 1956ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் திகதி பிறந்தார். மட்டக்களப்பு புனித மரியநாயகி பாடசாலையிலும் புனித மிக்கேல் கல்லூரியிலும் தமது கல்வியைப் பெற்றுக் கொண்டார். யாழ்ப்பாணத்தின் கொழும்புத்துறை, கண்டி ஆகிய குருமடங்களில் குருத்துவக் கல்வியை நிறைவு செய்து 1992 செப்ரம்பர் 21ம் நாள் குருப்பட்டம் பெற்றார். முதன்முதலில் திருகோணமலை பேராலயத்தின் உதவிப் பங்குத் தந்தையாக நியமனம் பெற்றார். பின்னர் மூதூர், தாழங்குடா, அக்கரைப்பற்று, ஆயித்தியமலை ஆகிய பணித்தளங்களில் சேவையாற்றினார். கேரளா தியான நிலையத்தில் ஒன்றரை வருடங்களைச் செலவிட்டார்.

ஆயித்தியமலையில் பங்குத் தந்தையாகக் கடமையாற்றும் போது 2000 ஆம் ஆண்டு வைகாசி மாதத்தில் தமது பராமரிப்பிலிருந்த பிள்ளைகளுடன் மட்டுநகர் வந்தார். அச் சமயம் அங்கு இடம் பெற்ற பாரிய குண்டுவெடிப்பில் அகப்பட்டுப் படுகாயங்களுடன் உயிர்தப்பினார். எனினும் அவர் அழைத்துச் சென்ற பிள்ளைகளுள் 10 பேர் உயிரிழந்தனர். மட்டுநகர் சோகத்திலாழ்ந்தது. அடிகளார் தற்போது வந்தாறுமூலையில் பங்குத்தந்தையாகக் கடமையாற்றுகின்றார்.

**10. அருட் தந்தை சிவராஜா அகில்ராஜ் (இ.ச)**

புளியந்தீவில் வேல்முருகு சிவராஜா, கிறேஸ் அருள்சீலி சிவராஜா தம்பதிகளின் மகனான இவர் 1972ஆம் ஆண்டு பெப்ரவரி 14ஆம் திகதி பிறந்தார். 1978 முதல் 1991 வரை தமது கல்வியைப் புனித மரியநாயகி பாடசாலையிலும், புனித மிக்கேல் கல்லூரியிலும் நிறைவு செய்தார். 1992 ஜுன் 29 ஆம் திகதி இயேசு சபையில் இணைந்து கொண்டார். பேராதனைப் பல்கலைக் கழகத்தில் வெளிவாரிப் பட்டப்படிப்பை மேற் கொண்டு இளங்கலைமாணிப் பட்டத்தைப் பெற்றார். பிலிப்பைன்ஸில் இறையியல் முதுமாணிப்பட்டம் பெற்றார். 2006 ஏப்ரல் 29இல் திருகோணமலை புனிதமரியாள் பேராலயத்தில் குருவாகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநிலைப்படுத்தப் பட்டார். தற்போது கனடாவில் திருச்சபைச் சட்டம் பற்றிய கல்வியில் ஈடுபட்டிருக் கின்றார்.

**11. அருட்தந்தை. P. ரமேஸ் கிறிஸ்ரி தயாளன் அடிகளார்**

இவர் 1974ஆம் ஆண்டு ஜுன் மாதம் 2ம் திகதி புளியந்தீவில் சூசைப்பிள்ளை பங்கிராஸ், றோசறி பாலசிங்கம் தம்பதிகளின் மூத்த புதல்வராகப் பிறந்தார். ஏழாம் வகுப்பில் கற்கும் போதே மட்டக்களப்பு புனிதவளனார் சிறிய குருமடத்தில் இணைந்தார். புனித மிக்கேல் கல்லூரியில் தமது கல்வியை நிறைவு செய்தார். தொடர்ந்து இந்தியாவிலும், கண்டியிலும் இறையியல், மெய்யியல் கற்கைகளைப் பூர்த்தி செய்தார். 2002ம் ஆண்டு ஆகஸ்ட் 1ம் திகதி குருப்பட்டம் பெற்றார். தேற்றாத்தீவு, திருகோணமலை பேராலயப் பங்குகளில் பணிசெய்து தற்போது உப்புவெளி இறை இரக்கக் கோவில் பங்குத் தந்தையாகவுள்ளார். சிறந்த பேச்சாற்றலும், எழுத்தாற்றலும் கொண்ட இவர் தந்தையைப்போலவே சிறந்த ஓவியருமாவர்.

**12. அருட்தந்தை.ஜோன் பேர்க்மன்ஸ் செல்வராஜா அடிகளார்**

அருட்தந்தை செல்வராஜா அடிகளார் சந்தியாப்பிள்ளை சவரிமுத்து, மரியதிரேசா அருமையம்மா ஆகியோரின் புதல்வனாக 1959 நவம்பர் 26 இல் பிறந்தார். திருகோணமலை புனிதவளனார் கல்லூரியில் ஆரம்பக் கல்வியையும், புனிதமிக்கேல் கல்லூரியில் உயர்தரக் கல்வியையும் நிறைவு செய்தார். 1977இல் திருமலை புனித வளனார் சிறிய குருமடத்திலும் ஒரு வருடத்தின் பின் திருச்சி தூய சின்னப்பர் குருத்துவக் கல்லூரியிலும் கற்றார். 1986 மே மாதம் 12ம் நாள் குருப்பட்டம் பெற்றார்.
திருகோணமலை சின்னக்கடை, உவர்மலை ஆகிய பங்குகளில் கடமையாற்றியபின் சொறிக்கல்முனைப் பங்கிற் கடமையாற்ற வந்தார். 1990 ஆம் ஆண்டில் இனக்கலவரம் தீவிரமடைந்ததால் சொறிக்கல்முனைப் பங்கு மக்கள் கல்முனைக்கும், வேறிடங்களுக்கும் இடம் பெயர்ந்தனர். இந்நிலையில் தமது பங்கினைத் தரிசித்து பங்கில் எஞ்சியிருந்த மக்களுக்கு ஆறுதலளிக்கவென உணவுப் பண்டங்களுடன் கல்முனையிலிருந்து 1990 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 11 ஆம் திகதி சொறிக்கல்முனைக்குப் பயணித்த அடிகளார் இடையில் கயவர் கையிலகப்பட்டுத் தமது இன்னுயிரைப் பறிகொடுத்தார். இறையன்பிற்காகவும், தமது மக்களின் நலனுக்காகவும் உயிர்நீத்த இந்த இளம் குருவை மட்டுநகர் மறக்காது.

**13. அருட்தந்தை இயூஜின் ஹேபயர் (இ.ச)**

நமது இலங்கை மண்ணைச் சாராதவராயினும் நமது மக்களுக்காகத் தமது வாழ்வையும் இறுதியில் தம் உயிரையும் அர்ப்பணித்த மகான் இவராவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிகளார் 1923ஆம் ஆண்டில் அமெரிக்காவில் ஒரு செல்வந்தக் குடும்பத்தில் பிறந்தார். 1941 இல் துறவற வாழ்வில் நுழைந்து இயேசு சபையில் இணைந்து கொண்டார். 1948 இல் இலங்கைக்கு வந்தார். திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரியில் பல வருடங்கள் பணியாற்றினார். அக் காலத்தில் உதைபந்தாட்டம், கூடைப்பந்தாட்டம் ஆகிய விளையாட்டுத் துறைகளில் கல்லூரி முன்னேறச் செய்தார். பின்னர் மட்டக்களப்பிற்கு வந்து புனித மிக்கேல் கல்லூரியில் கடமையாற்றினார். மட்டக்களப்பின் கிழக்கிலங்கை தொழில்நுட்ப தாபனத்தில் மூலம் (EASTERN TECHNICAL INSTITUTE – ETI) இளைஞர்களுக்கு தொழில்நுட்பப் பயிற்சி அளித்ததன் மூலம் அவர்கள் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் தொழில்வாய்ப்பைக் பெறச் செய்தார். இனவன்முறை நிலவிய காலங்களில் அப்பாவி மக்கள் கொலை செய்யப்படுவதற்கும், துன்புறுத்தப்படுவதற்கு மெதிராக குரலெழுப்பினார்.

வலைப்பந்தாட்டத்தில் வல்லவரான அடிகளார் புனித மிக்கேல் கல்லூரி மாணவர்களை அத்துறையில் திறமை பெறச் செய்ததுடன் அகில இலங்கை ரீதியில் நடை பெற்ற பல போட்டிகளில் அவர்களை வெற்றி பெறவும் செய்தார். இவரைப்போலவே இவரால் உபயோகிக்கப்பட்ட தடை(BRAKE) இல்லாத துவிவண்டியும் மட்டுநகரில் பிரசித்தி பெற்றது.

1990ஆம் ஆண்டின் இனக் கலவர காலத்தில் வாழைச்சேனையிலிருந்து மட்டக்களப்பு நோக்கி ஓர் இளைஞருடன் மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்த போது காடையர்களால் தாக்கப்பட்டு, அவ்விளைஞரைக் காப்பாற்றும் முயற்சியில் தம் இன்னுயிரை இழந்தார்.

இவரது நினைவாக கிழக்கிலங்கைத் தொழில்நுட்ப நிறுவன வளாகத்தில் ஒரு நினைவுச் சின்னம் நிறுவப்பட்டுள்ளது .

**அருட் சகோதரிகள்**

**1. அருட் சகோதரி மாறிலூயிஸ்** A.C

Rev. Sr. Marie Louise

| | |
|---|---|
| பெற்றோர் | A.P. ஜோண்பிள்ளை, மேரி செபமாலைமுத்து |
| பிறந்த திகதி | 23.12.1934 |
| துறவற நுழைவு | 12.12.1954 |
| முதல் உறுதி மொழி | 09.07.1957 |
| இறுதி உறுதி மொழி | 19.05.1963 |
| பணியாற்றிய இடங்கள் | சிலாபம், யாழ்ப்பாணத்திற் பல இடங்கள், திருகோணமலை, கொழும்பு, மன்னார், பதுளை, இந்தியா ஆசிரியப் பணியைத் தவிர்ந்த விசேட சேவைகளிலும் ஈடுபட்டுள்ளார். |
| இயற் பெயர் | மார்க்கரெட் மேரி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. அருட் சகோதரி எமிலி (ஏழைகளின் சிறிய சகோதரிகள்)
Rev. Sr. Emily

| | |
|---|---|
| பெற்றோர் | Donald Felthmann, Ethel Felthmann |
| பிறந்த திகதி | 29.03.1942 |
| துறவற நுழைவு | 1958 |
| முதல் உறுதி மொழி | 24.05.1966 |
| இறுதி உறுதி மொழி | 24.05.1966 |
| பணியாற்றிய இடங்கள் | பிரான்ஸில் பல இடங்கள், கொழும்பில் இரு வருடங்கள், இத்தாலியில் பத்து வருடப் பணி |
| இயற் பெயர் | எமலின் பெல்த்மன் |

2002 ஒக்ரோபர் 18இல் இறையடி சேர்ந்தார். 2002 ஒக்ரோபர் 12 இல் இத்தாலியில் ரியூறின் நகரில் நல்லடக்கம் செய்யப்பட்டார்.

3. அருட் சகோதரி மாறி தெரேஸ் நொயலின் A.C
Rev. Sr.Marie Therese Noeline

| | |
|---|---|
| பெற்றோர் | Rubin de Lima, Anala De Lima |
| பிறந்த திகதி | 09.05.1948 |
| துறவற நுழைவு | 06.01.1969 |
| முதல் உறுதி மொழி | 15.05.1971 |
| இறுதி உறுதி மொழி | 09.05.1977 |
| பணியாற்றிய இடங்கள் | சென்னை,யாழ்ப்பாணம், கண்டி, மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார் |

4. அருட் சகோதரி கமலினி A.C
Rev. Sr.Camalini

| | |
|---|---|
| பெற்றோர் | பஸ்தியான் கொண்ஸ்ரன்றைன் அன்ரனி, அந்தோனிப்பிள்ளைசெபமாலைமேரி |
| பிறந்த திகதி | |
| துறவற நுழைவு | 19.01.1986 |
| முதல் உறுதி மொழி | 07.01.1989 |
| இறுதி உறுதி மொழி | 30.04.1994 |
| பணியாற்றிய இடங்கள் | பொரளை,சிலாபம்,லுணுகலை,பொல்காவல, பாகிஸ்தான் |
| இயற் பெயர் | கமிலா வயலட் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. அருட் சகோதரி பெட்றெனில்லா ஜோசபின்
Rev.Sr. Patronila Josephine

| | |
|---|---|
| பெற்றோர் | ஞானப்பிரகாசம் ஆசைத்துரை, எலிசபெத் |
| பிறந்த திகதி | 01.12.1949 |
| துறவற நுழைவு | 31.05.1969 |
| முதல் உறுதி மொழி | 24.05.1973 |
| இறுதி உறுதி மொழி | 01.10.1978 |
| பணியாற்றிய இடங்கள் | 08.01.1981 தொடக்கம் மட்டக்களப்பு வயோதிப இல்லம் 14.10.1989 தொடக்கம் இன்று வரை பிரான்ஸ் |

6. அருட் சகோதரி ஸ்கொலஸ்ரிக்கா போஜியா

| | |
|---|---|
| பெற்றோர் | பிரான்சிஸ் போஜியா மனுவல், றீற்றா |
| பிறந்த திகதி | 06.09.1962 |
| குழு வாழ்வு நுழைவு | 1982 |
| துறவற நுழைவு | 09.02.1988(Benedictine Sisters of Grace Compassion) |
| முதல் உறுதி மொழி | 05.10.1992 |
| இறுதி உறுதி மொழி | 22.08.1997 |
| பணியாற்றிய இடங்கள் | ஜா-எலவிலுள்ள St.Joan's Convent, இல் முதியோரைப் பராமரிக்கும் பணியில் கடந்த 15 வருடங்களாகத் தம்மை அர்ப்பணித்துள்ளார். |

7. அருட் சகோதரி கிறிஸ்ரபெல் றஞ்சனி கிறகரி
Rev.Sr.Christobel Ranjani Gregory

| | |
|---|---|
| பெற்றோர் | சுவக்கீன் ஞானப்பிரகாசம் கிறகரி, இன்னாசிமுத்து லூர்த்தம்மா |
| பிறந்த திகதி | 13.04.1968 |
| துறவற நுழைவு | 23.06.1992 |
| முதல் உறுதி மொழி | 02.07.1994 |
| இறுதி உறுதி மொழி | 10.05.2000 |
| பணியாற்றிய இடங்கள் | கதிர்காமம், தெரணியகல, கண்டி, தேற்றாத்தீவு, ஹற்றன், பொரளை, மொரட்டுவைஆசிரியை - Our Lady of Victory Convent,Moratuwa |

8 அருட் சகோதரி மாறி கிறிஸ்ரலின் உஷாநந்தினி (ஏழைகளின் சிறிய சகோதரிகள்)
Rev.Sr.Marie Christaline Ushananthini



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோர் சந்தியாப்பிள்ளை சவரிமுத்து, மரியதிரேசா அருமையம்மா
பிறந்த திகதி 14.01.1969
துறவற நுழைவு 08.09.1992
பணியாற்றிய இடங்கள் இத்தாலி, பிரான்ஸ், நைஜீரியா, ஆகிய நாடுகளில் பணியாற்றி தற்போது கொழும்பு முதியோர் இல்லத்தில் சேவை புரிகின்றார்.

9 அருட் சகோதரி மேரி லூட்ஸ் (ஏழைகளின் சிறிய சகோதரிகள்)
Rev.Sr. Mary Lourdes

பெற்றோர் சவரிமுத்து இருதயம், கிறேஸ்
பிறந்த திகதி 01.04.1957
துறவற நுழைவு 02.02.1982
முதல் உறுதி மொழி 19.05.1985 (பெங்களூர்)
இறுதி உறுதி மொழி 02.09.1990 (பிரான்சு)
பணியாற்றிய இடங்கள் மட்டக்களப்பு முதியோர் இல்லம், கொழும்பு முதியோர் இல்லம், அவுஸ்திரேலியா
இயற் பெயர் லூட்ஸ் மேரி சசிகலா

10. அருட் சகோதரி மேரி லொறீலியா (நல்லாயன் சபை)
Rev.Sr.Mary Lourrelia

பெற்றோர் இளையதம்பி, அன்னம்மா
பிறந்த திகதி 01.02.1939
துறவற நுழைவு 01.05.1952
முதல் உறுதி மொழி 07.07.1955
இறுதி உறுதி மொழி 21.05.1961
இறப்பு 21.05.2001
பணியாற்றிய இடங்கள் அச்சுவேலி, திருகோணமலை, கொள்ளுப்பிட்டி, மட்டக்களப்பு, கல்முனை
இயற் பெயர் திரேஸ்

தொகுப்பு: திரு. எஸ்.மோசஸ் டானியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்கில் இயங்கும்

# பக்திச் சபைகளும் ஏனைய நிறுவனங்களும்

**புளியந்தீவு பங்கு மேய்ப்புப்பணிச் சபை**

1928ஆம் ஆண்டிலிருந்து பங்குச் சபை எனும் அமைப்பே செயற்பட்டது.

பங்குச் சபையின் தலைவராக பொது நிலையினரில் ஒருவர் மக்களால் நியமிக்கப்பட்டார். பங்குத்தந்தை சபையின் இயக்குநராக செயல்பட்டார். இச்சபையானது மட்டக்களப்பு புளியந்தீவு , தாண்டவன்வெளி, புளியடிக்குடா, கல்லாறு, கல்முனை, திருமலை பெரிய கடை , சின்னக்கடை, நிலாவெளி ஆகிய பங்குகளில் நன்கு செயற்பட்டது. இவைகள் யாவற்றையும் ஒன்றிணைத்து மறை மாவட்ட ஒன்றியமென அழைக்கப்பட்டது. தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோர் பொது நிலையினரிலிருந்தே தெரிவாகினர். பங்குத் தந்தையர்களுள் ஒருவர் மறைமாவட்ட இயக்குனராக ஆயரால் நியமனம் பெற்றிருந்தார். இந்நிலை 1964 வரை தொடர்ந்தது.

1964இல் 2ம் வத்திக்கான் சங்கத்தின் பின் அதிவந்தனைக்குரிய ஆயர் இக்னேசியஸ் கிளெனி ஆண்டகை காலத்தில் அவரின் வழிகாட்டலில் இரு சபைகள் நிறுவப்பட்டன.

1. பங்கு மேய்ப்புப் பணிச்சபை (PARISH PASTORAL COUNCIL)
2. மறைமாவட்ட மேய்ப்புப் பணிச்சபை (DIOCESAN PASTORAL COUNCIL)

பங்கு மேய்ப்புப் பணிச்சபைக்கு பங்குத்தந்தையே தலைவராக இயங்கினார். இவ்விரு சபைகளும் திருச்சபையை பிரதிநிதித்துவப்படுத்தும் நிறுவனங்களாக இருந்தன. மறைமாவட்ட மேய்ப்புப் பணிச்சபையின் இயக்குநராக துணை ஆயர் தியோகுப்பிள்ளை அவர்களும், மட்டக்களப்பு, கல்முனை மறைமாவட்ட பங்குமேய்ப்புப் பணிச்சபையின் இயக்குனராக அருட்பணி ஜேக்கப் அலெக்சாண்டர் அடிகளாரும் நியமிக்கப்பட்டனர்.

1968 ஐப்பசி மாதம் மறைமாவட்ட பங்கு மேய்ப்புப் பணிச்சபையின் முதல் கூட்டம் அதி.வந்.ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகை தலைமையில் புனித மிக்கேல் கல்லூரியில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் இரு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. மறைமாவட்டத்திற்கான சஞ்சிகை வெளியீடு. இச் சஞ்சிகைக்கு "தொண்டன்" என பெயர் சூட்டப்பட்டது. சஞ்சிகையின் முதல் ஆசிரியராக திரு.அந்தோனிப் பிள்ளை அவர்கள் சேவையாற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. எல்லாப் பங்குகளிலும் பங்கு மேய்ப்புப்பணிச்சபை உருவாக்கப்பட வேண்டும். இத்தீர்மானத்திற் கமைவாகவே எல்லாப் பங்குகளிலும் பங்கு மேய்ப்புப்பணிச் சபை உருவாக்கப்பட்டது. இவ்வாறு புளியந்தீவுப் பங்கில் முதல் முதல் ஆரம்பிக்கப்பட்ட பங்கு மேய்ப்புப்பணிச் சபையானது இந்நாள்வரை சிறப்பான முறையில் சேவையாற்றி வருகிறது. பங்கு மேய்ப்புப் பணிச்சபையின் எல்லை புளியந்தீவை உள்ளடக்கியதாக 5 வட்டாரங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. பங்குச் சபையின் பணிக்காலம் ஒரு வருடம். பங்குத்தந்தையை அதன் தலைவராகக் கொண்டு பங்கு சபை அங்கத்தினரிடையே இதற்கு தெரிவு செய்யப்படும் செயலாளர், பொருளாளர் ஆகிய 14 அங்கத்தவரை உள்ளடக்கிய நிர்வாக சபையும் பணியாற்றுகிறது.

நோக்கம்: திருச்சபையின் பணியாகிய போதித்தல், புனிதப்படுத்தல், வழிநடத்துதல் ஆகியவை திறம்பட இயங்குவதற்கு ஆயர், குருக்கள், துறவறத்தோர், பொது நிலையினர் இணைந்து ஆலோசனை வழங்கலும், முழுமையாக ஒத்துழைத்தலும்.

பங்குத்தந்தையுடன் இணைந்து இயேசுவின் நற்செய்தி மதிப்பீடுகளுக்கு அமைவாகவும் திருச்சபையின் படிப்பினைக்கு ஏற்றவாறும் காலத்தின் தேவைகளுக்கேற்ப திருச்சபையின் வளர்ச்சிக்கு உதவுதல்.

**உறுப்பினர்கள்:**

பங்கு தந்தை - தலைவர்
உதவி பங்குத்தந்தை - உப தலைவர்
புனித மிக்கேல் கல்லூரி அதிபர்
புனித சிசிலியா பாடசாலை அதிபர்
துறவற சகோதரி - ஒருவர்
துறவற சகோதரர் - ஒருவர்

ஒவ்வொரு வட்டாரத்தில் இருந்தும் வரும் பிரதிநிதிகள்
ஒவ்வொரு பக்திசபையிலிருந்தும் வரும் பிரதிநிதிகள்
ஒவ்வொரு சேவா சங்கத்திலிருந்தும் வரும் பிரதிநிதிகள்
பங்குத்தந்தையால் நியமிக்கப்படுபவர்கள் - 5 பிரதிநிதிகள்

**புனித வின்சன்ட் டி போல் சபை**

இச்சபை மட்டக்களப்பில் புளியந்தீவுப் பங்கிலேயே முதலில் ஆரம்பிக்கப்பட்டது. வண. ஹென்றி டி அராஸ் (யே.ச) அடிகளார் (REV.FR.HENRY D' ARRASS-SJ) இதனை ஆரம்பித்து வைத்ததாக அறிகிறோம். எனினும் இச் சபையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ச்சியான வரலாறு பேணப்பட்டிருக்கவில்லை. அமரர்களான செல்லத்துரை உடையார், ஆசிரியர் பி.எம்.ஜோசப், ஆசிரியர் சவரிமுத்து, ஆசிரியர் கே.எல்.இராஜேந்திரம், பயஸ் ஜோண், மோசஸ் சின்னத்தம்பி, அன்ரனி மாட்டின் ஆகியோர் ஆரம்ப காலங்களில் இச் சபையை வழிநடத்தியிருந்தனர். இச்சபை பங்கில் பின்வரும் பணிகளை ஆற்றுகின்றது..

* வீடுகளுக்கும், கடைகளுக்கும் சென்று சிறிய அளவிலான நிதியைச் சேகரித்து ஏழைகளுக்கு வழங்குதல்.

* நன்கொடையாளர்கள் மூலம் பெறும் பணத்தில் ஏழைகளது வீடுகளைச் திருத்திக் கொடுத்தல்.

* நத்தார் காலங்களில் பங்கு மக்களின் உதவியுடன் உடைகள், உலருணவுப் பொதிகள் என்பவற்றை ஏழைகளுக்கு வழங்குதல்.

* வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்குதல்

* வைத்தியசாலைக்குச் சென்று நோயாளிகளைத் தரிசித்து உதவி செய்தல்.

**மரியாயின் சேனை**

புளியந்தீவில் மரியாயின்சேனை புனித நல்லாலோசனை மாதா பிரசீடியம் என்கின்ற பெயரில் ஒரு கலப்பு அமைப்பாக இயங்கி வருகின்றது. இந்த இருநூறாண்டு ஜுபிலி விழாவிலே புளியந்தீவு மரியாயின்சேனையினரும் தம் அறுபதாவது அகவையை நிறைவு செய்து சிறப்பாகக் கொண்டாடியமையை இங்கு குறிப்பிடல் சாலச் சிறந்தது.

1948ஆம் வருடம் கிழக்கு மண்ணில் முதன் முதலில் அடித்தளமாக இடப்பட்டது புளியந்தீவு மரியாயின்சேனை அமைப்பே. 1948இன் வைகாசித் திங்களின் பதினெட்டாம் நாள் சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு கொழும்பு கொமிசியத் திலிருந்து வருகை தந்த நால்வரின் வழிநடத்தலுடன் பங்குத் தந்தையாக பணியாற்றிய அருட்தந்தை ஜெரோம் டிசா அடிகளாரின் தலைமையில் முதல் ஒன்றுகூடல் ஆரம்பமானது. ஆண்கள் மாத்திரமே பங்கேற்றிருந்தமையால் ''புனித நல்லாலோசனை மாதா ஆண்கள் பிரசிடியம்'' என பெயரிடப்பட்டிருந்தது.
முதலாவது மரியாயின் சேனைத்தலைவராக சகோதரர் முதலியார் சந்தியாப் பிள்ளையும், உபதலைவராகச் சகோ.இக்னேஷியஸ் செல்லத்துரை உடையார் உபதேசியாரும், செயலாளராகச் சகோதரர் ஞானப்பிரகாசம் கிருஷ்ணப்பிள்ளை எனும் ஆங்கில ஆசிரியரும் பொருளாளராக சகோ.பீ.எம்.ஜோசப் அதிபரும் தெரிவாகினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற்காலத்தில் பெண்களின் பங்களிப்பும் இணைந்து கொண்டமையால் ஆண், பெண் என இருபாலாரும் இணைந்த கலப்பு அமைப்பாக செயற்பட்டது. பெண்கள் மாத்திரமே பணியாற்றிய காலமும் உண்டு.

தற்போது ஆன்மீக ஆலோசகராக அருட் சகோ.அலோசியஸ் (FC)அவர்களது வழிநடத்துதலின் கீழ் பன்னிரண்டு சேனை அங்கத்தினர்களைக் கொண்டு செயற்பட்டு வருகின்றது .பங்குத்தளத்தில் இவர்களது பிரதான பணிகளாக பின்வருபவை அமைகின்றன:

1. பங்கு மருத்துவமனை நோயாளர்களை சந்தித்தல்
2. இல்லத்தரிசிப்பு
3. வயோதிபர் இல்லத்தரிசிப்பு
4. ஆலயப் பராமரிப்பு
5. மரண நிகழ்வுகளில் பங்கேற்பும், உதவியும்
6. இல்லங்களில் இருதய அரசாட்சி நிறுவும் வழிபாட்டில் பங்கேற்பு

**பீடப் பணியாளர் சபை**

இரு நூறாண்டு காலமாக இப்பங்கில் பீடப்பணியாளர் சபை இயங்கி வருகின்றது. அக்கால கட்டத்தில் இலத்தீன் மொழியிலேயே திருப்பலி மற்றும் ஆராதனைகள் நடைபெற்றதால் பீடப்பணியாளர்களும் இலத்தீன் மொழியில் செபங்களை மனப்பாடம் செய்ய வேண்டியிருந்தனர். எனவே, அவர்கள் மூன்று மாதங்கள் அச் செபங்களைக் கற்ற பின்னரே பீடத்திலேறித் திருப்பலியிற் பங்குபற்ற முடியும்.

1965இல் 2ம் வத்திக்கான் சங்கத்தின் பின் தாய் மொழியிற் திருப்பலிகளும் ஆராதனைகளும் இடம் பெற்றன. எனவே, பீடப்பணியாளர்களின் பணியும் இலகுவாக்கப்பட்டது. புதியவர்களைச் சேர்த்து வேண்டிய பயிற்சியளிக்கப் படுகின்றது.

பீடப்பணியாளர் சபையின் பாதுகாவலராக புனித டோமினிக் சாவியோ விளங்குகின்றார். இவரது திருநாளிலேயே பீடப்பணியாளர் தினம் கொண்டாடப்படுகின்றது.

பீடப்பணியாளர்களுக்கான கூட்டம் ஒவ்வொரு வாரத்திலும் நடைபெறுகின்றது. பீடப்பணியாளர்க ளிலிருந்தே தலைவர், உபதலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோர் தெரிவு செய்யப்படுகின்றனர். பொது நிலையினரில் ஒருவர் போஷகராகச் செயற்படுவார். வழக்கமாக உதவிப் பங்குத் தந்தையும், போஷகரும் இணைந்து கூட்டங்களை நடத்துகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புனித மரியாள் இணைப்பேராலய சேவா சங்கம்.**

திருகோணமலை – மட்டக்களப்பு மறைமாவட்டத்தில் எந்தப் பங்கிலுமே இல்லாத தனித்துவம் வாய்ந்த அமைப்பு இந்த சேவா சங்கம். புளியந்தீவுப் பங்கின் இணைப்பேராலயத்திலும், புனித அந்தோனியார் ஆலயத்திலும் உள்ள சேவா சங்கங்கள் நீண்டகாலமாக இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

வத்திக்கான் திருச்சங்கத்தைத் தொடர்ந்து அமுல்படுத்தப்பட்டு வரும் தலத்திருச் சபைகளின் மாற்றங்களையெல்லாம் உள்வாங்கி, தனது செயற்பாடுகளை இழந்துவிடாது இப்பங்கில் பணியாற்றிக் கொண்டிருக்கும் சேவா சங்கங்கள் பாராட்டுக்குரியவை.

20ம் நூற்றாண்டின் தொடக்க காலம் முதல் ஆலயத்திருவிழா, அன்னதானம் வழங்கல், பாஸ்கா நிகழ்ச்சி, நற்கருணைப் பெருவிழா ஆகியவற்றை பங்குத்தந்தை தலைமையில், முன்வந்து உதவிய சிலருமாக செய்து வந்தனர். 1920களுக்குப் பின்னர் 'நியூபேக்கரி' உரிமையாளரான திரு.சந்தியாப்பிள்ளை அவர்கள் தனது சொந்த செலவுகளில் வருடாந்த திருவிழா, பாஸ்கு நிகழ்வுகளை வெகு கவர்ச்சியும் சிறப்புமாக நடாத்திக் கொண்டு வந்தார்.

இவருடன் பங்கின் பல சமூகத்தவர்களும் இணைந்து ஒன்று கூடி 'ஆலய பரிபாலன சபை' என்ற பெயரில் குழுவொன்றை அமைத்து மேற்படி செயற்பாடுகளை வருடந்தோறும் சிறப்பித்து வந்தனர். ஆலயத் திருவிழாவின் எட்டு நோவனைகளில் மருத்துவர் சமூகம், பறங்கியர் சமூகம் என்பனவற்றின் இரண்டு நோவனைகள் தவிர்ந்த ஏனைய ஆறும் தனிப்பட்டவர்களினாலேயே நடைபெற்று வந்தன. இறுதி நாளான ஒன்பதாவது நோவனையை திரு.சந்தியாப்பிள்ளை என்பவர் செய்து சிறப்பித்தார். ஆலயத்தில் உட்புற, வெளிப்புற அலங்காரங்கள் அவரது மேற்பார்வையில் நடைபெறும். கோயில் முகப்பும், முற்றமும், கொடிகளாலும், மின்விளக்குகளாலும் அலங்கரிக்கப பட்டிருப்பது கண்கொள்ளாக்காட்சியாகும்.

இறுதி நாள் நோவனை (இலத்தீன் மொழியில்) முடிவடைந்ததும் வாண வேடிக்கை சுமார் ஒரு மணி நேரத்திற்கு நடை பெறும். கொழும்பிலிருந்து வரும் சிங்கள சகோதரர்கள் இந்த வாணவேடிக்கை நிகழ்ச்சிகளைச் செய்து காண்பிப்பர். இதனைக் காண்பதற்காக மட்டக்களப்பு நகரிலும் அயலிலுமுள்ள மக்கள் இந்த இரவில் ஒன்று கூடுவர். இதற்கான செலவையும், ஏற்பாடுகளையும் திரு.சந்தியாப்பிள்ளை அவர்களே ஏற்றுச் செய்வார்.

ஆலயத் திருவிழாவன்று (ஆவணி 15, இதில் மாற்றமில்லை) அன்னதானம் வழங்கப்படுவதும் பாரம்பரியமாக இருந்து வந்தது. இதற்காக பங்கு மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கும் உதவிகள் போதாதவிடத்து குறைநிறைகளை நிரப்பும் வள்ளலாக திரு. சந்தியாப்பிள்ளை அவர்கள் விளங்கினார். ந.ப.12.00 மணிக்கு பங்குக்குருவானர் பரிபாலன சபையினர் சூழ, குடைபிடித்து மேளதாள வாத்தியங்களுடன் அழைத்து வரப்பட்டு, தயாரிக்கப்பட்ட உணவுகள் ஆசீர்வதிக்கப்பட்டதும் மக்களுக்கு வழங்கப்படும். நீண்ட வரிசைகளில் பல்சமய மக்களும் இதனைப் பெற்றுக் கொள்வதை நற்கடமையாகக் கொண்டிருந்தனர்.

பாஸ்கா நிகழ்வுகள் குருத்தோலை ஞாயிறு தொடக்கம் உயிர்ப்பு ஞாயிறு வரை நடாத்தப்படுவது வழக்கமானது. பொம்மைகள் மூலம் மிக நுட்பமான தொழில் நுட்ப வடிவில் தயாரிக்கப்படும். பாஸ்கா நிகழ்வுகளுக்கான வேலைகள் விபூதிப் புதனிலிருந்தே ஆரம்பிக்கப்படும். ஆலயத்தின் பிரதான வாயில் பக்கம் அமைக்கப்படும் பாஸ்கா மேடை மண்டபம் (இரு மாடிகள் கொண்டது) ஆலயத்தை நோக்கி திரும்பியதாக இருக்கும். இரண்டு சிறந்த பாஸ்கா தொழில் நுட்பவிய லாளர்கள் மறக்கப்பட முடியாதவர்கள் திரு. செல்லத்தம்பி இவரது சிறப்பான தொழில்நுட்பக்காட்சிகளினால் சகலராலும் 'ஜப்பான் செல்லத்தம்பி' என்று அழைக்கப்பட்டவர். மற்றவர் திரு.ஸ்ரீபன் அவர்கள். இருவருக்கும் மாறி மாறி சந்தர்ப்பங்கள் வழங்கப்படும். போட்டிபோட்டுக் கொண்டு பாஸ்கா காட்சிகள் பக்தியும், நிஜமுமாக பார்வையாளர்களை உருகவைக்கும்.

1953ல் திரு.சந்தியாப்பிள்ளை காலமானதைத் தொடர்ந்து 1954 முதல் அவரது மருமகனான திரு.ஜே.என்.ஹென்றி அவர்கள் தலைமையில் பரிபாலனசபை இயங்கத் தொடங்கியது. இவருக்கு பக்கபலமாக இருந்தவர் ஏபிரகாம் ஜோசப் (மாஸ்டர்) அவர்கள் பங்கின் அனைத்து சமூகங்களையும் இணைத்து 2ம் வத்திக்கான் திருச்சங்க தீர்மானங்கள் நடைமுறைக்கு வரும் வரையில் சிறப்பாக இயங்கினர்.

2ம் வத்திக்கான் தீர்மானங்களின் படி பங்குச் சபை (PARISH COUNCIL) அமைக்கப்பட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு, அனைத்துப் பங்குகளிலும் பங்குச் சபை அமைக்கப்பட்டு அதுவே உத்தியோக பூர்வமாக ஏற்கப்பட்ட போதும், புளியந்தீவுப் பங்கில் மாத்திரம் இரண்டு கோயில்களினதும் பரிபாலன சபைகள் கலைக்கப்படாமல் சேவா சங்கங்கள் என்ற புதிய பெயரில் ஆலயங்களின் பரிபாலன வேலைகள், திருவிழா, பாஸ்கு, நற்கருணை விழா (அன்னதானம் 1980களில் நாட்டின் சூழ்நிலைகளினால் நிறுத்தப்பட்டு விட்டது) ஆகியவற்றை தொடர்ந்தும் நிருவகித்துக் கொண்டே வருகின்றன.

புனித மரியன்னை சேவா சங்கத்திற்கு, அருட்தந்தை கிங்ஸ்லிறொபட் அடிகளார் பங்குத் தந்தையாக இருந்த காலப்பகுதியில் புதிய யாப்பு உருவாக்கப்பட்டு நோவனைகள் நான்கு பங்கிற்குள்ளும் நான்கு வெளியிலும் கொடுக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. தொடர்ந்து ஒருவரிடமிருந்த தலைமைத்துவம் மாற்றப்பட்டு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

புளியந்தீவின் நான்கு வட்டாரங்களுக்கும் சுழற்சி முறையில் கொடுக்கப பட்டுள்ளது.
சேவாசங்கத்தின் முயற்சியினால் முகப்பு மண்டபம் (1992ல்) கொடிகம்பம் (1994ல்) பாரிய வேலைகளாக நிறைவேற்றப்பட்டன. உட்புற, வெளிப்புறத் திருத்த வேலைகளும் பராமரிப்பு வேலைகளும் வருடாந்தம் பங்கு மக்களின் அனுசரணையுடன் நடை பெற்று வருகின்றது.

இன்னும், புதிய நற்கருணைப்பீடம், கல்லறை ஆண்டவர், மரியன்னை பீடம், கல்வாரி அழகுபடுத்தல், ஒலி, ஒளி அமைப்புக்களை அமைத்தல் என்பனவும் நடைபெற்றுள்ளன.
எதிர்காலத்தில் ஆலயத்தின் முடிக்கப்படாத, காலத்திற்கேற்ற தேவைகள் பலவுள்ளன. அவற்றையும் இனிவரும் நிருவாகத்தினர் தமது பணிகளாக தொடரவும், பங்கு மேய்ப்பணிச் சபையின் வரம்பிற்குள் நின்று, தொடர்ந்தும் இப்பங்கில் பங்கு மேய்ப்புப் பணிச்சபையும், சேவாசங்கமும் பலரும் வியக்கும் வகையில் பணிகளை ஆற்றவும் இறையாசீரை வேண்டுவோமாக.

**மறையாசிரியர் ஒன்றியம்**

நற்செய்தி அறிவிப்புப் பணியில் மறையாசிரியர்களின் பணி முக்கியமானது. திருவருட்சாதனங்கள் பெற இருப்பவர்களை ஆயத்தப்படுத்தும் பணியே ஆரம்பகாலங்களில் மறைக்கல்வியாக இருந்தது. 1990களிலிருந்து பங்குகள் தோறும் மறையாசிரியர் ஒன்றியம் ஆரம்பிக்கப்பட்டு, போதகப்பணி முக்கிய கடமையாக ஆற்றப்பட்டு வருகிறது.

புளியந்தீவுப் பங்கில் அருட்பணி பீலிக்ஸ் வீரசிங்க, அருட்பணி றெக்ஸ் செபமாலை (உதவி) ஆகியோர் பங்குத் தந்தையர்களாக (1972) இருந்த போது கிறீஸ்தவ வாழ்வுச் சமூகத்தினரே (CLC) மறைக்கல்விப்பணியையும் ஆற்றினர். திரு.மக்ஸி ஒக்கர்ஸ் CLC தலைவராகப் பணியாற்றிய காலத்தில் இப்பணி சிறப்பாக வழி நடாத்தப்பட்டது.

அருட்பணி L.பிலிப் அடிகளார் உதவிப்பங்குத்தந்தையாக இருந்த காலத்தில் (1979) கத்தோலிக்க ஆசிரியர்களையும் இணைத்து, கத்தோலிக்க ஆசிரியர் சங்கமென அழைக்கப்பட்டது. இச்சங்கத்திற்கு திருமதி சிறிமதி அன்றியாஸ் பல வருடங்களாக தலைமைப் பொறுப்பேற்று மறைக்கல்வி வகுப்புக்கள், ஒளிவிழா போன்றவற்றை நடாத்தி வந்தார். இவருடன் திருமதி.சிசிலியா இளையதம்பி அவர்களும் தலைமைப்பதவியிலும் செயலாளராகவும் இருந்து வழி நடத்தினர். 1985ல் அருட்பணி சந்திரா பெர்னாண்டோ அடிகளார் காலத்தில் கத்தோலிக்க ஆசிரியர்களுடன் பங்கில் படித்த இளைஞர், யுவதிகளையும் இணைத்து 'மறை யாசிரியர் ஒன்றியம்' என்ற அமைப்பு உருவாக்கம் பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வொன்றியம் வாரந்தோறும் மறைக்கல்வி வகுப்புக்கள் நடாத்துவதுடன், விளையாட்டுப்போட்டி, ஒளிவிழா, பரிசளிப்பு விழா போன்றவற்றை தவணை ரீதியாக நடாத்துதுதல் அருட்சாதனங்கள் பெற உள்ள பிள்ளைகளை ஆயத்தப் படுத்துதல், மறைக்கோட்ட, மறைமாவட்ட, தேசிய ரீதியிலான மறையறிவுப் போட்டிகளுக்கு போட்டியாளர்களைத் தயார்படுத்துதல் ஆகிய பணிகளையும் ஆற்றி வருகின்றனர்.

மறையாசிரியர் ஒன்றியத்தின் அனுசரணையுடன் திருப்பாலத்துவ சபையும் பங்கில் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

**கத்தோலிக்க இளைஞர் ஒன்றியம்**

திருகோணமலை-மட்டக்களப்பு மறை மாவட்டத்தில் புளியந்தீவு புனித மரியாள் இணைப்பேராலயத்தின் உதவிப்பங்குத் தந்தையாக இருந்த அருட்பணி FX.டயஸ் அடிகளாரால் 1990ல் முதன் முதலாக கத்தோலிக்க இளைஞர் ஒன்றியம் ஆரம்பிக்கப்பட்டது. இவர் இளைஞர் செயற்பாட்டு இயக்குநராகவும் இருந்தார்.

இளைஞர்களின் ஆற்றல்கள், ஆளுமைகள் ஊடாக ஆன்மீகப் பணிகளை ஆற்றும் நோக்கமாகவே இவ்வொன்றியம் தோற்றுவிக்கப்பட்டது. பங்கில் பணியாற்றும் உதவிப் பங்குத்தந்தையர்களின் ஆளுமையில் தான் கத்தோலிக்க இளைஞர் ஒன்றியம் சுறுசுறுப்பாவதும், சோர்ந்துபோவதும் தங்கி இருந்து வருகிறது.

சேவை நோக்கங்களாக, வழிபாடு, தியானம், சிரமதானம், கலைநிகழ்வுகளூடான போதகப்பணி, விளையாட்டுப்போட்டிகள், பங்கு திருவிழாக்களின் ஆயத்தப்பணிகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

தற்போது சமூக சேவையிலும் கவனம் செலுத்தியுள்ள இவ்வொன்றியத்தின் அண்மைய இரத்ததான நிகழ்வு பாராட்டத்தக்கது.

**அர்ப்பணக் குழு:**

அருட்பணி பயஸ்பத்மராஜா அடிகளார் பங்குத் தந்தையாக இருந்த காலத்தில் (1971) அர்ப்பணக் குழு ஆரம்பிக்கப்பட்டது. வாரந்தோறும் ஆலயத்தில் நடை பெற்று வந்த செபவழிபாட்டில் மிக அக்கறையுடன் பங்கு கொண்ட சிலர் ஒரு குழுவாக இயங்கத் தொடங்கினர்.

பங்குத்தந்தை செப வழிபாட்டிற்குத் தலைமை தாங்க முடியாத சந்தர்ப்பங்களில் இக்குழுவினர் வாராந்த வழிபாட்டினை முன்னெடுத்துச் சென்றனர். வேறு பங்குகளில் மேற்படி பங்குத்தந்தையால் செப வழிபாடு நடாத்தும் போது இக் குழுவினரே முன்னின்று ஆயத்தங்கள் செய்து அனுசரணையாற்றினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூய ஆவியானவரின் வழிபாடுகளும் பெந்தகோஸ்தே திருவிழாவிற்கான ஆயத்த செபவழிபாடுகளும் இவர்களால் முன்னெடுக்கப்பட்டதுடன், நோயாளர் இல்லங்களை வைத்தியசாலைகளைத் தரிசித்து செப வேண்டுதல்கள் செய்து, செப வழிபாட்டுக்காக அழைப்போரின் இல்லங்கட்குச் சென்று தேவையறிந்து செபித்து, மரித்தோர் இல்லங்களிலும் செப வழிபாடு நடாத்தி வருகின்றனர்.

**செபக்குழு**

மேற்கண்டவாறு அர்ப்பணக்குழுவின் அதே செயற்பாடுகளை இக்குழுவும் மேற்கொண்டு பங்கில் செப வாழ்க்கையை ஊக்குவிக்கின்றது.

**புனித அந்தோனியார் ஐக்கிய சேவா சங்கம்**

புளியந்தீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் பராமரிப்புச் செயற்பாடுகளுக்குப் பொறுப்பாக புனித அந்தோனியார் ஐக்கிய சேவா சங்கம் உள்ளது. ஆலயத்திரு விழாவை ஆடம்பரமாகக் கொண்டாடும் முக்கிய பணியுடன் ஆன்மீக வளர்ச்சிக்கான பங்களிப்பு நல்குதல் (விவிலிய வினாவிடைப் போட்டிகள், ஞான ஒடுக்கம் போன்றன) இடைக்காலங்களில் சமூக சேவைகளில் ஈடுபடுதல் போன்ற செயற்பாடுகளிலும் இச்சங்கம் ஈடுபடுகின்றது.

மீனவர் சமூகத்தினருக்கென அமைக்கப்பட்ட ஆலயமாகையால் கரையார் என அழைக்கப்படும் மீனவ சமூகத்தினரே இச்சங்கத்திற் பணிபுரிகின்றனர். புனிதரின் திருநாளுக்கான நவநாட்களை நடத்துவதற்கென எட்டுப் பிரிவுகளைக் கொண்ட குழுவினர் (வட்டாரத்தினர்) இச் சங்கத்தில் அங்கம் வகிக்கின்றனர். புளியந்தீவு,கோட்டைமுனை,தாண்டவன்வெளி திராய்மடு, பெரிய உப்போடை, சின்ன உப்போடை,புளியடிக்குடா, கல்லடி புதுமுகத்துவாரம் எனும் பிரிவுகளைச் சேர்ந்தவர்களே இக் குழுவினராவர். எனினும், புளியந்தீவை சேர்ந்த ஒருவரே இச் சங்கத்தின் தலைவராக வரும் ஒழுங்கு உள்ளது. பாஸ்கு நிகழ்வுகளை கலாசார பாரம்பரியங்களுடன் நிகழ்த்துவதில் இச் சங்கம் முக்கிய சிரத்தையெடுக்கின்றது. சமீப காலங்களில் ஆலயத்தின் அகலத்தைக் கூட்டி அழகுபடுத்தும் பணிகளில் சங்கத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

சமூக செயற்பாட்டுக் குழு (SOCIAL ACTION COMMITTEE)

2004ஆம் ஆண்டு டிசம்பர் 26இல் ஆழிப்பேரலை அழிவையடுத்து, பொதுவாகப் பங்குமக்களின் முன்னேற்றத்திற்காகவும், குறிப்பாக எதிர்பாரா இயற்கையழிவுகள், மனிதரால் ஏற்படுத்தப்படும் அழிவுகளின் போது முன் வந்து உதவுவதற்காகவும் பங்குகள் தோறும் சமூக சேவைக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும் என மேதகு ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகையவர்கள் பணித்தார். இதற்கிணங்க புளியந்தீவில் சில பங்குச் சபை உறுப்பினர்களையும், வேறு சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்கு மக்களையும் உறுப்பினர்களாகக் கொண்டு சமூக மேம்பாட்டுக் குழு (SOCIAL DEVELOPMENT COMMITTEE) எனும் பெயரில் ஒரு குழு 2005 ஜனவரி 13இல் அப்போதைய பங்குத் தந்தை அருட் தந்தை இக்னேஸ் ஜோசப் அடிகளாரின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது. ஆயரின் ஆலோசனைக்கிணங்க இப்பெயர் பின்னர் சமூக செயற்பாட்டுக் குழு என மாற்றப்பட்டது. இக்குழு உடனடியாகச் செயற்பட்டு நன்கொடையாளர்களின் உதவியுடன் 'சுனாமியால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள், காலணிகள்,சீருடைகள் என்பவற்றை வழங்கியது. 'எகெட்' நிறுவனத்தின் உதவியுடன், பாதிக்கப்பட்டோருக்கு உலர்உணவு பொருட்களைப் பகிர்ந்தளித்தது. தொழில் வாய்ப்புக்காக தையல் இயந்திரங்கள், பாதிக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களுக்கு உடைகள்,பாவனைப் பொருட்கள், பாடசாலை மாணவர்களுக்கு சைக்கிள்கள் என்பவற்றையும் வழங்கியது. பங்கிலுள்ள இளைஞர்களின் உதவியுடன் பங்கிலுள்ள குடும்பங்களின் விபரங்கள் அச்சிட்ட படிவங்களில் சேகரிக்கப்பட்டன. வேலையற்றிருக்கும் யுவதிகளுக்கு தையல் பயிற்சி வகுப்புகள் நடாத்தப்பட்டன. மேலும், உயர்கல்வி மாணவர்களுக்கு விசேட பரீட்சை ஆயத்த வகுப்புகளும் நடத்தப்பட்டன. பெற்றாருக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன பலருக்கு தொழிலுக்கான நிதியுதவிகள் வழங்கப்பட்டன. சில மாணவர்களுக்கு தொடர்ச்சியான கல்வி நிதியுதவியும் வழங்கப்பட்டது. ஆன்மீக நலன்களுடன் இணைந்த சமூகசேவைக்கு இத்தகைய தொரு குழு இன்றியமையாத ஒரு கருவியாகும்.

**ஆரோபணி மெழுகுவர்த்தி நிலையம்**

1975 இல் புளியந்தீவுப் பங்கில் முதல் முதலில் அருட்பணி பீலிக்ஸ், அருட்பணி யேசுதாசன் அடிகள் காலத்தில் மெழுகுதிரி செய்யும் நிலையம் உருவாக்கப்பட்டது. வறிய குடும்பத்தில் உள்ள பிள்ளைகளினதும், விதவைகளினதும் வாழ்வை உயர்த்தும் நோக்கமாகக் கொண்டு இந்நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் எமது பங்கு தேவைக்காக மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டு தேவைகள் அதிகரிக்கவே ஏனைய பங்குகளுக்கும் திரி விநியோகம் செய்யப்பட்டது. ஆரம்பத்தில் 5 அங்கத்தினருடன் ஆரம்பிக்கப்பட்டது.

ஏழைப் பிள்ளைகளை மேலும் ஊக்கப்படுத்தும் வண்ணம் அருட்பணி பயஸ் பத்மராஜா அடிகளார் காலத்தில் தும்பிலாலான உற்பத்திப் பொருட்களை செய்யுமுகமாக ஒரு சிறு தொழில் முயற்சி மேற் கொள்ளப்பட்டது. உற்பத்திப் பொருட்கள் பற்றாக் குறை காரணமாகவும் சந்தைப்படுத்தும் வாய்ப்பு குறைவாக இருந்ததாலும் இருவருடங்களில் இப்பணி இடைநிறுத்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இன்றுவரை மெழுகு உற்பத்தி நடைபெற்றுக் கொண்டே வருகிறது. சாதாரண திரி முதல் பாஸ்கா திரி மற்றும் நேர்த்திக்கான 1 அடிமுதல் 6 அடி வரையிலான திரிகளும் உற்பத்தி செய்து கொடுக்கப்படுகிறது. இந்நிலையத்தில் தற்போது பத்துக்கும் மேலான யுவதிகள் தொழில் வாய்ப்புப் பெறுகின்றனர்.

**கிழக்கிலங்கை தொழில் நுட்ப நிறுவனம்**
EASTERN TECHNICAL INSTITUTE – ETI

புனித மிக்கேல் கல்லூரியின் மாணவர்களில் மேற்கொண்டு கல்வியைத் தொடரக் கஷ்டமுறும் மாணவர்களையும் தொழில்நுட்பத் திறனுடையோரையும் கருத்திற் கொண்டு 1968ஆம் ஆண்டில் அப்போது புனித மிக்கேல் கல்லூரியின் அதிபராகவிருந்த வண.P.N.பீரிஸ் (யே.ச) அடிகளார் புனித மிக்கேல் கல்லூரியின் ஒரு பகுதியாக தொழில்நுட்பப் பயிற்சிப் பிரிவொன்றை ஆரம்பித்தார். மக்களும் இதற்காகப் பொருளுதவியும், பண உதவியும் புரிந்தனர். புனித மிக்கேல் கல்லூரி வளவில் ஒரு பகுதியும் இதற்காக ஒதுக்கப்பட்டது. வண.L.A.லோறியோ (யே.ச) அடிகளார் இதன் ஆரம்ப இயக்குனராக அமைந்தார். இவரும் இவருடன் இணைந்து முதலிற் சேர்ந்த பயிலுனர்களும் கட்டிடத்திற்கான கற்களைத் தாமே தயாரித்து கட்டிப் பணிகளை மேற் கொண்டனர்.

1970 இல் புனித மிக்கேல் கல்லூரியை அரசாங்கம் பொறுப்பேற்றதால் இத் தொழில்நுட்பப் பிரிவு தனித்தியங்க வேண்டியேற்பட்டது. அதுவரை புனித மிக்கேல் தொழில்நுட்ப நிறுவனம் என அழைக்கப்பட்டது. கிழக்கிலங்கைத் தொழில்நுட்ப நிறுவனம் எனப் பெயரிடப்பட்டது. அன்றிலிருந்து இயந்திரவியல், மின்னியல், தச்சுத்தொழில் ஆகிய துறைகளில் 3 வருடக் கற்கை நெறிகளை வழங்கியது. பயிலுனர் தொகை பெருகியதால் நிறுவனத்தைப் பெருப்பிக்க வேண்டிய தேவை உணரப்பட்டது.
இத் தருணத்தில் மெதடிஸ்த சபையைச் சேர்ந்த அருட்திரு.S.M.ஜேக்கப் , அருட்திரு.J.D.கென்னடி ஆகியோர் 1972ஆம் ஆண்டில் இயேசு சபையினருடன் இணைந்து பணியாற்ற உடன்பட்டனர். அதன்படி மட்டக்களப்பு முகத்துவார வீதியில் (BAR ROAD) ஒரு நிலப் பகுதியினை மெதடிஸ்த சபையினர் வழங்க இயேசு சபையினர் அதில் கட்டிடத்தை அமைத்தனர். இந்நிலையம் பயிலுனர் களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் இலகுவில் அணுகக் கூடிய இடமாக அமைந்தது. இந்நிறுவனம் இயேசு சபையினராலும்,மெதடிஸ்த சபையினராலும் நியமிக்கப்படும் ஒரு நிர்வாக சபையினால் நிர்வகிக்கப்படுகின்றது. இக் கட்டிடத் திற்கான அடிக்கல் 1974 மார்ச் 18ஆம் நாள் நடப்பட்டது.

1978 இன் சூறாவளி, தொடரும் இனக்கலவரம் ஆகியவற்றால் பல இழப்புக் களையும் நட்டங்களையும் அனுபவித்த இந்நிறுவனம் அதன் பெருந்தூணாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கிய இயூஜின் J.ஹேபயர் (யே.ச) அடிகளாரையும் ஒரு பயிலுநரையும் 1990 ஆம் ஆண்டில் இழந்தது.

இந்நிறுவகம் இளைஞர்களைப் பயிற்றுவித்து அவர்கள் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தொழில் வாய்ப்புகளைப் பெற உதவுகின்றது. நிறுவகத்தின் பயிற்சிச் சான்றிதழுக்கு மத்திய கிழக்கு நாடுகளில் உடனடி வேலை வாய்ப்புகள் கிடைப்பதாக மக்கள் கூறி மகிழ்கின்றனர். வாகனத்திருத்தம், வீட்டு உபகரணங்கள் திருத்துதல் போன்றவற்றில் மட்டக்களப்பு மக்களுக்குச் சிறந்த சேவையை இந்நிறுவனம் வழங்குகின்றது.

**அன்புச் சகோதரர்கள் சபை**
(BROTHERS OF CHARITY)

19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இலங்கையின் கல்வித்துறையில் புதிய மாற்றங்களைக் கொண்டு வர ஆங்கிலேயர்கள் முயற்சித்தனர். இக்காலத்தில் இங்கிலாந்தில் கல்விக்கான முழுப் பொறுப்புக்களையும் சமய தாபனங்களே கொண்டிருந்தன. இலங்கையிலும் இதே போன்று சமயத்தாபனங்களே கல்வியில் பொறுப்புடையவர்களாயிருந்த போதும் 'பாடசாலை ஆணைக் குழு' ஒன்று இயங்கி காலத்திற்குக் காலம் சீர்திருத்த முயற்சிகளை மேற் கொண்டு வந்துள்ளது.

1841ல் பாடசாலை ஆணைக்குழுவை மேலும் சீர்திருத்தி அமைப்பதற்காக சேர்.ரிச்சட் மோர்கன் தலைமையிலான கல்வி ஆணைக்குழு சுயமொழிக் கல்விக்கு முக்கியத்துவம் வழங்கியது. இத்தகைய சூழலில் தான் யாழ்ப்பாண மேற்றிராசன ஆயர் வந்.கிறிஸ்தோஸ்தம் வொஞ்சீன் அடிகளாரால், சுய மொழிக் கொள்கையை அமுல்படுத்தும் பொறுப்புடன் புனிதவளனார் சபை 1864 ஏப்ரல் 17 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

இச்சபை சுயமொழிக்கல்விப் போதனையை அமுல் நடாத்துவதுடன், அனாதைச் சிறுவர்களைப் பராமரிக்கவும், ஆசிரியர் பயிற்சி கலாசாலைகள் மூலம் ஆசிரியர்கட்குப் பயிற்சி அளிக்கும் செயற்பாடுகளையும் கொண்டிருந்தது.

திருகோணமலை மறைமாவட்டத்தின் ஆயராக இருந்த வந்.கஸ்ரன் றொபிசே அடிகளார் காலத்தில் (1918-1946) புனித வளனார் சபை மட்டக்களப்புக்கு வருகை தந்தது. 1931ல் வந்த இச்சபையினர், மட்டக்களப்பு, திருகோணமலை, கல்முனை,ஆகிய இடங்களில் பாடசாலைகளையும், அனாதைச் சிறுவர் இல்லங்களையும் ஆரம்பித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது புனித மிக்கேல் கல்லூரியின் ஆரம்பபிரிவு பாடசாலை உள்ள இடத்தில் இயேசு சபைத் துறவிகளால் நடாத்தப்பட்டு வந்த புனித மரியாள் பாடசாலையை 1931ல் பொறுப்பேற்றனர். புனித மரியாள் பாடசாலை சிரேஷ்ட பாடசாலை தராதரப்பத்திர (S.S.C) வகுப்பு வரை நடை பெற்று வந்தது. இப்பாடசாலையுடன் இணைந்ததாக அனாதை மாணவர் இல்லமும் அமைந்திருந்தது.

தற்போது இலங்கை வங்கிக்கு முன்னாலுள்ள இச் சபையினரது வாசஸ்தலமும், முகத்துவாரத்தில் தென்னந்தோட்டமும் இவர்களுக்கிருந்தன.

சார்ள்ஸ் மண்டம் தற்போதுள்ள இடத்தில் புனித அகுஸ்தீனார் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையையும் இவர்களே நடாத்தி, சய மொழிக்கல்விக்காக ஆசிரியர்களைத் தயார்படுத்தியுள்ளனர்.

பங்கின் ஆன்மீக காரியங்களில் பங்குக் குருக்களுக்கு ஒத்துழைப்புக் கொடுத்து திருவருட்சாதன ஆயத்த வகுப்புக்கள் நடாத்தி வந்ததுடன் நோயாளர் இல்லங்களைத் தரிசித்து நற்கருணை வழங்கி வந்தனர்.
ஆயர் வந். இக்னேசியஸ் கிளெனி காலத்தில் சத்துருக்கொண்டான் கும்பிளா மடுவில் தொழில்நுட்பப் பாடசாலையும் இச்சபை சகோதரர்களால் நடாத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

1960களில் அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்றதுடன் இவர்களால் நடாத்தப்பட்ட பாடசாலைகளைக் கைவிட்டனர். 1910ல் யேசு சபை துறவிகளால் ஆரம்பிக்கப்பட்ட கத்தோலிக்க அச்சகத்தை மட்டக்களப்பில் கத்தோலிக்க அனாதைகள் அச்சகம் என்ற பெயரில் (CATHOLIC ORPHANAGE PRESS) தற்போது "அருளகம்" விற்பனை நிலையம் உள்ள இடத்தில் நடாத்தி வந்தனர். இது தற்போது வழக்கறிஞர் வீதியில் 'சென் ஜோசப் கத்தேலிக்க அச்சகம்' என்ற பெயரில் இயங்கி வருகிறது.

1990களிலிருந்து இச்சபையின் ஆளணிப்பற்றாக்குறை இருந்து வந்ததுடன் எதிர்கால தீர்க்க தரிசனத்துடன் அருட் சகோதரர் கலாநிதி S.A.I மத்தியு இச்சபையின் தலைவராக இருந்த காலத்தில்,2004 சித்திரை 26ந் திகதி 'அன்புச் சகோதரர் சபை' யுடன் இணைக்கப்பட்டது.
உலகளாவிய ரீதியில் அமைந்துள்ள இச்சபை, மன வளர்ச்சி குன்றிய சிறார்கள் பால் அதிக கரிசனை கொண்டுள்ளது. இதைவிட இளையோருக்கான தொழிற்பயிற்சிகள் அளித்தல், திறமைகளை வெளிக் கொணர்ந்து மேம்படுத்தல் ஆகிய சேவைகளையும் இவர்கள் ஆற்றுகின்றனர்.

புனிதவளனார் சபை மறைந்தாலும், அன்புச் சகோதரர்கள் சபை அவர்கள் பணியை முன்னெடுத்துச் செல்ல இறையருளை வேண்டுவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சென் ஜோசப் கத்தோலிக்க அச்சகம்**

முன்னாள் ஆயர்.வந்.கஸ்ரன் றொபிஷே ஆண்டகை ஆயராகத் திருநிலைப் படுத்தப்படு முன்னர் குருவாக இருந்த போது 1910 ஆம் ஆண்டில் ஐரோப்பாவுக்குச் சென்று மீண்டு வருகையில் இயேசு சபையைச் சேர்ந்த அருட்.சகோதரர் பியூ (BRO.BEAU) என்பவரைத் தம்முடன் அழைத்து வந்தார். இவர் இயேசு சபையில் இணையுமுன்பு ஓர் அச்சகத்திற் பணியாற்றியவர். இவர் கைகளால் இயக்கப்படும் மிகச்சிறிய அச்சியந்திரம் ஒன்றை வாங்கி ஆயரின் சுற்றுமடல்கள், மற்றும் சிறிய பதிப்புகள் என்பவற்றை அச்சிட்டார். அத்தோடு வண.அல்போன்ஸ் றிச்சாட் (யே.ச) அடிகளாரை ஆசிரியராகக் கொண்ட "யாத்திரிகன்" (PILGRIM) எனும் 8 பக்கங்களைக் கொண்ட ஒரு மாதாந்த இரு மொழிச் சஞ்சிகையையும் பதிப்பித்தார். றொபிஷே ஆண்டகை ஆயரானபின் 1927 ஏப்ரல் 25 இல் திருத்தந்தை பதினொராம் பத்திநாதரை (POPE PIUS XI) சந்தித்தபோது திருத்தந்தையவர்கள் இப் பணி மேலும் விரிவடைய வேண்டுமெனவும் கத்தோலிக்க பரப்புரைப் பணி சிறக்க வேண்டுமெனவும் தம் ஆவலை வெளிப்படுத்தி ஒரு தாராள நன்கொடையையும் வழங்கினார்.

இதன் மூலம் மோட்டாரில் இயங்கும் ஓர் அச்சியந்திரம் கொள்வனவு செய்யப்பட்டு, முன்னர் மத்திய வீதி என அழைக்கப்பட்ட வண.வெபர் வீதியில் தற்போது "அருளகம் விற்பனை நிலையம்" அமைந்துள்ள கட்டிடத்தில் "கத்தோலிக்க அநாதைகள் அச்சகம்' எனும் பெயருடன் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வச்சகத்தில் அநாதைச் சிறுவர்களை அச்சிடுவோர்களாகவும், புத்தகம் கட்டுவோர்களாகவும், பயிற்றுவிக்கும் நோக்கத்துடனேயே இப் பெயர் சூட்டப்பட்டது. மேற்றிராசன அச்சிடல் வேலைகள் தவிர்ந்த பிற வேலைகளையும் இவ்வச்சகம் நிறைவேற்றி வந்தது. அக் காலத்தில் வேலைகளுக்கான கட்டளைகள் (ORDERS) மிக அதிகமாகக் கிடைத்தமையால் சில சமயங்களில் இக் கட்டளைகளை மறுத்த சந்தர்ப்பங்கள் உண்டென அறிகின்றோம்.
1931 ஆம் ஆண்டில் புனித வளனார் சபைத் துறைவிகள் மட்டக்களப்பிற்கு வந்த போது இவ்வச்சகத்தையும் பொறுப்பேற்றனர். தற்போது இவ்வச்சகம் வழக்கறிஞர் வீதியில் சென் ஜோசப் கத்தோலிக்க அச்சகம் எனும் பெயரில் இயங்குகின்றது.

**மறைக்கல்வி நடுநிலையம்:**

எமது மறை மாவட்டத்தில் மறைக்கல்விப் பணியினை ஆரம்பித்து வைத்தவர் அருட்தந்தை சோமர்ஸ் (யே.ச) அடிகளாவார். இவர் 1957 இல் தமது பணியினை ஆரம்பித்தார். இவர் தமிழ் மொழியில் சரளமாக உரையாட முடியாதவராயிருந்ததால் புனித மிக்கேல் கல்லூரியில் கற்றுக் கொண்டிருந்த சில இளைஞர்களின் உதவியுடன் மறைக்கல்விப் பாடங்களை ஒலிப்பதிவு (RECORDING)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து அவற்றைக் கற்பிக்க வழி செய்தார். இவரின் காலத்தில் ஆயர் இக்னேசியஸ் கிளெனி ஆண்டகையின் செயலாளரான அருட்தந்தை பீற்றர் துரைரெட்ணம் அடிகளார் 1966 ஆம் ஆண்டில் சில இளைஞர்களை இந்தியாவின் திண்டிவனம் எனும் இடத்திற்கு மறை போதகப் பணியில் பயிற்சி பெற அனுப்பி வைத்தார். இதன் பின்னர் பின்வருபவர்கள் மறைக்கல்வி இயக்குநர்களாகப் பணியாற்றினர்:

1. அருட்தந்தை ஹென்றி பொன்னையா அடிகள் – 1967

பாடசாலை மட்டத்தில் நடாத்தப்படும் மறைக்கல்விப் பரீட்சையை தொடக்கினார். இவரது அறை மறைக்கல்விப் பணி அலுவலகமாகவும், அதன் ஒரு பகுதி சிறிய வாசிகசாலையாகவும் மாற்றமடைந்தது.

2 அருட்தந்தை பேர்டி பார்த்லெட் (யே.ச) – 1970

குருக்களின் இல்லத்தில் (CLERGY HOUSE) மறைக்கல்விப் பணி அலுவலகத்தை உருவாக்கினார். திருமலையில் மறைக்கல்விப் புத்தக நிலையமொன்றையும் தொடக்கி வைத்தார். மறைக்கல்வி நூல்களை சகாய விலையில் மாணவர்களுக்கு வழங்கி, பரீட்சையில் விசேட சித்தி பெற்றோருக்கு நற்சான்றுப் பத்திரம் வழங்கிக் கௌரவித்தார். மறைக்கல்வியில் புதிய தொழில்நுட்பசாதனங்களைப் பயன்படுத்தப் பயிற்றுவித்தார்.

3. அருட்தந்தை டோமினிக் சாமிநாதன் அடிகள் –1978

இவரது காலம் மறைக்கல்வியின் மறுமலர்ச்சிக் காலம் எனப் போற்றப்படுகின்றது. முழுநேர மறைப்போதகர்களை நகரங்களிலிருந்து கிராமங்களுக்கு அனுப்பி முழு மூச்சுடன் செயற்பட வைத்தார். இதற்காக மோட்டார் சைக்கிள், அதற்கான எரிபொருள், தங்குமிட வாடகை என்பவற்றை அவர்களுக்கு அளித்தார். மறைப் போதகர்களை இலங்கையிலேயே பயிற்றுவிக்கும் முறையினை மேற்கொண்டார். அருட்சகோதரி லொறிலியாவின் உதவியுடன் இளம் பெண்களுக்கான 'குழு வாழ்வுச் சகோதரிகள்' அமைப்பினை உருவாக்கினார். இவர்களைப் பல பின்தங்கிய கிராமங்களிற் பணியாற்ற அனுப்பி வைத்தார். எமது பகுதிக்கென ஒரு பத்திரிகை தேவையென உணர்ந்து 'வெட்டாப்பு' எனும் பத்திரிகையை 1992 செப்டம்பர் 14 ஆந் திகதியிலிருந்து ஆரம்பித்து வைத்தார். இவரது வழிகாட்டலில் அருட்தந்தை நோயல் இம்மானுவல் இப்பத்திரிகையை நடத்தினார். அஞ்சல் வழி மறைக்கல்வி, அஞ்சல் வழி இறையியல் என்பவற்றையும் ஆரம்பித்து வைத்தார். புனித மிக்கேல் கல்லூரியில் பிரமாண்டமான விவிலியக் கண்காட்சியையும் நடத்தினார்.

4. அருட்தந்தை அருளானந்தம் தேவதாசன் அடிகள் – 1986

இவர் காலத்தில் அருட்தந்தை ஹென்றி பொன்னையா அடிகளாருக்கு ஞாபகார்த்தமாக ஒரு மண்டபம் எழுப்பப்பட்டது. ஆயித்தியமலையில் இயங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த குழுவாழ்வுப் பயிற்சி நிலையம் மட்டக்களப்பு அருள் ஒளி இல்லத்திற்கு மாற்றப்பட்டது. புதிதாகக் கட்டப்பட்ட மறைக்கல்வி நடுநிலையம் இவர் காலத்தில் திறந்துவைக்கப்பட்டது. சமயப் பொருட்களை (RELIGIOUS ARTICLES) விற்பனை செய்யும் 'அருளகம்' எனும் நிலையத்தையும் ஆரம்பித்தார். திருவழிபாட்டு நாட்காட்டிகளை எம் மண்ணிலேயே தயாரிக்கும் வழிமுறையைக் கொண்டு வந்தார்.

5. அருட்தந்தை நோயல் இம்மானுவல் அடிகள் – 1993

திருவழிபாட்டு நாட்காட்டிக்கு இப்போதைய புதுவடிவம் கொடுத்தவர் இவராவர். 'புனித வார ஆயத்தமும், திருவழிபாடும்' எனும் நூல் இவரால் 1996 டிசம்பர் 15 இல் அச்சிடப்பட்டது. அனைவராலும் பாராட்டப்பெற்ற இந்நூல் இன்றும் பரிசுத்த வாரத்தில் பிரயோசனமுள்ள கைநூலாக உள்ளது. இவரின் காலத்திலேயே பணிகள் கணினி மயமாக்கப்பட்டன.

6. அருட்தந்தை அகுஸ்தீன் நவரெட்ணம் அடிகள் – 1999

இவர் வாசிகசாலையின் முக்கியத்துவத்தை உணர்ந்து பல புத்தகங்களை இந்தியாவிலிருந்தும், உள்ளூர் புத்தகக் கடைகளிலிருந்தும் தருவித்து ஒரு வாசிகசாலையை உருவாக்கினார்.

7. அருட்தந்தை மரியான்தம்பி ஸ்ரனிஸ்லாஸ் அடிகள் – 2001

இவரது காலத்தில் பிரதி செய்யும் இயந்திரம் (DUPLICATING MACHINE) கொள்வனவு செய்யப்பட்டு கடிதங்கள், கேள்வித் தாள்கள், வழிபாட்டுப் பாடல் அடங்கிய துண்டுப் பிரசுரங்கள், வழிபாட்டுச் சடங்குகள் அடங்கிய கையேடுகள் போன்றவை பிரதிபண்ணப்பட்டு பங்குகளுக்கு அனுப்பி வைக்கும் பணி இலகுவாக்கப்பட்டது.

8. அருட்தந்தை ஜூட் ஜோன்சன் அடிகள் – 2003

இவரது காலத்தில் ஒரு மறைக் கோட்டத்திலிருந்து ஒரு மறை ஆசிரியர் வீதம் மூன்று பேர் விசேட பயிற்சிக்காக 2004 இல் இந்தியாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டனர். சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட கத்தோலிக்கர்களுக்கு வெளிநாட்டு உதவியுடன் இலவசமாகவும் ஏனையோருக்கு சகாய விலையிலும் விவிலியத்தை வழங்கினார். பொதுநிலை நற்கருணைப் பணியாளர்களை உருவாக்கும் பணியில் விடாமுயற்சியுடன் ஈடுபட்டு வெற்றி கண்டார்.

9. அருட்தந்தை கிளமென்ற் விற்றாலிஸ்ட் அன்னதாஸ் அடிகள் – 2006 பெப்ரவரி-டிசம்பர்

இவரும் தமது காலத்தில் இலவசமாக விவிலியம் வழங்கும் பணியைத் தொடர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. அருட்தந்தை ஜே. எஸ். மொறாயஸ் அடிகள் – 2007 ஜனவரி தொடக்கம்.
கிறிஸ்தவ அலுவல்கள் அமைச்சினால் வழங்கப்படும் நிதியின் மூலம் 2007 ஆம் ஆண்டிலிருந்து தன்னார்வ மறையாசிரியர்களுக்கு சிறிய நன்கொடையை வழங்கும் முறையைச் செயற்படுத்தி வருகின்றார். பொதுநிலையினரின் ஆண்டினை முன்னிட்டு திருமலையில் 15.09.2007 இல் மாபெரும் விவாத மேடையும், அவ்வருடம் அருட்சாதனங்கள் பற்றிய கருத்தரங்கும், 2008 ஆம் ஆண்டில் ''தூய பவுலின் திருமுகங்களின் ஒளியில் இறைவார்த்தை'' எனும் பயிற்சித் திட்டமும் இடம் பெற்றன. இப்பயிற்சித் திட்டம் பொது நிலையினரின் ஆணைக்குழுவுடன் இணைந்து மறைக்கல்வி நடுநிலையத்தால் மேற்கொள்ளப் பட்ட செயற்பாடாகும்.

**கிழக்கிலங்கை மனிதவள மேம்பாட்டு நிறுவகம்**
**EASTERN HUMAN AND ECONOMIC DEVELOPMENT _ EHED**

இரண்டாம் வத்திக்கான் சங்கச் சீர்திருத்தத்தின்பின் கத்தோலிக்க திருச்சபையின் வரலாற்றில் சமூகம் சார்ந்த செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டுமென அகில உலக கத்தோலிக்க திருச்சபை அறைகூவல் விடுத்தது. கத்தோலிக்கத் திருச்சபையின் கோரிக்கையின் அடிப்படையில் பல்வேறு நாடுகளிலும் சமூகம் சார்ந்த பணிகள் முன்னெடுக்கப்படவேண்டி கத்தோலிக்க திருச்சபைக்குரிய நிறு வகங்கள் ஆரம்பிக்கப்பட்டன. ஐக்கிய அமெரிக்க நாடுகளின் கத்தோலிக்க நிவாரண சேவைகள் நிறுவகத்தின் உதவி யாளராக இருந்த அருட்பணி. ஜேம்ஸ் மொரிஸ் அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்ட நிறுவகம் ஒன்று உருவாக வேண்டும் என இலங்கை கத்தோலிக்க திருச்சபைக்கும் அழைப்பு விடுத்தார்.

இதனடிப்படையில் மறைந்த எமது கருதினால் தோமஸ் கூரே ஆண்டகை யவர்கள் வறிய மீனவ மக்களின் நலனுக்காக நாடளாவிய ரீதியில் ஒரு அமைப்பு தேவையென ஆசித்து, இதற்கான பணிப்புரையை கத்தோலிக்கச் திருச் சபைக்கு விடுத்ததின்பேரில் அருட்பணி. ஜோ பெர்ணான்டோ அவர்கள் கொழும்பு வாழ் மீனவர்களின் நலனை மேம்படுத்தும் நோக்குடன் அமைப்பொன்றை ஆரம்பித்தார். வறிய மீனவ மக்கள் பெரும் முதலாளிகளின் அனைத்து வகையான சுரண்டல்கள் ஒடுக்கு முறைகளில் இருந்து விடுபட பல விழிப்புணர்வு செயற்திட்டங்களை நெறிப் படுத்தினார். இதன்பயனாக மக்கள் கூட்டுறவுச் சங்கங்களில் இணைந்து கடன்பெற்று தமது தொழிலை அபிவிருத்தி செய்து தங்கள் சொந்த முயற்சியினால் முன்னேற்றமடைந்தனர்.

இச்செயற்பாட்டைக் கண்ணுற்ற கொழும்பு மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி. லூாசியன் ஸ்மித் இச்சேவை இலங்கை நாடு முழுவதும் செயற்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தார். இவரது சிபாரிசினை ஏற்றுக்கொண்ட கருதினால் தோமஸ் கூரே நாடு முழுவதும் அபிவிருத்திப் பணிகளுக்காக செயற்படக் கூடிய ஒரு நிறுவகத்தை நிறுவ இதுவே உரிய சந்தர்ப்பம் என குரல்கொடுத்ததின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயனாக கொழும்பைத் தலைமையகமாகக் கொண்டு "சமூக பொருளாதார அபிவிருத்தி நிலையம்" என்னும் "செடெக்" ( SEDEC ) நிறுவகம் 1968ம் ஆண்டு கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டது. இந்நிறுவகம் 11 மறைமாவட்டங்களையும் உள்ளடக்கியதாக 13 நிலையங்களைக் கொண்டு செயற்பட்டு வருகின்றது.

**நிறுவக நோக்கு:**

சாதி , இன, மத வேறுபாடுகள் இன்றி விவிலிய அடிப்படைப் பண்புகளான அன்பு, மன்னிப்பு, சமாதானம், ஒற்றுமை, சமத்துவம் என்பனவற்றின் அடிப்படையில் நேர்மையாக வாழும் ஒரு இலங்கை சமுதாயத்தை முன்னெடுத்துக்காத்தல்.

**இலக்கு:**

மக்களது ஒருங்கிணைந்த மனித அபிவிருத்தி முயற்சிகளை ஊக்குவித்து அவர்களை வலுவூட்டி அவர்கள் முயற்சிகளில் தாமும் பங்கேற்றல் ஆகும். இத்தூரநோக்கினையும், இலக்கினையும் கொண்டு செடெக நிறுவகம் 13 நிலையங்களிலும் தனது அபிவிருத்திச் செயற்திட்டங்களை ஆரம்பித்தது.

திருகோணமலை-மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் சமூகப்பணிகள் சார்ந்த வரலாற்றினை நோக்கும்போது திருச்சபையின் சமூகப்பணி அமரா் அருட்பணி. நோபட் ஒக்கஸ் அவர்களினால் முன்னெடுக்கப்பட்டதாக வரலாறு குறிப்பிடுகின்றது. 1970 ஆண்டுகளின் இறுதிவரையில் கத்தோலிக்க திருச்சபையின் இளைஞர்கள் தேவைகளின் அடிப்படையில் சமூகப்பணியாற்றி வந்தனர். 1978 கார்த்திகை மாதம் கிழக்கிலங்கையை தாக்கிய சூறாவளி அனர்த்தத்தின் பின் கிழக்கிலங்கையை மீளக்கட்டியெழுப்ப இலங்கைத் தேசிய நிலையமாகிய "செடெக்" நிறுவகத்தின் உதவிகள் பெரும்பங்காற்றின. கிடைக்கப் பட்ட நிதிஉதவியைக் கொண்டு பாதிக்கப்பட்ட மீனவர்களுக்காக வள்ளம், தோணிகள், வலைகள் என்பன வழங்கப்பட்டதுடன் கல்லடிப் பகுதியில் 08 நிரந்தர வீடுகளும் நிர்மாணித்து கையளிக்கப்பட்டன. இச்செயற்திட்டத் தின் ஊடாக "செடெக்"என்னும் நிறுவகம் மட்டக்களப்பில் தனது செயற்திட்டங் களை முன்னெடுத்தது. 1979ம் ஆண்டு களில் "செடெக்" என அழைக்கப்பட்ட நிறுவகம் திருமலை மட்டக்களப்பு முன்னை நாள் ஆயர் கலாநிதி L.R.அன்ரனி ஆண்டகை அவர்களால் "எகெட்" ( EHED ) என அதாவது **"கிழக்கிலங்கை மனிதவள மேம்பாட்டு நிறுவகம்"** என்று பெயர்மாற்றம் செய்யப்பட்டதாக அறியக்கிடக்கின்றது. இப்பெயருடனேயே அன்று முதல் இன்றுவரை தனது பணிகளையும் திறம்பட நெறிப்படுத்திச் செயற்படுத்தி வருகின்றது.

1983ம் ஆண்டில் நாட்டில் நடைபெற்ற இனக்கலவரத்தின்பின் மலையகத்தில் இருந்து மட்டக்களப்பிற்கு இடம்பெயர்ந்த மக்களுக்கு காணிகளை வழங்கி அவற்றில் வீடுகளையும் அமைத்துக் கொடுத்ததுடன் அம்மக்களுக்கான வாழ்வாதார உதவிகளையும் வழங்கி "எகெட்" நிறுவனம் பணியாற்றியது. கிழக்கிலங்கை அரச நிர்வாக கட்டமைப்பின்படி அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை என மூன்று மாவட்டங்களையும் உள்ளடக்கியதாகவே எகெட் நிறுவகத்தின் சமூகப்பணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெற்று வந்தது. எனினும் சமூகத்தேவைகளின் அடிப்படையிலும் 03 மாவட்டங்களுக்கிடையிலான தூரத்தினையும் நோக்குகையில் ஒரு நிறுவகத்தினால் செயற்திட்டங் களை நடைமுறைப் படுத்துவது பாரிய சவாலாகவே அமைந்திருந்தது. 1990ம் ஆண்டில் நாட்டில் நடைபெற்ற இனக்கலவரத்தின் பின்பான நிவாரண, புனரமைப்புச் செயற்திட்டங்களை இலகுவாக அமுல்படுத்தவேண்டி திருகோணமலை மாவட்டத்திற் கென தனியானதொரு "எகெட்" நிறுவகம் நிறுவப்பட்டது. அன்றுமுதல் திருகோண மலை "எகெட்" நிறுவகத்தின் செயற்பாடு கள் அனைத்தும் இயக்குனர் ஒருவரின் தலைமையில் தனிநிர்வாகத்தின்கீழ் கொண்டுவரப்பட்டன. தற்போது அருட்பணி. F.X.டயஸ் அவர்கள் இயக்குனராகப் பணியாற்றுகின்றார். மட்டக்களப் பைத் தலைமை இடமாகக் கொண்டு செயற்படும் "எகெட்"நிறுவகம் அம்பாறை மாவட்டத்தினையும் உள்ளடக்கி தனது செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

கடந்த 2004.12.26ஆம் திகதி நடைபெற்ற ஆழிப்பேரலை அனர்த்தத்தின்போது அளப்பரிய சேவை புரிந்து கிழக்கிலங்கையை மீளக்கட்டியெழுப்பி பெரும்பங்காற்றி யது மட்டக்களப்பு "எகெட்" நிறுவகம். வீடமைப்பு, சுயதொழில், கல்வி, உளநலச் செயற்திட்டங்கள் என சமூக நலன்புரித் திட்டங்கள் பலவற்றை முன்னெடுத்துச் செயற்படுத்தியது. ஆழிப்பேரலை அனர்த்தத்தின்பின் உடனடி நிவாரண உதவிகள், தற்காலிக தங்குமிடங்கள், பராமரிப்பு, கூடாரங்கள் வழங்கியமை, தற்காலிக வீடுகள் நிர்மாணிப்பு, நிரந்தர வீடுகள் நிர்மாணிப்பு, ஆழிப்பேரலை அனர்த்தத்திற்குள்ளான கிராமங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கியமை என பல்வேறு பணிகளையும் எகெட் நிறுவகம் மேற்கொண்டது. மட்டக்களப்பு "எகெட்" நிறுவகம் 4860 தற்காலிக வீடுகளை மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் நிர்மாணித்தது. ஆழிப்பேரலை அனர்த்தத்திற்குள்ளான மாவட்டங்களில் அதிகளவில் தற்காலிக வீடுகளை நிர்மாணித்தமைக்காக மட்டக்களப்பு "எகெட்" நிறுவகம் முன்னாள் ஜனாதிபதியிடமிருந்து விருதினையும் பெற்றுக்கொண்டது.

"எகெட்" நிறுவக வரலாற்றில் இயக்குனர்களாக அருட்தந்தையர்கள் சிறப்புற பணியாற்றியுள்ளனர்.

1. அமரர் அருட்பணி.நோபட் ஒக்கஸ் - இவரது காலப்பகுதியில்தான் கத்தோலிக்க திருச்சபையின் சமூகப்பணி ஒரு அமைப்பாக உருவானது.
2. அருட்பணி.அன்ரனி லியோ அடிகளார் கிழக்கிலங்கை மனிதவள மேம்பாட்டு நிறுவகம் "எகெட்"டின் முதல் இயக்குனராவார். (1980-1983)
3. அருட்பணி.F.A.J.சொய்ஸா(1983-1989)
4. அமரர் அருட்பணி.ஜோசப் டிக்கோணிங்(1989-1995)
5. அருட்பணி.C.V.அன்னதாஸ்(1995-1998)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. அருட்பணி..சிறிதரன் சில்வெஸ்ரர் 1998ம் ஆண்டுமுதல் இன்றுவரை மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களுக்கான "எகெட்" நிறுவகத்தின் இயக்குனராகப் பணியாற்றி வருகின்றார்.

## சமூகத்தொடர்பு நிலையம் (Social Communication Centre)

இரண்டாம் வத்திக்கான் சங்கம் சமூகத்தொடர்புத் துறையின் அவசியம் பற்றி அதன் பலம் பற்றி வலியுறுத்தியதை அடுத்து, இலங்கையிலும் சமூகத்தொடர்பு ஆணைக்குழு அமைக்கப்பட்டது. ஒவ்வொரு மறைமாவட்டத்திலும் தொடர்புத் துறை பொறுப்பாளர் ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன்படி 1971ம் ஆண்டு நவம்பர் மாதம் 1ம் திகதி **அருட்தந்தை நோபட் ஒக்கஸ்** அடிகள் தொடர்புத் துறையின் முதலாவது பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். தமது கம்பீரமான குரலில் பயனுள்ள கவர்ச்சியான மறையுரைகளையும், திருப்பாடல் களையும் வழங்குவதில் வல்லவராக இருந்த அருட்தந்தை அவர்கள் தொடர்புத் துறை பொறுப்பாளராக நியமிக்கப்பட்டமை மிகப் பொருத்தமானதாய் அமைந்தது. இவரது காலத்திலேயே கத்தோலிக்க தமிழ் வானொலி நிகழ்ச்சிகளை தயாரித்தளித்தல் ஆரம்பிக்கப்பட்டது. தற்போதுகூட தொடர்ந்து மறைமாவட்ட சமூகத்தொடர்பு நிலயத்தில் அரும்பணியாற்றி வரும் **மலர்வேந்தன்** அவர்கள் **அருட்தந்தை நோபட் ஒக்கஸ்** அடிகளாராலேயே வானொலித் துறைக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டார்.

1980ம் ஆண்டு பொறுப்பாளராக **அருட்தந்தை தியோபிலஸ் ராகல்** அடிகள் நியமனம் பெற்றார். இலங்கையில் இவர் காலத்திலேயே தொலைக்காட்சி சேவை ஆரம்பிக்கப்பட்டது.

1983 ஆம் ஆண்டில் **அருட்பணி. C.P. இராஜேந்திரம்** அடிகளார் பொறுப்பாளராகப் பதவியேற்றார். இவரது காலத்தில் சமூகத்தொடர்பு நிலையம் தனி அமைப்பாக உருவானது; கலையகமும் நிறுவப்பட்டது. வானொலி நிகழ்ச்சித்தயாரிப்பிற்கு மறை மாவட்ட நிலையம் நேரடிப் பொறுப்பேற்றது. வெரிதாஸ் வானொலி தமிழ்ப்பணியின் இலங்கை முகவராக திருகோணமலை – மட்டக்களப்பு மறைமாவட்ட சமூகத்தொடர்பு நிலையம் தெரிவுசெய்யப்பட்டது.

தொடர்புத் துறையின் முழு நேரப் பொறுப்பாளராக **அருட்பணி. C.P. இராஜேந்திரம்** நியமனம் பெற்றிருந்தார்.

திருமலை-மட்டக்களப்பு மேற்றிராசன ஐக்கிய சங்கம் 1969 பெப்ரவரி தொடக்கம் **தொண்டன** இதழை வெளியிட ஆரம்பித்தது. இதற்கு ஊக்குவிப்பாளராக இருந்தவர் திருகோணமலை – மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் அப்போதைய துணை ஆயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிவண. வ.தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்கள் ஆவார். 1983 நவம்பர் முதல் **தொண்டன்** சமூகத்தொடர்பு நிலையத்தால் வெளியிடப்பட்டது.

1983 ஆம் ஆண்டில் இருந்து வானொலி நிகழ்ச்சித் தயாரிப்புக்கள் சமூகத்தொடர்பு நிலையக் கலையகத்திலேயே நடைபெறலாயின. இதற்கான தனியான ஒலிப்பதிவுக் கலையகம் 1985 ஆம் ஆண்டின் இறுதியில் இருந்து இயங்கி வருகிறது.

நூல் வெளியீடுகள், ஒலிப்பதிவு நாடாத்தயாரிப்புக்கள், பிரசுர வெளியீடுகள், பயிற்சிக் கருத்தரங்குகள் போன்ற பணிகளில் நிலையம் ஈடுபட்டுவருகிறது. 1988 ஆம் ஆண்டில் இருந்து 1993 ஆம் ஆண்டு வரை அருட்பணி. பி. ஜோசப், அருட்பணி. கிங்ஸ்லி ரொபட் ஆகியோர் இயக்குனர்களாகப் பணியாற்றினர். 1994 இல் அருட்பணி. அ. தேவதாசன் அடிகளார் பொறுப்பாளராகப் பதவியேற்று 2000 ஆம் ஆண்டு மார்ச் வரை பணியாற்றினார். 2000 ஆம் ஆண்டு ஏப்ரலில் இருந்து அருட்பணி. ஜே. ஏ. ஜி. இரெட்ணகுமார் அடிகள் சமூகத் தொர்புத் துறையின் பொறுப்பாளராகப்பணியாற்றினார். 2006 ஆம் ஆண்டிலிருந்து அருட்பணி. றொகான் பேர்னாட் அடிகள் சமூகத்தொடர்புப் பொறுப்பாளராகப் பதவியேற்றுள்ளார்.

1902 நவம்பர் 20 இல் **வண. லியோ டியுபொன்ட்** ( Fr. Leo Dupont ) இயேசு சபை மேலாளராக நியமிக்கப்பட்டார். பிரான் சிலுள்ள **வலன்சியன்ஸ்** எனுமிடத்தைச் சேர்ந்த திரு. **A. Rombaux** என்பவர் வண. டியு பொன்டின் தந்தையாகிய **போல் டியுபொன்ட்** என்பவரது நினைவாக ஒரு மணியை அன்பளிப் புச் செய்தார். இம் மணி புனித மரியாள் ஆலயம், புனித அந்தோனியார் ஆலயம் இரண்டுக்கும் பயன்பட வேண்டுமென விரும்பி இரு ஆலயங்களுக்கு மிடையிலுமான ஒரு வளவினுள் இதனை நிறுவினார்.



பின்னர் புனித மரியாள் ஆலய மணிக்கோபுரம் அமைக்கப்பட்டதன் பின் மணி இக் கோபுரத்தில் பொருத்தப்பட்டது. இம்மணியில் பின்வரும் வாசகம் பொறிக்கப் பட்டுள்ளது. **"விசுவாசிகள் செபிப் பதற்காக உன்னால் அழைக்கப்படும் போதெல்லாம் அவர்கள் உழைக்கும் மக்களுக்கு அன்புடனும் விசுவாசத்துடனும் உதவி செய்பவர்கள் மீது இறை வனின் ஆசி பொழியப்பட வேண்டுமென வேண்டுவார் களாக."**



இம் மணிக்கு **"மரியா அந்தோனியா"** எனப் பெயரிடப்பட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புளியந்தீவில் கல்விக் கூடங்கள்

**புனித மிக்கேல் கல்லூரி**

யாழ்ப்பாண மறை மாவட்ட ஆயர் மேதகு பொஞ்சீன் ஆண்டகையவர்கள் மட்டக்களப்புப் பகுதியில் கல்விப் பணியை ஊக்குவிப்பதற்காக அருட் தந்தை. பிரான்ஸிஸ் சேவியர் அடிகளாரை மட்டக்களப்பிற்கு அனுப்பி வைத்தார். அடிகளாருக்கு ஒரு பாடசாலையை ஆரம்பிக்கும்படி பணிப்புரை வழங்கப்பட்ட தோடு ஐந்நூறு ரூபா பணமும் வழங்கப்பட்டது. அக் காலத்திற் பெரிய தொகையான இப் பணத்துடன் மேலதிகப் பணமும் சேர்த்து இச் செயல்வீரர் மூன்று பாடசாலைகளை உருவாக்கினார். அவையாவன, புனிதமிக்கேல் ஆண்கள் ஆங்கில பாடசாலை, புனித கார்மேல் பெண்கள் பாடசாலை, புனித மரியநாயகி ஆண்கள் தமிழ்ப் பாடசாலை என்பனவாகும். அருட் தந்தை பிரான்ஸிஸ் சேவியர் அடிகளாரின் அயரா நற்பணிகள் பற்றி இந்நூலின் பிற பகுதிகளில் விரிவாகக் கூறப்படுகின்றது.

புனித மிக்கேல் பாடசாலை 1873ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் உருவாகியது. தற்போது புனித மரியாள் இணைப்பேராலயத்தின் சக்கிறிஸ்தியாக உள்ள பகுதியிலேயே ஆரம்பத்தில் பாடசாலையின் வகுப்புகள் நடத்தப்பட்டன. 1874ஆம் ஆண்டில் புனித மரியநாயகி ஆண்கள் தமிழ்ப்பாடசாலையின் கட்டடத்திற்கு மாற்றப்பட்டது. இதனாலேயே தற்போது புனித மிக்கேல் கல்லூரியின் கனிஷ்ட பிரிவு இயங்கும் வீதி புனித மிக்கேல் வீதி எனப் பெயர் பெற்றது.

புனித மிக்கேல் பாடசாலையின் முதலாவது தலைமையாசிரியர் திரு.யோசப் ஆபிரகாம் ஆவார். இவர் 1876 இலிருந்து 1924 வரை கடமையாற்றினார். அப்போதிருந்த பாடசாலைக் கட்டிடம் கிடுகுகளால் வேயப்பட்டு பத்து கற்தூணகளைக் கொண்ட ஒரு நீண்ட மண்டபமாக இருந்தது. தரை களியால் பரவப்பட்டிருந்தது. வகுப்புகள் சிறிய தடுப்புகளாற் பிரிக்கப்பட்டிருந்தன. இந்தக் கட்டிடம் கற்போருக்கும், கற்பிப்போருக்கும் எவ்வளவு வசதிக் குறைவானதாக இருந்திருக்குமென நாம் கற்பனை செய்து பார்க்கலாம்.

இயேசு சபைக் குருக்கள் 1895இல் பாடசாலையைப் பொறுப்பேற்றனர். மிகச் சிறந்ததொரு கல்லூரியை மட்டக்களப்பில் நிறுவ வேண்டும் எனும் தீவிர ஆர்வத்துடன் இவர்கள் செயற்பட்டனர். 1899இல் பழைய கட்டிடம் ஓடுகளால் வேயப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டது. இக் காலக்கட்டத்தில் 1902ஆம் ஆண்டில் உயர் நிலைப் பாடசாலையாகத் தரமுயர்ந்தது. ஒரு புதிய கட்டிடத்தை அமைப்பதற்காக நாற்பத்திரண்டு நிலச் சொந்தக்காரர்களிடமிருந்து நிலத் துண்டுகள் வாங்கப்பட்டு 1912ஆம் ஆண்டு ஜுலை 16 ஆம் திகதி புதிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. புனிதமிக்கேல் கல்லூரியின் சிற்பி, கல்லூரியின் தந்தை என்றெல்லாம் வர்ணிக்கப்படும் வண.பேடினண்ட் பொனல் அடிகள், வண.சகோ.றைற் ஆகியோரின் கடின முயற்சியாலும், உழைப்பாலும் கட்டிட வேலைகள் துரிதமாக நடைபெற்றன. அரைகுறையில் பூர்த்தியாகியிருந்த கட்டிடத்தில் குருக்கள் 1915ஆம் ஆண்டு வைகாசி மாதம் 03ம் திகதி குடியேறினர். மட்டக்களப்பிலேயே முதன் முறையாக மின்சாரத்தை அறிமுகம் செய்வதற்காக 1922 ஆம் ஆண்டில் புதிய கட்டிடத்தில் மின் கலங்களில் இயங்கும் மின் குமிழ்கள் ஒளிர்ந்தன. காலப்போக்கில் கல்வியில் மட்டுமல்லாது விளையாட்டுத் துறையிலும் நாடளாவிய சாதனைகளை நிலைநாட்டும் கல்லூரியாக புனித மிக்கேல் கல்லூரி விளங்கியது.

இச்சாதனைகளுக்கெல்லாம் அடிப்படைக் காரணம் துறவியார்களின் நிர்வாகத்திற் கட்டி வளர்க்கப்பட்ட ஒழுக்கமும் மதப்பற்றுமாகும். இவையில்லாவிட்டால் புனித மிக்கேல் கல்லூரி பத்தோடு பதினொன்று எனும் அளவிலேயே இருந்திருக்கும். பலத்த எதிர்ப்புகளுக்கு மத்தியில் 1960 இல் அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்கத் தொடங்கியது. நலன்விரும்பிகளின் ஆதரவுடன் 1960 தொடக்கம் 1970 வரை கல்லூரி தனியார் கல்லூரியாகவே இயங்கியது. எனினும் நிதிப் பற்றாக் குறையால் கல்லூரியைத் தொடர்ந்து நடத்த முடியாமற் போனதால் 1970ஆம் ஆண்டில் ஆடி மாதத்தில் கல்லூரி அரசினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

**புனித மரியநாயகி தமிழ் ஆண்கள் பாடசாலை**

இப்பாடசாலை 1873ஆம் ஆண்டில் வண. பிரான்ஸிஸ் சேவியர் அடிகளாரால் ஆரம்பிக்கப்பட்டது. 1931 ஆம் ஆண்டில் புனித வளனார் சபைத் துறவிகளாற் பொறுப்பேற்கப்பட்டதும் மிகத் துரித வளர்ச்சி கண்டு, பல ஏழைச் சிறார்களுக்குக் கல்வியும் ஒழுக்கமும் கற்பித்து அருந்தொண்டாற்றியது. 1969ஆம் ஆண்டு வரை இப்பாடசாலை கல்விப் பொதுத்தராதரப்பத்திர சாதாரணதர வகுப்பு வரை கொண்டிருந்தது. பல அருட்தந்தையர்களினதும் ஆசிரியப் பெருந்தகை களினதும் ஆரம்பக் கல்வித்தளமாக இருந்து அவர்களை உருவாக்கியது இக்கல்விக்கூடமாகும். இதன் பெருமைக்கு அத்திவாரமாகவும் முழு முதற் காரணமாகவும் இருந்தது புனித வளனார் சபைத் துறவியரின் தன்னலமற்ற சேவையும் ஆற்றலுமேயாகும். பின்னர் இது 22.06.1987 இலிருந்து புனித மிக்கேல் கல்லூரியின் கனிஷ்ட பிரிவாக மாற்றப்பட்டது.

**புனித சிசிலியா மகளிர் மகாவித்தியாலயம் (தேசிய பாடசாலை)**

அருட்தந்தை பிரான்ஸிஸ் சேவியரின் தளராத பணிகளுக்கு மற்றுமொரு மகுடம் தான் தற்போதைய புனித சிசிலியா மகளிர் மகா வித்தியாலயம். அருட்தந்தை யவர்கள் ஆரம்பித்த மூன்று பாடசாலைகளில் புனித சிசிலியா பெண்கள் ஆங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிலப் பாடசாலையும் ஒன்றாகும். இது 69 மாணவிகளுடன் 1876இல் ஆரம்பிக்கப் பட்டது. பாடசாலையை ஆரம்பிப்பதும் கொண்டு நடத்துவதும் அவ்வளவு இலகுவான காரியமாக இருக்கவில்லை. அதற்கான காரணம் உரிய வளங்கள் கிடைக்காமையும் போதிய ஆசிரியர்கள் இன்மையுமேயாகும். 1893ஆம் ஆண்டில் கிழக்கு மாகாணம் திருகோணமலை எனும் புதியதொரு தனியான மறைமாவட்ட மாக்கப்பட்டதும் அதன் முதலாவது ஆயர் அதி வந். சாள்ஸ் லவிங் ஆண்டகை யவர்கள் 1900ஆம் ஆண்டில் இந்தியாவிற்குச் சென்று இப் பிரச்சினைக்கான தீர்வைத் தேடினார். அங்கிருந்து 3 சகோதரிகளை அவர் இலங்கைக்கு அழைத்து வந்தார். இவர்கள் சகோதரி மக்டலீனும் அவரது இரு சகோதரிகளுமாவர். இவர்கள் சிறந்த ஆசிரியைகளாகத் திகழ்ந்தனர். இவர்கள் பாடசாலையைப் பொறுப்பேற்றதுடன் பின்னர், அலங்காரத்தையல் என்பவற்றுக்காக ஒரு கைத் தொழிற் பாடசாலையையும் ஆரம்பித்தனர். 1910ஆம் ஆண்டில் குளுனியின் (CLUNY) புனித வளனார் சகோதரிகள பாடசாலையைக் கையேற்றனர். இவர்கள் பொறுப்பேற்றதும் மாணவிகள் தொகை உடனடியாக அதிகரித்தமையால் பாடசாலைக் கட்டிடத்தைப் பெரியதாக்க வேண்டிய தேவையேற்பட்டது.

இதற்காக இச் சபையினர் மாடிக் கட்டிடமொன்றை வாங்கினர். இக் கட்டிடத்தில் 140 மாணவிகளும் 17 விடுதி மாணவிகளும் இடம் பெற்றனர். குளுனி புனித வளனார் சபையாரின் தொகை குறைவுற்றமையால் இச் சகோதரிகள் 1920இல் இந்தியாவிற்குச் திரும்பிச் சென்றனர். அவ்வேளை அப்போஸ்தலிக்க கார்மேல் சபைக் கன்னியர்கள் பாடசாலையைக் கையேற்றனா.

1922 மே மாதம் 16ம் திகதி இவர்கள் பொறுப்பேற்றதும் பாடசாலை மிகத் துரித வளர்ச்சி கண்டு பரீட்சைகளில் பல மிகச் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றது. இந்த அருட்சகோதரிகளின் கடின உழைப்பும், தன்னலம் பாராத் தியாகங்களும், சிறந்த பயிற்றப்பட்ட ஆசிரியர்களின் பங்களிப்புமே இச் சிறப்புகளுக்குக் காரணங்களாகும். கார்மேல் சபையினரில் முதலாவது அதிபர் அருட் சகோதரி யூலாலி ( MOTHER EULALIE ) ஆவர். தற்போது அதிபராகக் கடமையாற்றும் அருட் சகோதரி எம்.எலிசபெத் அவர்கள் பதினெட்டாவது அதிபராவர்.

| | புனித மிக்கேல் கல்லூரி தேசிய பாடசாலை | | புனித சிசிலியா மகளிர் மகா வித்தியாலயம் தேசிய பாடசாலை | |
|---|---|---|---|---|
| | ஆசிரியர்கள் | மாணவர்கள் | ஆசிரியர்கள் | மாணவர்கள் |
| கத்தோலிக்கர் | 23 | 797 | 17 | 925 |
| பிற கிறிஸ்தவர்கள் | 11 | 229 | 05 | 168 |
| இந்துக்கள் | 70 | 1459 | 58 | 867 |
| இஸ்லாமியர் | 02 | 71 | 00 | 62 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மெதடிஸ்த மத்திய கல்லூரி**

1703 ஆம் ஆண்டில் ஜோன் உவெஸ்லி என்பவரால் இங்கிலாந்தில் தோற்றுவிக்கப்பட்ட மெதடிஸ்த சமயம் வெகு விரைவில் பல நாடுகளிற் பரவ ஆரம்பித்தது. கலாநிதி தோமஸ் குக் என்பவரும் தோழர்களும் 1813 டிசம்பர் 30 இல் இங்கிலாந்திலிருந்து இலங்கைக்கான பயணத்தை ஆரம்பித்தனர். எனினும் கலாநிதி குக் இடைவழியிலேயே இறைபதமடைந்தார். ஏனையோர் 1814ஆம் ஆண்டு ஜுன் 29ஆம் திகதி காலித்துறைமுகத்தில் வந்திறங்கினர். இவர்களில் **வில்லியம் ஓல்ற் ஐயரும்** ஒருவராவர். வில்லியம் ஓல்ற் ஐயர் அவர்கள் 1814இல் மட்டக்களப்பிற்கு வந்து தற்போதைய மெதடிஸ்த மத்திய கல்லூரியை ஆரம்பித்தார். இவர் வந்து ஒன்பது மாதங்களில் 1815 சித்திரை 01ம் நாள் இயற்கையெய்தினார். எனினும் இவரது அரும்பணியால் மெதடிஸ்த மத்திய கல்லூரி இன்றும் தலைநிமிர்ந்து நின்று பல பெரியோரை உருவாக்கியுள்ளது. அவரால் உருவாக்கப்பட்ட புளியந்தீவு மெதடிஸ்த தேவாலயம் நாட்டின் பழமை வாய்ந்த தேவாலயங்களுள் ஒன்றாகும்.

**வின்சன்ட் மகளிர் உயர்தர கல்லூரி**

இப் பாடசாலையும் மெதடிஸ்த சபையினரால் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் மட்டக்களப்பு முதலியார் தெருவில் இயங்கிய இப்பாடசாலை தொடங்கிய காலம் 1820 ஆம் ஆண்டாகும். இதனை உயர்தரத்திற்கு உயர்த்தப் பெரும்முயற்சி மேற் கொண்டவர் **அமி வின்சன்ற்** அம்மையாராவார். இவர் 1895இல் இப்பாடசாலையைப் பொறுப்பேற்று நடாத்தினார். அதனால் அவரது பெயரே பாடசாலைக்கும் சூட்டப்பட்டது. 1902 ஆம் ஆண்டில் ஆங்கிலப் பிரிவு, தமிழ்ப் பிரிவென இரண்டு பகுதிகளாகப் பாடசாலை பணியாற்றியது.

**ஆனைப்பந்தி ஆண்கள் உயர்தர பாடசாலை**

மட்டக்களப்பு நகரில் வசித்த சைவப் பெரியார்களது முயற்சியால் சைவ ஆங்கிலப் பாடசாலை தொடங்கப்பட்டது. 1902 இல் இதற்கான அடிக்கல் ஆனைப்பந்தி சித்தி விக்னேஸ்வரர் ஆலயத்தின் வடகிழக்கு மூலையில் நடப்பட்டு 1903 இல் முடிக்கப்பட்டது. பல சிரமங்களுக்கு மத்தியில் 1907 இல் அரசினர் உதவி நன்கொடை பெறும் கல்லடித் தெரு தமிழ் கலவன் பாடசாலையாக பதியப்பட்டது. இதன் முகாமையாளர்களாக முறையே சமாதான நீதிபதி க.முத்தையா, முதலியார் K.V. மார்க்கண்டு, அட்வகேட் சின்னையா ஆகியோர் பதவி வகித்தனர். இவர்களுடன் 1910ஆம் ஆண்டு முதல் 1924ஆம் ஆண்டு வரை மட்டக்களப்பு விவேகானந்தர் சபையினரும் பாடசாலை வளர்ச்சியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்கேற்றனர். 1925ஆம் ஆண்டு முதல் பாடசாலையின் நிர்வாகம் சுவாமி விபுலானந்தர் அவர்களால் இராமகிருஷ்ண சங்கத்தின் சார்பாக கையேற்கப்பட்டது. இப் பாடசாலையில் S.S.C (SENIOR SCHOOL CERTIFICATE) வகுப்பு வரை கற்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

1936 இல் இப் பாடசாலை பிரிக்கப்பட்டு பெண்களுக்கான தனியான ஆங்கிலப் பாடசாலை ஐப்பசி மாதம் வைத்தியசாலை வீதியில் அமைந்திருந்த விவேகானந்தர் வாசிகசாலையில் 148 மாணவர்களுடனும், 4 ஆசிரியர்களுடனும் ஆரம்பமானது. பின்னர் இது 1945 இல் இருமொழி பாடசாலையானது. 1949இல் இப் பாடசாலை வளாகத்துள் பெண்களுக்கான பயிற்சிப் பாடசாலை இயங்கியுள்ளது.

1954 இல் உயிரியல் ஆய்வுகூடமும் 1957 இல் பொதுவான விஞ்ஞான ஆய்வுகூடமும் அமைக்கப்பட்டதுடன் விஞ்ஞான பாடங்களும், கலைப் பாடங்களுடன் துறைசார் ஆசிரியர்களால் கற்பிக்கப்பட்டுள்ளன. இப் பாடசாலை இன்றும் தொடர்ந்து ஆனைப் பந்தி இராமகிருஷ்ண மிஷன் பெண்கள் பாடசாலையாக இயங்கி வருகின்றது.

இதே வேளை மூலப் பாடசாலையான ஆண்கள் பாடசாலை 1957 இல் புதிதாகக் கட்டடங்கள் கட்டப்பட்டு புனரமைக்கப்பட்டதாக அறியமுடிகிறது. அவ்வேளையில் பாலர் பாடசாலை முதல் சிரேஷ்ட பாடசாலை வகுப்புக்கள் ஈறாக கற்பிக்கப் பட்டுள்ளன. 1978 இன் பின் புயல் காரணமாக பாடசாலைக் கட்டடம் முழுமையாகச் சேதமுற்றதால் அதன் பின் இப் பாடசாலை இயங்கவில்லை என அறியப்படுகின்றது.

1897 மே மாதத்தில் Fr. Ourterley தன்னாமுனையில் பணியாற்றும் போது காய்ச்சலால் பீடிக்கப்பட்டார். மட்டக்களப்புக்குத் திரும்பிய போது நோய் அதிகரித்து 17ம் திகதி பி.ப.2.15 மணியளவில் இறைபதமடைந்தார். சிறந்த குருவான இவர் எப்போதும் சொல்வது: " I am ready for anything. I have no preferences" இவருடைய இறுதிச் சடங்கில் இந்துக்கள், முஸ்லிம்கள், புரட்டஸ்தாந்தர் என மிகப்பெரிய கூட்டத்தினர் கலந்து கொண்டனர். புனித அந்தோனியார் ஆலயத்தில் பின்புறம் ஒரு கல்லறையில் இவரது உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது. திருகோணமலை மறை மாவட்டதிற்குத் தமது இன்னுயிரை ஈந்த முதலாவது பிரஞ்சுக் குருவான இவரது கல்லறைக்கு கோயில் திருநாளன்று மக்கள் ஊர்வலமாகச் செல்வது வழக்கமாக வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது பங்கில் திருநாட்கள்

திருநாட் கொண்டாட்டங்கள் வெறுமனே ஆடம்பரத்தை மட்டும் கொண்டவையல்ல. மாறாக எமது கலாசார விழுமியங்கள், அன்புறவு, இறைபக்தி என்பவற்றின் வெளிப்பாடுகளாகவும் அமைகின்றன.

**நத்தார் விழா**

பிறப்பு என பொருள்படும் 'நாட்டுஸ்' (NATUS - இலத்தீன் / NATALIS - இத்தாலிய மொழி) எனும் சொல்லிலிருந்து, நத்தார் எனும் சொல் இயேசு பாலனின் பிறப்புத் திருவிழாவுக்குப் பயன்படுத்தப்படுகின்றது. எத்திருநாட்களிலும் மிக மகிழ்ச்சியையும் மனக்கிளர்ச்சியையும் தரும் ஒரு திருநாளாக நத்தார் விழா விளங்குகின்றது. கிறிஸ்து பிறப்புத்திருநாளன்று நள்ளிரவு திருப்பலியில் கலந்து 'குளோறியா' எனப்படும் கீதத்தைப் பாடி பாலன்பிறப்புத் திருக்காட்சியைப் பார்த்து மகிழ்ந்து, திருப்பலியிற் கலந்து கொண்ட ஏனையோருடன் வாழ்த்துக் களைப் பகிர்ந்து வீடு செல்லும் ஆனந்தம் அவ்வருடம் பூராவும் மனதில் நிலைத்து நிற்கும்.

நத்தார் கொண்டாட்டத்தில் முதன்மை பெறுவது 'பாலன் குடில்' ஆகும். தடித்த கடதாசி, வைக்கோல் என்பவற்றைக் கொண்டு உருவாக்கப்பட்ட ஒரு குகையில் மாட்டுக் கொட்டகை போன்ற மாதிரி இடம் தயாரிக்கப்பட்டு தேவதாய், சூசையப்பர், இடையர்கள், மாடு, ஆடு, ஒட்டகம் எனும் சுரூபங்கள் அதில் வைக்கப்பட்டிருக்கும். யாவற்றுக்கும் மத்தியில் திருப்பாலனின் சுரூபம் தீவனத்தொட்டியில் கிடத்தப்பட்ட வடிவத்திலிருக்கும். பாலன் குடிலின் முன்புறம் ஒரு திரையால் மூடப்பட்டிருக்கும். 'குளோறியா' பாடப்படுகையில் ஆலய மணிகளின் ஆர்ப்பரிப்புக்கு மத்தியில் திரை திறக்கப்படும். 'GLORIA IN EXCELSIS DEO' (உன்னதங்களிலே இறைவனுக்கு மகிமை) எனும் வாசகத்தைத் தாங்கிய ஒரு தேவதூதனின் சுரூபம் மேலிருந்து கம்பியின் மூலம் குடிலின் மத்திக்கு இறக்கப்படும். இக்காட்சியைக் கண்ணுறும் மக்கள் மனம் மகிழ்ச்சியால் நிரம்பும். தொடரும் திருப்பலி நிறைவுறும். வாழ்த்துக்கள் பரிமாறப்பட்டபின் வீடு செல்வோர் அதிகாலையிலேயே உறவினர் வீடு சென்று வாழ்த்துக்கள் தெரிவித்து இனிய சிற்றுண்டி வகை அருந்தி மகிழ்வர். பட்டாசு சத்தம் இல்லாத கொண்டாட்டமே இல்லை. நத்தார் காலத்தில் சின்னஞ்சிறாரா அல்லது பெரியவர்களா கூடிய மகிழ்ச்சியைப் பெறுகின்றனர் என்பதை இலகுவாகக் கூறமுடியாது.



ஆலயத்தைப் போன்றே வீடுகளிலும் பல்வேறு வடிவங்களில் பாலன் குடில் அமைக்கப்படும். சவுக்கு மரத்தின் கிளைகள் கிறிஸ்மஸ் மரமாக (CHRISTMAS TREE) கருதப்பட்டு குடிலை அலங்கரிக்கும். பாலன் குடில் வண்ண மின்சார விளக்குகளால் அலங்கரிக்கப் பட்டிருக்கும். பாலன் குடில் அமைக்கப்படாத வீடுகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையான சவுக்கு மரக்கிளை அல்லது பிளாஸ்ரிக்கிலான மரம் வீட்டு மண்டப மத்தியில் அமைக்கப்பட்டு வண்ணச் சரங்களாலும் மின்விளக்கு களாலும் அலங்கரிக்கப்பட்டிருக்கும்.
தற்போது 'குளோறியா' பாடப்படுகையில் (ஆலய முன்வாசலிலிருந்து) சம்மனசுக்களின் வடிவத்தில் அலங்கரிக்கப்பட்ட சிறுகுழந்தைகள் கையில் பாலனின் சுரூபத்தை ஏந்தியவர்களாக குருவுடன் பாலன் குடிலுக்குச் சென்று சுரூபத்தை வைப்பர். இதுவொரு கண்கொள்ளாக் காட்சியாகும்.

நத்தார் தினத்தை அடுத்து வருவதும், நாம் தற்போது 'திருக்காட்சித் திருவிழா' என அழைப்பதுமான ''மூவரசர் திருவிழா'' புளியந்தீவில் எவ்வாறு கொண்டாடப்பட்டது என்பதை ஆசிரியர் திலகம் எஸ். பிரான்சிஸ் அவர்கள் பின்வருமாறு வர்ணிக்கின்றார்.

தைமாதம் 6ந் திகதி மூவரசர் திருநாள் (திருக்காட்சித் திருநாள்). 6ந் திகதிக்கு அடுத்துவரும் ஞாயிறு பிற்பகல் 2 மணிக்குக் கீழ்த்திசை ஞானிகள் மூவர் புளியடிக்குடா, சின்ன உப்போடை, பெரிய உப்போடை மூன்றிடங்களிலிருந்தும், மட்டக்குதிரை, கழுதை போன்றவற்றில் ஏறி, புளியந்தீவுப் பாலத்தில் சந்தித்து ஏரோதின் அரண்மனைக்குச் செல்வர். இது மிராண்டா மளிகைக் கடை (வூட்லன்ஸ்) விறாந்தையில் அமைக்கப்பட்டிருக்கும். பின்பு புனித அந்தோனியார் தேவாலயத்துக்குட் சென்று தேவபாலகனைச் சந்தித்துப் பொன், தூபம், வெள்ளைப்போளம் ஆகிய மூன்று காணிக்கைகளையும் செலுத்தி வணங்கிநிற்பர்.

நத்தார்த் திருவிழா இரு ஆண்டு மாதா கோவிலிலும், மூன்றாம் ஆண்டு புனித அந்தோனியார் கோவிலிலும் நடைபெறும். எனவே இரு ஆண்டுகளின் பின்தான் இது நடைபெறும். புனித அந்தோனியார் கோயில் பங்கைச் சேர்ந்த கத்தோலிக்கர் குடியேற்றங் காரணமாகப் புளியடிக்குடா, சின்ன உப்போடை, பெரிய உப்போடை ஆகிய மூன்று இடங்களிலும் சென்று வசிக்கின்றனர். உறவுமுறைகளைப் புதுப்பித்துப் புதுவருடத்தைக் கொண்டாடும் முகமாகவும் இச்சரித்திரக் காட்சி (PAGEANT) தத்ரூபமாகக் காட்டப்படும்.
நத்தார் விழாவை அக்காலத்தில் குழுக்களாக சேர்ந்து கொண்டாடி மகிழ்ந்துள்ளனர். புளியந்தீவில் பலர் சேர்ந்து பெரிய மரத்தில் நீண்ட ஊஞ்சல் கட்டி ஆடிக்களித்துள்ளனர். இவ்வாறு ஊஞ்சலாடும்போது ''ஊஞ்சற்பாட்டு'' எனும் வடிவத்தில் பல பாடல்களைப் பாடினர். பின்வரும் பாடலுடன் ஊஞ்சலாடத் தொடங்குவர்.

'கன்னி மரியே கர்த்தரின் தாயாரே
கருணாகரக் கடலே - தாசன்
உன்னினேன் என்பாதம் ஊஞ்சலில் பாடவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒத்தாசை செய்திடுவீர்'

ஊஞ்சலாட்டத்தில் பின்வரும் பாடல்களும் தொடரும்:

'அன்றென றோமையில் சந்திரன் மூன்றாய்
துலங்கியே தோன்றினதே - அது
தந்தை சுதன் ஸ்பிரித்துசாந்து நற்
சூட்சுமமானதுவே'

'ஆதி ஆதாம் செய்த பாவமதானது
ஆதிரை மானிடர்க்கே - எய்த
அந்தப்பாவம் தீர இந்தப் புவி தன்னில்
ஆதிபரன் சுதனானார்'

இவ்வாறு சமூகக் களிப்புடனும், வாழ்த்துக்களுடனும் வளர்ந்த இனிய கொண்டாட்டம் தற்போது கைத்தொலைபேசியுடனான வாழ்த்துக்களுடன் மட்டுப்படுத்தப்படுகின்றது. எதிர்காலம் எப்படி அமையுமோ?

தற்காலத்தில் டிசம்பர் மாதம் ஆரம்பித்ததும் ஒளிவிழா கொண்டாடுவது வழக்கமாகியுள்ளது. பங்குரீதியாக, பாடசாலைகளில், அரச அலுவலகங்களில் ஒளி விழாக்கள் நடைபெறுகின்றன. பங்குகளிலும், பாடசாலைகளிலும் சிறுவர்களைக் கொண்டு விழா நடத்தப்படுகின்றது. கலை நிகழ்ச்சிகளும், பரிசளிப்புக்களும், விழா இறுதியில் பாலன் பிறப்புத் திருக்காட்சியும் நடைபெறும். அரச அலுவலகங்களில் இவ்விழா நத்தார் நினைவுகள் எனும் பெயரில் ஓர் ஒன்றுகூடல் (GETTOGETHER) நிகழ்வாகவும் அமைந்து விடுகின்றது. அலுவலகம் அலங்கரிக்கப்பட்டு, நத்தார் கீதங்கள் ஒலிபரப்பப்பட்டு கிறிஸ்தவ குருமார் மற்றும் பெரியார்களின் உரைகளும், கலை நிகழ்வுகளும் இடம்பெறுகின்றன.

**புத்தாண்டுக் கொண்டாட்டம்**

நத்தார் விழாவன்று போலவே புத்தாண்டுப் பிறப்பும் நள்ளிரவுத் திருப்பலியுடன் வரவேற்கப்படுகின்றது. மார்கழி மாதம் 31ஆம் திகதி இரவு 11.45 மணிக்கு திருப்பலி ஆரம்பமாகும். 'உன்னதங்களிலே' பாடலுடன் புத்தாண்டு பிறக்கும். ஆலய மணிகள் ஒலிக்கும். தற்காலத்தில் படையினரின் துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் ஆலய மணிகளுடன் சேர்ந்து கொள்கின்றன. இது பிறக்கும் ஆண்டு அமைதியற்ற ஆண்டாக இருக்குமென முன்கூட்டியே கட்டியம் கூறுவது போன்றிருக்கும். இந்நிலை ஏறத்தாழ கடந்த 15 வருடங்களாகத் தொடர்ந்து மக்களை அச்சத்தில் ஆழ்த்துகின்றமை கண்கூடு. இதனால் இருதயபுரம் போன்ற பகுதிகளில் திருப்பலியில் கலந்து கொண்டவர்கள் உயிரிழப்புகளுக்கும் ஆளாகியுள்ளனர்.

புத்தாண்டு கொண்டாட்டங்களில் புத்தாடை அணிதல், இனிய சிற்றுண்டி வகைகள் தயாரித்துப் பரிமாறுதல் என்பன விசேடமாக இடம்பெறும்.

நவம்பர் மாதம் பிறந்ததுமே நத்தார், புதுவருட வாழ்த்து மடல்களின் விற்பனை மும்முரமாக ஆரம்பிக்கின்றது. நத்தாருக்கு ஒரு வாரத்திற்கு முன்னர் பட்டாசு விற்பனை களைகட்டுகின்றது. சில சமயங்களில் இரண்டு வாரங்களுக்கு முன்னதாகவே சிறிதுசிறிதாக பட்டாசு சத்தம் கேட்கத் தொடங்கி விடுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு பாதுகாப்புக் காரணங்களுக்காக பட்டாசுப் பாவனை மட்டுப்படுத்தப்படுவதுமுண்டு.

நத்தார் கொண்டாட்டத்தின் மற்றுமொரு சிறப்பம்சம் 'கரோல்' எனப்படும் நத்தார் கீதம் இசைத்தலாகும். நள்ளிரவுத் திருப்பலி முடிவுற்றதும் இளைஞர்கள் குழு ஆலய முன்றலில் 'கரோல்' கீதமிசைக்கும். பின்னர் இரவு வேளைகளில் வீடுவீடாகச் சென்று பாடி மகிழ்கின்றனர். சமீப காலங்களில் இப்பழக்கமும் குறைவடைந்து வருகின்றது.

பாஸ்கு

திருநீற்றுப்புதன் வழிபாடுகளுடனும் அன்றைய ஒருசந்தி, சுத்த போசனத்துடனும் தவக்காலம் ஆரம்பமாகின்றது. ஒவ்வொரு நாளும் காலைத்திருப்பலியின் பின் விரும்பியோர் குழுவாகச் சேர்ந்து அல்லது தனியாகத் திருச்சிலுவைப்பாதை செய்கின்றனர். தினமும் காலை 5.00 மணி, 6.00 மணித் திருப்பலிகள் இருந்து வந்தன. 5.00 மணித்திருப்பலியின் பின்னர் தவக்காலத்தில் சுருக்கமான சிலுவைப்பாதை வழிபாட்டை ஆரம்பித்து வைத்தவர் அருட்தந்தை. ஹென்றி பொன்னையா அடிகளார் ஆவார். வெள்ளிக் கிழமைகளில் மாலையில் திருச்சிலுவைப்பாதையுடன் திருப்பலி. ஒப்புக் கொடுக்கப்படுகின்றது. குருத்து ஞாயிறு அன்று அதிகாலையில் ஒரு ஆலயத்தினின்று மற்றைய ஆலயத்திற்கு 'ஓசன்னா' ஆர்ப்பரிப்புடன் பவனி சென்று திருப்பலி இடம்பெறும். மறுநாள் திங்கட்கிழமை எண்ணெய் மந்திரிக்கும் சடங்கு நடைபெறும். இது ஒரு வருடம் திருமலை பேராலயத்திலும் மறுவருடம் புளியந்தீவிலுமாக மாற்றிமாற்றி செய்யப்படும்.

பெரிய வியாழனன்று மாலை வழிபாட்டில் கால் கழுவும் சடங்குடன் திருப்பலி நடைபெற்று திவ்விய நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பட்டு வைக்கப்படும். ஒவ்வொரு பக்திச் சபைக்குமென நேரம் ஒதுக்கப்பட்டு நள்ளிரவு வரை ஆராதனை நடைபெறும்.

பெரிய வியாழனன்று மாலை வழிபாட்டுடன் ஆலய மணிகள் ஒலிப்பது நிறுத்தப்படுகின்றது. இதற்குப் பதிலாக துக்கப்பறை எனும் (RATTLE) மரத்தினாலான சிறிய கருவி ஒலிக்கப்படுகின்றது. அதன் கைபிடியை இரு கைகளாலும் பிடித்துச் சுழற்றும்போது இச்சிறிய கருவி பெரியதொரு ஒலி எழுப்புகின்றது. முன்னர் இளைஞர்கள் பெரிய வியாழனன்று இரவில் வீதிகளில் துக்கப்பறையை ஒலித்துக் கொண்டு செல்வர். தற்போது இப்பழக்கம் அருகி வருகின்றது. ஆலயத்தில் மணி ஒலிக்க வேண்டிய நேரத்தில் இக்கருவி ஒலிக்கின்றது.

பெரிய வியாழனன்று எல்லா ஆலயங்களிலும் தேவநற்கருணை எழுந்தேற்றம் செய்து வைக்கப்பட்டிருப்பதால் மக்கள் இரவிரவாக வெண்ணாடை அணிந்தவர் களாய் தங்கள் ஆலயங்களுக்கும் ஏனைய அருகிலுள்ள ஆலயங்களுக்கும் சென்று தேவநற்கருணை சந்திப்புக்களில் ஈடுபடுவர். நற்கருணை எழுந்தேற்ற சந்திப்பு விடியவிடிய இருக்கும். பக்தர்கள் குழுக்களாக நடந்து சென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாண்டவன்வெளி, புளியடிக்குடா, வீச்சுக்கல்முனை ஆலயங்களைத் தரிசித்து வருவர்.

பெரிய வெள்ளியன்று காலையில் திறந்தவெளித் திருச்சிலுவைப்பாதை இடம்பெறும். ஆலயத்திலிருந்து புறப்படும் திருச்சிலுவைப்பாதை மத்திய வீதி, வைத்தியசாலை வீதி, வழக்கறிஞர் வீதி, புனித மிக்கேல் வீதி, புனித அந்தோனியார் வீதி, வெபர் வீதியூடாக ஆலயத்தை அடைகின்றது. சிலுவை சுமக்கும் ஆண்டவரின் திருச்சுரூபம் ஊர்வலத்தின் இறுதியில் வாகனத்தில் ஏற்றி செல்லப்படும். சிலுவைப் பாதையில் ஒவ்வொரு நிலைக்கும் தியானவாசகங்கள் (ஏற்கனவே ஒலிப்பதிவு செய்யப்பட்ட) வாசிக்கப்படும். ஊர்வலம் நகர்கையில் ஒலிபெருக்கியில் தியானப் பாடல்கள் இசைக்கப்படும். ஆலயத்தில் தனித்தனியாக நற்கருணை ஆராதனை இடம்பெறும். மாலையில் பெரிய வெள்ளி ஆராதனை இடமபெற்று திருச்சிலுவை முத்திசெய்து தேவநற்கருணை எழுந்தேற்றம் அகற்றப்பட்டு இறுதி ஆராதனையுடன் நிறைவு பெறுகின்றது. அன்று திருப்பலி நிறைவேற்றப் படுவதில்லை.

மாலையில் திருப்பாடுகளின் காட்சிகள் (பாஸ்கு) காண்பிக்கப்படுகின்றன. வண. சாள்ஸ் றிச்சட் (யே.ச) (1871 - 1949) அடிகளார் தெரிவிக்கின்றபடி தவக்கால ஆரம்பத்திலேயே காட்சிகள் காண்பிக்கப்படத் தொடங்கியுள்ளன. பரிசுத்த வாரத்தில் இந்நிகழ்வு விசேடமாக நடைபெற்றுள்ளது. திருப்பாடுகளின் பல்வேறு நிகழ்ச்சிகள் சித்திரிக்கப்பட்ட படங்களும், சுரூபங்களும் ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பபட்டன. குருத்து ஞாயிறன்று பன்னிரு சீடர்களதும் இயேசுவினதும் சுரூபங்கள் மூலம் ஜெருசலேம் பவனி காண்பிக்கப்படும். பெரிய வெள்ளியன்று மாலை ஆறு மணிக்கு ஆரம்பிக்கும் பாஸ்கு நிகழ்ச்சிகளைக் காணப் பெருந்திரளான மக்கள் ஆலய முன்றலிற் கூடுவர். ஆலயத்திலேயே இரவைக் கழிப்பதற்கான ஏற்பாடுகளுடன் உணவும், படுக்கப் பாயும் கொண்டு வருவர். சுரூபங்களைக் கொண்டே நிகழ்ச்சிகள் காண்பிக்கப்படுவதால் உயரமான மேடை அமைக்கப்படுவதில்லை. ஆயினும், ஆளுயரத்திற்கு மேல் தென்னங்குற்றிகளை நட்டு, கொக்கொட்டி மரக்கிளைகள், தென்னை ஓலைகள், தட்டிகள் ஆகியவற்றால் மறைக்கப்பட்டு அரங்கம் உருவாக்கப் பட்டிருக்கும். யூதர்கள், சீடர்கள் போன்றோரின் தலையுருவங்கள் நீண்ட கழிகளிற் பொருத்தப்பட்டு கழிகளுக்கு ஆடை அணிவிக்கப்பட்டு அவை சுரூபங்களாகப் பயன்படுத்தப்படும். அரங்கத்தினுள்ளிருப்போர் வெளியில் உள்ள பார்வையாளர் களுக்குத் தென்படமாட்டார்கள். அவர்கள் சுரூபங்களை ஏந்தியவர்களாய் வாசிக்கப்படும் 'பசான்' எனப்படும் வியாகுலப் பிரசங்கத்திற்கு ஏற்றவாறு, பொம்மலாட்டம் போன்று சுரூபங்களை அசைப்பர்.

சிலுவை மரணக் காட்சியே அனைவரது மனதையும் உருக்கும் துயரமும், பக்தியும் நிறைந்த காட்சியாக அமையும். நமதாண்டவரின் மரணிக்கும் நிகழ்ச்சி பூமியதிர்ச்சியைக் குறிக்கும் பாரிய வெடிச்சத்தத்துடன் நிகழும். உடனே பக்தர்கள் அனைவரும் எரியும் மெழுகுவர்த்திகளை ஏந்தியவர்களாய் முழந்தாட்படியிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மண்ணால் மனிதனை உண்டாக்கி' எனும் புலம்பல் பாடல் ஒரு குழுவினரால் பாடப்படும். இறுதியாக ஆண்டவரின் திருவுடல் சிலுவையினின்று இறக்கப்பட்டு, திருத்தாயார் மடியில் வளர்த்தப்பட்டு பின்னர் 'ஆசந்தி' எனப்படும் பாடையில் வைக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக சுமந்து செல்லப்படும். 'ஆசந்தி' மின்விளக்கு களால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். மின்சாரமற்ற காலங்களில் இது மெழுகுவர்த்தி களால் நிறைந்திருந்தது. 'ஆசந்தி' சுமப்பதற்காக நேர்கடன் செய்தவர்களும், பிற தெரிவு செய்யப்பட்டவர்களும் இதற்கென விசேடமாகத் தயாரிக்கப்பட்ட உடையும், தலைப்பாகையும் அணிந்தவர்களாய் ஆசந்தியைச் சுமப்பர். 'ஆசந்தி' நிலைமைக்குத் தக்கவாறு வீதிகளில் ஊர்வலமாகக் கொண்டுசெல்லப்படும். அல்லது ஆலய வளவினுள்ளேயே ஊர்வலம் நடைபெற்று திருவுடல் ஆலயத்திற்கு கொண்டு செல்லப்படும். இந்நிகழ்வுகள் நிறைவுற நள்ளிரவும் தாண்டக்கூடும். மக்கள் சோக உணர்வுடன் வீடு செல்வர்.

அக்காலத்தில் பாடுகளின் காட்சி மட்டுமல்லாது அதற்கு முந்திய பல நற்செய்தி காட்சிகளும் காண்பிக்கப்பட்டன. இயேசு மறுரூபமாதல், பாலைவனத்தில் சோதிக்கப் படுதல் போன்ற காட்சிகள் தத்ரூபமாக இடம்பெற்றன. திருப்பாடுகளின் காட்சிகளில் பங்குபற்றுவோர் தவக்காலத்தின் நாற்பது நாட்களிலும் உபவாசமிருந்து தம்மைத் தூய்மையாகப் பேணிக்கொள்வர்.

வண.றிச்சட் அடிகள் கூறுகிறார்:

சில சமயங்களில் வைத்தியசாலையில் மரணத்தறுவாயில் இருக்கும், திருமுழுக்குப் பெற விரும்பும் ஒரு பிறசமயத்தவரிடம் ''உமக்கு இயேசுவைத் தெரியுமா?'' எனக் கேட்டால் ''ஆம், அவர்தான் பாஸ்குவின்போது சிலுவையில் தோன்று கின்றவர்.'' எனப் பதிலளிப்பாராம்! அவ்வளவு பக்திபூர்வமான ஒரு நிகழ்ச்சியாகப் பாஸ்குக்காட்சி அமைந்திருந்தது.

உயிர்ப்பு ஞாயிறு திருப்பலியின் பின்னர் நமதாண்டவரின் உயிர்ப்புக் காட்சி காண்பிக்கப்பட்டது. பாரிய வெடியோசையுடன் ஆண்டவர் திருவுருவம் கல்லறை யினின்று வெற்றிக்கொடியுடன் வெண்ணாடையணிந்து எழும். பின்னர் திருச்சுரூபம் ஊர்வலமாகக் கொண்டுபோகப்பட்டு ஆலயத்தில் வைக்கப்படும். தற்போது பெரிய சனிக்கிழமை நள்ளிரவில் உயிர்ப்புத் திருப்பலி நிறைவேற்றப்படுகின்றது. சனிக்கிழமை இரவு 11.30 மணிக்கு ஆராதனைகள் ஆரம்பிக்கின்றன. ஆலயத்தினுள் விளக்குகள் அணைக்கப்பட்டு ஆலயத்திற்கு வெளியில் முன்றலில் மக்கள் ஒன்றுகூடுவர். புதுநெருப்பு ஆசீர்வதிக்கப்பட்டு, பின்னர் ஆலயத்தில் விளக்குகள் ஏற்றப்பட்டு மக்கள் உள்நுழைவர். தொடர்ந்து திருப்பலி நிறைவேற்றப்படும். திருப்பலியின்போது புதுத்தண்ணீர் மந்திரிக்கப்படும்.

தற்காலத்தில் சுரூபங்கள் தவிர்க்கப்பட்டு பாஸ்கு நிகழ்ச்சிகள் பெரிய வெள்ளியன்று மாலையில் நாடகமாக நடித்துக் காண்பிக்கப்படுகின்றன. அருட்பணி.யோசேப் மேரி (யே.ச) அடிகளார் தயாரித்து பிரமாண்டமான முறையில் காண்பித்த 'நீ எதிர்கொண்டதேன்' எனும் தலைப்பிலான நாடகம் பலரது கவனத்தையீர்த்து வரவேற்பையும் பெற்றது. இந்நாடகத்தில் புளியந்தீவு பங்கைச்சேர்ந்த பலரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்கேற்றிருந்தனர். திருமறைக்கலாமன்றத்தினர் காலத்திற்குக்காலம் இந்நாடக நிகழ்ச்சிகளைத் தயாரித்து வழங்குகின்றனர். பங்குகள்தோறும் இவ்வாறான பாஸ்கு நாடக நிகழ்ச்சிகள் நடக்கின்றன. சிலுவை மரணக்காட்சியும், ஆசந்தியும் மட்டும் சுருபங்களைக் கொண்டு காண்பிக்கப்படுகின்றன. இவ்வாறான நாடக நிகழ்ச்சிகள் இரசிக்கத்தக்கனவாயிருந்தும் எந்த அளவிற்கு முன்னைய காலங்களைப்போன்று பக்திபூர்வமாக அமைந்து, பக்திப்பரவசத்தை ஊட்டுகின்றன என்பது விமர்சனத்திற்குரியது.

**அன்னையின் ஆரோபணத் திருவிழா (ஆவணித் திருவிழா)**

ஆரோபண அன்னைக்கு அர்ப்பணிக்கப்பட்ட தூய மரியன்னை ஆலயத்தின் திருவிழா ஆவணி 15ஆம் திகதி கொண்டாடப்படுகின்றது. ஆரம்பத்தில் ஆவணி முதலாம் நாளன்றே கொடியேற்றத்துடன் தொடங்கி பதினைந்து நாட்களும் கொண்டாட்டங்கள் நடைபெற்றதாக அறிகின்றோம். பிற்காலத்தில்,இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் பின்னர் 6ம் திகதி தொடக்கம் 13ஆம் திகதி வரை பொது மக்களால் நவநாட்கள் சிறப்பிக்கப்படுகின்றன. இதற்காக புளியடித்தெரு (முதலாம் வட்டாரம்), கல்லடித்தெரு (இரண்டாம் வட்டாரம்), சிங்களவாடி (நான்காம் வட்டாரம்), மூன்றாம் வட்டாரம் பறங்கியர் சமூகம் ஆகிய இறை மக்களும், சொறிக்கல்முனை இறைமக்களும், பொதுச்சந்தை வர்த்தகர்களும், மரக்கூட்டுத்தாபன ஊழியர்களும் எட்டு நாட்களைச் சிறப்பித்தனர். தற்போது மரக்கூட்டுத்தாபன ஊழியர்களுக்குப் பதிலாக சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் சிறப்பிக்கின்றனர்.

14ஆம் திகதி மாலை 'வேஸ்பர்' எனப்படும் மாலை ஆராதனை நடை பெறுகின்றது. பின்னர் அன்னையின் திருச்சுருபம் நகருக்குள் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும். சுருப பவனி வரும் வீதிகள் அலங்கரிக்கப்பட்டு, வீட்டு வாயில்களின் முன்பாக வீதிகளில் அன்னையின் சிறிய, பெரிய, சுருபங்கள் வைக்கப்பட்டு மலர்களாலும், மின் விளக்குளாலும், அலங்கரிக்கப்பட்டிருக்கும். முன்பு திருச்சுருபம் மக்களாற் தாங்கி எடுத்துச் செல்லப்பட்டது. இக்காலத்தில் அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் வீதி வலம் வருகின்றது. மறுநாள் 15ஆம் திகதி ஆடம் பரத்திருப்பலியின் பின்னர் கொடியிறக்கப்பட்டுத் திருவிழா நிறை வுறும்.

**புனித அந்தோனியார் திருவிழா**

இத் திருவிழாவுக்கான கொடியேற்றம் ஆரம்ப காலங்களில் ஆனி மாதம் முதலாம் திகதியிலேயே இடம் பெற்று திரு நாள் முடிவுவரை நவநாட்கள் நடை பெற்றுள்ளன. பிற்காலத்தில் நவநாட்கள் ஒன்பது நாட்களாக மட்டுப் படுத்தப்பட்டு எட்டு நாட்கள் எட்டுப் பகுதியாராற் சிறப்பிக்கப்படுகின்றன. ஒவ்வொரு நாளும் மாலையில் விசேட மறையுரையுடன் கூடிய திருப்பலி ஒப்புக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்கப்படும். புனிதரின் திருநாள் ஜூன் மாதம் 13ஆம் திகதி எனினும் 13ஆம் திகதியின் பின்னர் வரும் ஞாயிற்றுக்கிழமையன்றே திருநாள் ஆடம்பரமாகக் கொண்டாடப்படுகின்றது. 13ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமையில் வருமாயின் அன்றே திருநாள் கொண்டாடப்படும். புனிதரின் திருச் சுரூபம் அலங்கரிக்கப்பட்டு வீதிகளுடாக வலம் வரும் (நவநாளின் கடைசி நாளன்று - திருநாளுக்கு முதல் நாளன்று) சில வீதிகளில் புனிதர் பட்டாசுச் சத்தத்துடன் வரவேற்கப்படுகின்றார். வீதி வலம் முடிந்து திருச்சொரூபம் ஆலயத்தை அடைந்ததும் நற்கருணை ஆசீர்வாதத்துடன் ‘வேஸ்பர்’ முடிவுறும். மறுநாள் திருநாள் ஆடம்பரத் திருப்பலி நிறைவேற்றப்படும். பின்னர் கொடியிறக் கப்பட்டு திருவிழா நிறைவுறும். அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சியும் இடம் பெறுவதுண்டு. மாலையில் ஆலயவளவினுள் விளையாட்டுப் போட்டிகளும், ஏனைய களியாட்ட நிகழ்ச்சிகளும் இடம்பெறுகின்றன. ஆன்மீக அலுவல்களில் கவனம் செலுத்து முகமாக விவிலிய வினாவிடைப் போட்டிகள், கட்டுரைப் போட்டிகள் என்பனவும் நடாத்தப்படுகின்றன.

**புனித லூர்து அன்னை திருவிழா**

பெப்ரவரி மாதம் 11ம் திகதி இத் திருவிழா கொண்டாடப்படுகின்றது. மரியாயின் சேனையினர் இத் திருநாளைச் சிறப்பிக்கின்றனர். இணைப்பேராலயத்திலுள்ள அன்னையின் கெபியில் (GROTTO) பெப்ரவரி 9ஆம்,10ஆம்,11ஆம் திகதிகளில் மாலையில் செபமாலை மறையுரையுடன் திருப்பலி நடைபெறுகின்றது.

**ஆண்டவரின் திரு உடல், திரு இரத்தப் பெருவிழா**

நமது பங்கில் புனித அந்தோனியார் ஆலயத் திருவிழாவை அடுத்துவரும் ஞாயிற்றுக்கிழமை இத்திருவிழா கொண்டாடப்படுகின்றது. ஞாயிறு மாலையில் புனித மரியன்னை ஆலயத்தில் எழுந்தேற்றம் செய்யப்பட்ட திவ்விய நற்கருணை ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும். மூன்று ஆசீர்வாதங்கள் நடைபெறும். இதிலே முதலாவது ஆசீர்வாதம். ஆரம்பத்தில் புனித மரியநாயகி பாடசாலை வளவில் நடைபெற்றது. பின்னர் சிறிது காலம் கத்தோலிக்க அச்சக வளவில் இடம் பெற்று, மீண்டும் புனித மரியநாயகி பாடசாலை வளவிற்கு மாற்றப்பட்டது. தற்போது புனித சிசிலியா கன்னியர் மடத்தில் நிகழ்கின்றது. இரண்டாவது ஆசீர்வாதம் புனித அந்தோனியார் ஆலயத்திலும் மூன்றாம் ஆசீர்வாதம் இணைப்பேராலயத்திலும் நடைபெறுகின்றது. ஆசீர்வாதங்கள் மறையுரையுடனேயே நிகழ்கின்றன. ஊர்வலம் செல்லும் வீதிகளில் வெண்ணாடை விரிக்கப்பட்டு சிறு குழந்தைகளால் மலர் தூவப்பட்டு வரவேற்புடன் ஆண்டவர் எடுத்துச் செல்லப்படுகின்றார். நாற் சதுரக்குடை பக்தர்களால் தூக்கப்பட குருக்கள் நற்கருணைக்கதிர்பாத்திரத்தை ஏந்திச் செல்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அமலோற்பவத் திருநாள்**

டிசம்பர் 8ஆம் திகதி கொண்டாடப்படும் இத் திருநாளில் புதுநன்மை வழங்கும் நிகழ்வு மேற் கொள்ளப்படுகின்றது. பெரும்பாலும் ஆயரின் தலைமையிலான திருப்பலியே புனித மரியன்னை ஆலயத்தில் நிறைவேற்றப்படுகின்றது. புதுநன்மை பெறுவதற்கான ஆயத்த வகுப்புகள் ஓரிரு மாதங்களுக்கு முன்னரே ஆரம்பிக்கப்பட்டு பிள்ளைகள் தயார்படுத்தப்படுகின்றனர். ஆரம்பத்தில் வெண்ணாடைகள் பகட்டான அலங்காரங்களுடன் தயாரிக்கப்பட்டு அணியப்பட்டன. இது பிள்ளைகளது மனங்களில் ஏற்றத் தாழ்வுகளையும், தாழ்வுணர்ச்சியையும் ஏற்படுத்தலாமெனக் கருதி பிற்காலத்தில் புதுநன்மை பெறுவோர் பாடசாலை சீருடைத் துணியையே (UNIFORM) அணிய வேண்டும் எனும் தீர்மானம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

**கிறீஸ்து அரசர் திருவிழா**

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் (பெரியாஸ்பத்திரி) அமைந்துள்ள சிற்றாலயத்தில் இத்திருவிழா சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. வைத்தியசாலையிலுள்ள வைத்தியர்களையும் ஏனைய வைத்தியசாலை உத்தியோகத்தர்களையும் கொண்ட குழு விழாவைக் கொண்டாடுவதற்கான ஒழுங்குகளைக் கவனிக்கும். மூன்று நாட்கள் நவநாள் நடைபெறும். முதலாம் நாள் வைத்தியசாலை உத்தியோகத்தர்களாலும், இரண்டாம் நாள் புளியந்தீவுப் பங்கு மக்களாலும் நவநாள் நடத்தப்படும். மூன்றாம் நாள் பொது நவநாளாகும். நான்காம் நாளான ஞாயிற்றுக்கிழமை காலைத் திருப்பலியுடன் திருநாள் நிறைவுறும்.

- 1800ஆம் ஆண்டில் பஸ்கால் என்பவர் மட்டக்களப்புப் பகுதியில் ஆங்கிலேயரால் முதலியாராக நியமிக்கப்பட்டிருந்தார். இவரது சரியான வரலாறு தெரியாதுள்ளது. எனினும் இவர் ஒரு கல்விமானாகவும், அரசாங்கத்தில் செல்வாக்குள்ளவராகவும் திகழ்ந்திருக்கலாம். இவர் அக்காலப் பகுதியில் சொறிக்கல்முனைக்குச் சென்ற போது அங்கிருந்த இந்துக்கள் செபமாலை, சிலுவை, செபப் புத்தகங்கள் என்பவற்றை வைத்திருப்பதைக் கண்டார். இதற்கான காரணத்தை அவர்களிடம் வினவிய போது தங்கள் மூதாதையர் கத்தோலிக்கர்கள் எனவும் இவர்கள் மட்டக்களப்பிலிருந்து ஒல்லாந்தர்களால் விரட்டப்பட்டு நூறு ஆண்டுகளுக்கு முன்னரே சொறிக்கல்முனைப் பகுதியில் குடியேறினார்கள் எனவும் தெரிவித்தனர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்த்துக்கல் பாத்திமா அன்னை வருகை
11 வைகாசி 2003



நற்கருணை நாதர் ஊர்வலம்

அன்னையின் ஊர்வலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1902 இல் மட்டக்களப்பு



நாடக நடிகர்கள்



குடிசை வீடுகள்





புனித அந்தோனியார் ஆலயம்



கிராமவாசிகள்



[illegible]க்காக காத்திருத்தல்



தாண்டவன்வெளி காணிக்கை மாதா ஆலயம்





மட்டக்களப்பு வாவிக்கரை







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்த நாள் ஞாபகம் நெஞ்சிலே வந்ததே...

**எஸ். ஜோன்ராஜன்**

சின்ன வயதில் மாதாங்கோயில் என்னுடனேயே இருந்தது. அது இல்லாத நாட்களே எனக்கு நேர்ந்ததாக ஞாபகமில்லை.

பக்தி வெள்ளம் ததும்பும் ஒரு நன்னீர் ஏரியாகவும் அதில் திளைக்கும் மீன்களாகவும் நானும் மற்றவர்களும் அதனுள் இணைந்திருந்தோம். அப்படியொரு தோற்றப்பாடும் பரவசமும். பள்ளிக்காலத்திலும் பள்ளியை விட்ட பல வருடங்களும் இந்த இணைப்பு இருந்து வந்தது. ஆனால் எங்கேயோ ஒரு தொலை தூரத்தில் திருமணமும் குடும்ப வாழ்வும் தீர்மானிக்கப்பட்டுவிட்ட ஒரு தருணத்தில் இந்தக் கோயிலோடுள்ள உறவைத் தொலைத்து விட்ட மாதிரி இருந்தது.

அரிவரியிலிருந்து நான் கல்விகற்ற சென்மேரிஸ் பாடசாலை இக்கோயிலுக்குப் பின்னால் இருந்ததும் இக்கோயிலை ஊடறுத்தே, பலிபீடத்துக்கெதிரே முழந்தாட்படியிட்டுச் செபித்தும், அங்கு தூணுக்குத்தூண் ஒதுங்கியிருந்த ஆளுயர மாதா, சூசையப்பர், இருதய ஆண்டவர், சவேரியார், தெரேசம்மாள் சொரூபங்களின் திருப்பாதங்களை ஒன்று விடாமல் தொட்டுக் கொஞ்சியும் போகப்பழக்கப்பட்டிருந்ததும் ஒரு காரணம். இத்திருப்பாதங்களை தழுவித்தடவி முத்தி செய்வதில் அப்படி என்னதான் புண்ணியம் கிடைக்குமோ தெரியவில்லை. கோயிலுக்கு வரும் அனைவரும் அதைத்தான் விடாமல் செய்து கொண்டிருந தார்கள். அதனால் அந்தச் சொரூபங்களுக்கு அடிக்கடி வர்ணம் பூச வேண்டிய நிலை ஏற்பட்டது என நினைக்கிறேன்.

அது மாத்திரமல்ல, பின்னேரங்களில் பள்ளிவிட்டதும் விட்டுவிடுதலையான சிட்டுக்குருவிகள் போல வீட்டுக்கு விளையாடப்பறந்தோட முடியாதவாறு அனைவரும் மந்தைகளாய் இக்கோயிலுக்கு அழைத்து வரப்பட்டோம். அங்கே செபமாலை பிரார்த்தனை, நற்கருணை ஆசீர்வாதமென பலதிலும் முழங்கால் முட்டிதேய பங்குபற்ற வைக்கப்பட்டு, வீடு திரும்ப இருட்டுப்பட்டுவிடும். வீட்டுப் பாடங்கள் எதனையும் செய்ய முடியாதவாறு களைத்துப்போய்ப் படுக்கையை நாடுவோம்.

அதிலும் வைகாசி,ஆனி மாதங்களில் இந்த இம்சை அதிகமாகிவிடும். மாதா நவநாள், சூசையப்பர் நவநாள், சவேரியார், திரு இருதய ஆண்டவர் நவநாட்கள் யாவும் இம்மாதங்களில் தான் உண்டு. சமய ஆசிரியர் மரியாம்பிள்ளை விறதர் எங்களை விடமாட்டார். நடைநடையே மோட்சத்துக்கு வழிகூட்டி அனுப்பி விட்டுத்தான் மறுவேலை என்பது போல் கங்கணம் கட்டி நிற்பார். பின்னாளில் இத்தகைய சமய அனுட்டானங்களில் பக்தி சிரத்தை குறைந்து போனதுக்கு இந்த அடக்கு முறையான திணித்தல் தான் காரணமோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற ஐயம் எனக்கு எப்போதுமுண்டு, சனி, ஞாயிறு விடுமுறை நாட்களிலும் கூட நாங்கள் இக்கோயிலையே வளைய வந்தோம். உதைபந்தாட்டம், பிள்ளையார் கட்டை, கிட்டி, "புள்ளிறவுண்ட்" போன்றவை விளையாட இக்கோயிலைச் சுற்றியுள்ள வெளியை விட்டால் வேறு போக்கிடம் ஏது? கோயிலை ஒட்டியிருந்த பங்குத்தள இல்லத்தினுள் அயர்ந்திருக்கும் அருட் தந்தையர்கள் வெகுண்டெழுந்து விரட்டினாலும் கூட ஓய்ந்திடாது எங்கள் விளையாட்டு. எங்கள் பெற்றோர் பாஷையில் சொல்வதானால் இது தலையால தெறிப்பு!

எனக்கு சுமார் எட்டுப்பத்து வயதிருக்கும் போது, இந்த ஆலயத்தில் அடிக்கடி நிகழ்ந்த நிகழ்வொன்று இன்றும் பசுமையாக நினைவில் உண்டு.

செவ்வாய்க்கிழமை பின்னேரங்களில் நான் அம்மாவின் கரம் பற்றிக் கொண்டு இவ்வாலயத்தை ஊடறுத்து, அப்பாலிருந்த புனித அந்தோனியார் ஆலயத்திற்கு ஆராதனைக்காகப் போவேன். மாதாங் கோயிலுக்கும், அந்தோனியார் ஆலயத்திற்குமிடைப்பட்ட வளவில் அமைந்திருந்த ஆயர் இல்லத்திலிருந்து சிவப்பு அங்கியணிந்த, நெருப்புத்தணலின் நிறங் கொண்ட ஒரு முதிர்ந்த கம்பீரமான உருவம் கையில் செபமாலையுடன் வெளிப்பட்டு மாதாங்கோயிலை நோக்கி நடந்து வரும். இடையில் இவ்வுருவை எதிர் கொள்ளும் எவரும் அதன் காலடியில் மண்டியிட்டு வணங்கி அதன் கை விரல் மோதிரத்தை முத்தி செய்து ஆசீர் பெறுவர். என் தாயும் அதனை மண்டியிட்டு வணங்குவார். எனக்கென்னவோ அவ்வுருவைக் கண்டால் குலை நடுக்கம். அம்மாவின் முதுகுக்குப் பின்னே என்னை மறைத்துக் கொள்ள முயல்வேன். முகத்தில் வெண்ணிறத்தாடியும்,, மீசையும் அடர்ந்து, முதுகைத்தொடும் சடாமுடியும் வளர்த்து கண்டோர் கைதொழும் வண்ணம் விளங்கிய அவ்வுருவந்தான் ஆயர் "கஸ்ரன் றொபிஷே" என பின்னால் தெரிந்து கொண்டேன். அஞ்சிப் பயந்து அலறும் என்னை புன்னகையோடு கைபற்றி இழுத்தெடுத்து என் நெற்றியில் திருச் சிலுவை வரைந்து செபித்து ஆசீர்வதிப்பார் அவர். அமமாவுக்கு அது பேரானந்தம். சாட்சாத் யேசு பிரானையே கண்ணெதிரே கண்டுவிட்ட பரவசம். ஆயர் தொட்டு ஆசீர்வதித்த என்னை பரிசுத்த பண்டம் போல் பக்தியோடு பார்ப்பார். ஆனால் எனக்கென்னவோ அப்போது ஆயரில் பிடரியைச் சிலிர்த்துக் கொண்டு நிற்கும் சிங்கத்தின் முகமே தெரியும்.

அந்த ஆயர் பின்னேரங்களில் கையில் செபமாலையை உருட்டிய வண்ணம் நடந்து மாதாங்கோயிலுக்கு வந்து அங்கு பலிபீடத்துக்கெதிரே போடப்பட்டிருந்த மெத்தை வைத்த கதிரையில் முழந்தாட்படியிட்டு நெடுநேரம் செபிப்பதை தமது அந்திம காலம் வரை மேற் கொண்டிருந்ததை நான் கவனித்திருக்கிறேன். அவர் மறைந்த பின்னும் பூதவுடலை அடுத்தாரில் அவர் செபித்திருக்கும் இடத்திலேயே நல்லடக்கம் செய்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கோயில் பண்டு தொட்டு நாலைந்து தலைமுறைகளாக எங்கள் வாழ்வில் பிரிக்க முடியாத அம்சமாயிருந்தது. பிறப்பிலும், வாழ்விலும், இறப்பிலும் அது இணைந்திருந்தது. எனது திருமுழுக்கு, முதல் நன்மை, உறுதிப்பூசுதல் யாவுமே இங்கு நிறைவேறின. துகில் வெள்ளையில் காலணி, மேலணி, கரங்களில் வெள்ளிச்சரிகையால் சோடிக்கப்பட்ட நெடும் மெழுகுதிரி கொண்டு வெண்புறாக் கூட்டம் போன்ற உடன் பிள்ளைகளுடனே புதுநன்மை பெற்ற என்னை என் பெற்றோரும் உறவின் முறையாரும் பொன்னொரு தட்டு, பூவொரு தட்டாக வைத்துத் தாங்கினர். வானுகிலிருந்து வந்திறங்கிய சம்மன சாகவே போற்றினர். வீட்டுப் பாடங்கள், வேலைகள், எதுவுமில்லாமல் அன்று முழுவதும், அதன் பிறகு கொஞ்ச நாட்களும் சுதந்திரமாய் உலவக் கிடைத்தது குறித்து எனக்குப் பரம சந்தோஷம்.

எனது மட்டுமல்ல, பல தலைமுறைகளாக என் குடும்பத்தவர்களின் திருமுழுக்கு, முதன் நன்மை, உறுதிப்பூசுதல், மெய்விவாகம், இறுதிப் பயணம் யாவும் இக் கோயிலில் நுழைந்து ஆராதனை நடத்தாமல் நிகழ்ந்ததில்லை.

காலத்திற்கேற்றவாறு உலக் மயமாதலின் சூழலுக்கு ஏற்றவாறு இது நாள் வரை இருந்து வந்த அடிப்படைவாத சட்டதிட்டங்களிலிருந்து திருச்சபையானது ஓரளவு தன்னை தளர்த்திக் கொண்டுள்ளது தற்போது நிதர்சனமாகத் தெரிகிறது. சதிபதிகளாவதற்கு முன்னால் ஓர் ஆணும்,பெண்ணும் சந்தித்து மனம்விட்டுப்பேசி ஒருவரையொருவர் புரிந்து கொண்டு இல்வாழ்வில் இறங்க வேண்டுமென்ற கருத்தும் அதற்கான உளவியல் பயிற்சிகள் வழங்குதலும் இன்றைக்குத் திருச்சபையால் மேற் கொள்ளப்பட்டு வருவது கண்கூடு.

ஆனால் இதற்கு முன்னால் 20 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை திருமணம் பேசப்படுகிற ஆணும், பெண்ணும் சந்திப்பதோ, கூடிக் குலாவுவதோ, மனம்விட்டுப் பேசிப்பழகி இல்லறமாம் நல்லறத்திற்கு தங்களைத் தயார் செய்வதோ சாவான பாவமென தடை செய்யப்பட்டிருந்தது.

இவ்விதம் வார்த்தைப்பாடு கேட்கப்பட்ட ஆணும், பெண்ணும் கூடிக் கதைக் கிறார்களா, பெண்ணின் வீட்டிற்கு மாப்பிள்ளை போய்வரும் பழக்கத்தை வைத்துக் கொண்டிருக்கிறாரா என்பதையெல்லாம் அவதானிக்க கண்காணிப் பாளர்கள் பங்குத்தந்தையால் நியமிக்கப்பட்டிருந்தனர். இவர்களில் கள வொழுக்கம் கையும் மெய்யுமாய் பிடிக்கப்பட்ட மணமக்களுக்கு திருப்பலி பீடத்தின் முன்னிலையில் அல்லாமல், அடுத்தாரின் கம்பிக்கிறாதிக்கு வெளியே கைப்பிடிக்கும் சடங்கு நடந்தது. இதனை வாழ்நாளில் அவமானகரமான ஒரு காரியமாக விசுவாசிகள் கருதினர். இப்படி அடுத்தாருக்கு வெளியே திருச்சடங்கு நடத்தப்படும் கல்யாணங்கள் வாழ்நாள் முழுவதும் விளங்காமல் போய்விடும் என்ற ஐதிகமும் அந்நாளில் பலமாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதை விடக்கொடுமை கசையடி கொடுப்பது. மெய்விவாகத் திருச்சடங்கு நடப்பதற்கு முன் எசகுபிசகாக நடந்து பெண் கருத்தரித்து விட்டால், கெட்டது காரியம். அடுத்தாருக்கு வெளியே கைப்பிடிப்பதற்கு முன்னால் மாப்பிள்ளை யையும், பெண்ணையும் முழங்காலில் நிற்க வைத்து கசையடி கொடுப்பார் சுவாமியார். இது சின்ன வயதில் என் தாயுடன் இருந்து, பீதியில் விழிவிரிய நான் கண்டகாட்சி.

ஆனால் இப்போது எல்லாம் மாறிவிட்டது. பகிர்தலால் அன்னியோன்னியம் வளருமென்ற கருத்தில் சுவாமிமாரே மணமக்களை ஊக்குவிக்கிறார்கள். அதற்குத் தோதான உளவியல் வகுப்புகளையும் நடத்துகிறார்கள்.

என் பள்ளி நாட்களில் இவ்வாலயத்தில் நான் காண நிகழ்ந்த பாரபட்சம். தனிப்பட குடும்ப, உத்தியோக அந்தஸ்தில் உயாந்தவர்களுக் கென்றிருந்த தனியான ஆசன ஒதுக்கீடுதான். ஒவ்வொரு குடும்பமும் தமது செலவில் இந்த ஆசனங்களைச் செய்து போட்டு பெயரும் குறித்திருந்தன. அவர்கள் ஆசனத்தில் வீற்றிருக்க, இதரபக்த கோடிகள் நிலதில் குந்தியிருப்பர். பெரும்பாலான ஆண்கள் முகப்பில் கூடி நிற்பர். அக்காலத்தில் பூசை ஆராதனைகள் முழுக்க முழுக்க இலத்தீன் மொழியிலேயே நடந்தன. எனவே அதற்கும் சாதாரண விசுவாசிகளுக்கு மிடையே தொடர்பு இல்லாமல் போனது பூசை நடக்கிற நேரம் பெரும்பாலோர் தங்கள் பாட்டில் செபமாலை ஓதிக் கொண்டிருப்பர்.

"ஓசாலூத்தாரிஸ்....." மற்றும் "தாந்தும் ஏர்கோ சக்றமேந்தும்" பாடல்கள் இடம் பெறுகின்றன என்றால் அது நற்கருணை ஆசீர்வாதம் நடக்கப்போவதன் அறிகுறி. அவ்வேளையில் விசுவாசிகள் பக்தி சிரத்தையாய் முழந்தாட் படியிடுவரே தவிர, பாடல் வரிகளின் அர்த்தம் உணர்ந்து மன ஒன்றிப்பில் ஈடுபட்டதில்லை. காலப்போக்கில் வத்திக்கான் திருச்சங்கங்களில் இக்குறைபாடு சுட்டிக் காட்டப் பட்டதன் காரணமாக அந்தந்த நாட்டுச் சுதேச மொழிகளில் ஆராதனை நடை பெறுவது கட்டாயமானது.

பாடசாலை நாட்களில் ஞாயிறு பூசை எங்களுக்குக் கட்டாயமாக்கப்பட்டது. பூசைக்கு வந்து அதிபர் மரியதாஸ் விறதரிடம் பெயர் கொடாதவன் மறுநாள் பாடசாலையில் கடுமையாகத் தண்டிக்கப்பட்டான். ஒரு ஞாயிறு தினத்தில் விறதருக்கு எதிர்புற வரிசையில் நான் அமர்ந்து பூசை பார்த்தேன். மறு நாள் பாடசாலை போனதும் என்மீது புகார். "நான் பூசை பார்க்க வில்லையாம்" அங்குமிங்கும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தேனாம் என்று விறதர் கண்டித்தார். அதற்கு நான் பிழையை ஒத்துக் கொண்டு மன்னிப்புக் கேட்டிருந்தால் அடிவாங்காமல் தப்பியிருக்கலாம். எனக்கு வாய்க்கொழுப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போ, விறதரும் பூசை பார்க்கவில்லையா? எப்போதும் என்னையா பார்த்துக் கொண்டிருந்தீர்கள்? என்று கேட்டேனே ஒரு கேள்வி. விறதர் கோபாவேசம் கொண்டு ஒரு கையால் என் செவியைத் திருகிக் கோண்டே மறு கையிலிருந்த பிரம்பால் மூக்கு, முகம் பாராமல் விளாசினார் பாருங்கள். ஐயகோ, மறக்க முடியாத தண்டனை அது.

மட்டு- அம்பாறை மாவட்டங்களில் இருநூற்றாண்டுகளைத் தாண்டிய பங்கு ஆலயங்கள் மூன்று உள்ளன. ஒன்று, மேற்படி மாதாங்கோயில், மற்றவை தன்னாமுனை புனித வளனார் ஆலயமும், சொறிக்கல்முனை திருச்சிலுவை ஆலயமும். இம்மூன்றுக்கும் ஓர் ஒற்றுமையுண்டு. இன்றுவரை கிரமமாகப் பின் பற்றப்படுவதன் மூலம் அவ்வொற்றுமை பேணப்பட்டு வருகிறது. அதுதான் பாஸ்கா காட்சிகள்.

பெற்றோமக்ஸ் விளக்குகள் கூடப் பாவனைக்கு வராத நூற்றாண்டுக்கும் மேலான காலகட்டத்தில் தீப்பந்தங்களின் ஒளியில் உருவப் பொம்மைகளை வைத்து யேசுவின் திருப்பாடுகளின் காட்சிகள் காண்பிக்கப்பட்டதாக வண.பேர்ணியோலா, வண.ஜோன் வில்லியம் லேங் ஆகிய யேசு சபைத்துறவிகள் எழுதிய கிறிஸ்தவ மறை பரப்புதலின் வரலாற்று நூல்களிலிருந்து அறிகிறோம். இன்றுவரை இந் நிகழ்வுகள் பக்தி சிரத்தையுடன் பின்பற்றப்படுவதே எங்கள் மறைப் பாரம் பரிய பண்பாட்டின் கோலமாகும்.

சொறிக்கல்முனை பங்குத்தளத்தின் முதல் குருவானவராக அறியப்படும் யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகள் என்ற பிரஞ்சுத்துறவி, அழகிய தமிழில் இயற்றிய "பசாம்" என்கிற சோகக் கிரந்தமே இப்பாஸ்காக் காட்சிக்கான கதை வசனங்களைக் கொண்டிருந்தது. நல்ல குரல் வளமுள்ள ஒருவர் இப்பசாமை இராக மிழுத்துப்பாட அதற்கேற்ப காட்சிகள் இயக்கப்பட்டன.

இன்றுவரை அப்பசாம் வாசிப்புடனேயே பாஸ்கா காட்சிகள் காட்டப்படுவதிலிருந்து, அதற்கு நிகராகவோ, மாற்றீடாகவோ பாஸ்கா காட்சிக்கான கிரந்தங்கள் எழுதப்படவில்லையென்று தெரிகிறதல்லவா?

1960 காலகட்டமென்று நினைக்கிறேன். "மாதாங்கோயில் முகப்பில் வழமைபோல் பாஸ்கா காட்சிகள் காண்பிக்கப்பட்டன. கோயிலின் முகப்புக் கூரையின் உயரம் ஏறத்தாழ 50 அடி. இக்கூரையை கல்வாரி மலையாக்கி அதற்கு முன்பாக படிக்கட்டுகள் அமைத்து, யேசுநாதரை தோளில் சிலுவையைச் சுமந்த வண்ணம் முக்கித்தக்கி படிகளில் ஏறி கல்வாரியை அடையும் வண்ணம் தொழில் நுட்பத்திறனோடு காட்சி அமைக்கப்பட்டிருந்தது. எல்லோரையும் வாய்பிளந்து வியக்க வைத்த பிரமாண்டமான இக்காட்சியை வடிவமைத்தவர் ஜப்பான் செல்லத்தம்பி என்ற முதுபெரும் கலைஞர். அதுபோல தேவதாயானவள் சிலுவையடியில் நின்று கரங்களை விரித்து விழிகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறெடுத்து சிலுவையில் தொங்கும் தன் திருக்குமாரனைப் பார்த்து "மகனே! மரணத் தறுவாயில் நின்று எல்லோருக்கும் ஆறுதல் வார்த்தைகள் சொல்லும் நீ, பெற்ற தாயாகிய எனக்கு ஒரு பிரியவசனம் சொல்லக்கூடாதா? என்று பிரலாபிப்பதாக செய்யும் பாவனையும், அதற்கேற்ற பசாம் வாசகமும் உண்மையிலேயே காண்போர் நெஞ்சங்களை நெக்குருக வைத்தவை. இக்காட்சிக்குக் கண்ணீர் சிந்தாத மாதர்களே கிடையா தென்றால், செல்லத்தம்பியின் கலைத்திறனுக்குப் புகழாரம் இதைவிட வேறென்ன வேண்டும்.

இவரிடம் ஒரு சங்கடம்: யேசுநாதரோ, தேவமாதாவோ மேடையேறிய பின்னும் அவர்களைச் சும்மா விடமாட்டார். இழுத்து வைத்து சுத்தியலால் அடித்து திருத்த வேலைகள் செய்து கொண்டிருப்பார்.

பள்ளியிலும் எங்கள் நாளாந்த வழிபாடுகளுடன் சிலுவைப் பாதையும் சேர்ந்து கொள்ளும். காலையில் பள்ளியால் நடக்கும் சிலுவைப்பாதை. பின்னேரம் கோயிலால் நடத்தப்படும் வழக்கமான சிலுவைப்பாதை. இரண்டிலும் கலந்து கொள்ள வேண்டியது கட்டாயமானது. இரண்டிலும் கலந்து கொண்டு ஸ்தலத்துக்கு ஸ்தலம் விழுந்து மண்டியிட்டு முழங்கால் முட்டி தேய்ந்து நாங்கள் யேசுநாதர் படாத பாடெல்லாம் பட்டோம். இதையெல்லாம் மாணவரின் உரிமைக்கு எதிரான அடக்கு முறையாகக் கருதி நானும் சில மாணவர்களும் சேர்ந்து, பாடசாலையில் ஜனநாயகத்தைப் பேணுமாறும். துறவிகளுக்கென்றே வரையறுக்கப்பட்ட இத்தகைய செப தப ஒறுத்தல் முயற்சிகளிலிருந்து மாணவர்களுக்கு விடுதலை யளிக்குமாறும் அதிபருக்கு மொட்டைக்கடிதம் எழுதினோம். தபால் மூலம் அனுப்பப்பட்ட அக் கடிதம் அதிபரால் மாணவர்கள் முன்னிலையில் வாசித்துக் காட்டப்பட்டது. கடிதத்தின் கையெழுத்து என் சகமாணவன் தங்கராசா என்பவரின் கையெழுத்து போலிருப்பதாகக் கூறி அவனை மேடையிலேற்றி கதறக்கதற பிரம்படி கொடுத்தார் மரியதாஸ் விறதர். எங்களுக்கு நடுக்கமாயிருந்தது. நல்ல வேளை என் நண்பனொருவனை விட்டு அக் கடிதத்தை எழுதியிருந்த படியால் நான் பிடிபடாமல் தப்பித்தேன். ஆனால் அதன் பிறகு செபம்,தவம்,ஞான ஒடுக்கம் என்ற ஆக்கினைகள் அதிகமானது தான் மிச்சம்.

வீடுகளில் இரவில் "பசாம்" எனப்படும் வியாகுல பிரசங்கத்தை ஒருவர் இராகமிழுத்து வாசிக்க, குடும்பத்தவர்களும் அயலவர்களும் பக்தி சிரத்தையாய் அவரைச் சுற்றியிருந்து கேட்பர். தபசு காலத்தை அறிவிக்கும் இசைக்கருவி யொன்றும் அந்நாளில் நடைமுறையிலிருந்தது. "துக்கப்பறை"யென்பது அதன் பெயர் சிறிய மரப்பெட்டி போல் அமைந்து முனையில் இரு கைப்பிடிகளைக் கொண்டது. அதனைப் பற்றிப் பிடித்து சுழற்றினால் ஒரு கர்ணகடூரமான ஓசை இரைச்சலாக வரும். இப்படி பலகருவிகள் ஒன்று சேர்ந்து சுழற்றப்பட்டால், அப்பப்பா காது கன்னம் வைக்க முடியாது: ஆளோடு ஆள் பேச முடியாது!.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாஸ்கா காட்சிகளின் போது யேசு நாதர் சிலுவை சுமந்து கல்வாரி நடைப் பயணத்தை மேற் கொள்வது இந்தத் துக்கப் பறைகளின் ஓசையில் தான். இந்தக் கருவி இப்போது காணமல் போய் விட்டது.

சாதியச் சண்டைகள் தான் அந்தோனியார் ஆலயத்திலிருந்து பிரிந்து இந்த மாதாங்கோயில் தோன்றக்காரணமென வண.ஜோன் வில்லியம் லேங் என்ற யேசு சபைத் துறவி தமது PALM FRINGED COAST என்ற வரலாற்று நூலில் குறிப்பிட்டுள்ளார். இக்கோயில் உருவான பின்னரும் இதில் பாத்தியதை கொண்டாடிய கோயில் சுற்று வட்டக் கத்தோலிக்கர்களுக்கும், சிகை அலங்காரத் தொழில் செய்வோருக்கும், பறங்கியருக்குமிடையே சாதிப்பிரிவினைகள் மோதல்களைத் தோற்றுவித்தன. ஒரு சாபக்கேடுபோல் இப்பகுதிகளில் நிலவி வந்த கடுமையான சாதிப்பிரச்சினையென்பது பிரஞ்சு, அமெரிக்கத் துறவிகளுக்கு புதிரான விடயமாயிருந்தது. தங்கள் நோக்கமான மறைபரப்பும் பணி செவ்வனே நடக்க, இப்பிரச்சினைகளைச் சார்ந்து போய்வெல்ல வேண்டிய தேவையும் கட்டாயமும் அவர்களுக்கு இருந்தது. அதற்கிணங்க ஆராதனைகளையும், கோயிற்பணிகளையும் சாதிக் கொன்றாய்ப் பிரித்துக் கொடுத்து சமரசம் செய்தனர்.

பாஸ்கா காட்சிகளின் போது சிகையலங்கரிப்பாளர்களுக்கு யேசு சிலுவை சுமந்து செல்லும் பசாமின் ஆறாம் பிரசங்கமும், தனக்காரர்கள் எனப்படும் கோயிலின் சுற்றுவட்டக் குடியிருப்பாளர்களுக்கு யேசுவைச் சிலுவையிலறையும் ஏழாம் பிரசங்கமும், யேசு சிலுவையில் தொங்கி ஏழு திருவசனங்களைச் சொல்லி உயிர்விடும் எட்டாம் பிரசங்கம் பறங்கியர் சமூகத்துக்கும் பிரித்துக் கொடுக்கப்பட்டன. மரித்த யேசுவை சிலுவையிலிருந்து இறக்கி கல்லறைக்குக் கொண்டு செல்லும் ஆசந்தி சுமக்கும் பணிக்கு மூன்று சமூகங்களையும் சேர்ந்த இளைஞர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இவைகளெல்லாம் பெரும் போராட்டத்தின் பின்னரே தீர்வு காணப்பட்ட விடயங்கள். இச் சமரசத்தில் அந்தந்தக் கால கட்டத்து பங்குத் தந்தையர்களின் பங்களிப்பு போற்றத் தகுந்ததாயிருந்தது.

பாஸ்கா மண்டபத்தைச் சுற்றியுள்ள ஆளுயர வேலியடைப்பிற்கு மேலால் கையில் ஈட்டியுடன் சுற்றிவரும் உரோமைப் போர் வீரர்கள் ஒருவரோடொருவர் நெருங்கி குசுகுசுப்பது போன்ற பாவனை,அப்பொம்மைகளை இயக்குப வர்களால் உண்டாக்கப்படும்."அந்தப்பாதக யூதனுகள் ஆண்டவரை இன்னமும் என்ன ஆக்கினை செய்யப்போறானுகளாம். என்ன கதைக்கிறானுகள் எண்டு போய்க் காது குடுத்துக் கேட்டுவா! என்று என் அம்மம்மா வேலியோரம் என்னை அனுப்புவார்.நானும் போய் வேலிக்கிடுகில் காதை வைத்துக் கேட்டு விட்டு வந்து "ஒண்டும் விளங்கல்லையே" என்பேன் "போடா செவிடா" என்று எரிச்சலோடு என் காதைப் பிடித்துத் திருகி தலையில் குட்டுவார் அம்மம்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தளவுக்கு பார்வையாளர்கள் காட்சிகளோடு ஒன்றிக் கலந்து உருக்கத்தில் தோய்ந்திருந்தனர் என்பதைத்தான் இதன் மூலம் சொல்ல வந்தேன்.

பசாமின் எட்டாம் பிரசங்கத்தில் இறுதி வசனம். "பிதாவே என் ஆத்துமத்தை உமது கரங்களில் ஒப்புவிக்கிறேன்"! " எனப் பெருமூச் செறிந்து கூவிச் சொல்வார் ஆண்டவர். இதன் போது உடலை உன்னி உயர்ந்து தலையை நிமிர்த்தி வானை நோக்கி விழிகளை ஏறெடுத்து இதனைச் சொல்வதான பாவனை தொழில் நுட்பத்தால் உண்டாக்கப்படும். இந்நேரம் "டுமீல்" என்று எறிவெடியோசை சிலுவையடியிலிருந்து கேட்கும் . அத்துடன் ஆண்டவரின் தலை தொங்கிவிடும். வெடியின் அடர்த்தியான புகை நடுவே, ஒரு ஒல்லியான, முகத்தில் நீண்ட தாடியடர்ந்த வெள்ளுடை உருவம் எழுந்து நிற்கும். "யாருக்காகச் செத்தது?" என்று சிலுவையை நோக்கிக்கரம் நீட்டி கொச்சைத் தமிழில் அவ்வுருவம் உரத்துக் கேட்கும். அவர்தான் அப்போதைய பங்குத் தந்தை வண.வென்டன் புஷ் என்ற பிரஞ்சுத் துறவி. தானொரு வேத சாட்சியாக மரிக்கக் கிடைத்தால் தனக்கது பெரும் பாக்கியம் என அவர் தமது பிரசங்கங்களில் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

சாகுந்தறுவாயில் மரணப்படுக்கையில் அவரைச் சந்தித்த என்னை "நாமிருவரும் மோட்சத்தில் சந்திக்கலாம்" என நம்பிக்கையோடு என் கை பற்றி அவர் சொன்ன வார்த்தைகள் இன்றும் என் காதுகளில் ரீங்காரித்துக் கண்களைக் குளமாக்குகிறது. அவரின் இழப்பு உண்மையிலேயே பெரியது: வார்த்தைகளால் அளவிட முடியாதது.

ஆண்டவர் மரணிக்கும் அந்த இரவில் மின்னல், இடிமுழக்கம்,தேவாலயத்தின் திரைச்சீலை இரண்டாகக் கிழிதல் யாவும் தத்ரூபமாக செல்லத்தம்பியின் தொழில் நுட்பத்தால் உண்டாக்கப்படும். மரணிக்கும் வேளையும் கோயில் வளவெங்கும் பார்த்தால் குஞ்சு குருமான் உட்பட ஒவ்வொருவர் கையிலும் மெழுகுவர்த்திகள் சுடர்விடும். அனைவரும் முழந்தாட்படியிட்டிருப்பர். ஒரு மயான அமைதி காலித்திருக்கும் இந்த நிசப்தத்தைக் கிழித்துக் கொண்டு சிலுவையடியிலிருந்து, "மண்ணால் மனிதனை உண்டாக்கி, திவ்விய கருணையால் வல்லவனாக்கி, அவன் கையால் பாடுபடத் திருவுளமான என் தயாபர யேசுவே" "என்ற திருப் பாடுகளின் அகவல் கோரஸாகக்கிளம்பி, மனங்களை நெக்குருக வைக்கும், தங்கள் கன்ம பாவங்களுக்காக மனஸ்தாபப்பட வைக்கும் பாஸ்கா காட்சிகள் முடிந்து வீடு செல்வோர் அனைவரது நெஞ்சிலும் எதையோ இழக்கக் கூடாத ஒன்றை இழந்து விட்ட, விண்டுரைக்க முடியாத துயரம் கப்பியிருக்கும். மூன்றாம் நாளாம் உயிர்த்த ஞாயிறன்றே இழந்த கலகலப்புகள் மீண்டும் உயிர்பெறும்.

என்று உலகமயமாதல் நிகழ்ச்சித் திட்டத்தினை உலகம் தன்னில் உள்வாங்கிக் கொண்டதோ, அன்றிலிருந்து நாடுகள், இனங்கள், அரசாங்கங்கள் ஒன்றுக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றாகிவிட்டன. அமெரிக்காவில் அணுகுண்டு வெடித்தால் இலங்கையில் இருந்து கொண்டு காதைப் பொத்துகிறோம். இயற்கையில், சூழலில், பொருளாதாரத்தில் அதன் தாக்கத்தை உணர்ந்து தவிக்கிறோம். இன்று நாட்டுக்கு நாடு போர்கள் தவிர்க்க முடியாதவையாகி விட்டன. இலங்கையில் நாட்டுப்போர் இதில் மாண்டவர்கள் எத்தனை பேர்? அங்கவீனமுற்றவர்கள் எத்தனை பேர்? அனாதை களானவர்கள் எத்தனை பிள்ளைகள்? அழிந்த சொத்துக்கள் எத்தனை, எத்தனை? மனிதனில் மனிதன் நம்பிக்கையற்றுப் போனதே இந்த அவலத்ததிற்குக் காரணம்! இனியது உளவாக இன்னாதன செய்ததால் வந்தவினை! இன்றோ அழிவின் உச்சக் கட்டத்தில் இருக்கிறோம். இடையில் சுனாமி அனர்த்தம் வேறு நிகழ்ந்து, மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாக்கி விட்டது! நம் கதையை கந்தல் கந்தலாக்கி விட்டது!.

இந்த அனர்த்தங்களுக்கும் மாறுபாடுகளுக்குமேற்ப, குறித்த வரையறை களுக்குட்பட்ட ஆன்மீகப் பணிகளை பொதுவான மனிதநேயப்பணியாக மாற்றி விட்டது திருச்சபை. போரும் சுனாமியும் ஆள் பார்த்து அழிப்பதில்லை. அது போல நிவாரணம், புனர்வாழ்வு, புனரமைப்பு என்ற மனிதநேயப் பணிகளும் மதம், இனம், குலம் பார்த்துச் செய்யப்படக் கூடாதென்பதை தன் சமகாலக் கொள்கையாக வரித்துக் கொண்டது திருச்சபை.

சமாதானத்திற்கு சர்வமத, இன நல்லிணக்கம் காட்டினார் நமது ஆயர். சமாதான ஊர்வலங்களில் முன்னிலை வகித்து, இந்துக்கோயில், பள்ளிவாசல், பௌத்த விகாரை என்றில்லாமல் எங்கும் சென்று எல்லா மதத்தலைவர்களுடனும் இணைந்து அந்தந்த மத வழிபாடுகளில் கலந்து பலரும் வியந்து பாராட்டும் சிறந்த முன்னுதாரணமாய் விளங்கினார்.

மாற்றம் காலத்தின் தேவை. அது நிர்ப்பந்திக்கும் சூழலில் அதுவரை நாம் பின்பற்றி வந்த சம்பிரதாயங்கள், கட்டிக்காத்த கொள்கைகள்,கோட்பாடுகள், சனாதன தர்மங்க்ள் போன்றவற்றை விட்டுக்கொடுக்கவோ, அவற்றிலிருந்து படிப்படியாக விலகிக் கொள்ளவோ வேண்டுமென்பது தவிர்க்க முடியாததாகி விடுகிறது. இது மாற்றத்தின் ஒரு அங்கமே தவிர ஏமாற்றமல்ல: இதனால் ஏதோ குடியே முழுகி விட்டது போல் கலங்கத்தேவையில்லையென்பது எனது அபிப்பிராயம்.

இந்தக் கோயிலில் ஆவணியில் வரும் தேவதாயின் மோட்சாரோபணத் திருநாள் தான் மிக விசேடமானது. கொடியேற்றமே மேளதாளத்துடன் களை கட்டும் ஒன்பது நாள் நோவனை: பத்தாம் நாள் வேஸ்பர்,ஒவ்வொரு வட்டார இறை மக்களுக்கும் ஒவ்வொரு நோவனை,சாதி.இன ரீதியான தனித்தனி நோவனைக ளும் அதற்குள் அடங்கும். அந் நாளில் ஒவ்வொரு வட்டாரமும் ஒவ்வொரு நாளும் வேஸ்பர் நடத்துவது போல் மூன்று குருவானவர்களை வைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோவனைகளை ஆடம்பரமாக நடத்தும். இதில் பக்தியை விட, நானா நீயா என்ற போட்டியே பலமாகத்தொனிக்கும். இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தாற் போன்று 10 ஆவது நாள் வேஸ்பர் நடக்கும். அப்போது ஆலயமும் சுற்று வீதிகளும் மகரதோரணங்களாலும் வாழை மரங்களாலும்,விச்சை விச்சையாக பூக்கள் வெடித்த தென்னம்,கமுகம் பாளைகளாலும் குருத்துக்களாலும் சோடிக்கப்படும். வண்ண வண்ண மின்விளக்குகள் ஆலயத்தையும் சூழலையும் ஜோதிமயமாக்கும். நான்கு தெருக்களாலும் அலங்கரிக்கப்பட்ட திருச் சொரூபப் பவனிகோலாகலமாக நடந்து நற்கருணை ஆசீருடன் வேஸ்பரும் பாடி முடித்த பின், ஒருவாண வேடிக்கை நடக்கும் பாருங்கள்: அதனைக் காணக்கண்ண கோடி வேண்டும்!.

கோயிலின் வலது புறமாகவுள்ள தெருச்சந்தியில் பழமை வாய்ந்த ஒரு பேக்கரி இருந்தது. அன்றும் ,இன்றும் அதன் பெயர் நியூபேக்கரிதான்! இதன் உரிமையாளர் பெயர் சந்தியாப்பிள்ளை. நெடிய தாடியும், மீசையும், வெள்ளை வாலாவணியுமாக ஒரு சன்னியாசிக் கோலத்தில் இருப்பார். கோயில் விவகாரங்களில் பிரச்சினை கிளப்புபவரும் இவர்தான்: கோயில் திருநாட்கள் சிறப்புற நடக்க தன் பணத்தை வாரியிறைத்து முன்னின்று ஒத்துழைப்பு வழங்குபவரும் இவர்தான். இவரது அட்டகாசமான நெறிப்படுத்தலில் தான் இந்தவாண வேடிக்கை நடக்கும். சும்மா ஒரு மணி நேரத்திற்கு வாணங்கள் விண்ணிலும், மண்ணிலும் வண்ணவண்ண ஒளிப்பூக்களை அள்ளிச் சொரியும் இந்திரஜால வித்தையைக் கண்டு களிக்க ஊரே திரண்டுவரும். கிழக்கில் வேறெந்தக் கோயிலிலும் இப்படி வாணவேடிக்கை நடந்ததாக நான் கேள்விப்படவில்லை.

இதை விடப்பிரமாதம், மறுநாள் திருநாட் பூசையின் பின் நடக்கும் நெய்ச்சோற்று அன்னதானம்! இதற்கென படுவான்கரையிலிருந்து குடங்குடமாய் பசுநெய்யும், ஆட்டுக்கிடாய்களும் வந்திறங்கும். சமைக்கும் போது நெய்யும், இறைச்சியும், மசாலாவும் கூடி அமோகமாக மணந்து ஊரைக் கூட்டும். இன, மத பேதம் கடந்து அனைவரையும் சோற்றுக்காக வாயூறி வேகா வெயிலில் முண்டியடித்துக் கொண்டு வரிசையில் காத்து நிற்க வைக்கும். இந்த நெய்ச் சோற்றை இந்நாளில் காண முடியவில்லை. ஆனால் அது "புறியாணி" யென்ற பெயரோடு புதுவடிவமும், மணமும், குணமும், பெற்று உலவுவதைக் காண முடிகிறது.

தொன்றுதொட்டு வந்த இந்த அன்னதான வழக்கம் இடைநடுவே ஆயர் இக்னேசியஸ் கிளெனி ஆண்டகையால் நிறுத்தப்பட்டமைக்கு இதில் குறுக்கிட்ட சாதிப் பூசலே காரணமென அறிந்தேன்.

சாதி பார்த்து இது வரை தமிழர் சாதித்தது ஒன்றுமில்லை. பிரதேசவாதம் பேசி பிரிந்து போனது தான் மிச்சம். நம்மைத் தனித்தனித் தீவுகளாக்கி கூறு போட்டுள்ள இந்தப் பலவீனத்தால் நம் எதிரிகளுக்கே ஆதாயமென்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் எவ்வளவோ அனர்த்தங்களையும், அவலங்களையும், அனுபவித்தும் கூட புரிந்து கொள்ளவில்லையென்பது தான் வேதனை.

இவ்விதம் எவ்வளவோ சொல்லிக் கொண்டே போகலாம்! ஒரு தாயின் பாசத்தை, பரிவை, பெருமையை சொல்ல மகனுக்குக் கசக்குமா, என்ன? தொப்புள் கொடி உறவு என்கிறார்களே, அது இதுதானா? எவ்வளவு தான் பெருமை பெற்றிருந்தாலும், பல படிமுறையிலான போராட்டங்களால் ஒருபேராலயம் பிரமாண்டம் பெற்றிருந்தாலும், அவற்றையும் மீறி சமீப காலங்களில் இரத்தக்கறை களையும் தன் வரலாற்றில் அழுத்தமாகப் பூசிக் கொண்ட சம்பவங்களும் இப்பேராலயப் பிரகாரத்தினுள் நடந்துள்ளன என்பதையும் மனவருத்ததுடன் குறிப்பிட வேண்டியுள்ளது.

அவைதான் அருட்தந்தை சந்திரா பெர்ணாண்டோவும் (1988), ஜோசப் பரராஜசிங்கம் எம்.பியும் (2006) இவ்வாலயத்தில் வைத்து இனந் தெரியாதோரின் துப்பாக்கி வேட்டுக்களுக்கு இரையான துர்ப்பாக்கிய சம்பவங்கள்! மன்னிப்பை முழக்கமிட்டு இறைநேசத்தை வாழ்வாக்கிய சமாதானத்தின் தேவனின் சன்னிதானத்தில் இடம் பெற்ற அவலச்சாவுகள்.

பல வருடகால இடைவெளிக்குப்பின் இக்கோயில் மீண்டும் என்னுடன் தனக்குள்ள தொப்புள்கொடி உறவை புதுப்பித்துப் கொண்ட அற்புதத்தை இப்போது வியப்புடன் எண்ணிப் பார்க்கிறேன்.

அதாவது நான் கொழும்பில் பத்திரிகைத் துறையில் பல வருடகாலம் பணிபுரிந்து ஓய்வு பெற்றதும் எமது மேன்மைதங்கிய ஆயர் தமது மறைமாநில தொண்டு நிறுவனமொன்றில் பணியாற்ற என்னை அழைத்தார்! அதனால் சுமார் எட்டாண்டுகள் மீண்டும் இவ்வாலயத்தை ஊடறுத்தே பணிக்குச் செல்ல வேண்டிய கட்டாயம் எனக்கு ஏற்பட்டது. எனது முதுமையிலும் கூட மாதாங்கோயில் என்னை அன்றையக் குழந்தையாகவே கருதி தன் மடியில் தவழ விட்டிருக்கிறது.. இது, மட்டக்களப்புடன் நமக்குள்ள உறவு இனி அவ்வளவுதான் என ஏக்கத்துடன் எண்ணியிருந்த எனக்கு, மறுபடியும் நினையாப் பிரகாரமாய் நிகழ்ந்த அற்புதமேயன்றி வேறென்ன?

இந்தக் கோயிலை வெறும் கல்லாலும், மண்ணாலும், நீறாலும், இரும்பாலும், மரங்களாலும் ஆன சடப் பொருளாக நான் என்றும் பார்க்கவில்லை. தனக்குள்ளும் பிறரோடும், உறவுகளோடும், முரண்பாடு கொண்ட பலதரப்பட்ட மக்களையும் இறைவிசுவாசம் ஒன்றின் மூலம் தன்னுள் ஒன்றிணைத்து, அமைதிக்காக, சமாதானத்திற்காக, அனைவரும் சேர்ந்து ஒருவருக்காகவும், ஒருவர் அனைவருக்காகவும் செபிக்க வைத்து, பொதுவான அன்பிலும் நல்லெண்ணத்திலும் இணைய வைத்த உறவுப் பாலம் இக் கோயில்! இதற்குச் சொல்லக் கூடிய உதாரணம் இதை விடவேறில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 300 வது யூபிலி ஆண்டில்....

கடந்த கால வரலாற்றையும் சமகால நிகழ்வுகளையம் கருத்திற் கொண்டு நிகழப் போகும் மூன்றாவது ஆவது நூறாண்டு எவ்வாறிருக்கும் என்ற எதிர்வு கூறலை எமது துணைஆயர் அதிவந் பொன்னையா ஜோசப் அடிகளார், புனித மிக்கேல் கல்லூரியின் முன்னை நாள் அதிபரான திருமதி கமலா கமலநாதன் அவர்கள், மட்டக்களப்பு கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் திரு. A.S.யோகராஜா அவர்கள், எமது உதவிப் பங்குத் தந்தை அருட் தந்தை இக்னேசியஸ் ஜட் சர்வானந்தன் ஆகியோரிடம் வினவினோம். அவர்கள் மனமுவந்தளித்த கருத்துக்கள் கீழே தரப்படுகின்றன.

**துணை ஆயரின் பொதுக் கருத்து**

புனித மரியன்னை இணைப் பேராலயமானது 200வது யூபிலி ஆண்டினைக் கொண்டாடும் வேளையில் 300வது யூபிலி ஆண்டு எவ்வாறு அமையும் எனச் சிந்திக்க விளைவது புதிய நடை முறைதான். ஆயினும் இன்றைய தினத்தில் பிறக்கின்ற ஒரு குழந்தை 300வது யூபிலி ஆண்டில் வாழும் என எதிர்வு கூறினாலும் அது நிஜமாகும் என்பதில் நிச்சயமில்லை. மாறாக இன்று பிறக்கும் ஒரு குழந்தையின் மூன்றாவது தலைமுறை நிச்சயம் 300 வது யூபிலி ஆண்டைக் கொண்டாடும் என உறுதியுடன் எதிர்வு கூற முடியும்.

"நினைப்பதெல்லாம் நடந்து விட்டால் தெய்வம் ஏதுமில்லை" என்பர். எதிர்காலத்தைப்பற்றி எதிர்வு கூறுவது இறை உதவியின்றி சாத்தியமாகாது. ஏனெனில் இறைவன் வெளிப்படுத்தினாலன்றி இறை திட்டத்தை அறிய முடியாது. ஆயினும் தற்போதுள்ள நடைமுறையைக் கொண்டு மூன்று சந்ததிக்குப் பின் திருச்சபையில் எத்தகைய மாற்றங்களை எதிர்பார்க்கலாம் என்பதை ஓரளவுக்குத்தான் ஊகிக்க முடியும். ஊகிப்பதெல்லாம் எந்தளவுக்கு ஊர்ஜிதமாகும் என்பதனை நிச்சயப்படுத்த முடியாது. மேற் கூறப்பட்ட வரையறைகளுடன் என் சிந்தனையில் ஊற்றெடுத்த சில கருத்துக்களை உங்களுடன் பகர விளைகின்றேன்.

**உதவிப் பங்குத்தந்தையின் பொதுக் கருத்து**

கொராகிலிற்றஸ் என்னும் மெய்யியல் அறிஞர் "ஒரு மனிதன் ஒரே ஆற்றில் இரண்டு தடவைகள் கால் பதிக்க முடியாது" என்று கூறுகிறார். ஏனென்றால் அது தொடர்ச்சியாக மாற்றம் காணுகிறது. இது போன்றுதான் மனிதவாழ்வும் தேவைகளுக்கேற்பவும், நவீன வளர்ச்சிகளுக்கேற்பவும் மாற்றம் காணுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வகையிலே திருச்சபையும் காலத்தின் குறிகளை அறிந்து மாற்றங்களை ஏற்படுத்துகிறது என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டு 2ம் வத்திக்கான் சங்கம். அந்தவகையிலே மாற்றங்கள் வருவது நிச்சயம். ஆனால் இத்தகைய மாற்றங்கள்தான் நிகழும் என்பதற்கில்லை. ஏனென்றால் "என் எண்ணங்கள் உன்னுடைய எண்ணங்களல்ல" என்று இறைவன் கூறுகிறார். இறைவன் பார்ப்பது ஒரு விதம்: மனிதன் பார்வையோ இன்னொரு விதம். எப்படியாயினும் தோன்றும் சில எழுமானமான மாற்றங்களை இங்கு குறிப்பிடுகிறேன்.

வினா - *01*

**பல பாரம்பரியங்களினூடாக காலத்திற்கேற்ற மாற்றங்களை திருச்சபை மேற்கொள்ளத் தயங்கியதில்லை. இந்த அடிப்படையில் 300ஆவது வருட *(2108இல்)* ஜுபிலி விழாவின்போது திருச்சபையில் ஏதாவது மாற்றங்கள் ஏற்பட்டிருக்குமென்று கருதுகிறீர்களா? அவ்வாறு ஏற்படக்கூடு மென எதிர்பார்க்கும் மாற்றங்கள் எவை?**

**துணை ஆயர்:**

கத்தோலிக்க திருச்சபை நிச்சயமாக அழியாமல் இருக்கும். ஏனெனில் கடந்த 2000 ஆண்டுகளில் எத்தனையோ கலாபனைகளையும், எதிர்ப்புக்களையும், சவால்களையும் சந்தித்து வந்த திருச்சபையானது, இன்னும் 100 ஆண்டுகளில் முற்றாக அழிந்து விடும் என நிச்சயமாகக் கூற இயலாது. மாறாக இதுவரை காலமும் சூழ்நிலைகளுக்கும் அறிவியல் வளர்ச்சிக்கும் ஏற்ப திருச்சபையானது தன்னிலே சில மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டது போல எதிர்வரும் 100 ஆண்டுக் காலத்தில் திருச்சபையில் பாரிய மாற்றங்கள் ஏற்படா விட்டாலும், அதன் அமைப்பிலும், வழிபாடுகளிலும் பல மாற்றங்களை ஏற்படுத்தி தனது வளர்ச்சியை முதன்மைப்படுத்திக் கொள்ளும் என்ற நம்பிக்கையுண்டு.

திருத்தந்தை ஆசியா அல்லது ஆபிரிக்கா கண்டங்களில் இருந்து தெரிவு செய்யப்படக் கூடிய வாய்ப்புக்கள் அதிகம் உண்டு. சிறிய பெரிய குருமடங்களில் மாணவரின் எண்ணிக்கை குறைவடையும். அதன் விளைவாக குருக்களின் தொகையும் வீழ்ச்சியடையும். இதனால் பொது நிலையினர் திருச்சபையில் பெரும் பங்கினை வகிக்கப் போகின்றனர் என்பது திண்ணம்.

**உதவிப் பங்குத்தந்தை:**
மாற்றங்களைப் பொறுத்தவரையில் கோட்பாடு (DOCTRINAL) ரீதியான மாற்றங்கள் துரிதமாக ஏற்பட்டாலும் நடைமுறை (PRACTICAL) ரீதியான மாற்றங்களுக்கு அதிக காலங்கள் எடுப்பது பொதுவான உண்மையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தோலிக்க திருச்சபையின் மூலங்கள் உரோமை, மேற்குலக கலாச்சாரத்தை சார்ந்ததாக அமைந்திருப்பதால் எமது கலாச்சார, பண்பாட்டு மூலங்களுக்கமைய மாற்றங்களை கொண்டு வருவது கடினமாக இருப்பதுடன், எமது சமூகத்தில் ஏற்கனவே தோன்றியிருக்கும் இந்து, பௌத்த சமயங்கள் முறையே தமிழ், சிங்கள கலாச்சார, பண்பாட்டு விழுமியங்களுக்கு அமைவாக இருப்பதால், "இந்து முறையான" அல்லது "பௌத்த முறையான" சடங்குகள் என முத்திரை குத்தப்படும் ஆபத்து இருக்கிறது.

கலை கலாச்சார பண்பாட்டு உண்மைகளை சமய விழுமியங்களுடன் கலந்து பார்க்கும் தவறான பண்பு (CULTURE IS WIDER THAN THE RELIGION. STILL RELIGION MAY CONTAIN CULTURAL VALUES)அரை நூற்றாண்டை காணப்போகும் 2ம் வத்திக்கான் சங்க கொள்கை திரட்டுக்களைக் கூட முழுமையாக நடைமுறைப் படுத்த முடியவில்லை என்பது வருத்தத்துடன் கூறவேண்டிய உண்மையாகும்.

**எதிர்பார்க்கப்படும் மாற்றங்கள்:**

- ஆலய கட்டட கலையில் (தோற்றத்தில்) மாற்றங்கள் கீழைத்தேய கட்டட கலையை விட மேற்கத்தைய கலை, பண்பாட்டு தோற்றங்களே காணப்படலாம்.
- கலை வடிவங்கள் (இயல், இசை, நாடகம்) கலாச்சார, பண்பாட்டு நிகழ்வுகள்.
- வழிபாட்டு நிகழ்வுகளில் பொதுநிலையினருக்கு கணிசமான பங்களிப்பு.
- மும்மொழிகளின் சமத்துவ பயன்பாடு.
- சமயங்களுக்கிடையிலான ஒற்றுமையை வெளிப்படுத்தும் நிகழ்வுகள் முக்கியத்துவம் பெறும்
- குருக்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி காணப்படலாம்.
- குரு சமய, சமூக பணிகளையும், ஏனைய பணிகளையும் விட ஆன்மீக பணிக்யே முக்கியத்துவம் பெறும்.

**கமலா கமலநாதன் :**

நிச்சயமாக மாற்றங்கள் ஏற்பட்டிருக்கும். கடந்த இரண்டாம் நூறாண்டு காலத்தில், சமூகம், கல்வி, தொழில்நுட்பம், தொலைத்தொடர்பு, விஞ்ஞானம் போன்ற துறைகளில் ஏற்பட்ட மாற்றங்கள், இரு வத்திக்கான் சங்கங்களைக் கூட்ட வைத்து, திருச்சபையிலும் மாற்றங்களை ஏற்படுத்தின. ஏற்கெனவே பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ள தொலைத்தொடர்பும் தொழில்நுட்ப வளர்ச்சியும், திருச்சபையின் எல்லா அம்சங்களிலும் மாற்றங்களை ஏற்படுத்தத்தான் போகின்றன. "அனைத்துலக கிராமம்" (GLOBAL VILLAGE) என சுருங்கியது போல, திருச்சபையும் ஆதிகாலச் சிறு அன்பியக் குழுக்களிலே தங்கும் நிலை ஏற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A.S. யோகராஜா:

தற்பொழுது நாம் பயன்படுத்தும் சகல கிறிஸ்தவ சபைகளுக்குமான பொதுவான விவிலியம் மேலும் ஒழுங்கமைக்கப்படலாம். மற்றும் வழங்கும் மொழி நடையிலும் மாற்றங்கள் வரக்கூடும். நிறுவன ரீதியான அதிகார அடுக்கமைவு மேலும் நலிவடைந்து பொது நிலையினருக்கும் முக்கிய ஆன்மீக பொறுப்புக்கள் வழங்கப்படலாம்

**வினா - 02**

**திருச்சபையின் வழிபாட்டு முறைகளில் 2ஆம் வத்திக்கான் திருச்சங்கம் பாரிய மாற்றத்தைக் கொண்டு வந்தது. அதில் பிரதானமானது தேசிய வழிபாட்டு முறைமையாகும். தற்போது நடைமுறையிலுள்ள இந்த தேசிய வழிபாட்டு முறைகளில் இன்னும் மாற்றங்களை 300ஆவது ஜூபிலி ஆண்டில் தரிசிக்க முடியுமா? முடியுமானால் எவற்றில்.....?**

**துணை ஆயர்:**

2ம் வத்திக்கான் சங்கம் விதந்துரைத்த பல விடயங்கள் இனிமேல்தான் திருச்சபையில் முன்னெடுக்கப்படப் போகின்றன. விசேடமாக பொது நிலையினருக்கேயுரிய பணிகளான, துணைத் தொண்டர், நற்கருணைப் பணியாளர், வாசகர், சமூக சேவைப்பணியாளர் போன்ற பணிகளை பெரும் பாலும் பொது நிலையினரே நிறைவேற்றப் போகின்றனர். எல்லாம் குருக்களே என்ற நிலைமாறி, எல்லாம் பொது நிலையினரே என்ற நிலை வரும் காலம் வெகு தொலைவில் இல்லை. பங்கின் நிர்வாகப் பணிகள் அனைத்தும் பொது நிலையினராலேயே மேற் கொள்ளப்படும். குருக்கள் திருப்பலியில் தலைமை தாங்குவதுடன், அவர்களது பணி ஊக்கமூட்டுபவராக, முன்னேற உதவுபவராக, அகத்தூண்டுதல் அளிப்பவராக ஊக்குவிப்பாளராக, தலத்திருச்சபைகளை கட்டி எழுப்புவராக மாற்றம் பெறும்.
வழிபாட்டைப் பொறுத்தளவில் அனுதின திருப்பலிகள் குறைந்து அல்லது நிறுத்தப்பட்டு, ஞாயிறு வழிபாடுகள் முதன்மைப்படுத்தப்படும். ஒவ்வொரு தலத்திருச்சபையிலும் பொது நிலையினரைக் கொண்ட திருவழிபாட்டுக் குழுக்கள், ஒன்றோ, பலதோ ஏற்படுத்தப்பட்டு, அர்த்தமுள்ள வழிபாட்டுக் கொண்டாட்டங்கள் நன்கு திட்டமிடப்பட்டு, ஒழுங்கான முறையில் வழிபாடுகள் நிறைவேற்றப்படும்.

அதிலும் இறைவார்த்தை வழிபாட்டுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு இறைவார்த்தைப் பகிர்வு முறையில் பலரும் பங்கேற்கும் வாய்ப்புக் கிடைக்கும். பண்பாட்டு கலாச்சார அம்சங்கள் பெரிதும் உள்வாங்கப்பட்டதாக வழிபாடுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமையும். ஆயினும் ஞாயிறு திருப்பலிக்கு வருவோரின் எண்ணிக்கையும் படிப்படியாக குறைந்து செல்லும் நிலைகண்டு திருச்சபைத் தலைவர்கள் அங்கலாய்ப்பர்.

**உதவிப் பங்குத்தந்தை:**

- திருவழிபாட்டு முறைமைகளுக்கேற்ப கலை, கலாச்சார, பண்பாட்டு விழுமியங்களை வெளிப்படுத்தும் நிகழ்வுகள் முக்கியத்துவம்
- தேசியம் - மொழிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து செயற்படல்.
- பொதுநிலையினரின் பொருத்தமான பங்களிப்பு.
- திருப்பலிக்கு முக்கியத்துவம் கொடுப்பதை விட தனிப்பட்ட ஆன்மீக வாழ்வுக்கு முக்கியத்துவம் கொடுத்தல்.
- பெண்ணியல் வாதம் முக்கியம் பெற்று பெண் துறவிகள் திருப்பலி நிறைவேற்றும் முறைமை ஏற்படலாம்.

**கமலா கமலநாதன் :**

வழிபாட்டுமுறைமை, அவ்வப் பிரதேசமொழி மூலத்துக்கு மாறியதோடு, குறிப்பிட்ட பிரதேசத்துக்கே உரிய கலாசார அம்சங்களும் உள்ளடங்க வழிவகுத்தது. கலாசார அம்சங்கள் காலமாற்றங்களைப் பிரதிபலிக்கக் கூடியவை. மேலும் பிற கிறிஸ்தவ சபைகளுடனான உறவுநெருக்கமும், அன்பியக் குழுக்களின் பரவலாக்கமும் மேலும் பல மாற்றங்களை கொண்டு வரலாம். ஆனாலும் நற்கருணை பற்றிய அடிப்படை விசுவாச சத்தியங்களில் மாற்றம் ஏற்படாது

**A.S. யோகராஜா :**

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் பின் ஆசிய நாடுகளில் பங்கேற்கும் திருச்சபையை வளர்க்குமுகமாக ஏற்படுத்தப்பட்ட "ASIPA" ( ASIAN INTEGRAL PASTORAL ASSOCIATION) எம் நாட்டிலும் அன்பியங்கள் என்ற பொருளில் ஆரம்பிக் கப்பட்டது. ஆனால் அது மன்னார், நீர்கொழும்பு போன்ற மாவட்டங்களில் வெற்றிகரமாகச் செயற்படுகின்ற வேளையில், எமது மறை மாவட்டத்தில் தோல்வியைத் தழுவிவிட்டது. உரிய முன்திட்டமிடல் இன்மையும், பொது நலனும் அர்ப்பணிப்பும் அற்ற பங்குபற்றுதலும், குறுகிய வட்டத்திலமைந்த சிலரது செயற்பாடுகளுமே இதற்கு காரணங்களாகும்.. இதற்கு ஆயர்கள், குருக்கள், துறவிகள், பயிற்றபட்ட பொது நிலையினரின் ஊக்கப்படுத்தல்கள், வழிகாட்டல்கள் தொடர்ச்சியாகக் கிடைக்குமாயின் எமது மறைமாவட்டத்தில் மட்டுமின்றி, இலங்கையின் சகல கத்தோலிக்க குடும்பங்களும் சிறியோர் முதல் பெரியோர் வரை பங்கேற்கும் குட்டி திருச்சபையாக வளர்ச்சி அடைந்து காணப்படும் என்பதில் சந்தேகமில்லை. இந்த வழிபாட்டு முறையோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருங்கொடை வழிபாட்டு முறையையும் இணைத்து நடாத்தினால், நாம் எதிர் கொள்ளும் 300 ஆவது ஜுபிலி ஆண்டு ஒரு விசுவாசத்திலும் தெய்வ பயபக்தியிலும் வேர் ஊன்றிய காலமாக மாறும் என்பது உறுதியாகும். ஆலயத்தில் குறிப்பிட்ட நேரத்தில் மட்டும் ஒப்புக்கொடுக்கப்படும் குருவை மையமாகக் கொண்ட பாரம்பரியமான உயிர்ப்புக் குன்றிய திருப்பலி வழிபாட்டு முறையில் மாற்றம் ஏற்பட்டு, பல்வேறு சமூக, பொருளாதார, அரசியல், கலாசார, குடும்ப பாதக நிலைமைகளினால் உருவான உளப்பிணிகளுக்காக உள்ளார்த்தத்தையும், சுயநம்பிக்கையையும், ஆன்மதிடத்தையும், விசுவாசத்தையும் தனிமனிதனிடத்தில் கட்டியெழுப்பும் வழிகாட்டல் நிறைந்த நெஞ்சை நெகிழவைக்கும் உக்கிரமான செப ஆராதனைகள் உருவாகலாம்.

**வினா - 03**

**திருச்சபை தனது விசுவாச சத்தியங்களைக் கட்டிக்காத்து வருவது உண்மைதான். ஆயினும் காலமாறுதல்கள், சூழல்களினால் சில தொய்வுகள் உள்ளதை மறுக்கமுடியாது. உதாரணமாக ஒப்புரவு அருட்சாதனம் வலுவிழந்துள்ளதை அவதானிக்க முடிகிறது. இந்நிலைமை 300ஆவது (2108 இல்) ஜுபிலியின்போது எவ்வாறு இருக்கும் எனக் கருதுகிறீர்கள்?**

**துணை ஆயர்:**

பாவத்தின் கனாகனம் குறைவாக மதிப்பிடப்பட்டு ஒப்புரவு அருட்சாதனம், அதாவது, தனிப்பாவ அறிக்கைக்கு செல்வோரின் தொகை பெரும்பாலும் குறைந்துவிடும். ஒப்புரவு அருட்சாதனம் அவசியமில்லை என்ற நிலைப்பாட்டினை அநேகமானவர்கள் கொண்டிருப்பர். அதனால் பொதுப்பாவ அறிக்கையும், பொது மன்னிப்பும் வருடத்துக்கொருதடவை சிறப்பாக தவக்காலத்தில் நிறை வேற்றப்படக் கூடிய நிலை ஏற்படலாம். இறை மக்களும் இறைபணியாளரும் இத்தகைய நடைமுறையையே விரும்பி முதன்மைப்படுத்துவர். திருச்சபையும் அதற்கேற்றவிதமாக சட்டதிட்டங்களில் நெகிழ்வுத் தன்மையை கடைப்பிடிக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்படலாம்.

**உதவிப் பங்குத்தந்தை**

உலகமயமாதல், நவீன மாறுதல்களினால் ஏற்படுகின்ற கவர்ச்சி போன்ற காரணங்களினால் இன்றும் கூட விசுவாச வாழ்விலே தொய்வுநிலை தோன்றியுள்ளது. இந்நிலை மேலும் வலுவடையலாம் என்பதில் ஐயமில்லை. சமய, விசுவாச மதிப்பீடுகள் வலுவிழந்து போக அதிக வாய்ப்புகள் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயோதிபரையும், சிறுவர்களையும் அதிகமாக கொண்ட சபைகளாக திகழ வாய்ப்புகள் உண்டு. தனிமனித உரிமை வலுப்பெற்று வரும் காலம் என்பதால் அற்ப காரணங்களுக்காக விவாகரத்து அல்லது பிரிந்து வாழும் நிலைகள் உருவாகும்.

பாவம் பற்றிய சிந்தனை, மனச்சான்று, குற்ற உணர்வுகள், இறைவனின் தீர்ப்பு போன்ற கருத்துக்கள் ஆழமற்றதாக, அர்த்தமற்றதாக தென்படலாம். தனக்கு தானே நீதிபதி, தனது செயல்கள் நியாயமானது என்ற நிலைப்பாடு மனிதர்களிடத்திலே தோன்றலாம். இதனால் ஒப்புரவு அருட்சாதனம், அருட்சாதன நிலையிலிருந்து மேலும் வலுவிழக்கும் என்பதில் ஐயமில்லை.

**கமலா கமலநாதன்:**

விசுவாச சத்தியங்களில் அல்ல, அவற்றை நடைமுறைப்படுத்துவதில் தான் தொய்வுகள் ஏற்பட்டுள்ளன எனல் வேண்டும். காரணம் தனிமனிதன் தனது பாவங்களின் பாரத்தை முற்றாக ஏற்றுக் கொள்கிறானில்லை. சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னும் தொய்வு கண்ட ஒப்புரவு அருட்சாதனம், மேல் நாடுகளிலே மீள்வருகை பெற்றுள்ளது. உலகின் எல்லாப் பக்கத்திலும் திடீர் திடீரென நடைபெறும் இயற்கை அனர்த்தங்களும், பாரிய வன்செயல் களும் இறைபிரசன்னத்தை மனிதனுக்கு இடைவிடாது அறிவித்துக் கொண்டிருக் கின்றன. சிறு,சிறு குழுக்களாக வழிபாடுகள் நடைபெறும்போது பகிரங்கப் பாவ அறிக்கைகளை இறைமக்கள் தெரிவிக்கின்றனர். இம்முறை மீண்டும் பிரபலமாகும் எனக் கருதுகிறேன்.

**A.S. யோகராஜா :**

நவீன விஞ்ஞான தொழிநுட்ப வளர்ச்சி, தகவல் தொடர்பாடல் வளர்ச்சி என்பவற்றினால் உருவாகியுள்ள உலக மயமாக்கலினாலும் நவநாகரிக வளர்ச்சியினாலும் விசுவாச வாழ்வில் கத்தோலிக்க மக்களை வலுவடையச் செய்யும் திருச்சபையின் முயற்சி பல சவால்களை எதிர் கொள்ள நேரிடும்..

- வழிபாட்டு கவர்ச்சி, ஐக்கிய உறவாடல், மனஅமைதி, எளிமை போன்ற பல காரணங்களினிமித்தம் கத்தோலிக்கர்கள் பிரிவினைச்சபைகளால் கவரப்படும் நிலை அதிகரிக்கலாம்.

- இளம் குடும்பங்களில் ஏற்படும் பிரச்சனைகளாலும் பிளவுகளினாலும் மெய்விவாகத்திருவருட் சாதனத்தின் விசுவாச சத்திய வாழ்வில் சீர்குலைவு ஏற்படலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ⚓ ஆலயங்களில் வழிபாடுகளின்போது அநேகமாக பொது நிலையினரின் பங்கேற்பு பார்வையாளர்களாகவே காணப் படுகிறது. வெறுமனே கடமைக்காகவும் நாகரிகத்திற் காகவும் ஆலயம் செல்லும் நிலை தற்பொழுது காணப்பட்டு வருகின்றது. இந்நிலை மேலும் அதிகரிக்கக்கூடிய அபாயம் தென்படுகின்றது..
- ⚓ இன்றைய உலகத்தில் தெய்வபக்தி மேலும் அருகிக்கொண்டே செல்கிறது. அதிகரிக்கும் கொலை, தற்கொலை, வன்செயல், மதுபாவனை இதற்கு உதாரணங்களாகும். இதைவிட தொலைக்காட்சி நாட்டம், நேரமின்மை, சோம்பல்தனம் போன்ற தீங்குகளினால் இல்லங்களின் செபவாழ்வு மங்கிக்கொண்டே போகின்றது. இந்நிலை மேலும் அதிகரிக்கக்கூடிய வாய்ப்புண்டு.

**வினா - 04**

**வெளிநாடுகள் என்னும்போது குறிப்பாக மேற்குநாட்டு தேவாலயங் களில் வழிபாடுகளிலும், ஞாயிறு கடமைகளிலும் இளையோரின் பிரசன்னம் இருப்பதில்லை என்ற தகவல்கள் உண்டு. உலகமயமாதல் போக்கில் இலங்கையிலும் 300ஆவது ஜூபிலி ஆண்டில் இளை யோரின் பங்களிப்பு எவ்வாறு இருக்கும் என நீங்கள் கருதுகிறீர்கள்?**

**துணை ஆயர்.:**

இளையோரைப் பொறுத்தளவில் தினத்திருப்பலிகள் என்ற வார்த்தையே அவர்களது அகராதியில் இடம் பெறாதிருக்கும். ஞாயிறு திருப்பலிகளுக்கும் செல்ல அவர்களுக்கு நேரமுமிருக்காது. விருப்பமும் இருக்காது. இறைபணியாளர்கள் இளையோரைக் கவரும் விதத்தில், அவர்களுக்குப் பிடித்தனமான காலத்தில், நேரத்தில் தனிப்பட்ட வழிபாடுகளை நடாத்த முயற்சியெடுப்பர். அதற்கு எதிர்மாறாக இளையோரின் பங்களிப்பு சமூக, பொருளாதார, மேம்பாட்டு விடயங்களில் அதிகமாக இருக்கும்.

**உதவிப் பங்குத்தந்தை**

தற்கால ஓட்டத்தில் இளைஞர்களின் வாழ்க்கை உலக மதிப்பீடுகளுக்கு முன் உரிமை கொடுத்து, போராட்டங்கள் நிறைந்த உலகில் போட்டி நிறைந்த வாழ்க்கை வாழுகிறார்கள். மாற்றங்களை எதிர்பார்க்கும் இவர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது வழிபாடு போதியளவு வேறுபாட்டை (VARIETY) கொடுக்காததும் ஒரு காரணமாகும்.

போட்டி நிறைந்த உலக நடப்பில் தகுதியான திறமை, தேர்ச்சி அவசியம். ஆகவே நேரம், சக்தி அனைத்துமே இதற்காக விரயமாகிறது.
இளைஞர்களுக்கு தற்போது இருப்பதை விட இன்னும் சிறப்பான விதத்திலே தலைமைத்துவ பணி கொடுக்கப்பட்டால், அத்துடன் அவர்கள் மேன்மை மதிக்கப்பட்டால் அவர்களின் பங்களிப்பு அதிகமாக வாய்ப்புண்டு.

**கமலா கமலநாதன் :**

மேற்குலகிலே, பங்குத்தந்தை, பங்குமேய்ப்புப் பணிச்சபை ஆகியவற்றின் செயல் திறனைப் பொறுத்தே, இளையோரின் பிரசன்னம் அமைகிறது. ஐரோப்பிய, ஆசிய, இலத்தீன்-அமெரிக்க நாடுகளிலிருந்து வந்தேறு குடிமக்களிடையே, நெருக்கமான குடும்பப் பிணைப்புகளையும், இறை விசுவாசத்தையும் நாம் காண்கிறோம். அதனால் பல தேவாலயங்களிலே ஆறு ஞாயிறு வாரத்திருப்பலிகள் நடைபெற்றாலும், தேவாலயம் நிரம்பி வழிகிறது. இளையோரின் பாடகர் குழு அமைந்த, விசேட இளையோர் திருப்பலியும் வாரா வாரம் நடைபெறுகிறது. ஆனால் செயல் திறனற்ற நிருவாக அமைப்பினால், பல தேவாலயங்கள் மூடப்பட்டுள்ளன. எமது ஆலயங்களிலே, 300 ஆவது ஜுபிலி ஆண்டிலே, செயல் திறன்மிக்க திருச்சபைத் தலைமை வேண்டும். இதனை உருவாக்க முடியுமானால் இளையோரின் நெருங்கிய பங்களிப்பை நாம் பெற முடியும்.

**A.S. யோகராஜா :**

பொதுவாக இளையோரின் இறைநம்பிக்கை முதியோரைவிட குறைவாகவே காணப்படுவது இயல்பானதொன்றே. காரணம் அவர்களின் இளமைத் துடிப்புணர்வும் அநுபவமும் உலகியல் வாழ்வில் அவர்களுக்குள்ள ஈடுபாடும் நம்பிக்கையுமாகும். அதினும் மேலாக புதிய தகவல் தொடர்பாடல் தொழினுட்ப புரட்சியினால் உருவாகியுள்ள அறிவுப் பெருக்கத்தில் சிக்கியுள்ள இளையோர்கள், போட்டி நிறைந்த இவ்வுலகில் உயர் கல்விக்காகவும், கௌரவமான தொழிலுக்காகவும், பொருளாதார அந்தஸ்திற்காகவும் போராடுகின்ற பயணத்திலே அவர்களின் பங்களிப்பையும் ஈடுபாட்டையும் எதிர்பார்ப்பது கடினம். எனவே 300 ஆவது ஜுபிலி ஆண்டிலும் இவர்களின் பங்களிப்பு வெறுமையடைய வாய்ப்புண்டு. இளைஞர், யுவதிகளுக்கான ஒரு வழிபாட்டுக்கோலம் (புதிய செபங்கள், பாடல்கள்) உருவாக்கப்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினா - 05

2ஆம் வத்திக்கான் திருச்சங்கத்தின் பின் பொது நிலையினர் பற்றிய கண்ணோட்டம் மாறுபட்டு, 21ம் நூற்றாண்டில் திருச்சபை பணிகளில் பொதுநிலையினர் உள்வாங்கப்பட்டு வருகின்றனர். 300ஆவது ஜுபிலி விழாவின்போது பொதுநிலையினர் பங்களிப்பு மேலும் அதிகரித்திருக்குமா? அவ்வாறாயின் எத்துறைகளில் எனக் கருதுகிறீர்கள்? இவ்வாறான பணிகளுக்கு பொதுநிலையினரின் பங்களிப்பு எந்தளவில் இருக்குமென எதிர்பார்க்கிறீர்கள்?

துணை ஆயர்.:

ஒட்டுமொத்தமாகக் கூறப்போனால் இன்னும் நூறு ஆண்டுகளில் திருச்சபையில் பல மாற்றங்களை எதிர்பார்க்கலாம். அவற்றில் முக்கியமானது பொது நிலையினரது பங்களிப்பு தாராளமாக இருக்கும். வருங்காலத் திருச்சபையை அவர்களே முன்னெடுத்துச் செல்லப் போகின்றனர்.

உதவிப் பங்குத்தந்தை

பொதுநிலையினரின் பங்களிப்பு 21ம் நூற்றாண்டிலே மாறியிருந்தாலும் அம்மாற்றம் மிக மெதுவானதே. தீர்மானம் எடுக்கும் நிலைகளில் திருநிலையில் உள்ளவர்களுக்கும், பொதுநிலையினருக்கும் சமத்துவம் முழுமையாக பேணப்படவில்லை. பெரும்பாலான பொறுப்புக்கள் பொதுநிலையினரின் கைகளிலேயே தங்கியிருக்கும். சேவைநலன் கொண்டு பணியாற்றும் பொதுநிலையினர் நல்ல பங்களிப்பை செலுத்துவர்.

கமலா கமலநாதன் :

ஆரம்பத்தில் பக்திச் சபைகளினூடாகப் பொதுநிலையினர் திருச்சபையின் ஆன்மீகப்பணிகளில் ஈடுபட்டனர். சமூகசேவை மூலமும் ஆன்மீகப் பணியாற்றலாம் என்ற எண்ணக்கரு இரண்டாம் நூற்றாண்டிலே தோன்றி வளர்ந்துள்ளது. மூன்றாம் நூற்றாண்டின் ஆரம்பமாகிய இக்கால கட்டத்திலே, பொது நிலையினர், பாடகர் குழுக்களிலும், சமூக அறப்பணிகளிலும் பங்கேற்று, இறுதியாகப் பாடகர், மறையாசிரியர், தருமசபையினர், நற்கருணைப்பணியாளர் என வளர்ச்சி கண்டுள்ளனர். நற்கருணைப்பணி இன்னும் முழுவளர்ச்சியடைய வில்லை. அத்துடன் ஒரே பணியாளரே எல்லாவற்றுக்கும் முன்னிற்பதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிகிறது. பொதுநிலையினர் கூடுதலாக ஈடுபடுவதற்கு அன்பியங்களின் தோற்றமும் வளர்ச்சியும் மேலும் விரிவாக வேண்டும்.

**A.S. யோகராஜா :**
திருச்சபையின் பணிகளில் பொது நிலையினர் உள்வாங்கப்பட்டிருந்தாலும், ஒரு பங்கிலுள்ள சகல பொது நிலையினரும் உள்வாங்கப்படாத நிலை காணப்படுகிறது. ஆர்வம் உள்ள சிலரே ஆலய பணிகளில் ஈடுபடுகின்றனர். ஏனையோர் பார்வையாளர்களாகவும் ஞாயிறு கிறிஸ்தவர்களாகவும் காணப்படுகின்றமையால் இவர்களின் பங்களிப்பில் அதிகரிப்பு ஏற்படக்கூடிய நிலை குறைவாகவே உள்ளது. குருக்களின் உறவும், ஊக்கமும், ஆர்வமும் பொது நிலையினரின் பங்களிப்பை படிப்படியாக அதிகரிக்க உதவலாம். அந்நிலையில் நற்கருணைப் பணியாளர்களினதும், போதகர்பணி, பக்திச் சபைகளின் பணி, பங்கிலுள்ள வட்டாரத்தலைவர்களின் பணி, பங்குச் சபையினரின் பணி போன்ற துறைகளில் படிப்படியாக வளர்ச்சியைக் காணலாம்.

# பெருவெள்ளம்!

1957 கிறிஸ்மஸ் தினத்தில் பெருவெள்ளம் ஏற்பட்டது. கார்த்திகை மாத ஆரம்பத்திலிருந்து நாற்பது நாட்களுக்கு மழை பெய்து கொண்டிருந்தது. பலத்த மழையல்ல. ஆனால் தொடர்ச்சியான மழை. கிறிஸ்மஸ் தினத்தன்று புயலுடன் கூடிய மழை பெய்தது. ஒரே நாளில் 12 அங்குல மழை பெய்தது. உன்னிச்சை, உறுகாமக் குளங்கள் உடைப்பெடுத்தன. வீடுகள், வீதிகள் மரங்கள், மனிதர்கள், கால்நடைகள் யாவும் அடித்துச் செல்லப் பட்டன. அக்கரைப்பற்று - மட்டக்களப்பு, மட்டக்களப்பு – அம்பாறை வீதி, கல்லாறு தாம்போதி யாவும் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. எனினும், ஆச்சரியப்படத்தக்க வகையில் சொறிக்கல்முனைப் பழைய கோயில் மட்டும் எவ்வித பாதிப்புமின்றி பாதுகாப்பாக இருந்தது. அதன் இரு புறமும் வெள்ளம் ஓடிக் கொண்டிருந்தும் கோயில் பாதிப்புக் குள்ளாகவில்லை. நூற்றுக்காக்கான மக்கள் ஆலயத்தில் பாதுகாப்பை தேடினர். இதே போன்றே மூதூர் ஆலயமும் அதில் தங்கிய மக்களும் அற்புதமாக காப்பாற்றப்பட்டனர். மூதூரின் இரு புறமும் எட்டு அடி உயரத்திற்கு வெள்ளம் பாய்ந்து கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுநிலையினரே! நீங்களே திருச்சபை!

*முன்னுரை*

"திருச்சபை தன் ஜன்னல்களைத் திறக்க வேண்டும். தூய ஆவியாரின் செயல்களுக்குத் தன் கதவுகளைத் திறக்க வேண்டும். திருச்சபை என்னும் வீட்டுக்குள்ளே புதுக்காற்று வீச வேண்டும்" என்று மூடியிருந்த ஜன்னல் ஒன்றை சுட்டிக்காட்டி திருத்தந்தை 23ம் யோவான் தைத்திங்கள் 25ம் நாள், 1959ல் இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்கான தனது எண்ணத்தை வெளியிட்ட நாளாகும். அவ்வெண்ணத்தின் பொன்விழா ஆண்டில் நாம் இன்று நிற்கின்றோம்.

வத்திக்கான் சங்கத்தில் ஆவியானவரின் புதுக்காற்று வீசியதால், சங்கத்தினால் ஏற்பட்ட பல மாற்றங்களுள் முக்கியமானது பொதுநிலையினரின் நிலை தெளிவு படுத்தப்பட்டதும், திருச்சபையின் வாழ்விலும், பணியிலும் அவர்களுக்குச் சிறப்பான இடம் தரப்பட்டதும் ஆகும். எனவேதான் சங்கத்திற்கு பிற்பட்ட காலத்தினை *'பொதுநிலையினரின் பொற்காலம்'* என்றால் மிகையில்லை.

*திருச்சபை என்பது 'இறைமக்கள்'*

சங்க ஏடுகளில் மிகவும் முக்கியமான கொள்கைத் திரட்டாகிய 'திருச்சபை' பற்றிய கோட்பாட்டு விளக்கம் எனும் ஏட்டில் திருச்சபை தன்னைப்பற்றி எழுப்புகின்ற மிகமுக்கியமான கேள்வி திருச்சபை என்றால் என்ன? என்பதுதான். 'திருச்சபை என்பது இறைமக்கள்' என்பதே பதில். திருச்சபை தன்னை 'இறைமக்களின் சமூகம்' என்றே அழைக்கின்றது. இது சங்கத்தின் அடிப்படையான பார்வையாகும்.

*நிறுவனத் திருச்சபை*

சங்கத்திற்கு முற்பட்ட காலத்தில் திருச்சபை ஒரு நிறுவனமாக வலுப் பெற்றிருந்தது. இந்நிறுவன அமைப்பினூடாக திருச்சபையில் படிமுறை அமைப்பு நிலை உருவாகியது. இத்தகைய பார்வையில் பொதுநிலையினர் கடைநிலைக்குத் தள்ளப்பட்டனர். அருள்நிலையாளர்கள் ஆளும் நிலையிலும், பொதுநிலையினர் ஆளப்படும் நிலையினராகவும் மாற்றப்பட்டனர். 'நமது ஞானமேய்ப்பர்களுக்கு நம்மாலான உதவிகளைக் செய்வது' தான் பொது நிலையினரின் கடமையென்றும் விளக்கப்பட்டது. நிறுவனப்பார்வையில் பொது நிலையினர் திருஆட்சியாளருக்கு தக்க வணக்கம் தருதல், கீழ்ப்படிதல் போன்றவை வலியுறுத்தப்பட்டன. இத்தகைய பின்னணியில் சங்கம் திருச்சபையின் அமைப்பு முறையையோ, ஆட்சிமுறையையோ மறுக்கவோ, மறைக்கவோ இல்லை மாறாக அந்த நிறுவனத்திற்கே அடிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படையாக இருக்கும் மக்கள் தன்மையை வெளிச்சம் போட்டுக் காட்டியதுதான் அதன் சிறப்பாகும்.

*பொதுநிலையினரின் தனித்தன்மையும், பணியும்*

பொதுநிலையினரின் தனித்தன்மையையும், பணியையும் விளக்கும் வண்ணம் சங்கம் 'திருச்சபை' என்கின்ற கோட்பாட்டு ஏட்டில் நாலாம் அதிகாரத் தினையும் அதனைத்தொடர்ந்து இதன் தேவையினிமித்தம் 'பொதுநிலையினரின் திருத்தூதுப்பணி' என்கின்ற விதித் தொகுப்பினையும் வழங்கியுள்ளது.

*உலகின் நடுவே, உலக அலுவல்களில் அவர்கள் வாழ்வு*

பொதுநிலையினர் என்பவர்கள் யார்? அவர்களது தனித்தன்மை என்ன? இக்கேள்விக்கு 'திருச்சபை' ஏடு அழகான, தெளிவான பதிலைத் தருகின்றது. "பொதுநிலையினர் என்னும் சொல் திருநிலையினரும், திருச்சபையின் இசைவு பெற்ற துறவற நிலையினரும் நீங்கலாக ஏனைய கிறிஸ்தவ மக்கள் எல்லாரையும் குறிக்கும்" (திருச்சபை 31). இதுவொரு சொல் பொருள் விளக்கம் மட்டுமே. பொதுநிலையினர் தமக்கே உரித்தான தனியியல்பு கொண்டவர்கள் என்பதையும் சங்கம் தெளிவு படுத்துகின்றது.

உலகைச் சார்ந்திருக்கும் பண்பானது பொதுநிலையினர்க்குரியதும், தனிப்பட்ட விதத்தில் அவர்களைச் சார்ந்ததும் ஆகும். 'உலகில் இருக்கும் பண்பு' அல்லது 'உலகுசார் பண்பு' என்பது திருச்சபை முழுவதற்கும் உரியது தான். இயேசுவின் சீடர் குழுவாகிய திருச்சபை 'உலகின் ஒளி', 'உலகின் உப்பு' ஆகிறது (மத் 5: 13 - 16). திருச்சபையின் இந்த உலகில் இருக்கும் தன்மையைப் பொதுநிலையினர் வாழ்ந்து காட்டுகிறார்கள். உலக வாழ்வு, உலகக்கவலைகள், உலக ஈடுபாடுகள் முதலிய பணிகளே அவர்களுக்கு முதலிடம் வகிக்கின்றன. உலக அலுவல்களில் இருப்பது தம் இயல்பிலே பொது நிலை யினருக்கே உரித்தானது. இவற்றோடு அவர்களது வாழ்வு ஒருவாறு பின்னிப் பிணைக்கப்பட்டுள்ளது.

பொதுநிலையினர் யார்? என்கின்ற கேள்விக்கு பதில் தரும்போது, பொது நிலையினரை இல்லறத்தோடு சங்க ஏடுகள் எப்போதும் தொடர்புபடுத்துகின்றன. சாதாரண குடும்ப வாழ்க்கையில் ஈடுபடுவது பொதுநிலையினர் என்பதனூடாக பொதுநிலையினர் என்றாலே இல்லறவாசிகள் என்று மறைமுகப் பொருளில் கூறுகின்றது (பொதுநிலையினர் 11). இளைஞர்களையும், சிறார்களையும் கூட பொதுநிலையினர் என்று அழைக்கப்படுவர்களின் கூட்டத்தில் சேர்த்தாலும், இல்லறவாசிகளாகிய தம்பதிகளையே, பெற்றோரையே முழுமையான பொருளில் பொதுநிலையினர் என்றழைக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் பொதுநிலையினரின் பணிக்ளைக்குறித்து பேசும்போது "எந்தெந்த இடங்களில் பொதுநிலையினரால் மட்டுமே திருச்சபை மண்ணுலகிற்கு உப்பாகத் திகழ முடியுமோ, அந்தந்த இடங்களிலும், சூழ்நிலைகளிலும் திருச்சபையைச் உடனிருக்கச் செய்வது பொதுநிலையினர்' ஆகும் (திருச்சபை 33). அத்துடன் "பொதுநிலையினர் உலகிலிருந்த கொண்டே நற்செய்தி மனப்பான்மையில் உலகை ஊடுருவி உலகைத் தூய்மைப்படுத்த அழைக்கப்பட்டுள்ளார்கள். இங்குதான் கடவுளின் அழைப்பை அவர்கள் எதிர்கொள்கின்றனர்" என்கின்றது சங்கம் (திரு. 31).

இன்னும் ஒருபடிமேலே சென்று பொதுநிலையினரின் ஆன்மீகத்தை உற்றுநோக்குகின்றபோது அது ஏகாந்தத்தை நாடுவதிலோ அல்லது வாழ்க்கைச் சூழலிருந்து தப்பியோடி மலைகளிலும், மடங்களிலும் தங்களை அடைத்துக் கொள்வதிலோ அல்ல, மாறாக பொதுநிலையினரின் புனிதத்துவம் (தூய்மைத் தேடல்) எதிலென்றால் உலகவாழ்வின் பல்வேறு சூழல்களில் "திருச்சபையை உடனிருக்கச்செய்து செயலாற்றுவதாய் ஆக்கவே அவர்கள் அழைக்கப் பெறுகிறார்கள்" (திரு. 33). மேலும் இவ்வுலகியல் அமைப்பினை இயேசுவின் இலட்சியக் கனவாகிய இறையரசுக்கேற்ப மாற்றியமைக்கின்ற கடமையில் பொதுநிலையினர் ஈடுபட அழைக்கப்பட்டுள்ளனர். (பொ/நி. 67).

*பொதுநிலையினர் ஆற்றுவது திருத்தூதுப்பணியே*

திருத்தூதுப்பணி என்கின்ற வார்த்தைப்பதம் பொதுநிலையினரின் பணிகளுக்கும் பொருந்தும் என்பதனை சங்கம் வலியுறுத்துகின்றது. பொதுநிலையினரின் திருத்தூதுப்பணி என்கின்ற ஏட்டினூடாக அவர்கள் ஆற்றும் பணி திருத்தூதுப்பணியே என்பதனை வரையறை செய்துள்ளது.

பொதுநிலையினர் எங்கு பணியாற்ற வேண்டும்? பொதுநிலையினருக்கு இரட்டைக் கடமையுண்டு. ஏனெனில் அவர்கள் இரட்டைக் குடியுரிமை கொண்டவர்கள்போல் உள்ளனர். அதாவது உலகிலும், திருச்சபையிலும், உலகியல் அமைப்பும், திருச்சபை அமைப்பும் ஒரே நாணயத்தின் இருபக்கங்கள் போல, பொதுநிலையினரின் வாழ்வுக்கு இவ்விரு கோணங்கள் உண்டு. இத்தளங்களில் பொதுநிலையினர் ஆற்றும் திருத்தூதுப்பணியினை சங்கம் தூய பவுலோடு உடனுழைத்த ஆண்கள், பெண்கள் ஆகிய உடனுழைப்பாளரின் பணிக்கு ஒத்துக்கூறுகின்றது (காண்க: திப. 18: 8, 28, உரோ. 16: 3). அன்றுபோலவே இன்றும் பொதுநிலையினரின் திருத்தூதுப்பணிகள் இன்றி அருள்பணியாளர்களின் திருத்தூதுப்பணி முழுப்பலனளிக்க இயலாததாய் ஆகிவிடும் என்றும் எடுத்தரைக்கின்றது (பொ/நி. 10).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தளத்தினைக் குறித்துப்பேசும்போது அதன் தன்னாட்சித் தன்மையினை வலியுறுத்துகின்றது (பொ/நி. 11). குடும்பங்கள் இணைந்து குடும்பக்குழுமங்களை ஏற்படுத்த வேண்டுமெனவும் வலியுறுத்துகின்றது. இதனையே நாம் இன்றைய பங்கின் அன்பிய அமைப்புக்களாக கொள்ளலாம். பண்பாடு, கலாசாரம் குறித்துப்பேசும்போது, இவர்களைத்தவிர வேறு எவராலும் ஒருபோதும் உரியமுறையில் இதனை நிறைவேற்ற முடியாது என்று அறுதியாக கூறுகின்றது. (பொ/நி. 13). அவ்வாறே தனிஆள், கூட்டுத்திருப்பணி பற்றிக் கூறும்போது, தனியாள் பணியைவிட கூட்டுத்திருப்பணி நற்பயன் அளிக்கவல்லது (பொ/நி. 16). பக்திச்சபைகள், அமைப்புக்கள் யாவும் பொதுநிலையினரின் கத்தோலிக்க சேவையினை வளர்க்கும் அமைப்புக்களே (பொ/நி. 20). இத்தகைய பொதுநிலையினர் அமைப்புக்கள் தன்னுரிமை கொண்டவை. அவற்றிற்கு திருஅவையினர் மதிப்பளித்தல் வேண்டும் (பொ/நி. 21).

பொதுநிலையினரின் திருத்தூதுப்பணிகள் ஒருசில ஒழுங்கு முறைகளுக்குட்பட்டவையே. அவற்றுள் முதன்மையானது ஒருங்கிணைப்பு. அவர்களுக்குள் ஏற்படக்கூடிய அனைத்து போட்டித் தன்மைகளையும் நீக்க வேண்டும். ஒரே பார்வையும், குறிக்கோளும் கொண்டு திருத்தூதுப்பணிகள் நிகழ வேண்டும் (பொ/நி. 23). இரண்டாவதாக, திருஆட்சியாளருடன் கொண்டிருக்க வேண்டிய உறவு. இதனைப்பற்றிக் கூறும்போது "முறையாகத் திருச்சபை அதிகாரிகளின் ஒப்புதல் பெற்றிருந்தால் தவிர, எம்முயற்சியும் 'கத்தோலிக்க' எனும் அடைமொழியைத் தனக்கு சூட்டிக்கொள்ளக் கூடாது" (பொ/நி. 24). இதற்கென உதவிட மறைமாவட்ட பொதுநிலையினர் ஆணைக்குழுக்களை (மையங்கள்) உருவாக்க பரிந்துரைக்கப் படுகின்றது (பொ/நி. 26).

அத்துடன் இன்றைய பொதுநிலையினரின் திருத்தூதுப்பணிகளை ஆற்றிட போதிய பயிற்சிகள் பெற்றிருக்க வேண்டுமென சங்கம் பரிந்துரை செய்கின்றது. சுயஅறிவும், உலக அறிவும் தருவது மனிதப்பயிற்சி. அதனோடு அருள்பணிப் பயிற்சியும், அருள்வாழ்வுப் பயிற்சிகளும் தேவை (பொ/நி. 28, 29). இப்பொறுப்பினை பெற்றோர்கள், அருள்பணியார்கள், ஆசிரியர்கள் மற்றும் பொதுநல அமைப்புக்கள் பொறுப்பேற்க வேண்டும் (பொ/நி. 30). இப்பயிற்சிகள் கருத்தரங்குகள், மாநாடுகள், ஞான ஒடுக்கங்கள், தியானங்கள், கூட்டங்கள், பேருரைகள், நூல்கள் வாயிலாக வழங்கப்படலாம் (பொ/நி. 32). நற்பயிற்சி பெற்ற பொதுநிலையினர்தான் அன்பு மற்றும் இரக்கப்பணிகளில் ஈடுபட திறமைபெற்றவர் ஆவர். அவர்கள் உலகியல் மற்றும் திருச்சபை அமைப்புக்களில் பொறுப்பேற்பார்கள். தவறான போதனையை எதிர்த்து நிற்பர். பிறமதத்தவருடன் நலமான உரையாடலில் ஈடுபடுவர் (பொ/நி. 31).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*முடிவுரை*

இரண்டாம் வத்திக்கான் சங்கம் பரிந்துரை செய்கின்ற பொதுநிலையினரின் பொற்காலம் எம்மண்ணிலும், மறைமாவட்டத் திருச்சபையிலும் மலர்ந்து, பரிணமிக்க வேண்டுமென்பதுதான் அனைவரதும் அவா. அத்தகைய பொற்காலத்தினை அடைவதற்கான நீண்ட பயணத்தினை இலக்கு கொண்டு செயற்படுத்த வேண்டும். உயிர்த்துடிப்பும், உற்சாகமும் நிறைந்த பணித்தள திருச்சபைகள் பிறக்க வேண்டும், வளர வேண்டும். சங்கம் பரிந்துரைக்கின்ற செயற்பாடுகள் மிகுந்த பணித்தள திருச்சபைகள் வெறும் கானல் நீராக மட்டுமே இருந்துவிடாமல், மண்ணில் முளைவிட்டு அரும்பி, பூத்துக்குலுங்கி, காயாகி கனியாகி, விருட்சமாக வேண்டும். இக்கனவினை நனவாக்க பொதுநிலையினரே உங்கள் அழைப்பினை உணருங்கள், உணர்ந்த அழைப்பினை வாழ்வாக்க முன்வாருங்கள். ஏனென்றால் நீங்களே திருச்சபை.

யூபிலி விழா நல்வாழ்த்துக்கள்.

அருட்பணி. நவாஜி
விரிவுரையாளர்,
கிழக்குப் பல்கலைக்கழகம்.

1897 ஜனவரி இறுதியில் வண மொறீல் 10 வயது, 7 வயது, 6 வயதான மூன்று சிறுவர்களுடன் புனித வளனார் அநாதைகள் விடுதியைஆரம்பித்தார். இந்துக்களான இந்த 3 சிறுவர்களில் இருவர் சிங்கள வாடியையும்ஒருவர் கல்முனையையும் சேர்ந்தவராவர்.

- 1915 ஆகஸ்ட் மாதத்தின் பின் முதன் முறையாக திருப்பணி நிதி ( Mission Fund ) சேகரிக்கும் வழக்கம் ஆரம்பிக்கப்பட்டது.

ஆலய வளவிலுள்ள லூர்து அன்னை கெபி 2002ஆம் ஆண்டு ஆவணி மாதத்தில் திரு. எடிசன் மத்தியூஸ் அவர்களாற் புனரமைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Priests served in the Parish of Puliyantivu

### பங்குத் தந்தையர்கள்

| | | |
|---|---|---|
| 01 | Fr. Joachim Gabriel | அருட்தந்தை ஜோக்கிம் கபிரியேல் |
| 02 | Fr.Augustine | அருட்தந்தை அகஸ்டின் |
| 03 | Fr. Zeberino Godenho | அருட்தந்தை செபரீனோ கொடீனோ |
| 04 | Fr.Francis Joseph | அருட்தந்தை பிரான்சிஸ் ஜோசப் |
| 05 | Fr. Andreas Bruni | அருட்தந்தை அன்றியாஸ் புருனி |
| 06 | Fr. Frederic Moukel | அருட்தந்தை பிரெடரிக் மைக்கல் |
| 07 | Fr. Vistarini | அருட்தந்தை விஸ்டாரனி |
| 08 | Fr. Constantine Chaunavel | அருட்தந்தை கொன்ஸ்ரன்டைன் சனவெல் |
| 09 | Fr. A.M. Rouffiac | அருட்தந்தை ரூபியாக் |
| 10 | Fr. Leian | அருட்தந்தை லீயான் |
| 11 | Fr. Francis Xaverius | அருட்தந்தை பிரான்சிஸ் சேவியர் |
| 12 | Fr. A.V.Geneys | அருட்தந்தை ஜெனிஸ் |
| 13 | Fr. A.M. Rouffiac | அருட்தந்தை ரூபியாக் |
| 14 | Fr. M. Lafarge | அருட்தந்தை லாபார்ஜ் |
| 15 | Fr. Daurol | அருட்தந்தை டவுரொல் |
| 16 | Fr. M. Joseph | அருட்தந்தை ஜோசப் |
| 17 | Fr. G. Morriel | அருட்தந்தை மொறில் |
| 18 | Fr. Ferdinand Bonnel | அருட்தந்தை பேர்டினன்ட் பொணல் |
| 19 | Fr. Henry Buri | அருட்தந்தை ஹென்றி பியுறி |
| 20 | Fr. M. Evrard | அருட்தந்தை எவ்ராட் |
| 21 | Fr.Dupont | அருட்தந்தை டியுபொன்ட் |
| 22 | Fr. G. Michael | அருட்தந்தை மைக்கல் |
| 23 | Fr. Charles Richard | அருட்தந்தை சார்ள்ஸ் றிச்சட் |
| 24 | Fr. S. Lazarus | அருட்தந்தை லாசரஸ் |
| 25 | Fr. M. Lemanter | அருட்தந்தை லெமான்டர் |
| 26 | Fr. Cyril Sebastian | அருட்தந்தை சிறில் செபஸ்டியான் |
| 27 | Fr. A. Richard | அருட்தந்தை றிச்சட் |
| 28 | Fr. Queste | அருட்தந்தை குவெஸ்ட் |
| 29 | Fr. Heimburgher | அருட்தந்தை ஹெய்ம்போர்கர் |
| 30 | Fr. S. Marian | அருட்தந்தை மேரியன் |
| 31 | Fr. G. Moreel | அருட்தந்தை மொறில் |
| 32 | Fr. Vandenbusche | அருட்தந்தை வன்டன்புஸ்க் |
| 33 | Fr. M. Evrard | அருட்தந்தை எவ்ராட் |
| 34 | Fr. Heimburgher | அருட்தந்தை ஹெய்ம்போர்கர் |
| 35 | Fr. Vandenbusche | அருட்தந்தை வன்டன்புஸ்க் |
| 36 | Fr. G. Theophilus | அருட்தந்தை தியோபிளஸ் |
| 37 | Fr. L. Dupont | அருட்தந்தை டியுபொன்ட் |
| 38 | Fr. Jerome de Sa | அருட்தந்தை ஜெரோம் டி சா |
| 39 | Fr. Henry Ponniah | அருட்தந்தை ஹென்றி பொன்னையா |
| 40 | Fr. John Peter | அருட்தந்தை ஜோன் பீட்டர் |
| 41 | Fr. G.E.L. Wambeek | அருட்தந்தை வம்பேக் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 42 | Fr. K. Aloysius Mary | அருட்தந்தை அலோசியஸ் மேரி |
| 43 | Fr. Francis O. Thambimuthu | அருட்தந்தை பிரான்சிஸ் தம்பிமுத்து |
| 44 | Fr. A. Sellar | அருட்தந்தை செலர் |
| 45 | Fr. O.P. Santhanam | அருட்தந்தை சந்தனம் |
| 46 | Fr. T. Arentz | அருட்தந்தை ஆரன்ட் |
| 47 | Fr. Henry Ponniah | அருட்தந்தை ஹென்றி பொன்னையா |
| 48 | Fr. G.E.L. Wambeek | அருட்தந்தை வம்பேக் |
| 49 | Fr. Felix Weerasinghe | அருட்தந்தை பீலிக்ஸ் வீரசிங்க |
| 50 | Fr. Jacob Alexander | அருட்தந்தை ஜேக்கப் அலெக்சாண்டர் |
| 51 | Fr. T. Pius Pathmarajah | அருட்தந்தை பயஸ் பத்மராஜா |
| 52 | Fr. M.C. Fernando | அருட்தந்தை சந்திரா பெர்னான்டோ |
| 53 | Fr. Nobert Ockersz | அருட்தந்தை நோபட் ஒக்கர்ஸ் |
| 54 | Fr. A. Devathasan | அருட்தந்தை தேவதாசன் |
| 55 | Fr. B. A. Joseph | அருட்தந்தை B.A. ஜோசப் |
| 56 | Fr. Kingsley Robert | அருட்தந்தை கிங்சிலி றொபட் |
| 57 | Fr. T. Pius Pathmarajah | அருட்தந்தை பயஸ் பத்மராஜா |
| 58 | Fr. Jude Johnson | அருட்தந்தை ஜூட் ஜோன்சன் |
| 59 | Fr. Ignace Joseph | தந்தை இக்னேஸ் ஜோசப் |
| 60 | Fr. J.A.G. Retnakumar | தை இரட்ணகு[illegible]ர |

## உதவிப் பங்குத் தந்தையர்கள்

பெயர்

1. அருட்தந்தை R.S. லோப்பு
2. அருட்தந்தை R. திருஞானதீபன்
3. அருட்தந்தை அல்போன்சு தியாகராஜா
4. அருட்தந்தை றெக்ஸ் செபமாலை
5. அருட்தந்தை யேசுதாசன் OMI
6. அருட்தந்தை L. பிலிப்பு
7. அருட்தந்தை அம்புறோஸ்
8. அருட்தந்தை F.X. டயஸ்
9. அருட்தந்தை நோயல் இம்மானுவேல்
10. அருட்தந்தை அன்ரனி ஜெயராஜ்
11. அருட்தந்தை நிதிதாசன்
12. அருட்தந்தை டக்ளஸ் ஜேம்ஸ்
13. அருட்தந்தை J. நிக்ஷன்
14. அருட்தந்தை ஜூட் சர்வானந்தா
15. அருட்தந்தை J.A.G..இரட்ணகுமார்
16. அருட்தந்தை இக்னேஸ் ஜோசப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ORATORIAN MISSIONARIES
தியான சம்பிரதாய குருக்கள்

| | YEAR | NAME |
|---|---|---|
| 01 | 1549 | Fr. Simon de Coimbra |
| 02 | 1687 | Fr. Joseph Vaz (arrival) |
| 03 | 1704 | Fr. Pedro Saldanha |
| 04 | 1705 | Fr. Joseph de Menezes |
| 05 | | Fr.Miquel de Mello |
| 06 | | Fr. Jacome Conzalvez |
| 07 | 1713 | Fr. Miquel de Francisco |
| 08 | 1714 | Fr. Joseph Gomez |
| 09 | 1728 | Fr. Joao de Sa |
| 10 | 1743 | Fr.Custodio Leitao |
| 11 | 1758 | Fr. Joao de Sylveira |
| 12 | 1776 | Fr. Manoel Joao |

Source : " Palm Fringed Coast" – Rev .Fr. John W. Lange S.J.

## OBLATES OF MARY IMMACULATE (OMI)
அமலமரித் தியாகிகள்

| | YEAR | NAME |
|---|---|---|
| 01 | | |
| 02 | 1850 | Fr. F. Mouchel |
| 03 | 1850 | Fr. Vistarini |
| 04 | 1853 | Fr. Constantine Chounavel |
| 05 | 1856 | Fr. A.M. Rourfiac |
| 06 | 1862 | Fr. Leian |
| 07 | 1881 | Fr. A.V. Geneys |
| 08 | 1886 | Fr. M. Lafarge |
| 09 | 1887 | Fr. F. Gauties |
| 10 | 1889 | Fr. A. Daurol |
| 11 | 1890 | Fr. M. Joseph |
| | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புளியந்தீவு பங்கு மேய்ப்புப்பணிச் சபை



**நிற்போர் (இ-வ):** S. அன்ரனி, M. பேர்ணாண்டோ, S. M.டானியல், வதனி பெர்ணாண்டோ, பிரசன்னா, நிவாஸ்கர், L.அலெக்சாண்டர், M.அன்ரன், E. சிசிலியா, G.சாந்தி , G. சாந்தா, டிலானி
**அமர்ந்திருப்போர் (இ-வ):** T.J.இராஜரெட்ணம், K.அருளானந்தம், A.விமலினி, அருட்தந்தை J.A.G. இரட்ணகுமார், அருட்தந்தை ஜு ட்சர்வானந்தன், அருட். சகோ. Z.அலோசியஸ், இராஜேஸ் டானியல், சீத்தா டேவிட்

# ஆங்கில பாடகர் குழு



**நிற்போர் (இ-வ):** சப்திகா, தனுசபேனா, ஹிரோஜினி, லூர்ட்ஸ் சயந்தினி, ஜரின் சுபலா, நிலுக்ஷினி, லூர்ட்ஸ் டென்சியா
**அமர்ந்திருப்போர் (இ-வ):** ஷேன்அலன், சீத்தா டேவிட், திருமதி பிரான்சிஸ், அருட்தந்தை. J.A.G.இரட்ணகுமார், அருட்தந்தை ஜு ட் சர்வானந்தன், திருமதி. முத்துலிங்கம், பவனுஜா, லக்ஷன்யா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரோபணி வர்த்தி நிலையம்



நிற்போர் (இ-வ): சபினா றோஸ், F. வதனி, R.ராஜேஸ்வரி, G. செல்வராணி, S. ராகினி, E.சுமதி
அமர்ந்திருப்போர் (இ-வ): அருட்தந்தை J.A.G. இரட்ணகுமார், அருட்தந்தை ஜூட் சர்வானந்தன்

# பீடப்பணியாளர்கள்



நிற்போர் (இ-வ): நிஷேதன், சனோசன், துலக்ஷன், வின்சன்ட் ஜூட், அபிலாஷ், ஜூட், விதுஷன்
அமர்ந்திருப்போர் (இ-வ): நாருகாஷன், பிரட்வின், சந்துரு, அருட்தந்தை J.A.G. இரட்ணகுமார், அருட்தந்தை ஜூட் சர்வானந்தன், S. M. டானியல் (போஷகர்), கிரிதரன், ரீனோசன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புனித மரியாள் இணைப்பேராலய சேவா சங்கம்



பின் வரிசை (இ-வ): K.E. கருணாகரன், J.சுகேசன், P.பிரான்சிஸ், A. ரமேஸ் ரோய், Y.முத்துக்குமார், E.தேவராஜன், A.சூசையப்பு, C.பாத்லட், R.கிங்ஸ்லி, S.F.சிவக்குமார், டட்லி பெரேரா, P. வின்சன்ட், I.இராஜேந்திர N.R. பத்மநாதன்
முன் வரிசை (இ-வ): ரொபின் டேவிட், T.C.கனகரெத்தினம், S.புவிராஜசிங்கம், அருட்தந்தை ஜூட் சர்வானந்தன், அருட்தந்தை J.A.G.இரட்ணகுமார், T.J. இராஜரெட்ணம், A.தயான், S.M.டானியல்

## புனித அந்தோனியார் ஐக்கிய சேவா சங்கம்



பின்வரிசை (இ.வ): A.G.தோமஸ், M. அன்ரன், S. அந்தோனி, A. ஸ்ரனிஸ்லாஸ், P. கிசாந்தராஜா, P. துரைசிங்கம், R. ரஜீவணன், J. லூயிஸ், J.M. அலோசியஸ், M. X. அருள் - செல்வம், S. மைக்கல், J. ஜோன்சன், சுரேஸ், S.S. கிங்ஸ்லி, A. சூசைதாசன்,
முன்வரிசை (இ.வ) : அருட்பணி. யூட் சர்வானந்தா (உதவி பங்குத்தந்தை), அருட்பணி. J. A. G. இரட்ணகுமார் (பங்குத்தந்தை), அதி.வந். ஆயர். ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை (திருமலை- மட்டுநகர்), அருட்பணி. த.சி. சில்வெஸ்ரர் (இயக்குனர், கரித்தாஸ் எகெட்), அருட்பணி. S. ஜேயறிக்ஷன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்ப்பணக் குழு



நிற்போர் (இ-வ): வதனி, இந்திராணி, மரியசில்வியா, ராதா, சிசிலியா, ...., யோஜியா, எ.ராஜேஸ், டானியல்

அமர்ந்திருப்போர் (இ-வ): மேரி, அருட்தந்தை, J.A.G.ரெட்ணகுமார், அருட்தந்தை ஜு ட் சர்வானந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரோபணி வர்த்தி நிலையம்



நிற்போர் (இ-வ): சபினா றோஸ், F.வதனி, R.ராஜேஸ்வரி, G.செல்வராணி, S.ராகினி, E.சுமதி
அமர்ந்திருப்போர் (இ-வ): அருட்தந்தை J.A.G. இரட்ணகுமார், அருட்தந்தை ஜூட் சர்வானந்தன்

# பீடப்பணியாளர்கள்



நிற்போர் (இ-வ): நிஷேறதன், சனோசன், துலக்ஷன், வின்சன்ட் ஜூட், அபிலாஷ், ஜூட், விதுஷன்
அமர்ந்திருப்போர் (இ-வ): நாருகாஷன், பிரட்வின், சந்துரு, அருட்தந்தை J.A.G. இரட்ணகுமார், அருட்தந்தை ஜூட் சர்வானந்தன், S. M. டானியல் (போஷகர்), கிரிதரன், ரினோசன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக செயற்பாட்டுக் குழு



நிற்போர் (இ-வ): S. M. டானியல், N.ஜெபராஜா, K. அருளானந்தம்,
அமர்ந்திருப்போர் (இ-வ): K.E. கருணாகரன், அருட்தந்தை ஜூட் சர்வானந்தன், அருட்தந்தைJ.A.G. இரட்ணகுமார், T.J.இராஜரெட்ணம்

# மரியாயின் சேனை பிரசீடியம்



நிற்போர் (இ-வ): A. அமலினி, மரியநேசம், சிசிலியா, சாந்தி,அக்னஸ், பத்மா, மரீனா, கீத்தா, லில்லி, விக்டோரியா, அன்ரனி
அமர்ந்திருப்போர் (இ-வ): அருட்தந்தை J.A.G. இரட்ணகுமார், அருட்தந்தை ஜூட் சர்வானந்தன், அருட்சகோ. Z.அலோசியஸ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மறையாசிரியர்கள் ஒன்றியம்



**நிற்போர் (இ-வ):** அமலினி, சர்மினி, சாலினி, துஷாந்தினி, அமலதாஸ், வளர்மதி, கத்தரீன், டிலானி, டயானி
**அமர்ந்திருப்போர் (இ-வ):** பவிசுமனஜா, கிருரஜன், விமலினி, அருட்தந்தை J.A.G.இரட்ணகுமார், அருட்தந்தை ஜூட் சர்வானந்தன், சாந்தி, வதனி

# செபக்குழு - 1



**அமர்ந்திருப்போர் (இ-வ):** R.ஜூலினா, V.புஷ்பம், T.திருமகள், அருட்தந்தை J.A.G. இரட்ணகுமார், அருட்தந்தை ஜூட் சர்வானந்தன், J.ஞானம், G.ஜெசிந்தா, F.செல்வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித வின்சன்ட் டி போல் சபை



அமர்ந்திருப்போர் (இ-வ): K.அருளானந்தம், T.J.இராஜரெட்ணம், அருட்தந்தை J.A.G.இரட்ணகுமார், அருட்தந்தை ஜூட் சர்வானந்தன், M.பெர்ணாண்டோ, T.A.அமலதாஸ்
(பி.வ) : A. ஆனந்த்குமார்

# கத்தோலிக்க இளைஞர் ஒன்றியம்



நிற்போர் (இ-வ): நிர்மலன், கிருராஜன், துஷாந்தன், ரமேஸ், பிறேமானந்த், கஜேந்திரன், பரன்,
அமர்ந்திருப்போர் (இ-வ): பிரசாந்தினி, நிவாஸ்கர், அருட்தந்தை J.A.G.இரட்ணகுமார், அருட்தந்தை ஜூட் சர்வானந்தன், தர்சினி, சிறோமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலை – மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு. ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகையின் ஆயர்த்துவ வெள்ளிவிழா 23–05–2008



திருகோணமலை – மட்டக்களப்பு மறைமாவட்ட துணை ஆயர் பேரருட்திரு. பொன்னையா ஜோசப் ஆண்டகையின் ஆயர்த்துவத் திருநிலைப்படுத்தல் நிகழ்வு 24–05–2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்ப் பாடகர் குழு - 01



நிற்போர் (இ-வ): பிரியதர்ஷரஞ்சினி, ஆன் சப்திகா, நிருஷ்கா பாய்வா, துர்ச்சனா, தானியா பிலிசியா
அமர்ந்திருப்போர் (இ-வ): உதயதேவி, அருட்தந்தை ஜூட் சர்வானந்தன், அருட்தந்தை J.A.G.இரட்ணகுமார், சாந்தி

## தமிழ்ப் பாடகர் குழு - 02



(இ-வ): I.J.இராஜேந்திரம், R.சிக்காந்தி, N.சஜீவன், S.நிமலராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்லடிப் பாலம்



கோட்டை பக்கத் தோற்றம்



புதிய கல்லடிப்பால நிர்மாணம் - 2009



கோட்டைமுனைப் பாலம்



கோட்டை முன்பக்கத் தோற்றம்



[illegible] தலைவிரிப் பந்தல்



[illegible] நுழைவாயில் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திகவல் துளிகள்...

**புனித பாத்திமா மாதாவின் திருச் சொரூப சுற்றுலா**

1950 ஜுன் 16 இல் புனித பாத்திமா மாதாவின் திருச் சொரூபம் மட்டக்களப்பிற்கு கொண்டு வரப்பட்டது. மிகப் பிரம்மாண்டமான ஊர்வலம் மட்டக்களப்பு முற்ற வெளியை அடைந்தது. வண அலோசியஸ்மேரியால் அவரது வாழ்க்கையிலேயே முக்கியமான மறையுரை வழங்கப்பட்டது.

இச்சொருபம் லெபனானின் தேவதாரு மரத்தில் செதுக்கப்பட்டது. மாதா காட்சி கொடுத்த சிறுவர்கள் வர்ணித்தவாறான உருவம் என மிகவும் சரியாகப் பரிசீலித்தே இவ் அழகிய சொரூபம் செதுக்கப்பட்டது. இதைச் செதுக்கியவர் போர்த்துக்கலைச் சேர்ந்த ஒரு சிற்பியாவர்

புனித பாத்திமா மாதாவின் திருச் சொரூப சுற்றுலாவைஆசிரியர் திலகம் எஸ். பிரான்சிஸ் அவர்கள் பின்வருமாறு வர்ணிக்கின்றார்.

1950ம் ஆண்டு ஆனி மாதம் 17ந் திகதி பிற்பகல் 3 மணி தொடங்கியே தாண்டவன்வெளி பரி. வியாகுலமாதா ஆலயவளவிலும், தெருவிலும் சனங்கள் கூடத்தொடங்கிவிட்டனர். காரணம் பத்திமா மாதா சொருபம் பிபிலையில் இருந்து மோட்டார்ப் பவனியாக வரப்போகிறது. மாதாவை எதிர் பார்த்த நேரம் பிற்பகல் 5 மணி.

**தேவதாயார் :**



1917 வைகாசி 13ந் திகதி தொடங்கி ஐப்பசி 13 வரை ஒவ்வொரு 13ந் திகதியிலும் ஆறுமுறை போர்த்துக்கல் தேசத்துப் பாத்திமா என்ற இடத்தில் தேவதாயார் சிறுவன் பிரான்சிஸ்கோ, சிறுமிகள் ஜசிந்தா, லூசியா மூவருக்கும் காட்சி கொடுத்தார். அவர்களோடு கதைத்தார் இப்போது லூசியா மாத்திரம் கன்னியர் மடத்தில் அருட்சகோதரியாகக் கடமை புரிகிறார். இவர், “இந்தச் சொரூபத்தின் முகம்தான் நான் கண்டு கதைத்த தேவதாயாரின் முகம் போலக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிட்டத்தட்ட இருக்கிறது" என ஏற்றுக் கொண்டார். இந்தக் கதை எல்லோருக்கும் தெரிந்ததால் மாதாவின் முகத்தைப் பார்க்கச் சனக்கூட்டம் நிரம்பி வழிந்தது.

வரவேற்பாளர் பங்குத்தந்தை வண.S. லாசறஸ் அடிகளார். வாசலில் அமைத்திருந்த அலங்காரப் பந்தலின் கீழ் மாதா வந்து விட்டார். வெடிகள் அதிர்கின்றன அடிகளார் மாதாவின் முகத்தையே பார்த்துக் கொண்டு நிற்கிறார். கண்களில் இருந்து நீர், தாரை தாரையாக வழிகிறது. வரவேற்புரை ஆரம்பமாகிறது.

"நீங்களே எங்களைத் தேடி வந்திற்றீங்களா அம்மா அஅஅஅ" எனப் பெலத்த சத்தமாக அழுகிறார். தொடர்ந்து ஒரு சொல்லாவது அவர் வாயில் நின்று வரவில்லை. எல்லார் முகங்களிலும் கண்ணீர்த் தாரை. வரவேற்புரை முடிந்தது.

மட்டுநகர் ஊர்வலம் :

மட்டுநகர் மைதானத்தை நோக்கி ஊர்வலம் நகர்கிறது நகர் வரவேற்புக்காக (Civic Reception). பி.ப.7.00 மணியளவில் மைதானத்தையடைந்தோம். மின்விளக்கு ஒன்றையுமே காணோம். ஆங்காங்கு கம்புகள் நட்டு 8 அடி உயரத்தில் சோணால் வீணாலாகக் கயிறுகட்டி மெழுகுவர்த்தி கொளுத்தப்பட்ட பலவர்ண வெளிச்சக்கூடுகள் ஐயாயிரம் வரை தொங்குகின்றன. ஆனால் ஒருவர் முகம் மற்றவருக்குத் தெரியவில்லை. மைம்மலான வெளிச்சம். இதை ஒழுங்கு செய்தவர் வண.J.லாங் சே. ச. அடிகளார். அவரில் எல்லோருக்கும் ஒருவித வெறுப்பு உண்டாகிறது. 20 அடி உயரத்தில் நான்கு கமுக மரம் நட்டு, நான்கு அடிச் சதுரத்தில் ஒரு பலகை. பலகையை மறைக்க இரு கொக்கொட்டிச் கந்துகள். இரு குருக்கள் சொரூபத்தைத் தூக்கிக் கொண்டு படிக்கட்டு வழியே ஏறி வைத்துவிட்டு இறங்கி விட்டனர். இது கூடச் சரியாகத் தெரியவில்லை. திடீரென ஒரு வெளிச்சம் மாதாவின் முகத்தில் விழுந்தது. ஆயிரம் வர்த்தி வலுவுள்ள மின்குமிழ் ஒன்றின் (Focus) பிரகாசம். பட்டப்பகலில் தெரிவது போல, தெட்டத்தெளிவாகத் தெரிந்தது மாதாவின் முகம். திறந்த கண்ணும் வாயுமாக எல்லோரும் பேச்சுமூச்சு இன்றி நிற்கின்றோம்.

இந்த மாதா சொரூபத்துக்குப் பொறுப்பாளராக இருந்து 50ம் ஆண்டு வைகாசி 22ந் திகதி தொடங்கி ஆடி மாதம் 15ந் திகதி வரை 55 நாட்களாக இலங்கையில் பல இடங்களுக்கும் கொண்டு சென்றவர்கள் இலங்கையை விட்டுப் போகும் போது கதலிக் காடியன்(Catholic Guardian) பத்திரி கையில் வெளியிட்ட செய்தி:

"மட்டுநகர் மைதானத்தில் தெரிந்த மாதாவின் அழகிய முகத்தோற்றம் போல இலங்கையில் வேறு எந்த இடத்திலும் இருக்கவில்லை" என்பது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வீக அலங்காரம் :

நகர பிதாவின் வரவேற்பு உரை முடிந்ததும், ஊர்வலம் புனித மரியன்னை ஆலயத்துக்கு நகர்ந்தது. சொரூபம் மிரண்டாச் சந்திக்குச் (வூட்லன்ட்) சென்றதும் கோயில் வளவில் வெடிச்சத்தம் ஆரம்பமாயிற்று. சொரூபம் கோயிலையடைய 20 நிமிடம் வரை சென்றது. வெடி ஓய்ந்தபாடில்லை. ஊர்தி ஆலய வளவுக்குள் நிறுத்தப்பட்டது. கோயில் முகப்பு, வளவு, வாசல் முழுவதும் மின்குமிழ்களும் குழல் விளக்களும்.

சொர்க்கலோகமே உலகில் வந்தது போல இருந்தது. வாசலில் இருந்து மாதாவை வைக்க அமைக்கப்பட்டிருந்த மேடை வரைக்கும் பக்கத்துக்கு ஐம்பதாக நூறு இளநீர் வாணங்கள் (பூக்களைச் சொரியும் வாணம்) இரு பக்கமும் இவ்விரண்டாகக் கொளுத்தப்படுகின்றன. ஒன்று எரிந்து கீழே வர மற்றது எழுந்து மேலே செல்கின்றது. என்ன அழகு கண்ணாற் கண்டகாட்சியை வாயால் சொல்லவோ, எழுத்தில் வடிக்கவோ முடியாத நிலை. எரியும் பூ வாணங்களும் மேடையை நெருங்க நெருங்க ஊர்தியும் நெருங்கிக் கொண்டே செல்கின்றது. சொரூபம் மேடையில் வைக்கப்பட்டது. வெடியும் இல்லை. வாணவிளையாட்டும் இல்லை. ஒரே நிம்மதி ஆயர் கிளென்னி அவர்களும், பதினான்கு குருக்களும் பொன்னென மின்னும் பூசை உடுப்புக்கள் அணிந்து வருகின்றனர். கால்வட்ட அமைப்பில் 15 பலிப்பீடங்கள். ஒவ்வொரு பீடத்துக்கும் பின்னணியாக 8 அடிச் சதுரச் சீலையில் 15 தேவ இரகசியங்களையும் வர்ண உருவங்களால் விளக்கிய பதாகைகள். (தேவ இரகசியங்கள் 15 களிகூர்ந்த காரணிக்கம் 5, வியாகுல காரணிக்கம் 5, மோட்சானந்த காரணிக்கம் 5,). பீடங்களை அலங்கரித்திருந்த பூக்கள் இந்த இடம் மட்டக்களப்பு அல்ல நுவரெலியா எனச் சொல்லுவது போன்றிருந்தது. அப்போது கூட்டுப்பலி நடைமுறையில் இல்லாததால் தனித்தனி பலி ஒப்புக் கொடுக்கின்றனர். அன்று இரவு முழுவதும் செபவழிபாட்டில் கழிகிறது.

அடுத்தநாள் புனித மிக்கேல் கல்லூரி,புனித சிசிலியா பாடசாலைகளைத் தரிசித்து அடுத்த நாள் மோட்டார் பவனி கல்முனை நோக்கிச் செல்கின்றது.

மாதாவின் இந்தச் சுற்றுலாவையடுத்து நீர்கொழும்பைச் சேர்ந்த திரு. Cruze Dabarera என்பவரால் அன்பளிப்புச் செய்யப்பட்ட பாத்திமா மாதாவின் அழகிய சுரூபம் புனித செபஸ்தியார் ஆலயத்தில் பிரதான வீதியருகில் வைக்கப்பட்டது. ஞாயிற்றுக் கிழமைகளில் பிற்பகலில் 40 இற்கு மேற்பட்ட பெண்கள் கொண்ட ஒரு குழு இச் சுரூபத்திற்கு முன்னால் செபமாலையை செபிப்பதற்காக ஒனறு கூடுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித வளனார் சபை துறவிகள்


அருட் சகோ.
V.பேதுருபிள்ளை
(SSJ)


அருட் சகோ.
P.பாக்கியநாதன்
(SSJ)


அருட் சகோ.
S.D.அலெக்சிஸ்
(SSJ)


அருட் சகோ.
J.A.டானியல்
(SSJ)


அருட் சகோ.
G.பெனடிக்ட்
(SSJ)


அருட் சகோ.
F.A.பேனாட்
(SSJ)


அருட் சகோ.
S.தியோப்பிளஸ்
(SSJ)


அருட் சகோ.
S.பீலிக்ஸ் குருஸ்
(SSJ)


அருட் சகோ.
A.S.மனுவல்பிள்ளை
(SSJ)


அருட் சகோ.
N.ஞானாதிக்கம்
(SSJ)


அருட் சகோ.
A.K.ஜோசப்மேரி
(SSJ)


அருட் சகோ.
S.மரியான்பிள்ளை
(SSJ)


அருட் சகோ.
S. பிலிப்பு
(SSJ)


அருட் சகோ.
E.I.கிறிசோஸ்தம்
(SSJ)


அருட் சகோ.
M.தேவசகாயம்
(SSJ)


அருட் சகோ.
S.M.பெஞ்ஜமின்
(SSJ)


அருட் சகோ.
M.இம்மானுவல்
(SSJ)


அருட் சகோ.
S.A.பிரான்சிஸ்
(SSJ)


அருட் சகோ.
A.M.தோமஸ்
(SSJ)


அருட் சகோ.
S.A.I.மத்தியு
(F.C)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அருட் சகோ.
N.N.மரியதாஸ்
(SSJ)



அருட் சகோ.
S.Aஞானப்பிரகாசம்
(SSJ)



அருட் சகோ.
S.டேவிட்
(SSJ)



அருட் சகோ.
S.ஆசீர்வாதம்
(SSJ)



அருட் சகோ.
A.சூசைதாசன்
(FC)



அருட் சகோ.
S.ஜெராட்
(SSJ)



அருட் சகோ.
S.A.G.சவரிமுத்து
(SSJ)



அருட் சகோ.
A.ஜேம்ஸ் பீரிஸ்
(FC)



அருட் சகோ.
P.M.லீனஸ்
(FC)



அருட்சகோ.
Z.A. அலோசயஸ்
(FC)



அருட்சகோ.
J. டோமினிக் சாவியோ
(FC)



அருட்சகோ.
J.F. டயஸ்
(FC)



அருட்சகோ.
B. லோரன்ஸ்பிள்ளை
(FC)



அருட்சகோ.
A. செபஸ்டியான்
(FC)

## புளியந்தீவை சேர்ந்த அருட்சகோதரிகள்



அருட் சகோதரி
செலின்
(F.M.M)



அருட் சகோதரி
M.அஞ்சலின்
(F.M.M)



அருட் சகோதரி
M.மங்களம்
(F.M.M)



அருட் சகோதரி
மாறி லூயிஸ்
(AC)



அருட் சகோதரி
எமிலி



அருட் சகோதரி
மேரி லூட்ஸ்



அருட் சகோதரி
A.கமலினி
(AC)

அருட் சகோதரி
M.C.உசாநந்தினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புளியந்தீவுடன் இணைந்த அருட் தந்தையர்கள்


அருட் பணி.
டெல் மார்மோ
(S.J)


அருட் பணி.
இ. கிறௌதர்
(S.J)


அருட் பணி.
G.H. றேவூட்
(S.J)


அருட் பணி.
J.V. சோமர்ஸ்
(S.J)


அருட் பணி.
B.H. மில்லர்
(S.J)


அருட் பணி.
V.P.ஞானப்பிரகாசம்
(S.J)


அருட் பணி.
F.J.லியோன்
(S.J)


அருட் பணி.
P.N.பீரிஸ்
(S.J)


அருட் பணி.
நோபர்ட் ஒக்கஸ்


அருட் பணி.
C.P.இராஜேந்திரம்
(S.J)


அருட் பணி.
G.F.இராஜேந்திரம்
(S.J)


அருட் பணி.
R.S.லோப்பு


அருட் பணி.
A.C.ஞானப்பிரகாசம்
(S.J)


அருட் பணி.
J.ஜோசப் மேரி
(S.J)


அருட் பணி.
இயூஜின்
ஹேபயர்(S.J)


அருட் பணி.
போல்
சற்குணநாயகம்
(S.J)


அருட் பணி.
மல்கம் செலர்


அருட் பணி.
S.யோகேஸ்வரன்
(S.J)


அருட் பணி.
J.P.நாராயண்


அருட் பணி.
W.M.லம்பேட்
(S.J)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அருட் பணி.
அன்ரனி லியோ


அருட் பணி.
பீற்றர்
துரைரெட்ணம்


அருட் பணி.
அல்போன்ஸ்
தியாகராஜா


அருட் பணி.
S.மரியன் (S.J)


Mgr.
ஜெரோம் டி சா


அருட் பணி.
S.இலாசறஸ்


அருட் பணி.
J.L.டானியல்
(S.J)


அருட் பணி.
L.A.செலர்
(S.J)


அருட் பணி.
F.M.செலர்
(S.J)


அருட் பணி.
M.பூட்ரி
(S.J)


அருட் பணி.
C.ரிட்சர்ட்ஸ்
(S.J)


அருட் பணி.
J.W.லாங்
(S.J)


அருட் பணி.
J.குவெஸ்ட்
(S.J)


அருட் பணி.
F.I.கிளார்க்சன்
(S.J)


அருட் பணி.
W.H.மக்னெயர்
(S.J)


அருட் பணி.
G.வம்பெக்


அருட் பணி.
G.குக்
(S.J)


அருட் பணி.
J.அலெக்சாண்டர்


அருட் பணி.
E.J. பூத்
(S.J)


அருட் பணி.
F.X. மேயர்
(S.J)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அருட் பணி.
J.T.வின்ஹறன்
(S.J)



அருட் பணி.
சார்ள்ஸ் ரோயர்
(S.J)



அருட் பணி.
G.றேவூட்
(S.J)



அருட் பணி.
J.J.ஹரினி
(S.J)



அருட் பணி.
ரெக்ஸ் ஒக்கர்ஸ்
(S.J)



அருட் பணி.
வெண்டன் புஸ்
(S.J)



அருட் பணி.
H.J.வெபர்
(S.J)



அருட் பணி.
G.F..கூலி, W.H.மோறன், M.D.கட்கிளிப்
(S.J)



அருட் பணி.
A.லோறியோ



அருட் பணி.
டெல்
(S.J)



அருட் பணி.
ஜே டி கோணிங்



அருட் பணி.
B.A. ஜோசப்



அருட் பணி.
A. தேவதாசன்



அருட் பணி.
கிங்ஸ்லி றொபர்ட்



அருட் பணி.
இக்னேசியஸ்
சந்திரா



அருட் பணி.
ஜூட் ஜோன்சன்



அருட் பணி.
இக்னேஸ் ஜோசப்



அருட் பணி.
ச. செல்வராஜா



அருட் பணி.
.A. லியோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அருட்கலாநிதி டொமினிக் சாமிநாதன்



அருட்தந்தை J. ஜோசப் மேரி (இ.ச)



1964 இல் திருப்பலிப்பீடம்



வீட்டில் பாலன் குடில்



பங்குமனை



1994 இல் ஆலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உசாத்துணை Reference

01. Palm Fringed Coast - By Rev. Fr. John. W. Lange S.J., edited & published by Rev. Fr. Guy F. Rajendram S.J. – 2007

02. An Historical Sketch of the Mission of Trincomalee – By Rev. Fr. Charles , Reichard S.J.

03. மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் - வித்துவான் சா.இ.கமலநாதன், கமலா கமலநாதன் - 2005-

04. நூறு வருட மட்டுநகர் நினைவுகள் - ஆசிரிய திலகம் எஸ். பிரான்சிஸ் - 1994

05. Cecilian Melodies - Bt/ St. Cecilia's Girls College National School - 2001

06. St. Michael's College Centenary Volume 1973

200 Years



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அருட் பணி.
பி(F)லிக்ஸ்



அருட் பணி.
பயஸ் பத்மராஜா

புனித மிக்கேல் கல்லூரியின்
முதலாவது தலைமை ஆசிரியர்



Mr.Joseph
Abraham



அருட்பணி. J. A. G. இரட்ணகுமார்
பங்குத்தந்தை



அருட்பணி.I. ஜூட் சர்வானந்தன்
உதவிப் பங்குத்தந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலயப் பணியாளர்கள்



M.அல்பிரட் (1937)



அன்டனி (1960)



A.ஞானசூரியம் (1991)



அரிய குருஸ்

## புனித வின்சன்ட் டி போல் சபை 1940களில்



பின் வரிசை (இ-வ) – 1.இரட்ணசிங்கம், 2.C.E.ஜீவரெட்ணம், 3.----- 4.S.E.அன்டனி
. சூசைப்பிள்ளை 6.N.ஒக்கர்ஸ் 7.பயஸ் 8.----- 9.பற்றிக்

டு வரிசை (இ-வ) 1. ஜோன் 2.பென்ஜமின் 3. ---------- 4.T.E.ஜோசப் 5. செலர் 6.S.E.கமலநாதன் 7.
ரியநாயகம் 8. K.L.இராஜேந்திரா 9.------

இருப்போர்: 1. ---------- 2.தம்பிராஜா 3.தோமஸ் 4. அருட்தந்தை செலர் 5. அருட்தந்தை வன்டன் புஸ் 6.
.I.செல்லத்துரை 7. P.M.ஜோசப் 8. S.சவரிராஜா 9.K.R.ஒகஸ்ரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்ப கால இயேசு சபையினர்



நிற்போர் முதல் வரிசை (இ-வ): சகோதரர் ஜெக்நாதன், சகோ.J.றைட், சகோ.சந்தியா சவரிமுத்து, அருட்தந்தையர்கள் J.B.பற்றிக், G.தியோப்பிளஸ், சகோதரர் G.பீன், சகோதரர். P.போவியர்,
நடு வரிசை (இ-வ): N.பூட்றி, A.றொதன் பஸ், சந்தியாகோ மரியான், P.ஜோசப் மேரி, R.வண்டன் புஸ், A.றிச்சர்ட், J. டிலா ஹே, E.ஹொபனட்
இருப்போர் (இ-வ): H.பூரி, G.மொறில், G.X.ஹென்வேவர், B.P.கஸ்ரன் றொபிஷே, F.பொனல், M.லமேற்றர், A.எவ்ராட், C.றிச்சர்ட்
மூலைகள்: இடது மேல்: S.இலாசரஸ் வலது மேல்: E.J.கிறவுதர்
இடது கீழ்: C.பொனல் வலது கீழ்: லியோ டியுபொன்ட்

## அருட்சகோதரிகள்



முன்வரிசை : அருட்சகோதரி. லைசா, அருட்சகோதரி. இனசன்ற், அருட்சகோதரி. மேபிள், அருட்சகோதரி. அகத்தா மேரி (தலைவி), அருட்சகோதரி. வேணிஸ், அருட்சகோதரி. சுபோஜினி,
பின்வரிசை : அருட்சகோதரி. பரமேஸ், அருட்சகோதரி. எலிசபெத், அருட்சகோதரி. டொறின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆனைப்பந்தி ஸ்ரீ சித்தி
விநாயகர் ஆலயம்



தூய அன்ட்றூ ஆலயம்
(1891)



மெதடிஸ்த தேவாலயம்
(1838)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் வெளியீட்டுக் குழு

1. அருட்தந்தை J.A.G. இரட்ணகுமார் - பங்குத்தந்தை – தலைவர்
2. அருட்தந்தை. I. ஜூட் சர்வானந்தன் - உதவிப்பங்குத்தந்தை – உபதலைவர்
3. திரு. K. அருளானந்தம்
4. திரு. S.M. டானியல்
5. திரு. L.அலெக்ஸாண்டர்
6. திரு.T.C. கனகரெட்ணம்
7. திரு. S.T. ஒக்கர்ஸ்
8. திருமதி. A.M.S. ஞானப்பிரகாசம்
9. செல்வி. A. விமலினி
10. திரு. M. பெர்னாண்டோ

## Publication Committee

1 Rev. Fr. J.A.G. Retnakumar- Parish Priest-President
2 Rev. Fr. I. Jude Sarvanandan – Assistant Parish Priest- Vice President
3 Mr. K. Arulanantham
4 Mrs. A.M.S. Gnanapragasam
5 Miss. A. Vimaliny
6 Mr. S.M. Daniel
7 Mr. L. Alexander
8 Mr. T.C. Kanagaretnam
9 Mr. S.T. Ockerzs
10 Mr. M. Fernando



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிகள்...

**"உதயதாரகை"** நூல் உருவாக்கம் பெறவும், வெளியிடப்படவும் உறுதுணையாய் இருந்து உதவிய நல்லுள்ளங்களுக்கு நன்றிகள் பல பகர்கின்றோம்....

| | | |
|---|---|---|
| 1. | அதிமேதகு. ஜோசப் ஸ்பிரேறி ஆண்டகை (திருத்தந்தையின் இலங்கைக்கான பிரதிநிதி) | நூல் வெளியீட்டு விழாவை சிறப்பித்தமை |
| 2. | அதிமேதகு. ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை திருமலை மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் | ஆலோசனைகளும், வழிகாட்டலும் |
| 3. | அதிவந். பொன்னையா ஜோசப் ஆண்டகை - திருமலை மட்டக்களப்பு மறைமாவட்ட துணை ஆயர் | ஆலோசனைகளும், வழிகாட்டலும் |
| 4. | அருட்தந்தை.J.A.G. இரட்ணகுமார் அடிகள் - புளியந்தீவுப் பங்குத்தந்தை | ஆலோசனைகளும், வழிகாட்டலும் |
| 5. | அருட்தந்தை. ஜூட் சர்வானந்தன் அடிகள் - புளியந்தீவு உதவிப் பங்குத்தந்தை | ஆலோசனைகளும், வழிகாட்டலும் |
| 6. | அருட்கலாநிதி. டொமினிக் சாமிநாதன் அடிகள் | ஆக்கங்கள் அளித்தல், ஆலோசனைகள் வழங்கல் |
| 7. | அருட்தந்தை. சிறிதரன் சில்வெஸ்டர் அடிகள் - இயக்குனர் எகெட் கரிட்டாஸ் | நூல் அச்சிடலுக்கான நிதி உதவி |
| 8. | சென். ஜோசப் கத்தோலிக்க அச்சகம் | நூல் அச்சிடல் |
| 9. | திருமதி. றூத் வனிதா ஜெயக்குமார் கணக்காய்வுத் திணைக்களம் மட்டக்களப்பு | கணினிப் பதிப்பு |
| 10. | திரு. அ. ஆனந்த்குமார் | புகைப்படங்கள், கணினி வடிவமைப்பு |
| 11. | திரு. இ. கிறிஸ்டி | அட்டைப்பட வடிவமைப்பு |
| 12. | அருட்தந்தை. ஜோர்ஜ் திசாநாயக்க | மொழிபெயர்ப்பு உதவி |
| 13. | அருட்தந்தை. கிறைட்டன் அவுட்ஸ்கோன் | மொழிபெயர்ப்பு உதவி |
| 14. | திரு. ஜோர்ஜ் ஆனந்தராஜ் | மொழிபெயர்ப்பு உதவி |
| 15. | திருமதி. கமலினி சிவநாதன் | மொழிபெயர்ப்பு உதவி |
| 16. | புனித மரியாள் இணைப்பேராலய சேவா சங்கம் | நூல் வெளியீட்டு விழாவுக்கான நிதியுதவி |

நூல் வெளியீட்டுக்குழு சார்பில்,

குருசு அருளானந்தம்
இணைப்பாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org